# வருடாந்த அறிக்கை

# 2015

இலங்கைத் தேயிலைச் சபை

அஞ்சல் முகவரி:

இலங்கைத் தேயிலைச் சபை
574,
காலி வீதி,
கொழும்பு 03,
இலங்கை

ஊயடிடநள:

தேயிலைச் சபை, கொழும்பு

தொலைபேசி:

+94-11-2587814
+94-11-2582121
+94-11-2583687

தொலைநகல்:

+94 112587341
+94 112589132

மின்னஞ்சல்:

teaboard@pureceylontea.com

இணையத்தளம்:

www.pureceylontea.com

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கு மற்றும் பணிக்கூற்று | 04 |
| இலங்கைத் தேயிலைச் சபையின் அங்கத்தவர்கள் | 05 |
| கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் | 06 |
| ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் அங்கத்தவர்கள் | 07 |
| சிரேஷ்ட முகாமைத்துவப் பணியாட்தொகுதியினர் | 08 |
| தலைவரின் வாழ்த்துச் செய்தி | 09 |
| அடிப்படை ஒப்பீட்டுச் சுட்டிகள் | 16 |
| கூட்டுறவுப் பின்னணி | 17 |
| கைத்தொழில் பற்றிய தோற்றவிபரம் | 21 |
| இலங்கைத் தேயிலைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | |
| தேயிலை ஆணையாளர் பிரிவு | 47 |
| தேயிலை ஏற்றுமதிப் பிரிவு | 51 |
| தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு | 54 |
| தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவு | 64 |
| பகுப்பாய்வு இரசாயணக்கூடம் | 68 |
| நிருவாகப் பிரிவு | 73 |
| உள்ளக கணக்காய்வு | 75 |
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 75 |
| நிதி சார் மீளாய்வு | 76 |
| இலங்கைத் தேயிலைச் சபையின் அலுவலகங்கள் | 109 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 112 |

# நோக்கம்

இலங்கை தேயிலையை பூகோளச் சந்தையில் பிரபல்யமிக்க பானமாக மாற்றியமைத்தல்.

# பணிக்கூற்று

துறையின் நீடிக்கத்தகு நிரந்த அபிவிருத்தியின்ஊடாக நாட்டிற்கு அந்நியச் செலாவணி உழைப்பினைமேம்படுத்தலும், இதன் மூலம் தேயிலைசெய்கையாளர்களின் பொருளாதாரஅபிவிருத்தியினைஉறுதிப்படுத்தல்.

# இலங்கை தேயிலை சபையின் அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| தலைவர் | திரு. வை.ஜீ. விஜேரத்ன – 2015 ஒக்டோபர் வரை<br>திரு.ரொஹான் பெதியகொட – 2015 ஒக்டோபர் இலிருந்து |
| சபையின் செயலாளர் | திரு. எஸ்.ஏ. சிறிவர்தன |
| சபையின் அங்கத்தவர்கள்: | |
| அங்கத்தவர் | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி<br>திரு. எம்.ஏ.எல்.எஸ்.என்.கே. மந்திரினாயக்க-2015 பெப்ரவரி இலிருந்து<br>திரு. என்.ஏ.யு.கே.எஸ்.மிஹிந்துகுலசூரிய - 2015 டிசம்பர் இலிருந்து |
| அங்கத்தவர் | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி<br>பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்,<br>திரு. ஏ.எம்.பீ.எம்.பீ. அத்தபத்து |
| அங்கத்தவர் | தலைவர், சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை<br>திரு. டீப்தி அபேவிக்கிரம – 2015 மே இலிருந்து<br>திரு. டீ.எம்.விஜேரத்தின – 2015 டிசம்பர் இலிருந்து |
| அங்கத்தவர் | தலைவர், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம்<br>திரு. என்ஸ்லம் பெரேரா |
| அங்கத்தவர் | தலைவர், தேயிலைப் பயிர்ச்செய்கையாளர் சங்கம்<br>திரு. ரொஷான் ராஜதுரை (2013 செப்டம்பர் 27 இலிருந்து) |
| அங்கத்தவர் | தலைவர், கொழும்பு தரகர்கள் சங்கம்<br>திரு. இஸ்ஹான் பர்னாந்து (2015 மார்ச் இலிருந்து)<br>திரு. அனில் குக் (2015 ஏப்ரல் இலிருந்து) |
| அங்கத்தவர் | தலைவர், தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம்<br>திரு. ரொஹான் பர்னாந்து |
| அங்கத்தவர் | தலைவர், இலங்கை சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் அமைப்பு அபிவிருத்திச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி<br>திரு. நெவில் ரத்னாயக்க |
| அங்கத்தவர் | தவிசாளர், இலங்கைத் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி<br>திரு. அனில் பெரேரா |
| அங்கத்தவர் | திரு. லசந்த வெலிகட – 2015 பெப்ரவரி இலிருந்து |
| அங்கத்தவர் | கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தி<br>திரு. எம்.ஏ. அல்லாம் |
| மேற்பார்வையாளர் | கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்<br>திருநிராஜ் டி மெல்<br>திரு. என்.பீ.எச். பிலபிட்டிய<br>திரு. எச்.டீ. ஹேமரத்தின |

# கணக்காய்வு குழுவின் அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| திரு. ஏ.எம்.பீ.எம்.பி. அத்தபத்து<br>பணிப்பாளர் நாயகம்,<br>அபிவிருத்தி நிதித் திணைக்களம்,<br>நிதி அமைச்சு<br>(2015.03.27 இலிருந்து) | - | தவிசாளர் |
| திரு. வீ.ஏ.ஏ. பெரேரா<br>தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்<br>இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் | - | அங்கத்தவர் |
| திரு. எம்.ஏ.எல்.எஸ்.என்.கே. மந்திரநாயக்க<br>பணிப்பாளர்,<br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br>(2015.03.27 இலிருந்து 2015.06.30 வரை) | - | அங்கத்தவர் |
| திரு. என்.ஏ.யு.கே.எஸ். மிஹிந்துகுலசூரிய<br>மேலதிகச் செயலாளர்,<br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br>(2015.12.23 இலிருந்து) | - | அங்கத்தவர் |
| திரு. எச்.டீ. ஹேமரத்தின,<br>ஆலோசகர்,<br>கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கம் | - | மேற்பார்வையாளர் |
| திருமதி. சீ.எம்.எஸ். அந்தனீ,<br>கணக்காய்வு அத்தியட்சகர்,<br>கணக்காய்வுத் தலைமை அதிபதி அலுவலகம்<br>(2015.06.30 இலிருந்து) | - | மேற்பார்வையாளர் |
| திருமதி. எச்.எஸ்.எஸ். பெரேரா,<br>கணக்காய்வு அத்தியட்சகர்<br>கணக்காய்வுத் தலைமை அதிபதி அலுவலகம்<br>(2015.12.23 இலிருந்து) | - | மேற்பார்வையாளர் |
| திரு. எஸ்.ஏ. சிறிவர்தன<br>பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை தேயிலைச் சபை. | - | ஏற்பாட்டாளர் |

# ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழு உறுப்பினர்கள்

ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழுவானது இலங்கை தேயிலைக்காக ஊக்குவிப்பு மற்றும் விற்பனை செயற்பாடுகள்தொடர்பாக சபைக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டதொரு உபகுழுவாகும்.

திரு. வை.ஜி. விஜேரத்தின (2015 ஜுன் இலிருந்து)
இலங்கை தேயிலைச் சபைத் தலைவர்

திரு. ரொஹான் பெதியகொட (2015 நவம்பரிலிருந்து)
தலைவர்,இலங்கை தேயிலைச் சபை

திரு. எஸ்.ஏ. சிறிவர்தன
பணிப்பாளர் நாயகம்,இலங்கை தேயிலைச் சபை

திருமதி. பிரமலால் சிறிகாந்த
பணிப்பாளர் (ஊக்குவிப்பு), இலங்கை தேயிலைச் சபை

திருமதி சொனாலி விஜேரத்ன
வர்த்தக பணிப்பாளர் நாயகம், வர்த்தகத் திணைக்களம்

## தனியார்த் துறை

திரு. மாலின் குணதிலக்க
பொதுச் செயலாளர்,
இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழிலாளர் சங்கம்

திரு. அனில் குக்
தலைவர்,
ஆசியா சியாக்கா பண்டங்கள் (தனியார்) லிமிடட்

திரு. ரொஹாந்த அதுகொரல (2015 ஜுன் இலிருந்து)
தலைவர், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

பேராசிரியர் சரத் இளங்கன்திலக்க (2015 ஜுன் வரை)
தலைவர் தேயிலை ஆராய்ச்சி சபை

டாக்டர் எம்.எம்.ஜே.பீ. கமரம்மான்ன (2015 நவம்பர் இலிருந்து)
தலைவர், தேயிலை ஆராய்ச்சி சபை

திரு.நெவில் ரத்நாயக்க
தலைவர்
இலங்கை சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்க சம்மேளம

கலாநிதி காமினி அபேவிக்ரம
முகாமைத்துவப் பணிப்பாளர்
பெசிலர் தேயிலை ஏற்றுமதி (தனியார் கம்பனி)

திரு. முபாடெல் ஜபார்தீன்
முகாமைத்துவப் பணிப்பாளர்,ஜபார்தீன் நிறுவனம்

திரு. ரோமாஸ் மொராயஸ்
பணிப்பாளர்,பின்லேஸ் கொழும்பு தனியார் கம்பனி

திரு.ஜயந்த கருனாரத்ன
முகாமைத்துவப் பணிப்பாளர்
இம்பிரியல் டீஸ் (தனியார்) கம்பனி

திரு.மலிக் பெர்னாந்து
பணிப்பாளர் - எம்.ஜே.எப் குறுப்

திரு.ரோகான் பெர்னாந்து
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், எச்.வி.ஏ.குறுப்

ஜனாப் டியாப் அக்பார் அலி
பணிப்பாளர் – அக்பார் பிரதர்ஸ் கம்பனி

திரு.அவி டி சில்வா
பணிப்பாளர், தேயிலைப் பிரிவுத் தலைமையகம் - யூனிலிவ லங்கா கம்பனி

திரு. ஜிஹான் டி லிவரா (2015 ஜுன் வரை)
பிரதம நிறைவேற்று அதிகாரி
இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கம்

திரு. திலக் அளவத்தகம (2015 நவம்பர் இலிருந்து)
செயலாளர் நாயகம்
இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம்

# சிரேஷ்ட முகாமைத்துவ பணியாட்தொகுதியினர்

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | திரு. எஸ்.ஏ. சிறிவர்தன |
| தேயிலை ஆணையாளர் | திரு.ஈ.ஏ.ஜெ.கே.எதிரிசிங்க |
| பணிப்பாளர் (ஊக்குவிப்பு) | திருமதி பிரேமலால் சிறிகாந்த |
| பணிப்பாளர் (பகுப்பாய்வுச் சேவைகள்) | டாக்டர் எம்.ஏ.என். ஜயதிலக்க |
| உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) | திரு. எஸ். ஐ. சீ. பெரேரா |
| உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிதி) | **Ms.** ஏ.டீ.டபிள்யு. பண்டாரகே |
| சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் | திரு. எச்.டீ.கே. ஜயசிங்க |

# தவிசாளரின் செய்தி



2015 ஆம் ஆண்டுக்கான மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்சியடைகின்றேன்.

**முகவுரை**

இலங்கைத் தேயிலைத் தொழிற்துறையைப் பொறுத்தவரை இது ஒரு சவால்மிக்க வருடமாகும். ரஷ்ய நாணயமான ரூபிலின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை மற்றும் தொடர்ச்சியாக எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்தமை மற்றும் தொடர்ச்சியாக எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்தமை ஆகியன இலங்கைத் தேயிலையைக் கொள்வனவு செய்யும் நாடுகளான கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றின் கொள்வனவுச் சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

சந்தைக் கண்ணோட்டத்தில் நோக்குகையில் உக்ரேன் மோதலினால் ஏற்பட்ட பிரச்சினைகள்,ரூபில் நாணயத்தின் மதிப்பிறக்கம் மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக மேலத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடை, எண்ணெய் விலையிலான வீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாக 2015 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியின் பொழுது இலங்கை ஊஐளு தேயிலை ஏற்றுமதிச் சந்தைகள் வீழ்ச்சிகண்டன.

இலங்கைத் தேயிலையைக் கொள்வனவு செய்யும் முக்கிய நாடுகளான மத்திய கிழக்கு நாடுகள் கூட 2015 இன் முதல் 6 மாத காலப்பகுதியில் அவற்றின் கொள்வனவு செய்யும் ஆற்றல்களில் வீழ்ச்சிகண்டன. எண்ணெய்யின் விலை குறைந்தமையும் இதற்கான காரணங்களுள் ஒன்றாகும். மத்திய கிழக்கு நாடுகளில் அதிகரித்துவரும் பதட்டம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பொருளாதாரத் தடைகள் ஆகியன ஈராக்,ஈரான், லிபியா, குவைத் போன்ற பிரதான ஏற்றுமதிச் சந்தைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் தேயிலை விலை வீழ்ச்சிகண்டது.

2015

**தேயிலை உற்பத்தி**

2015 ஆம் ஆண்டில் இலங்கையின் தேயிலை உற்பத்தி 328.9 மில்லியன் கி.கி. ஆகக் காணப்பட்டது. அதற்கு முந்திய வருடத்தை விட இது 9 மில்லியன் கி.கி. குறைவாகும்.அதாவது இது 2.7 வீத வீழ்ச்சியாகும். இசந்தர்ப்பத்தில் தாழ்நிலத் தேயிலை பெரிதும் பங்களிப்புச் செய்தது. இங்கு 202.3 மில்லியன் கி.கி. தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. அதற்கு அடுத்த படியாக உயர்நிலத் தேயிலையானது 76.9 மில்லியன் கி.கி. ஆகும்.மத்திய நிலத் தேயிலை 49.7 மில்லியன் கி.கி. ஆகும்.

2014 ஆம் ஆண்டில் 3.2 மில்லியன் கி.கி. ஆகக் காணப்பட்ட பச்சைத் தேயிலை உற்பத்தியானது 2015 ஆம் ஆண்டில் 2.9 மில்லியன் கி.கி. ஆக வீழ்ச்சிகண்டது. அதேபோல் 2014 ஆம் ஆண்டில் 20.4 மில்லியன் கி.கி. ஆகக் காணப்பட்ட CTC தேயிலையானது 2015 ஆம் ஆண்டில் 19.4 மில்லியனாக வீழ்ச்சிகண்டது. இவ்வீழ்ச்சி 5 சதவீதமாகும்.

நாட்டின் பல பாகங்களிலும் சாதகமற்றதாகக் காணப்பட்ட காலநிலை மற்றும் 2015 ஆம் ஆண்டில் மத்திய பகுதியில் தொழிலாளர்களுடைய சம்பளத்துடன் தொடர்புடைய தொழிற்சங்கப் பிரச்சினைகள் ஆகியனவும் இவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தின.

சிறிய நிலத் தேயிலை உற்பத்தியாளர்கள் தொடர்ச்சாயகவும் தேயிலை உற்பத்தியில் அதிக பங்களிப்புக்களை நல்கினார்கள். தேசிய உற்பத்தியில் இவர்களின் பங்களிப்பு 72 வீதமாகும்.

**கொழும்பு தேயிலை ஏலவிற்பனை மற்றும் FOB விலைகள்**

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் கொழும்பு தேயிலை ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவு 5.5 வீதமாக வீழ்ச்சிகண்டது. உயர்நிலம், மத்தியநிலம் மற்றும் தாழ்நிலம் ஆகிய மூன்று நிலைகளிலும் இது வீழ்ச்சிகண்டது.

2014 ஆம் ஆண்டில் தேயிலை ஏலவிற்பனையின் கிலோ ஒன்றுக்கான சராசரி விலை ரூ. 461.86 ஆகும். 2015 ஆம் ஆண்டில் இது ரூ. 402.14 ஆகக் காணப்பட்டது.

2015

பணவீக்கம் மற்றும் ரூபாவின் பெறுமதி சீர்செய்தல் ஆகின மேற்கொள்ளப்பட்டபொழுதிலும் இந்த குறை மதிப்பீடு காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஆரம்பித்த வீழ்ச்சியானது 2015 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாகக் காணப்பட்டது.

தேயிலை விலை வீழ்ச்சியின் காரணமாக சிறுதோட்டத் தேயிலை உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கின்ற இலாபம் வீழ்ச்சிகண்டது. இவர்களது அறுவடையின் அளவு மற்றும் கொழுந்தின் தரம் ஆகியவற்றிலும் பாதிப்புகள் ஏற்பட்டன. இந்நிலைமை கட்டுக்கடங்காமல் செல்வதைத் தடுக்கும் முகமாக இலங்கை அரசாங்கமும் இலங்கைத் தேயிலைச் சபையும் கூட்டிணைந்து “டீ-டுநயக 60” என்ற நிகழ்ச்சித்திட்டத்தை தொடங்கியது. தோழிற்சாலைகளினால் கொள்வனவு செய்யப்படும் தேயிலைக் கொழுந்தின் தராதரத்தை மதிப்பிட்டு தரம் குறைந்த தேயிலை உற்பத்தி செய்யப்படுவது குறைக்கப்பட்டது. இந்த தராதரத்தை அடிப்படையாகக் கொண்டு கொழுந்து மானியமும் வழங்கப்பட்டது. இதன் காரணமாக சிறுதோட்டத் தேயிலை உற்பத்தியாளர்கள் நிதி ரீதியாக நன்மையடைந்தனர்.

உலகளாவிய ஏற்றத்தாழ்வுகளை கருத்திற்கொண்டு கொழும்பு தேயிலை ஏலவிற்பனையின் சராசரி விலை ஒரு கிலோவிற்கு 2.99 ஐ.அமெ.டொலர் ஆகக் காணப்பட்டது. ஏனைய ஏலவிற்பனை நிலையங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு கிடைத்த விலை அதிகமாகும். இருப்பினும் 2014 ஆம் ஆண்டில் ஒரு கிலோவிற்கு 3.56 ஐ.அமெ.டொலர்கள் கிடைக்கப்பெற்றன. 2014 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு கிலோ தேயிலைக்கான சராசரி விலை ரூ.649.44 ஆகும். 2015 ஆம் ஆண்டில் இது ரூ. 593.08 ஆகக் காணப்பட்டது. இது 8.7 வீத வீழ்ச்சியாகும்.

போதிகளில் அடைக்கப்பட்ட குழுட தேயிலையின் சராசரி பெறுமதி 2015 இல் சிறிதளவு அதிகரித்தது. ஏனைய வகைத் தேயிலைகளின் ஏற்றுமதி விலை வீழ்ச்சிகண்டது.

### தேயிலை ஏற்றுமதிகள்

ஏனைய பொருட்களுடன் ஒப்பிடுகையில் உலகச் சந்தையின் தேயிலை விலை குறிப்பிடக்கூடியளவு வீழ்ச்சிகண்டது. விலை வீழ்ச்சி மாத்திரமல்லாமல் ரஷ்யா, மத்திய கிழக்கு, உக்ரேன் போன்ற நாடுகளில் நிலவிய பிரச்சினைகளும் எமது தேயிலையின் விலையைப் பாதித்தன. இத்தகைய நாடுகளுக்கு65 வீதமான தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. பொருளாதாரத் தடைகள், நாணய மதிப்பிறக்கம், ஆயுதப் போராட்டம் மற்றும் பூகோள ரீதியாக நிலவிய நிச்சயமற்ற தன்மைகள் ஆகியன இத்துறையின் ஒட்டுமொத்த உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தின.

2014 ஆம் ஆண்டில் 327.3 மில்லியன் கி.கி. ஆகக் காணப்பட்ட இலங்கைத் தேயிலை ஏற்றுமதியானது 2015 ஆம் ஆண்டில் 306.9 மில்லியன் கி.கி. ஆக வீழ்ச்சியடைந்தது. இது 6.2 வீத வீழ்ச்சியாகும். 2014 ஆம் ஆண்டில் மொத்தமாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 127.1 மில்லியன் கி.கி. ஆகும். 2015 ஆம் ஆண்டில் இது 132.7 மில்லியன் கி.கி. ஆகும். 5.6 மில்லியன் கி.கி. தேயிலை அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. 2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதியுடன் ஒப்புநோக்குகையில் ஏனைய சகலவிதமான தேயிலைகளின் ஏற்றுமதி குறைவாகவே காணப்பட்டன. ‘

2015 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் ரூ. 212.5 பில்லியன் ஆகும். 2015 ஆம் ஆண்டில் இது ரூ. 182 பில்லியன் ஆகும். இது 30.5 பில்லியன் அல்லது 14 வீத வீழ்ச்சியாகும்.

இலங்கைத் தேயிலை பிரதானமாக ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதனையடுத்து துருக்கி,ஈராக் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதன் அளவு முறையே 36.74, 36.71 மற்றும் 31.36 மில்லியன் கி.கி. ஆகம்.

### சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான வரைவுச்சட்டகம்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் இலங்கைத் தேயிலைச் சபையானது தேயிலைத் தொழிற்துறையின் உச்ச அமைப்பு என்ற முறையில் அதனது பங்கீடுபாட்டாளர்களுடன் கூட்டிணைந்து இத்துறை சார்ந்த தேவைகளை சிறப்பாக நிவர்த்திசெய்யும் முகமாக சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான வரைவுச்சட்டகங்களை முழுமையாகப் பூரணப்படுத்தியது.

2015

மேலும் பல ஏற்பாடுகளை உள்ளடக்கும் முகமாகவும் அதிகளவு வெளிப்படைத் தன்மையை வெளிப்படுத்தும் முகமாகவும் மீளாய்வு செய்யப்பட்ட தேயிலை நகல் சட்டமானது மேலும் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

தற்சமயம் காணப்படுகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் காரணமாக இலங்கைத் தேயிலைச் சபையானது உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைகளின் தரம் மற்றும் உற்பத்தி செய்யப்படும் இடம், விற்பனை செய்யப்படும் இடம், ஏற்றுமதி ஆகியவற்றை மேற்பார்வை செய்ய முடியும். இதன் காரணமாக சர்வதேச ரீதியாக இலங்கைத் தேயிலைக்குக் காணப்படுகின்ற நற்பெயரை மேலும் வலுப்படுத்த முடியும். ISO 3720தராதரத்தை முன்னின்று நடைமுறைப்படுத்துவதன் காரணமாக சர்வதேச ரீதியாக இலங்கைத் தேயிலைத் தொழிற்துறைககு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் உணவு மற்றும் விவசாய அமைப்பின் FAO / IGG கூட்டங்களில் இது உறுதிப்படுத்தப்பட்டது.

### மீள்நடுகை மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல்

பல்வேறு விதமான மானியங்கள் காணப்பட்ட பொழுதிலும் கூட தேயிலை மீள்நடுகை மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் தொடர்பில் குறிப்பிடக்கூடிய அபிவிருத்திச் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை. தேயிலை உற்பத்தி மற்றும் தேயிலை விலை ஆகியவற்றில் காணப்பட்ட வீழ்ச்சியின் காரணமாக இவை தொடர்பில் போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பங்கீடுபாட்டாளர்களின் ஆற்றல்களை இது மட்டுப்படுத்தியது.

### சர்வதேச ரீதியான பிரச்சாரம்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் இலங்கைத் தேயிலைச் சபையானது இலங்கைத் தேயிலையை மேம்படுத்தும் சர்வதேச ரீதியாக சந்தைப்படுத்தும் பிரச்சாரச் செயற்பாடுகளை மேற்கொண்டது. அதேவேளை, இலங்கையில் தேயிலைக் கலாசாரத்தை விருத்தி செய்தல் தொடர்பிலும் அக்கறை செலுத்தப்பட்டன. "சிங்கச் சின்னம்","சுற்றாடல் நேய ஓசோன் சின்னம்" மற்றும் ஏழு "ஜீ.ஐ. பிராந்திய சின்னங்கள்" ஆகியவற்றின் தரத்தை மேலும் விருத்திசெய்வதைக் கருத்திற்கொண்டு எமது ஊக்குவிப்புக் குழு செயற்பட்டது.

இது 100 வீதம் தூய்மையான இலங்கைத் தேயிலையைக் கொண்டுள்ளன. சீனா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆகியவற்றிலும் இலங்கைத் தேயிலைச் சந்தையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தேயிலை ஊக்குவிப்பு அலுவலகமானது இலங்கைத் தேயிலைச் சபையினால் பீஜிங்கில் (சீனாவில்) தாபிக்கப்பட்டது. இதன் காரணமாக சீன நாட்டில் இலங்கைத் தேயிலையின் நுகர்வு குறிப்பிடக்கூடியளவு அதிகரித்தமையினை அவதானிக்க முடிந்தது.

**இலங்கைத் தேயிலைத் தொழிற்துறையினை நிலைப்படுத்தல்**

உலக தேயிலை அரங்கில் உயர் தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகளுள் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது. இருப்பினும் இதன் போட்டியிடும் தன்மை வீழ்ச்சிகண்டுள்ளது. இலங்கைத் தேயிலையைக் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்ற நுகர்வோருக்கு மத்தியில் இலங்கைத் தேயிலையின் தனித்துவமான தன்மை, அதன் தூய்மை ஒழுக்கம் சார்ந்து அது எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றது என்பன போன்ற விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கறுப்புத் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யும் அளவின் அடிப்படையில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. அளவின் அடிப்படையில் நோக்குகையில் நாட்டின் அதிகூடிய ஏற்றுமதி வருமானத்தில் இத்துறை முன்னணி வகிக்கின்றது.

ஏனைய பூகோள உற்பத்திகளுடன் ஒப்புநோக்குகையில் இது சிறந்த உற்பத்தியாகத் திகழ்கின்றது. ஏற்றுமதியின் பொழுது மேற்கொள்ளப்படுகின்ற பெறுமதி சேர் நடவடிக்கைகள் இவ் அடைவுக்கான சிறந்த பங்களிப்புக் காரணியாகும். இங்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய பெறுமதி சேர் நடவடிக்கைகளின் காரணமாக இலங்கைத் தேயிலையை நுகர்வுசெய்யும் நாடுகளிலுள்ள வாடிக்கையாளர்களைப் பெரிதும் கவரக்கூடியதாகவுள்ளது.

**எதிர்கால நோக்கு**

இத்துறையின் எதிர்கால ஸ்திரத்தன்மையானது அதிகரித்துவரும் அறுவடை மற்றும் உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல் ஆகியவற்றில் தங்கியுள்ளது. இந்நோக்கத்தை அடைவதற்கு காலநிலையை அடிப்படையா கருத்திற் கொண்டு அதிக விளைச்சலைத் தரக்கூடிய தாவரங்களை நடல் வேண்டும்.

இப்பிரச்சினை தொடர்பில் பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சானது பங்கீட்டுப்பாட்டாளர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது.

## முடிவு

பணிப்பாளர்கள் சபை சார்பாகவும் இலங்கை தேயிலைச் சபைக் குழு சார்பாகவும் கௌரவ பெருந்தோட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கும் அவரது செயலாளர் அவர்களுக்கும் அவர்கள் வழங்கிய உதவிக்கும் வழிகாட்டலுக்கும் எமது உளமார்ந்த நன்றியைப் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.
இச்சந்தர்ப்பத்தில் இலங்கைத் தேயிலைச் சபையில் என்னுடன் இணைந்து பணியாற்றுபவர்கள் வழங்குகிய பெறுமதியான பங்களிப்புக்காக அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு, இலங்கைத் தேயிலைச் சபையில் சகல மட்டங்களிலும் பணியாற்றும் ஊழியர்கள் அவர்கள் மேற்கொண்ட அர்ப்பணிப்பு மிக்க சேவைக்காகவும் நம்பகத் தன்மையுடன் சேவையாற்றியமைக்காகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு எதிர்வரும் காலங்களிலும் இத்தகைய சகல பங்கீடுபாட்டாளர்களுடன் தொடர்ச்சியாக இணைந்து கருமமாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

ரொஹான் பெதியாகொட
தவிசாளர்
இலங்கைத் தேயிலைச் சபை

# அடிப்படை ஒப்பீட்டுச் சுட்டிகள்

| வகை | அலகு | 2013 | 2014 | 2015 | ஒப்பீட்டாய்வு 2014 Vs 2015 (%) |
|---|---|---|---|---|---|
| தேயிலை உற்பத்தி | | | | | |
| மொத்த தேயிலை உற்பத்தி | (mn.kg) | 340.0 | 338.0 | 328.8 | (2.72) |
| உயரம் அடிடையிலான வகைப்பாடு | | | | | |
| உயர் நிலம் | (mn.kg) | 75.8 | 78.8 | 75.4 | (4.31) |
| நடுத்தர நிலம் | (mn.kg) | 56.1 | 49.2 | 51 | 3.66 |
| தாழ் நிலம் | (mn.kg) | 208.1 | 210.0 | 202.4 | (3.57) |
| பதனிடல் முறை அடிப்படையில் வகைப்பாடு | | | | | |
| Orthodox(includes Bio, Instant, Reclaimed teas) | (mn.kg) | 314 | 314.5 | 306.4 | (2.58) |
| CTC | (mn.kg) | 22.3 | 20.3 | 19.5 | (3.94) |
| Green | (mn.kg) | 3.7 | 3.2 | 2.9 | (9.38) |
| தேயிலை விற்பனை | | | | | |
| தேயிலை விற்பனை அளவு ரீதியாக | (mn.kg) | 335.5 | 333.5 | 306.0 | (8.25) |
| உயர் நிலம் | (mn.kg) | 71.4 | 69.8 | 67.1 | (6.39) |
| நடுத்தர நிலம் | (mn.kg) | 54.4 | 51.3 | 48.1 | (4.75) |
| தாழ் நிலம் | (mn.kg) | 209.8 | 212.5 | 190.8 | (10.54) |
| தேயிலை விற்பனை விலை ரீதியாக | (Rs./kg.) | 444.75 | 465.06 | 403.8 | (12.57) |
| உயர் நிலம் | (Rs./kg.) | 407.91 | 430.59 | 396.3 | (5.74) |
| நடுத்தர நிலம் | (Rs./kg.) | 396.97 | 414.41 | 360.0 | (12.22) |
| தாழ் நிலம் | (Rs./kg.) | 469.67 | 488.61 | 417.5 | (14.46) |
| தேயிலை ஏற்றுமதி | | | | | |
| தெயிலை ஏற்றுமதிகள் - அளவு ரீதியாக (மீள் ஏற்றுமதி தவிர்ந்தது) | (mn.kg) | 311.1 | 317.9 | 298.9 | (5.98) |
| வகை அடிப்படையில் வகைப்பாடு | | | | | |
| கறுப்புத் தேயிலை | (mn.kg) | 306.3 | 312.7 | 294.4 | (5.87) |
| பச்சைத் தேயிலை | (mn.kg) | 2.9 | 2.9 | 2.4 | (16.21) |
| உடனடித் தேயிலை | (mn.kg) | 1.9 | 2.2 | 2.1 | (3.64) |
| தேயிலை ஏற்றுமதிகள் - அளவு ரீதியாக (மீள் ஏற்றுமதி தவிர்ந்தது) | (Rs. Bn.) | 190.8 | 203.5 | 174.3 | (14.35) |
| மொத்த தேயிலை ஏற்றுமதி அளவு அடிப்படையில் | (mn.kg) | 319.7 | 327.3 | 306.9 | (6.23) |
| மொத்த தேயிலை ஏற்றுமதி பெறுமதி அடிப்படையில் | (Rs. Bn.) | 199.4 | 212.6 | 182.0 | (14.39) |

# 01 கூட்டிணைப் பின்புலம்

1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் 1976 ஜனவரி 01ஆம் திகதி இலங்கைத் தேயிலைச் சபை தாபிக்கப்பட்டது. இச்சட்டம் 1985 இன் 17 ஆம் இலக்கச் சட்டம் மூலமும் 1990 இன் 44 ஆம் இலக்கச் சட்டம் மூலமும் 2003 இன் 29 ஆம் இலக்கச் சட்டம் மூலமும் 2006 இன் 44 ஆம் இலக்கச் சட்டம் மூலமும் பின்னர் திருத்தப்பட்டது. இச்சட்டங்களின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையின் நோக்கங்களாக இலங்கையில் தேயிலைத் துறையை அபிவிருத்தியடையச் செய்து அதனை ஒழுங்கமைத்தல் மற்றும் இலங்கைத் தேயிலையை (சிலோன் ரீ) உலகளாவிய ரீதியில் மேம்படுத்துவதாகும். தேயிலைச் சபை தாபிக்கப்படுவதற்கு முன்னர் இது தேயிலைப் பிரச்சாரச் சபை எனவழைக்கபபட்டது. இது தனியார்த்துறையினரால் நடத்தப்பட்டது. 1976 ஆம் ஆண்டு தேயிலைப் பிரச்சாரச் சபையானது பாராளுமன்றத்தினால் இல்லாதொழிக்கப்பட்டதுடன், தற்போது காணப்படுகின்ற இலங்கைத் தேயிலைச் சபை உருவாக்கப்பட்டது. தேயிலைத் துறை சார்ந்த அதிகாரங்கள் இதற்கு வழங்கப்பட்டன.

தேயிலை உற்பத்தி, புதிய இடங்களில் தேயிலை நடல், மீள்நடுகை, பழைய தேயிலைச் செடிகளை புனரமைத்தல், தொழிற்சாலைகளை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்தல் ஆகியன தொடர்பான தேயிலைத் துறை சார்ந்த செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் பொறுப்பு இவ் அதிகாரசபையைச் சார்ந்ததாகும்.

தேயிலை விற்பனை செய்யப்படும் இடங்களில் அதன் தரத்தையும் தன்மையையும் மேற்பார்வை செய்தல், தேயிலையை கப்பலுக்கு ஏற்றுவதற்கு முன் மேற்பார்வை செய்தல், இடைத்தரகர்களது களஞ்சியசாலைகளைப் பரிசோதித்தல், தேயிலை கலப்பவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைச் சோதித்துப் பார்த்தல், சுகாதாரமான முறையில் தேயிலையைக் கலத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் ஆகியன தொடர்பில் மேற்பார்வைச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு இலங்கைத் தேயிலைச் சபை திட்டமிட்டுள்ளது. மேலும் தேயிலைத் தோட்டங்களை முகாமைத்துவம் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ள சகல அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் தேயிலை உற்பதி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஆகிய யாவற்றையும் ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதுடன் அவற்றை நெறிப்படுத்தும் பணிகளிலும் இது ஈடுபட்டுள்ளது.

சர்வதேச தேவைகளைப் பூரணப்படுத்தும் முகமாக தற்போதைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கேற்ப, அதேவேளை இத்துறையின் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இலங்கைத் தேயிலையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான செயற்பாடுகள், அபிவிருத்தி வேலைகள் மற்றும் இலங்கைத் தேயிலையை (சிலோன் ரீ) மேம்படுத்தும் செயற்பாடுகள் ஆகிய யாவற்றுடன் தொடர்புடைய விடயங்களைக் கட்டுப்படுத்துவது இச்சபையாகும். தனது ஒழுங்கமைப்பு ரீதியான செயற்பாடுகளை இது தொடர்கின்ற அதேவேளை, உற்பத்தி மற்றும் தரம் தொடர்பான உறுதிப்பாடுகள்,உள்ளூரில் விநியோகம், தேயிலை ஏற்றுமதி, வெளிநாட்டில் தேயிலை ஊக்குவிப்புச் செயற்பாடுகள் ஆகியவற்றையும் மேற்கொள்ளும். தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்காக மானியங்களை வழங்குதல், தேயிலையின் தரத்தை உறுதிப்படுததுவது தொடர்பிலான கொள்கை உருவாக்கங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல் ஆகியன இதன் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளுள் உள்ளடங்கும். இதன் ஊக்குவிப்புச் செயற்பாடுகளாக தேயிலை சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், தேயிலை தொடர்பான புள்ளிவிபரங்களைச் சேகரித்து அவற்றுக்குப் பொருள்கோடல் போன்ற தேயிலை ஊக்குவிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வது இதன் பொறுப்பாகும்.

# இலங்கைத் தேயிலைச் சபைக் கட்டமைப்பு

### 1.1. பிரதான செயலகம்

ஒழுங்கமைத்தல், அபிவிருத்தி,தேயிலைத் தொழிற்துறையை மேம்படுத்தல்,சபையின் நிர்வாகம், அதன் நிதி ரீதியான அலுவல்கள் ஆகியன தொடர்பிலான சகல செயற்பாடுகளுக்கும் ஒட்டுமொத்த மேற்பார்வைக்கு பொறுப்பாகவிருக்கும். உதவிச் சேவைகள் என்ற முகாமைத்துவம் சார்ந்த பல்வேறுவிதமான சேவைகளைக் கொண்டுநடத்தும், அவையாவன நிர்வாகம், நிதி, செயற்பாடுகள்,ஒழுங்கமைத்தல்கள், ஊக்குவிப்பு, அபிவிருத்தி, புள்ளிவிபரம், உள்ளார்ந்த கணக்காய்வு, செயலகம், சுவை அறிதல், பகுப்பாய்வு சார்ந்த ஆய்வுக்கூடம், தகவல் தொழில்நுட்பம்,நூலகம்.

### 1.2. நிர்வாகப் பிரிவு

உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் (நிர்வாகம்) ஒட்டுமொத்த மனித வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, கொள்வனவு, களஞ்சியசாலைகள், பேணுதல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, போக்குவரத்து ஆகிய சகலவற்றுக்கும் நிர்வாகப் பிரிவு பொறுப்பாகவிருக்கும்.

### 1.3. நிதிப் பிரிவு

இலங்கைத் தேயிலைச் சபையின் ஒட்டுமொத்த நிதி ரீதியான கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு நிதிப் பிரிவு பொறுப்பாகவிருக்கும். நிதிப் பிரிவின் ஏனைய பிரதான செயற்பாடுகளாக சபையின் நிதி ரீதியான கொள்கை உருவாக்கங்கள் தொடர்பான விதப்புரைகள், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயார்செய்தல், வருடாந்த நிதி ரீதியான கூற்றுகள், மாதாந்த கணக்குகள், குறிப்பிட்ட காலப்பகுதிக்கொருமுறை வெளியிடப்படும் அறிக்கைகள், இருப்புகளைப் பேணுதல், வருடாந்த உறுதிப்படுத்தல்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த கணக்குகளைச் சமர்ப்பித்தல்.

### 1.4. தேயிலை ஆணையாளர் பிரிவு

விவசாயம், தேயிலை உற்பத்தி, தர அபிவிருத்தி தொடர்பான ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சகல விடயங்களையும் தொடர்புபடுத்துவதற்குப் பொறுப்பாகவிருக்கும்.

தேயிலை ஆணையாளர் பிரிவின் கீழ் செயற்படுகின்ற தேயிலை ஏற்றுமதிப் பிரிவானது தயாரிக்கப்பட்ட தேயிலையை விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்தல், பொதியிடல், ஏற்றுமதி செய்தல், தேயிலையை இறக்குமதி செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகவிருக்கும்.

## 1.5. தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

இலங்கைத் தேயிலையை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் மேம்படுத்தலுடன் தொடர்புடைய விடயங்களுக்குப் பொறுப்பாகவிருக்கும். வெளிநாட்டு அலுவலகங்கள் இதற்கான உதவிகளை நல்கும். சந்தைப்படுத்தல் தொடர்பான புலனாய்வுகளை காலத்திற்குக் காலம் வழங்குவதுடன் இத்தொழிற்துறையின் கேள்விகள் தொடர்பான விடயங்களையும் மேற்கொள்ளும். உள்ளூர் மக்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் நன்மைபயக்கக்கூடிய விதத்தில் தேயிலை விற்பனை நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

ஊக்குவிப்புப் பிரிவின் கீழ் செயற்படுகின்ற தேயிலைச் சுவையறிதல் பிரிவானது தேயிலையில் ஆகக்குறைந்த தரத்தைக் கண்டறிதல், சிங்க சின்னம் தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட தராதரம், மற்றும் சுயாதீன தேயிலைச் சுவை அறிபவர்கள் மூலமாக ஏனைய தூய்மையான தேயிலையைக் கண்டறிதல் ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பாகவிருக்கும். ஊடக விளம்பரம், சர்வதேச உணவு மற்றும் பானங்கள் தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல், சின்ன மேம்பாட்டுத் திட்டங்கள், வெளிநாட்டுத் தேயிலை மேம்பாட்டு அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றுகின்ற வர்த்தக அதிகாரிகள் ஆகியோரின் உதவியுடன் ஜெனரிக் மேம்பாடுகள். சர்வதேச தேயிலைச் சபைகள் மற்றும் தேயிலை அமைப்புகள், தேயிலை தொடர்பாக அரசாங்கக்களுக்கிடையிலான குழுக்கள் போன்றன.

## 1.6. பகுப்பாய்வு ஆய்வுகூடம்

தேயிலை சுவை அறிதல் மற்றும் இரசாயணப் பதார்த்தங்கள், நுண்ணுயிர்கள் மற்றும் பீடைநாசினி எச்ச தரங்கள் தொடர்பான அளவுகோல்கள் ஆகியன தொடர்பிலான தேயிலைத் தரச் சான்றிதழ்களை விநியோகித்தல். மற்றும் தேயிலையின் தன்மையைப் பேணுவதற்காக உயரிய தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தல். ஆகவே தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு பிரிவும் தரச் சான்றிதழ் தொடர்பான விடயங்களுக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. ஆகவே, சிலோன் ரீ என்ற நற்பெயரைப் பாதுகாப்பதற்கு இவை பங்களிப்புச் செய்துள்ளன.

# 02 தொழிற்துறை தொடர்பான விளக்கக் குறிப்பு

இலங்கையில் தேயிலைத் தொழிற்துறையைப் பொறுத்தவரையில் 2015 ஆம் ஆண்டு சவால்கள் மிக்கதொரு வருடமாகும். 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் தேசிய தேயிலை உற்பத்தியானது 328.8 மில்லியன் கி.கி ஆகும். 2014 ஆம் ஆண்டில் அறுவடை செய்யப்பட்ட தேயிலையை விட இது 9 மில்லின் கி.கி. குறைவானதாகும். 2015 ஆம் ஆண்டு ஆரம்பமானபொழுது வருடாந்த தேயிலை உற்பத்தி வீழ்ச்சி கண்டிருந்தது. இது சவாலுக்குரிய விடயமாகும்.

மேலும் கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் தேயிலை விலை வீழ்ச்சியடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டில் மாதாந்த சராசரி விற்பனை விலையானது வீழ்ச்சியடைந்திருந்தது. ஒரு கி.கி. இற்கான சராசரி விலை ஆகக் குறைந்தது ரூ. 368.18 ஆகவும் ஆகக்கூடிய சராசரி விலை ரூ. 424.14 ஆகவும் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகள் வருமானமானது வீழ்ச்சிப் போக்கினை நோக்கியிருந்தது.

## 2.1. தேயிலைக் காணிப் பகிர்வு

இலங்கையில் தற்சமயம் மொத்தமாக 202,439 ஹெக்டயர் நிலப்பரப்பில் தேயிலை பயிரடப்படுகிறது. இத்தேயிலைக் காணிகளை அவை முகாமைத்துவம் செய்யப்படுகின்ற அடிப்படையில் வகைப்படுத்துகின்ற போது தனியார் 60% ஆகவும் அரச துறை 40% ஆகவும் காணப்படுகின்றன. தேயிலை உற்பத்திக்கு அவசியமான காலநிலையைக் கருத்திற்கொண்டு தேயிலை உற்பத்தியானது நாட்டின் சில மாவட்டங்களிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதானமாக ஈரவலயப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.2 இலங்கையில் தேயிலை உற்பத்தி

அட்டவணை 2.2 : மொத்த தேயிலை உற்பத்த

| Elevation | Production(Kg) |
|---|---|
| High | 75,426,286 |
| Medium | 50,965,838 |
| Low | 202,378,942 |
| Total | **328,771,066** |

மோசமான காலநிலை காரணமாக பல சவால்கள் ஏற்பட்டன. தேசிய தேயிலை உற்பத்தியானது 10 மில்லியன் கி.கி. ஆல் வீழ்ச்சிகண்டது. 2014 ஆம் ஆண்டில் மொத்தமாக 328 மில்லியன் கி.கி. தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இதனுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டுககான வீழ்ச்சி 2.7 வீதமாகும்.

பல்வேறு வகையான உயர் மட்டங்களில் இலங்கை தேயிலை உற்பத்தி செய்கிறது. இவற்றுள் அதிகமானவை தாழ் நிலத் தேயிலையாகும்.


கடல் மட்டத்திலிருந்து 600 மீட்டர் முதல் மாறுபட்ட உயரங்களில் தேயிலை பயிர்ச்செய்யப்படுகிறது. இது நல்ல சுவையும் நிறமும் உடையதாகத் திகழ்கிறது. 1200 மீட்டருக்கு மேற்பட்ட உயர் நிலங்களில் உயர்நிலத் தேயிலை பயிரிடப்படுகிறது. இதன் தரம் மேன்மை மிக்கதாகக் கருதப்படுகிறது. இது தனித்துவமான சுவையும் மணமும் உடையதாகும்.

இதன் காரணமாக அதிக வருமானம் கிடைப்பதன் விளைவாக இதற்கேற்பட்ட கேள்விகளின் காரணமாகவும் அண்மைக்காலமாக தாழ் நிலத் தேயிலை உற்பத்தி அதிகமாகக் காணப்படுகிறது. தேசிய தேயிலை உற்பத்தியில் மூன்றில் இரண்டிற்கும் அதிகமாக (62%) அதிகமான பங்களிப்பை தாழ் நிலங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை வழங்கி வருகிறது. அதேவேளை, உயர் நில மற்றும் மத்திய நில தேயிலைகள் முறையே 23% மற்றும் 15% பங்களிப்புகளைத் தருகின்றன.

### 2.2.1. மாதாந்த தேயிலை உற்பத்தி

வருடம் முழுவதும் ஒவ்வொரு மாதமும் தாழ்நில தேயிலை உற்பத்திகள் சிறப்பான பங்களிப்பினை தேசிய உற்பத்திக்கு வழங்கின. 2015 ஆம் ஆண்டில் அதே வருடத்தில் ஏனைய மாதங்களை விட மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் குறிப்பிடக்கூடியளவு அதிக உற்பத்தி பதிவுசெய்யப்பட்டது. மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் 2014 ஆம் ஆண்டைவிட அதிக உற்பத்திகள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும் 2015 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தியை நோக்குகையில் 2014 ஆம் ஆண்டை விட 2.7 வீதம் குறைவானதாகும்.

உரு 2.1: மாதாந்த தேயிலை உற்பத்தி




### 2.2.2. விவசாய காலங்கள் - மாவட்ட ரீதியான பகுப்பாய்வுகள்

விவசாய மாவட்ட ரீதியாக தேயிலை உற்பத்தியை நோக்குகையில், இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் தொடர்ச்சியாக அதிக தேயிலை உற்பத்தி காணப்பட்டன. இவை முறையே 56Mn.kg மற்றும் 50.2Mn.kg ஆகும். ஏனைய விவசாய பிராந்தியங்களை விட தாழ்நிலப் பிரதேசத்தின் சகல உப மாவட்டங்களும் 2015 ஆம் ஆண்டில் அதிக உற்பத்தியைப் பதிவுசெய்தன. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த உற்பத்தியானது உடபொசல்லாவ பிராந்தியம் மற்றும் மத்திய பிராந்தியம் ஆகியவற்றில் அதிகமாகக் காணப்பட்டன.

அட்டவணை 2.3: விவசாய காலநிலை – மாவட்ட ரீதியான தேயிலை உற்பத்தி

| விவசாய காலநிலை மாவட்டம் | ஜனவரி முதல் டிசம்பர் வரை (QTY - Kg ) | | | |
|---|---|---|---|---|
| | *2014 | 2015* | Change | % |
| நுவரெலியா | **6,027** | **3,854** | **(2,173)** | **(36.06)** |
| மேல் நிலம் | | | | |
| 1. ரம்பொடை | 2,067 | 2,017 | **(49)** | **(2.39)** |
| 2. பூண்டுலோயா | 3,178 | 3,222 | **44** | **1.39** |
| 3. அகரப்பத்தனை | 8,117 | 9,760 | **1,643** | **20.24** |
| 4. நானுஓயா/ லிந்துள/ தலவாக்கல்ல | 11,411 | 9,814 | **(1,597)** | **(13.99)** |
| 5. பத்தானை/கொடகல | 5,644 | 5,736 | **92** | **1.62** |
| 6. ஹட்டன்/டிக்கோயா | 9,029 | 8,730 | **(299)** | **(3.31)** |
| 7. பொகவந்தலாவை | 7,278 | 6,846 | **(432)** | **(5.94)** |
| 8. அப்கொட்/மஸ்கெலிய | 7,340 | 7,478 | **138** | **1.88** |
| மேல் மொத்தம் | **54,065** | **53,604** | **(461)** | **(0.85)** |
| நடுத்தரம் | | | | |
| 1. வட்டவளை/கினிகத்ஹீன/நோத்தன் பாலம் | 2,360 | 1,674 | **(685)** | **(29.05)** |
| 2. புசல்லாவை/ஹேவாஹெட்ட | 7,094 | 7,217 | **123** | **1.73** |
| 3. கொத்மலை | 900 | 2,435 | **1,535** | **170.41** |
| 4. கம்பளை/நாவலப்பிட்டிய/டொலஸ்பேஜ் | 12,559 | 13,494 | **935** | **7.44** |
| 5. நிலம்ப/ஹந்தானை/கலாஹ | 1,062 | 2,292 | **1,231** | **115.91** |
| 6. கடுகன்னாவை | 6,652 | 7,629 | **976** | **14.68** |
| 7. மதுல்கெல்ல/கங்கில்ஸ்/ரங்கால | 2,583 | 3,021 | **437** | **16.93** |
| 8. உன்னஸ்கிரிய/கங்கல்ஸ்/வைதேச | 2,193 | 1,908 | **(285)** | **(12.99)** |
| 9. பலாங்கொட/ரக்வானை | 8,729 | 8,155 | **(574)** | **(6.58)** |
| நடுதர மொத்தம | **44,133** | **47,825** | **3,692** | **8.37** |
| உட புசல்லாவை | | | | |
| 1. உட புசல்லாவை/ஹல்கிரானோயா | 4,471 | 4,603 | **132** | **2.95** |
| 2. மதுரத்த | 1,796 | 1,696 | **(100)** | **(5.58)** |
| உடபுசல்லாவை மொத்தம் | **6,267** | **6,299** | **32** | **0.51** |
| **UVAS** | | | | |
| 1. கொஸ்லந்த/ஹல்துமுல்ல | 873 | 575 | **(298)** | **(34.16)** |
| 2. அப்புத்தளை | 3,708 | 4,139 | **431** | **11.63** |
| 3. பண்டாரவளை/பூனகல்ல | 3,489 | 3,499 | **10** | **0.30** |
| 4. மல்வத்தை/வெலிமட | 2,757 | 2,888 | **131** | **4.74** |
| 5. திமோதர/ஹெலியெல்ல/பதுள்ள | 9,833 | 8,430 | **(1,403)** | **(14.27)** |
| 6. எல்ல/நமுனுகுல | 1,727 | 1,832 | **105** | **6.06** |
| 7. பசரை/நுணுகல்ல | 3,317 | 3,413 | **96** | **2.91** |
| 8. மதுல்சிம | 3,049 | 3,084 | **35** | **1.14** |
| UVASமொத்தம் | **28,753** | **27,859** | **(893)** | **(3.11)** |
| தாழ் நிலம் | | | | |
| 1. தெனியாய | 17,394 | 16,185 | **(1,210)** | **(6.95)** |
| 2. காலி | 53,412 | 50,201 | **(3,211)** | **(6.01)** |
| 3. களுத்துறை | 19,702 | 19,217 | **(485)** | **(2.46)** |
| 4. கேகாலை | 5,533 | 6,219 | **685** | **12.38** |
| 5. கெல்லனி வெலி | 7,508 | 7,289 | **(219)** | **(2.92)** |
| 6. கண்டி/மாத்தளை/குருணாகல் | 7,464 | 4,432 | **(3,032)** | **(40.62)** |
| 7. மாத்தறை | 18,093 | 17,246 | **(847)** | **(4.68)** |
| 8. மொறவக்க | 7,812 | 7,452 | **(360)** | **(4.61)** |
| 9. இரத்தினபுரி | 56,797 | 55,625 | **(1,172)** | **(2.06)** |
| 10. பலாங்கொடை | 5,072 | 5,466 | **394** | **7.76** |
| தாழ் நிலம் மொத்தம் | **198,787** | **189,331** | **(9,457)** | **(4.76)** |
| முழு மொத்தம் | **338,032** | **328,771** | **(9,261)** | **(2.74)** |

### 2.2.3. மாவட்ட ரீதியாக தேயிலை உற்பத்தி

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் பிரதான உயர் நிலத் தேயிலை உற்பத்தியானது நுவரெலிய மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளதையும் அதிகளவிலான தாழ்நிலத் தேயிலை உற்பத்தியானது இரத்தினபுரி மாவட்டத்திலும் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது

அட்டவணை 2.4: மாவட்ட ரீதியாக தேயிலை உற்பத்தி (முப)

| மாவட்டம் | உயர் நிலம் | நடுத்தர நிலம் | தாழ் நிலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பதுள்ள | 14,942,769 | 14,163,893 | - | 29,106,662 |
| கொழும்பு | - | - | 824,970 | 824,970 |
| காலி | - | - | 48,101,381 | 48,101,381 |
| அம்பாந்தோட்டை | - | - | 245,942 | 245,942 |
| களுத்துறை | - | - | 18,325,117 | 18,325,117 |
| கண்டி | - | 20,924,275 | 11,789,748 | 32,714,023 |
| கேகாலை | - | 666,281 | 9,574,602 | 10,240,883 |
| மாத்தளை | - | 2,168,327 | 860,749 | 3,029,076 |
| மாத்தறை | - | 189,998 | 41,377,497 | 41,567,495 |
| நுவரெலியா | 60,322,894 | 10,765,554 | 762,390 | 71,850,837 |
| இரத்தினபுரி | 160,623 | 2,087,511 | 70,516,547 | 72,764,681 |
| மொத்தம் | 75,426,286 | 50,965,838 | 202,378,942 | 328,771,066 |

### 2.2.4 தேயிலைக் கொளுந்து சேகரித்தல் முறையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்திப் பகுப்பாய்வுகள்

தொழிற்சாலையொன்றின் மொத்த தேயிலை உற்பத்தியானது தமது சொந்தத் தோட்டங்களில் அல்லது ஏனைய தோட்டங்களில் அல்லது ஏனைய விநியோகத்தர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பச்சைக் கொழுந்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மாவட்ட அடிப்படையில் கொழுந்து சேரிக்கப்பட்ட முறை தொடர்பில் பின்வரும் அட்டவணை எடுத்துரைக்கிறது. 2015 ஆம் ஆண்டுக்கான மொத்த உற்பத்திக்கு இது பங்களிப்புச் செய்கிறது

அட்டவணை 2.5: மாவட்ட ரீதியாக தேயிலை உற்பத்தி

| மாவட்டம் | சொந்த தேயிலைக் கொழுந்து | தோட்டக் கொழுந்து | வாங்கிய கொழுந்து | மொத்தம் |
|---|---|---|---|---|
| பதுள்ள | 58,516,573 | 32,365,976 | 44,463,427 | 135,345,976 |
| கொழும்பு | - | - | 3,836,111 | 3,836,111 |
| காலி | 4,080,828 | 2,355,365 | 219,651,354 | 226,087,547 |
| அம்பாந்தோட்டை | - | - | 1,143,630 | 1,143,630 |
| களுத்துறை | 2,540,867 | 388,038 | 82,282,887 | 85,211,792 |
| கண்டி | 24,023,366 | 7,737,932 | 117,942,783 | 149,704,081 |
| கேகாலை | 5,562,979 | 1,323,639 | 40,733,489 | 47,620,107 |
| மாத்தளை | 1,080,009 | 470,408 | 12,534,786 | 14,085,203 |
| மாத்தறை | 9,676,716 | 2,354,476 | 181,257,658 | 193,288,850 |
| நுவரெலியா | - | - | - | - |
| இரத்தினபுரி | 214,821,358 | 48,654,016 | 70,631,020 | 334,106,394 |
| மொத்தம் | 21,523,790 | 4,479,719 | 312,352,256 | 338,355,765 |
| பதுள்ள | **341,826,485** | **100,129,569** | **1,086,829,402** | **1,528,785,456** |

### 2.2.5 பதனிடல் அடிப்படையில் உற்பத்திப் பகுப்பாய்வுகள்

#### 2.2.5.1 கறுப்புத் தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை உற்ப்ததி

மரபு ரீதியான தேயிலை உற்பத்தியானது 2015 ஆம் ஆண்டில் 2.57 வீத வீழ்ச்சி கண்டுள்ளது (8,076,140kg). அதேவேளை, CTC தேயிலை உற்பத்தியும் 2014 உடன் ஒப்பிடுகையில் 4.27 வீதம் வீழ்ச்சிகண்டிருந்தது. மீளாய்வு செய்யப்படுகின்ற காலப்பகுதியினுள் ஒட்டுமொத்தக் கறுப்புத் தேயிலை உற்பத்தியானது 8.9 மெ.கி.கி. வீழ்ச்சி கண்டது (-2.67%). அதேவேளை, பச்சைத் தேயிலை உற்பத்தியானது 316,047Kgவீழ்ச்சிகண்டிருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 9.89 வீத வீழ்ச்சியாகும்.

அட்டவணை 2.6: பதனிடல் முறை அடிப்படையில் தேயிலை உற்பத்தி

| புதனிடல் முறை | 2014 | 2015 | 2014 Vs 2015 | |
|---|---|---|---|---|
| | அளவு.(Kg) | அளவு.(Kg) | மாற்றம(Kg) | வளர்ச்ச (%) |
| மரபு ரீதியான தேயிலை | 314,498,217 | 306,422,077 | -8,076,140 | (2.57) |
| CTC | 20,338,185 | 19,469,857 | -868,328 | (4.27) |
| பச்சைத் தேயிலை | 3,195,179 | 2,879,132 | -316,047 | (9.89) |
| மொத்தம் | **338,031,581** | **328,771,066** | **-9,260,515** | **(2.74)** |

#### 2.2.5.2 உடன் தேயிலை மற்றும் சேதன தேயிலை உற்பத்தி

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உடன் தேயிலை உற்பத்தியில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது (137MT). அதேவேளை, சேதனத் தேயிலை உற்பத்தியில் சிறிது வீழ்ச்சி கண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது (144MT).


### 2.2.6 தேயிலை உற்பத்திச் செலவுகள்

உற்பத்திக்கும் உற்பத்திச் செலவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. அண்மைக்காலமாக உற்பத்திச் செலவுகள் தொடர்ச்சியாக பெருந்தோட்டத் துறையில் அதிகரித்து வருவதானது கவலைக்குரிய விடயமாகும். தொழிலாளர்களுக்கும் தேயிலை உற்பத்திக்கும் இடையில் நெருங்கிய உறவுகள் காணப்படுகின்றன. தேயிலை உற்பத்திச் செலவுகளானது நோக்குகையில் இதற்கு அதிகளவு தொழிலாளர்கள் தேவையின் காரணமாக உற்பத்திச் செலவுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பிரதான தேயிலை உற்பத்தி நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தேயிலை உற்பத்திக்கென அதிக செலவு ஏற்படுகிறது. உலக அரங்கில் இலங்கைத் தேயிலையின் போட்டித்தன்மையை இது பாதிக்கக்கூடியதாகக் காணப்படுகிறது.

கடந்த தசாப்தத்தில் 1 கிலோகிராம் தேயிலை உற்பத்திக்கான உற்பத்திச் செலவுகள துரிதமாக அதிகரித்து வந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தொழிலாளர்கள் தொடர்பான செலவுகள் மற்றும் உள்ளீடுகளுக்கான அதிக விலைகள் ஆகியன விசேடமாக உற்பத்திச் செலவைப் பாதித்துள்ளன. 2014/15 ஆம் வருடங்களில் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரங்கள் தொகுப்பின் பிரகாரம் தேயிலை உற்பத்திக்கான வருடாந்த செலவுத் தொகுப்பில் 1 கி.கி. இற்கான விலை ரூபா. 478.23 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2013/14 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது 0.66 சதவீத அதிகரிப்பாகும்.

உரு 2.2: 1 கி.கி. தேயிலைக்கான மொத்தச் செலவு




## 2.3. தேயிலை விற்பனை

பொதுவாக மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் தேயிலையின் விற்பனை விலை மற்றும் அதன் அளவு ஆகியன குறைவாகவே காணப்பட்டன. இவ்வருடம் முழுவதும் ஒரு கிலோவிற்கான சராசரி விலை ஆகக் கூடியது ரூ. 424 முதல் ஆகக் குறைந்த விலை ரூ. 368 ஆகக் காணப்பட்டது தேயிலை ஒரு கிலோவிற்கான வருடாந்த சராசரி விலை ரூ. 403.1 ஆகும். 2014 ஆம் ஆண்டில் சராசரி விலை 462.96 ஆகக் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் 337.5 மெ.தொன் கி.கி. தேயிலை விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலேவிற்கான சராசரி விலை ரூ. 462.96 ஆகும். 2015 ஆம் ஆண்டில் பொது மற்றும் தனியார் மற்றும் நேரடியான விற்பனைகள் மூலம் ஒரு கிலோவிற்கான சராசரி விலை ரூ. 403.1 ஆகும். தேயிலை விற்பனை அளவு மற்றும் ஒரு அலகிற்கான விலை ஆகியன முறையே 5.38 வீதம் மற்றும் 12.93 வீதம் ஆக குறைவடைந்தது.

### 2.3.1. விற்பனை முறைகள்

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையானது பகிரங்க ஏலவிற்பனை மூலமே பிரதானமாக விற்பனை செய்யப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் கொழும்பில் தேயிலை ஏலவிற்பனை மூலம் 314.3 மி. கி.கி. தேயிலை விற்பனை செய்யப்பட்டது. தனியார் விற்பனைகளானது 3.1 மி.கி.கி. (1%). ஏனையவை நேரடி விற்பனை மூலமானது, இவை 0.6 வீதமாகும்.

### 2.3.2. கொழும்பு தேயிலை ஏலவிற்பனை

கொழும்பு வர்த்தக அமைப்பின் கீழ் சிலோன் சேம்பர் ஒவ் கொமர்ஸ் இனால் 2015 ஆம் ஆண்டு கொழும்பில் 50 தேயிலை ஏலவிற்பனைகள் நடத்தப்பட்டன. இவ் ஏலவிற்பனையின் பொழுது அரச மற்றும் தனியார் விற்பனைகளாக 7Mn.Kg (12%) அதிகரித்த நிலையில் இவ் ஏலவிற்பனையில் பதிவுசெய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டு கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் வீழ்ச்சி விலை பெறப்பட்டது. 1 கிலோவிற்கான விலை ரூபா. 461.86 இலிருந்து ரூபா. 402.14 வரை அதிகரித்துக் காணப்பட்டது.

### 2.3.3. நில மட்ட உயர அடிப்படையிலான விற்பனைகள்

நில மட்ட உயர அடிப்படையிலான தேயிலை விற்பனைகள் தொடர்பான பகுப்பாய்வொன்று அட்டவணை 2.7 இல் காட்டப்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மூன்று நில உயரங்களிலும் தேயிலையின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. இதன் விளைவாக 2015 ஆம் ஆண்டில் சாதகமான நிலைமை காணப்பட்டது.

| நில மட்ட அமைவிடம் | அளவு (Mn.kg.) | | | | அலகுக்கான விலை (Rs./Kg.) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | Change | % | 2014 | 2015 | Change | % |
| உயர் | 73.1 | 71.0 | (2.09) | (2.86) | 423.98 | 392.47 | (31.51) | (7.43) |
| நடுத்தரம் | 51.5 | 49.1 | (2.45) | (4.75) | 413.91 | 362.11 | (51.8) | (12.51) |
| தாழ் | 212.9 | 199.3 | (13.62) | (6.40) | 488.21 | 416.98 | (71.23) | (14.59) |
| மொத்தம் | 337.5 | 319.4 | (18.16) | (5.38) | 462.96 | 403.10 | (59.86) | (12.93) |

## 2.4. தேயிலை ஏற்றுமதிகள்

2015 ஆம் ஆண்டில் தேயிலையின் ஏற்றுமதியானது (மீள் ஏற்றுமதி உள்ளடங்கலாக) 306.9 மில்லியன் கி.கி. ஆகும்.இதன் மூலமான ஏற்றுமதி வருமானம் ரூ. 182 பில்லியன் ஆகும். சராசரி அலகிற்கானFOB விலை ரூ. 593.11 (ஒரு கி.கி.இற்கான விலை). இந்த வருடம் ஏற்றுமதி வருமானமானது ரூ. 150 பில்லியனை விட அதிகமாகும். தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் அலகின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் இலங்கை 3 ஆம் இடத்தை வகிக்கின்றது. பெறுமதியின் அடிப்படையில் 1ஆம் இடத்தை வகிக்கின்றது. உலகளாவிய தேயிலைச் சந்தையில் சிலோன் தேயிலை வளர்ச்சிபெற்றுள்ளதையும் இதற்கு நற்பெயர் காணப்படுவதையும் இது எடுத்துரைக்கிறது.


ஏனைய தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளிடம் காணப்பட்ட போட்டித்தன்மையானது தேயிலை ஏற்றுமதியைப் பாதகமாகப் பாதித்தது. அத்தோடு இலங்கையில் தேயிலை உற்பத்திக்கான செலவு அதிகரித்துக் காணப்பட்டமையும் குறைவான அறுவடையும் இந்நிலைமையை மென்மேலும் பாதிப்படையச் செய்தது. மேலும் CTCதேயிலைக்குப் பதிலாக தொடர்ச்சியாக மரபு ரீதியான தேயிலை உற்பத்தியில் தங்கியிருந்தமையின் காரணமாக பூலோக நுகர்வோர்களுக்கு மத்தியில் இதன் சந்தைப் பங்குகள் துரிதமாக வீழ்ச்சிகண்டதுடன் இவர்களது தெரிவுகளும் துரிதமாக மாற்றமடைந்தன.

### 2.4.1 வகைகளின் அடிப்படையில் தேயிலை ஏற்றுமதிப் பகுப்பாய்வுகள்

தேயிலைக் கொழுந்தின் மூலம் மற்றும் அதன் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பொதுவாக தேயிலைக்கான தேர்வுகள் மாறுபடுகின்றன.உதாரணமாக, மத்திய கிழக்கு மற்றும் CISநாடுகளில் இலங்கையின் தாழ்நிலப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரபு ரீதியான கடும் மணம் உடைய தேயிலைக்கு நல்ல கிராக்கி காணப்படுகிறது.

2015 ஆம் ஆண்டில் கறுப்பு, பச்சை, உடனடித் தேயிலை ஆகியவற்றின் மொத்த உற்பத்தி மற்றும் மீள் ஏற்றுமதிகள் உள்ளடங்கலாக அதன் அளவு மற்றும் பெறுமதி ஆகியவற்றில் சாதகத் தன்மை காணப்பட்டது. மொத்த ஏற்றுமதி அளவானது 6.23 வீத வளர்ச்சியைக் காட்டியது. இது 20.4Mn.Kg மாற்றமாகும். மேலும் ஏற்றுமதி, மீள் ஏற்றுமதிகள் ஆகியன அளவின் அடிப்படையில் 5.97 வீத மற்றும் 15.09 வீத அதிகரிப்பைக் காட்டியதுடன் பெறுமதியின் அடிப்படையில் இவை14.35%மற்றும் 14.64%ஆகும். 2014 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருமானமாக 1628.3 மில். ஐ.அமெ.டொலராகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் 1339.1 மில். ஐ.அமெ.டொலராகக் காணப்பட்டது. இது17.76 வீத குறைவாகும்.

உரு 2.3 : மாதாந்த தேயிலை ஏற்றுமதிகள் 2014 – அளவு மற்றும் ஒரு கூறுக்கான பெறுமத



**2.4.2.** வருடாந்த தேயிலை ஏற்றுமதிகள் - 2015

2015 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதியானது அதன் வகைகளின் அடிப்படையில் அளவு, பெறுமானம் மற்றும் FOB உள்ளடங்கலான விபரங்கள் விரிவாக அட்டவணை 2.8 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை: வருடாந்த தேயிலை ஏற்றுமதி - 2015

| Package | அளவு (kg) | பெறுமதி (Rs) | FOB(Rs/kg) |
|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 298,906,481 | 174,293,379,834 | 583.10 |
| கறுப்புத் தேயிலை | **294,353,240** | **169,129,920,979** | **574.58** |
| ரீ பேக் | 19,229,424 | 22,139,247,189 | 1,151.32 |
| தொகையானது | 131,793,790 | 67,919,700,386 | 515.35 |
| பொதிகள் (1Kg-3Kg) | 1,958,307 | 1,324,499,516 | 676.35 |
| பொதிகள் (3Kg-5Kg) | 18,304,973 | 9,549,504,158 | 521.69 |
| பொதிகள் (4g - 1Kg) | 83,162,243 | 49,028,481,551 | 589.55 |
| பொதிகள் (5Kg-10Kg) | 39,904,502 | 19,168,488,179 | 480.36 |
| பச்சைத் தேயிலை | **2,431,785** | **2,993,287,021** | **1,230.90** |
| ரீ பேக் | 652,333 | 1,423,856,987 | 2,182.71 |
| தொகையானது | 1,034,212 | 664,810,866 | 642.82 |
| பொதிகள் (1Kg-3Kg) | 4,388 | 3,859,331 | 879.52 |
| பொதிகள் (3Kg-5Kg) | 2,172 | 3,984,842 | 1,834.81 |
| பொதிகள் (4g - 1Kg) | 696,919 | 860,890,541 | 1,235.28 |
| பொதிகள் (5Kg-10Kg) | 41,761 | 35,884,453 | 859.28 |
| **உடனடித் தேயிலை** | **2,121,456** | **2,170,171,834** | **1,022.96** |
| மீள் ஏற்றுமதி | **8,029,940** | **7,752,179,156** | **965.41** |
| கறுப்புத் தேயிலை | **5,965,886** | **4,627,248,926** | **775.62** |
| ரீ பேக் | 2,921,688 | 2,789,895,038 | 954.89 |
| தொகையானது | 959,335 | 446,892,065 | 465.84 |
| பொதிகள் (1Kg-3Kg) | 63,003 | 24,056,323 | 381.83 |
| பொதிகள் (3Kg - 5Kg) | 45 | 43,346 | 963.24 |
| பொதிகள் (4g - 1Kg) | 2,007,391 | 1,358,658,495 | 676.83 |
| பொதிகள் (5Kg-10Kg) | 14,424 | 7,703,659 | 534.07 |
| பச்சைத் தேயிலை | **2,054,986** | **3,115,808,412** | **1,516.22** |
| ரீ பேக் | 1,175,359 | 2,213,938,919 | 1,883.63 |
| தொகையானது | 81,448 | 38,360,086 | 470.98 |
| பொதிகள் (1Kg -3Kg) | 4,194 | 2,964,433 | 706.83 |
| பொதிகள் (3Kg-5Kg) | 155 | 480,471 | 3,099.81 |
| பொதிகள் (4g - 1Kg) | 793,280 | 859,652,570 | 1,083.67 |
| பொதிகள் (5Kg-10Kg) | 550 | 411,933 | 748.97 |
| **உடனடித் தேயிலை** | **9,068** | **9,121,818** | **1,005.97** |
| ஓட்டுமொத்தம் (ஏற்றுமதி, மீள் ஏற்றுமதி) | **306,936,421** | **182,045,558,990** | **593.11** |
| RTD (Lt) | 18,127,468 | 1,612,732,163 | 88.97 |
| ஏற்றுமதி | 145 | 31,241 | 214.86 |
| மீள்-ஏற்றுமதி | 18,127,322 | 1,612,700,922 | 88.97 |

**2.4.3.** பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள்

பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை வகைகள் தொடர்பிலான தெரிவுகள் உலகளாவிய ரீதியில் துரிதமாக மாறி வருகின்றன. உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கான மரபு ரீதியான சந்தை வாய்ப்புக்களைப் பேணி வருவதற்கு இவ்வித சந்தை மாற்றங்களுக்கேற்ற வகையில் இலங்கை தன்னை மாற்றிக் கொள்ளல் வேண்டும். அளவின் அடிப்படையில் 3 கி.கி. தேயிலைப் பைகள் மற்றும் உடன் தேயிலைகள் தொடர்பிலான பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கான ஏற்றுமதிக் கேள்விகள் அதிகரித்துள்ளன. 2015 ஆம் ஆண்டில் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் இது 37.409 வீதமாகும். இதன் மூலம் ஏற்றுமதி வருமானமாக ரூ. 84.2 பில்லியன் பெறப்பட்டது. இது 46.26 வீத பங்குப் பெறுமதியாகும்.


அட்டவணை 2.9 : பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள் 2015

| | | அளவு (Kg) | பெறுமதி(Rs) | FOB(Rs/Kg) |
|---|---|---|---|---|
| ஏற்றுமதி | கறுப்பு | 104,349,974 | 72,492,228,256 | 694.70 |
| | பச்சை | 1,353,640 | 2,288,606,860 | 1,690.71 |
| | உடன் | 2,121,456 | 2,170,171,834 | 1,022.96 |
| | உப மொத்தம் | 107,825,070 | 76,951,006,949 | 713.67 |
| மீள் ஏற்றுமதி | கறுப்பு | 4,992,081 | 4,172,609,856 | 835.85 |
| | பச்சை | 1,972,833 | 3,076,555,922 | 1,559.46 |
| | உடன் | 9,068 | 9,121,818 | 1,005.97 |
| | உப மொத்தம் | 6,973,983 | 7,258,287,596 | 1,040.77 |
| **மொத்தம்** | | **114,799,053** | **84,209,294,545** | **733.54** |

* RTD ஏற்றுமதிகளை உள்ளடக்காமலேயே இவ் அட்டவணை தயார்செய்யப்பட்டது. மொத்த RTD

ஒவ்வொரு பொதி வகைகளுக்குமான FOBவிலை தொடர்பான போக்குகளானது பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் பயனுறுதித் தன்மையைக் காட்டுகின்றன. பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் மேலதிக மேம்பாடுகளானது மொத்த தேயிலை ஏற்றுமதிகளை விட இலங்கைப் பொருளாதாரத் திற்கு சாதகமான பங்களிப்புக்களை நல்கின

உரு 2.4: பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள் மற்றும் மொத்த தேயிலை ஏற்றுமதிக




## 2.4.4. இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான இடங்கள் (நாடுகள்)

கடந்த காலங்களில் ஐரோப்பா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றில் இலங்கைத் தேயிலைக்கு சிறந்த சந்தைகள் காணப்பட்டன. 2015 ஆம் ஆண்டுக் காலத்தில் இலங்கையின் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 11.97 வீதத்தை இறக்குமதி செய்வதன் மூலம்,துருக்கியின் நிலைமையையும் விஞ்சி இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதலாவது இடத்தை ரஷ்யா பெற்றுக்கொண்டது. 2014 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் 2வது இடத்தை ரஷ்யா வகித்தது. மொத்த தேயிலை ஏற்றுமதியில் 13.5 வீதத்தை இந்நாடு இறக்குமதி செய்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அளவின் அடிப்படையில் 16.68 வீத வீழ்ச்சியை இது காட்டியது.

2014 ஆம் ஆண்டு வரையில் இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதல் நிலையை ரஷ்யா வகித்தது. இருப்பினும், துருக்கி நாட்டில் இலங்கைத் தேயிலைக்கு ஏற்பட்ட அதிக கிராக்கியின் காரணமாகவும் மற்றும் ரஷ்யாவில் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாகவும் அளவின் அடிப்படையில் இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளில் ரஷ்யா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. மீண்டும் 2015 இது முதலாம் இடத்திற்கு வந்தது. 2015 ஆம் ஆண்டில் மொத்த தேயிலை ஏற்றுமதியில் 11.5 வீதத்தை ரஷ்யா வகித்தது. 2014 ஆம் ஆண்டு தேயிலை ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் இது 16.68 வீத வீழ்ச்சியாகும். தேயிலை ஏற்றுமதிகள் தொடர்பான பெறுமதி சேர்க்கையின் பிரகாரம், தேயிலை ஏற்றுமதிகள் மூலம் ரஷ்யாவிடமிருந்து அதிக வருமானம் ஈட்டப்பட்டது. இது மொத்தக் கொடுக்கல் வாங்கல்களில் 11.7 வீதமாகும்.

தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஈராக் மூன்றாம் இடத்தை வகிக்கின்றது. 2015 ஆம் ஆண்டின் மொத்த ஏற்றுமதியில் 10.22 வீதமாகும். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் 26.73 சதவீத வீழ்ச்சியை இது காட்டுகிறது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் ஜப்பானுக்கான சராசரி FOB விலைகள் குறிப்பிடக்கூடிய அதிகரிப்பைக் காட்டுகிறது. 2015 ஆம் ஆண்டு மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகள் வரிசையில் 5வது இடத்தை வகிக்கின்ற அதேவேளை இலங்கைத் தேயிலைக்கான சந்தை வாய்ப்புகள் UAE நாட்டில் 18.29 வீத வளர்ச்சியைக் காட்டியது. அதேவேளை,ரஷ்யா, துருக்கி,சிரியா, லிபியா மற்றும் குவைத் போன்ற நாடுகள் 2014 உடன் ஒப்பிடுகையில் 2015 இல் தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சியைக் காட்டியது.

அட்டவணை 2.10: இலங்கை தேயிலையை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகள் 2015

| நாடு | 2015 | | | 2014 | | | வளர்ச்சி |
|---|---|---|---|---|---|---|---|
| | தரவரிசை | அளவு | ஏற்றுமதி பகிர்வு (%) | தர வரிசை | அலகு (kg) | ஏற்றுமதி பகிர்வு (%) | (%) |
| ருஷ்யா | 1 | 36,743,776 | 11.97 | 2 | 44,100,849 | 13.5 | (16.68) |
| துருக்கி | 2 | 33,705,653 | 10.98 | 1 | 44,746,301 | 13.7 | (24.67) |
| ஈராக் | 3 | 31,364,833 | 10.22 | 4 | 24,749,386 | 7.6 | 26.73 |
| ஈரான் | 4 | 30,047,558 | 9.79 | 3 | 30,076,649 | 9.2 | (0.10) |
| UAE | 5 | 23,438,174 | 7.64 | 5 | 19,813,573 | 6.1 | 18.29 |
| ஆஸர்பைஜான் | 6 | 11,176,815 | 3.64 | 9 | 11,154,552 | 3.4 | 0.20 |
| சிரியா | 7 | 11,091,074 | 3.61 | 6 | 12,917,421 | 3.9 | (14.14) |
| லிபியா | 8 | 9,983,880 | 3.25 | 7 | 12,650,300 | 3.9 | (21.08) |
| குவைத் | 9 | 8,729,559 | 2.84 | 8 | 12,222,651 | 3.7 | (28.58) |
| ஜப்பான் | 10 | 8,462,172 | 2.76 | 10 | 9,108,279 | 2.8 | (7.09) |
| **மொத்தம்** | | **204,743,493** | **66.71** | | **221,539,961** | **67.7** | **(7.58)** |

இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஈரான் தொடர்ச்சியாக 4வது நிலையை வகிக்கிறது. அதேவேளை,10.22 வீத தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் ஈராக் தனது நிலையை மூன்றாவதாக உயர்த்திக் கொண்டது. பிராந்திய அடிப்படையில் நோக்குகையில் இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எண்ணெய் விலை அதிகரித்ததன் காரணமாக தேயிலைக்கான கேள்விகளும் இங்கு அதிகரித்துள்ளன. இலங்கை தேயிலை ஏற்றுமதியில் முதல் 10 நாடுகளும் மொத்தத்தில் 66.71 வீதமான தேயிலையை இறக்குமதி செய்கின்றன. ***FOB*** சராசரி விலையைப் பொறுத்த வரையில் ரஷ்யா, துருக்கி,ஈரான்,ஐ.அ.இராச்சியம், சிரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் குறிப்பிடக் கூடியளவு அதிகமான ***FOB*** ஐப் பேணுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் நிலவிய பொருளாதார ரீதியான வீழ்ச்சிகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிலவிய அரசிறைமை கடன் பிரச்சினைகள் ஆகியன தேயிலை ஏற்றுமதிகள் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் குறைத்தன.

அட்டவணை : தேயிலை ஏற்றுமதி அளவும் அதனைப் பெறும் 20 முக்கிய நாடுகளின் தரப்படுத்தலும்

| நாடு | பைகள் | போதி | பொதிகள் (>3Kg) | பொதிகள் (1Kg - 3Kg) | பொதிகள் (3Kg -5Kg) | பொதிகள் (4g-1Kg) | பொதிகள் (5Kg -10Kg) | பைகள் | போதி | பொதிகள் (>3Kg) | பொதிகள் (1Kg - 3Kg) | பொதிகள் (3Kg - 5Kg) | பொதிகள் (4g-1Kg) | பொதிகள் (5Kg - 10Kg) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 1,879,411 | 28,794,102 | - | 11,800 | 2,183 | 5,993,790 | 62,490 | 2 | 1 | - | 11 | 16 | 4 | 11 |
| துருக்கி | 406,044 | 2,117,609 | - | 241,123 | 8,710,665 | 19,033,294 | 3,196,918 | 9 | 14 | - | 4 | 1 | 1 | 5 |
| ஈராக் | 150,240 | 3,392,170 | - | 457,830 | 944,735 | 14,834,738 | 11,585,120 | 14 | 11 | - | 2 | 4 | 2 | 1 |
| ஈரான் | 37,076 | 15,006,483 | - | 708,230 | 924,735 | 2,088,379 | 11,282,655 | 18 | 2 | - | 1 | 5 | 8 | 2 |
| UAE | 555,405 | 10,867,927 | 35 | 18,550 | 1,431,839 | 4,433,768 | 6,130,650 | 7 | 3 | 6 | 9 | 3 | 5 | 3 |
| அஸர்பெய்ஜான் | 3,057 | 10,779,591 | - | - | 7,150 | 387,017 | - | 20 | 4 | - | - | 13 | 15 | - |
| சிரியா | 762,946 | 570,859 | - | 15,563 | 5,160,770 | 3,919,876 | 661,060 | 6 | 18 | - | 10 | 2 | 6 | 7 |
| லிபியா | 7,546 | - | - | - | - | 9,870,234 | 106,100 | 19 | 20 | - | - | - | 3 | 9 |
| குவைத் | 468,259 | 1,971,460 | - | 2,010 | 448,925 | 1,956,105 | 3,882,800 | 8 | 15 | - | 14 | 6 | 10 | 4 |
| ஜப்பான் | 780,816 | 6,808,737 | - | 310 | 54,820 | 138,695 | 678,795 | 5 | 6 | - | 17 | 10 | 19 | 6 |
| சீனா | 261,990 | 6,834,547 | 1,740 | 59,732 | 6,642 | 219,656 | 71,089 | 11 | 5 | 3 | 6 | 14 | 17 | 10 |
| ஜேர்மன் | 155,938 | 4,734,919 | 70 | 378 | 13,633 | 2,081,139 | 12,390 | 13 | 8 | 5 | 16 | 12 | 9 | 14 |
| சிலி | 358,020 | 6,446,081 | 502 | 5,000 | - | 153,857 | 10 | 10 | 7 | 4 | 12 | - | 18 | 18 |
| ஜோர்தான் | 2,394,154 | 134,778 | - | 74,310 | 148,925 | 2,421,050 | 476,840 | 1 | 19 | - | 5 | 8 | 7 | 8 |
| சவூதி அராபியா | 1,289,008 | 1,701,510 | - | 19,470 | 119,232 | 1,763,978 | 13,456 | 3 | 16 | - | 8 | 9 | 12 | 13 |
| ஹொங்காங் | 56,064 | 3,847,078 | - | 360,786 | 219,935 | 331,650 | 31,055 | 16 | 9 | - | 3 | 7 | 16 | 12 |
| USA | 991,879 | 1,356,125 | 84,240 | 924 | 16,583 | 1,874,557 | 8,503 | 4 | 17 | 1 | 15 | 11 | 11 | 16 |
| உக்ரேன் | 243,253 | 3,199,415 | - | 29,976 | - | 725,529 | 10,180 | 12 | 12 | - | 7 | - | 14 | 15 |
| எகிப்து | 53,257 | 2,865,580 | - | - | - | 1,261,598 | - | 17 | 13 | - | - | - | 13 | - |
| தாய்வான் | 126,092 | 3,440,145 | 9,000 | 3,050 | 4,160 | 22,605 | 4,250 | 15 | 10 | 2 | 13 | 15 | 20 | 17 |

### 2.4.4.1 கறுப்பு தேயிலை ஏற்றுமதிகள்

மொத்த தேயிலை ஏற்றுமதியில் கறுப்புத் தேயிலையானது 97.8 வீதத்தை (300.3Mn.Kg) பதிவுசெய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தில் 95.5 வீதம் (ரூபா. 173.8 பில்.) இதன் பங்களிப்பாகும். கறுப்புத் தேயிலையை இறக்குமதி செய்த நாடுகளுடன் நோக்குகையில் அளவின் அடிப்படையில் முதல் 20 நாடுகள் 83 வீதமான கறுப்புத் தேயிலையை இறக்குமதி செய்தன. 35.74Mn.Kg கறுப்புத் தேயிலையை 2015 ஆம் ஆண்டு இறக்குமதி செய்ததன் மூலம் புதிய சாதனையொன்றை துருக்கி பதிவுசெய்துகொண்டது. இலங்கையின் முதல் தேயிலை இறக்குமதியாளர் என்ற நிலையை வகித்த ரஷ்யாவை இது இரண்டாம் இடத்திற்கு தள்ளியது. துரக்கி,ஈராக் ஆகிய நாடுகளுக்கு முறையே 33.68Mn.Kg வீதம் மற்றும் 31.36Mn.Kg வீதம் ஏற்றுமதி செய்யப்பட்டது.

அட்டவணை 2.12: அதிகூடியளவில் கறுப்புத் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் முதல் 20 நாடுகள் மற்றும் சந்தைப் பங்கு

| நாடுகள் | அளவு (Mn.Kg) | பெறுமானம் (Rs.Bn) | FOB (Rs/Kg) | அளவுப் பங்கு (%) | பெறுமதிப் பங்கு (%) | அலகு வளர்ச்சி ('14 Vs '15) |
|---|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 35.74 | 20.22 | 565.77 | 11.90 | 11.64 | (16.95) |
| துருக்கி | 33.68 | 18.67 | 554.25 | 11.21 | 10.74 | (24.71) |
| ஈராக் | 31.36 | 13.42 | 427.78 | 10.44 | 7.72 | 26.74 |
| ஈரான் | 30.03 | 17.93 | 597.29 | 10.00 | 10.32 | (0.14) |
| UAE | 22.93 | 12.77 | 556.84 | 7.63 | 7.35 | 20.01 |
| அஸர்பெய்ஜான் | 11.16 | 6.11 | 547.01 | 3.72 | 3.51 | 0.12 |
| சிரியா | 11.09 | 6.38 | 574.99 | 3.69 | 3.67 | (14.11) |
| லிபியா | 9.90 | 4.40 | 444.12 | 3.30 | 2.53 | (20.29) |
| குவைத் | 8.70 | 4.03 | 462.45 | 2.90 | 2.32 | (28.60) |
| ஜப்பான் | 8.45 | 5.76 | 681.20 | 2.81 | 3.31 | (7.14) |
| சீனா | 7.40 | 4.54 | 613.80 | 2.46 | 2.61 | 41.22 |
| சிலி | 6.90 | 3.35 | 484.72 | 2.30 | 1.93 | (1.33) |
| ஜேர்மன் | 6.85 | 3.83 | 558.39 | 2.28 | 2.20 | 3.69 |
| ஜோர்தான் | 5.62 | 3.90 | 693.09 | 1.87 | 2.24 | (15.87) |
| ஹொங்காங் | 4.84 | 2.63 | 542.58 | 1.61 | 1.51 | (4.44) |
| சவூதி அராபியா | 4.81 | 3.37 | 699.98 | 1.60 | 1.94 | (4.65) |
| எகிப்து | 4.15 | 1.97 | 473.46 | 1.38 | 1.13 | 48.01 |
| உக்ரேன் | 3.93 | 2.41 | 613.88 | 1.31 | 1.39 | (37.07) |
| ஐ.அமெரிக்கா | 3.91 | 3.02 | 773.12 | 1.30 | 1.74 | (12.59) |
| தாய்வான் | 3.53 | 1.61 | 456.18 | 1.17 | 0.93 | 23.42 |
| மொத்தம் | 255.00 | 140.29 | 550.15 | 84.91 | 80.74 | (6.07) |

### 2.4.4.2 பச்சை தேயிலை ஏற்றுமதிகள்

மொத்த தேயிலை ஏற்றுமதியில் பச்சைத் தேயிலையானது 1.5 வீதத்தை (4.5Mn.Kg)உள்ளடக்கியது. அதேபோல், 2015 ஆம் ஆண்டு தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தின் 3.36% (ரூ. 6.1 பில்) ஆகும். பச்சை தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் சகல நாடுகளிலும் முதல் அளவின் அடிப்படையில் பச்சை தேயிலையை இறக்குமதி செய்யும் முதல் 20 நாடுகள் 81 வீதமாகும். பச்சை தேயிலையை இறக்குமதி செய்யும் முதல் 20 நாடுகளுள் 2015 ஆம் ஆண்டில் 1.0Mn.kgஐ ரஷ்யா இறக்குமதி செய்தது.

| நாடு | அளவு ('000Kg) | பெறுமதி (Rs.Mn) | FOB (Rs/kg) 0 | அளவுப் பங்கு (%) | பெறுமதிப் பங்கு (%) | வளர்ச்சி ('14 Vs '15) |
|---|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 1,006 | 1,075 | 1,068.20 | 22.43 | 17.60 | 6.03 |
| UAE | 513 | 377 | 734.11 | 11.43 | 6.16 | 27.76 |
| USA | 337 | 519 | 1,540.49 | 7.51 | 8.50 | 17.92 |
| உக்ரேன் | 276 | 293 | 1,063.93 | 6.14 | 4.80 | 38.91 |
| அவுஸ்திரேலியா | 180 | 430 | 2,381.64 | 4.02 | 7.03 | 13.08 |
| நெதர்லாந்து (ஹோலாந்து) | 164 | 392 | 2,391.61 | 3.66 | 6.42 | 5.76 |
| ஜேர்மன் | 144 | 145 | 1,012.04 | 3.20 | 2.38 | 58.96 |
| போலாந்து | 131 | 163 | 1,243.23 | 2.93 | 2.67 | 58.58 |
| பிரான்ஸ் | 120 | 178 | 1,474.27 | 2.69 | 2.91 | 9.36 |
| சவூதி அராபியா | 97 | 132 | 1,363.29 | 2.16 | 2.16 | 107.50 |
| லிபியா | 82 | 27 | 332.33 | 1.83 | 0.45 | 64.04 |
| நைஜீரியா | 82 | 129 | 1,575.59 | 1.82 | 2.10 | 0.70 |
| ஐக்கிய இராச்சியம் | 76 | 195 | 2,557.95 | 1.70 | 3.20 | 0.17 |
| தாய்வான் | 74 | 71 | 966.38 | 1.64 | 1.16 | 30.01 |
| உஸ்பகிஸ்தான் | 73 | 70 | 956.68 | 1.62 | 1.14 | 52.25 |
| பிலாரஸ் | 65 | 69 | 1,065.95 | 1.45 | 1.13 | 33.71 |
| சிலி | 58 | 92 | 1,582.58 | 1.30 | 1.51 | 91.21 |
| பெல்ஜியம் | 56 | 52 | 939.31 | 1.24 | 0.86 | 112.12 |
| சீனா | 52 | 133 | 2,525.34 | 1.17 | 2.17 | 13.19 |
| நியுசிலாந்து | 51 | 108 | 2,127.46 | 1.13 | 1.76 | 5.11 |
| மொத்தம் | **3,637** | **4,650** | **1,278.52** | **81.07** | **76.12** | **14.65** |

### 2.4.4.3 உடன் தேயிலை ஏற்றுமதிகள்

இலங்கை உடன் தேயிலை சந்தைதொடர்பில் அயர்லாந்து முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது. இலங்கையிலிருந்து உடன் தேயிலை அதிகளவில் அயர்லாந்திற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இலங்கை உடன் தேயிலையில் 2.0Mn.Kg (93%) அயர்லாந்தினால் இறக்குமதி செய்யப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காஆகிய நாடுகள் அடுத்த நிலையை வகிக்கின்றன. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் அளவின் அடிப்படையில் 3.21 வீதமும் பெறுமதி வீழ்ச்சியின் அடிப்படையில் 10.17வீதமும் உடன் தேயிலைச் சந்தை வாய்ப்புகள் காணப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றன

### 2.4.4.4 அருந்துவதற்கு தயார் நிலையிலுள்ள தேயிலை (RTD)

RTD தேயிலை ஏற்றுமதிகள் தொடர்பில் இலங்கை RTD தேயிலை ஏற்றுமதிகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்புகள் காணப்பட்டதை அறியமுடிகிறது. 2015 ஆம் ஆண்டில் 18.1Mn லீட்டர் RTDதேயிலையை ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.1612.7 மில்லியன்RTD தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் RTD தேயிலையில் 136 வீத வளர்ச்சி காணப்பட்டது. 17.6Mn லீட்டர் RTD தேயிலையை இறக்குமதி செய்ததன் மூலம் ரூ. 1535 மில்லியன் வருமானத்தை இந்தியா இலங்கைக்குத் தந்தது. கனடா, அவுஸ்திரேலியா, மாலைதீவு மற்றும் நெதர்லாந்துஆகிய நாடுகள் இலங்கை RTD தேயிலையை இறக்குமதி செய்யும் பிரதான நாடுகளாகும்.

## 2.5 பூகோள தேயிலைக் கைத்தொழில் தொடர்பான பின்புலம்

தேயிலையானது உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற, அதேவேளை அதிகமானோரினால் பருகப்படுகின்றதொரு சூடான பானமாகும். இலங்கையின் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் தேயிலையானது அதன் தேசிய பொருளாதாரத்திலும் சமூக அபிவிருத்தியிலும் அதன் ஆரம்ப கால வரலாறு முதல் பாரிய பங்களிப்புகளை நல்கியுள்ளது. இலங்கையின் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு தேயிலையானது குறிப்பிடக்கூடிய பங்களிப்புகளை நல்கியுள்ளது. அத்தோடு நாட்டின் தொழிற்துறையைப் பொறுத்தவரையில் தேயிலை சார்ந்த துறையில் அதிகமானோர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் பிரதான உற்பத்தி நாடுகளாக இந்தியா, சீனா, இலங்கை, கென்யா, இந்தோனேசியா ஆகியன திகழ்கின்றன. உலக தேயிலை உற்பத்தியில் 82 வீதத்தையும் அதேவேளை, உலக தேயிலை ஏற்றுமதியில் 80 வீதத்தையும் இவை வகிக்கின்றன. உலகளாவிய ரீதியில் தேயிலைச்செடி எழுச்சி பெறுவதற்கு மூல காரணமாக சீனா திகழ்ந்துள்ளது. அதேவேளை, கென்யா போன்ற ஆபிரிக்க நாடுகளில் பாரியளவில் தேயிலை அறுவடை செய்யப்பட்டுள்ளதாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. உலகளாவிய தேயிலைத் தொழிற்துறையில் இலங்கையின் பின்புலத்தை நாம் பரிசீலிக்கையில் ஒரு தொகுதிக்கான சராசரி தேயிலை விலை (ஏலவிற்பனை) 2013 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. மற்றும் ஏனைய தேயிலை உற்பத்தி செய்யும்

### 2.5.1. பூகோள தேயிலைப் பயிர்ச்செய்கை

2015 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் உலகில் பயிர் செய்யப்பட்ட தேயிலையின் அளவானது 4 மில்லியன் ஹெக்டெயர்களாகும்.

அட்டவணை 2.14: அதிகூடிய தேயிலை பயிர்ச்செய்கை தொடர்பான பதிவுகள் (பரப்பளவு)

| நாடு | 2010 (Ha.) | 2011 (Ha.) | 2012 (Ha.) | 2013(Ha) | 2014(Ha) |
|---|---|---|---|---|---|
| சீனா | 1,970,200 | 2,112,510 | 2,279,940 | 2,468,840 | 2,649,840 |
| இந்தியா | 560, 609 | 579,350 | 563,980 | 563,980 | 566,660 |
| **இலங்கை*** | **188,007** | **187,860** | **187,000** | **187,000** | **187,935** |
| கென்யா | 171,916 | 187,855 | 190,717 | 198,657 | 203,006 |
| வியட்னாம் | 129,000 | 127,000 | 124,027 | 124,000 | 125,000 |
| இந்தோனேசியா | 122,796 | 122,764 | 121,076 | 122,546 | 121,000 |
| மியன்மார் | 78,400 | 78,500 | 78,500 | 78,700 | 78,700 |
| துருக்கி | 77,500 | 77,700 | 77,800 | 77,000 | 77,400 |
| பங்களாதேஷ் | 54,900 | 54,400 | 54,500 | 54,000 | 53,700 |
| ஜப்பான் | 46,800 | 46,200 | 45,900 | 44,800 | 44,800 |

மூலம்: Annual ITC Bulletin of Statistics - 2015

*பயிர்செய்யப்பட்டன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட பிரதேசம்

சர்தேச தேயிலைக் குழு (ITC) இன் பிரகாரம் அதிகளவான தேயிலை சீனாவில் பயிரிடப்பட்டுள்ளதாக (63%)அறியப்பட்டுள்ளது. மேலும் அங்கு வருடாந்தம் பயிர்செய்யப்படும் தேயிலையின் அளவு அதிகரித்துள்ளது. 2010 முதல் 2014 வரையிலான காலப்பகுதியில் கென்யாவில் தேயிலை பயிரிடப்படும் நிலத்தின் அளவு அதிகரித்துள்ளது. தேயிலை உற்பத்தி செய்யப்படும் அதிகூடிய முதல் 10 நாடுகள் மொத்தமாக தேயிலை உற்பத்தி செய்யப்படும் நிலப்பரப்பில் 98 வீதத்தை வகிக்கின்றன.

### 2.5.2. பூகோள தேயிலை நுகர்வு

2012 முதல் 2014 வரையிலான காலப்பகுதியில் வருடாந்த தேயிலை நுகர்வு மற்றும் மூன்றாண்டுக்கொரு முறையான சராசரி தனிநபர் தேயிலை நுகர்வு ஆகியவற்றின் அடிப்படையில் நோக்குகையில் வருடாந்த தேயிலை நுகர்வானது சீனாவிலேயே அதிகப்படியாகக் காணப்படுகிறது. இங்கு 1,537Mn.kg பதியப்பட்டுள்ளது. இங்கு தனி நபருக்கான தேயிலை நுகர்வு குறைவாகவே காணப்படுகின்ற பொழுதிலும் இது 1.04Kg எனப் பதியப்பட்டுள்ளது. அதிகப்படியான தனி நபர் தேயிலை நுகர்வாக துருக்கி காணப்படுகிறது. இங்கு 3.18Kg தனிநபர் தேயிலை நுகர்வாகும். இதன் பிரகாரம் வருடாந்த நுகர்வானது 236MT ஆகம்.

அட்டவணை 2.15: நாடுகள் அடிப்படையில் தேயிலை நுகர்வுகள் தொடர்பான புள்ளிவிபரங்கள்

| நாடுகள் | 2010-12 | | 2011-13 | | 2012-14 | |
|---|---|---|---|---|---|---|
| | Total | p hd | Total | p hd | Total | p hd |
| லிபியா | 13.6 | 2.39 | 13.23 | 2.34 | 15.27 | 2.7 |
| ஆப்கானிஸ்தான் | 49.27 | 1.97 | 55.9 | 2.19 | 63.03 | 2.73 |
| துருக்கி | 240.8 | 3.24 | 242 | 3.22 | 236.81 | 3.18 |
| ஐக்கிய இராச்சியம் (a) | 123.51 | 1.97 | 122.21 | 1.91 | 114.97 | 1.81 |
| மொராக்கோ | 56.17 | 1.74 | 56.5 | 1.73 | 55.1 | 1.74 |
| அயர்லாந்து குடியரசு | 8.51 | 1.9 | 7.44 | 1.62 | 7.18 | 1.56 |
| தாய்வான் | 44 | 1.64 | 42.53 | 1.59 | 42.1 | 1.56 |
| கட்டார் | 2.53 | 1.46 | 2.67 | 1.45 | 2.73 | 1.61 |
| இலங்கை | 27.79 | 1.33 | 27.49 | 1.35 | 27.47 | 1.36 |
| ஹொங்காங் | 9.48 | 1.34 | 9.52 | 1.33 | 9.73 | 1.38 |
| சிலி | 21.4 | 1.24 | 21.13 | 1.21 | 20.87 | 1.22 |
| சிரியா | 26.5 | 1.25 | 24.13 | 1.14 | 19.03 | 0.96 |
| எகிப்து | 91.63 | 1.14 | 94.37 | 1.14 | 100.78 | 1.22 |
| ஈராக் | 40.35 | 1.21 | 37.65 | 1.11 | 34.52 | 1.18 |
| ஈரான் | 74.7 | 0.99 | 82.8 | 1.07 | 79 | 1.05 |
| சீனா | 1279.33 | 0.95 | 1408.67 | 1.04 | 1537 | 1.14 |
| இந்தியா | 871.67 | 0.73 | 889.67 | 0.73 | 908 | 0.74 |
| **CIS** | 275.29 | 0.99 | 279.84 | 0.96 | 275.75 | 0.94 |
| பாகிஸ்தான் | 125.92 | 0.74 | 128.02 | 0.72 | 131.92 | 0.73 |
| ஐக்கிய அமெரிக்கா | 126.65 | 0.41 | 127.76 | 0.41 | 128.33 | 0.41 |
| ஜப்பான் | 122.29 | 0.96 | 120.23 | 0.94 | 116.93 | 0.91 |
| இந்தோனேசியா | 75 | 0.32 | 84.67 | 0.34 | 84 | 0.34 |
| பங்களாதேஷ் | 68.4 | 0.45 | 71.07 | 0.47 | 71.1 | 0.48 |
| போலாந்து**Poland** | 30.95 | 0.8 | 31.95 | 0.83 | 32.51 | 0.85 |
| ஜேர்மன் | 26.9 | 0.33 | 28.17 | 0.34 | 29.95 | 0.37 |


மூலம்: Annual ITC Bulletin of Statistics 2015

### 2.5.3. பூகோள தேயிலை உற்பத்தி

2015 ஆம் ஆண்டு பூகோள தேயிலை உற்பத்தியானது 5 Bn. Kg ஐ அடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டுடன் நோக்குகையில் 0.45% வளர்ச்சி கண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் உலகளாவிய தேயிலை உற்பத்தியில் சீனா, இந்தியா, கென்யா, இலங்கை, துருக்கி, வியட்னாம், இந்தோனேஷியா ஆகிய நாடுகள் 90% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இதுவரை பாரிய தேயிலை உற்பத்தி நாடுகளாகக் காணப்பட்ட போதிலும் இவ்விரண்டு நாடுகளிலும் உள்ளூர் தேயிலை நுகர்வு கணிசமானளவு காணப்படுவதன் காரணமாக தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் கென்யா மற்றும் இலங்கை ஆகியன முன்னணியில் திகழ்கின்றன. உலகில் அதிகளவு தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளுள் இலங்கை 4வது இடத்தில் திகழ்கின்றது. அதேவேளை 5ஆவது, 6ஆவது மற்றும் 7ஆவது தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் தேயிலை உற்பத்தி தொடர்பான போக்குகள் அதிகரித்துக் காணப்படவில்லை. இதன் காரணமாக, இலங்கை வகிக்கின்ற நிலைக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை.

அதிகூடிய உற்பத்தியாக முதல்நிலையாக 2,230Mn.kg ஐ சீனா உற்பத்தி செய்கிறது. இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. 2015 ஆம் ஆண்டில் 1,191Mn.kg தேயிலை இங்கு உற்பத்தி செய்யப்பட்டது. கென்யா மூன்றாவது இடத்தை வகிக்கின்றது, இங்கு 399 Mn.kg தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது.

வரைபு 2.5 : உலக தேயிலை உற்பத்தி தொடர்பான புள்ளிவிபரம்




மூலம்: Supplement: Annual ITC Bulletin of Statistics 2015

### 2.5.4 பூகோள தேயிலை விற்பனை

2015 ஆம் ஆண்டில் கொழும்பு தேயிலை ஏலவிற்பனைகள் மூலம் 315.5Mn.Kg தேயிலை கையாளப்பட்டதுடன், ஒரு கிலோ தேயிலைக்கான சராசரி விலை 2.99 ஐ.அமெ.டொலர்களாகும். இருப்பினும் 2015 இல் விற்பனை செய்யப்பட்ட தேயிலை அளவின் அடிப்படையில் நோக்குகையில் மும்பாசா ஏலவிற்பனைகள் மூலம் 359Mn.kg தேயிலை விற்பனை செய்யப்பட்டதோடு, குவாத்தி ஏலவிற்பனை தொடர்பில் 145 Mn Kg விற்பனை செய்யப்பட்டது

அட்டவணை 2.16: பிரதான தேயிலை ஏலவிற்பனைகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் (Qty. - in Mn.Kg. Avg. Unit Price - in US$/Kg.)

| ஏலவிற்பனை நிலையங்கள் | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|
| | அளவு | விலை | அளவு | விலை |
| சிட்டாங்காங் | 67.1 | 2.19 | 63.53 | 2.41 |
| கச்சின் | 52.7 | 1.66 | 54.79 | 1.55 |
| **கொழும்பு** | **334** | **3.56** | **315.51** | **2.99** |
| குவாஹதி | 129 | 2.32 | 145.43 | 2.16 |
| ஜகர்த்தா | 26.3 | 1.66 | 20.12 | 1.56 |
| கொல்கத்தா | 142 | 2.65 | 143.42 | 2.47 |
| லிம்பி | 9.00 | 1.43 | 8.41 | 1.56 |
| மும்பாசா | 390 | 2.03 | 359.39 | 2.73 |

மூலம் : *computed from ITC Web Site*

கடந்த மூன்று வருடங்களாக கொழும்பில் இடம்பெற்ற தேயிலை ஏலவிற்பனைகளின் பொழுது அதிகூடிய சராசரி ஏலவிற்பனை விலை கிடைக்கப்பெற்றது. இந்த ஏலவிற்பனையின் பொழுது 2015 ஆம் ஆண்டை விட ஒரு கிலோ தேயிலைக்கான விலை 3.00 ஐ.அமெ.டொலர்களை விட அதிகமாக கிடைக்கப்பெற்றது. இங்கு ஆராய்வுக்குட்படுத்தப்படுகின்ற காலப்பகுதியில் குவாத்தி மற்றும் மும்பாசா தவிர்ந்த ஏனைய சகல ஏலவிற்பனை நிலையங்களிலும் 2013 ஆம் ஆண்டை விட குறைவான சராசரி விலையே பதியப்பட்டது. இரண்டாவது அதிகூடிய சராசரி ஏலவிற்பனை விலை மும்பாசாவில் பெறப்பட்டது. இது 2.73 ஐ.அமெ.டொலர்களாகும். 2015 ஆம் ஆண்டில் கல்கத்தா 3ஆம் நிலையைப் பெற்றுக்கொண்டது.

### 2.5.5. பூகோள தேயிலை ஏற்றுமதிகள்


2015 ஆம் ஆண்டில் பூகோள தேயிலை ஏற்றுமதிகளை நோக்குகையில், அதற்கு முந்திய வருடத்தை விட 69.8Mn.kg (3.5%) குறைவாகவே காணப்பட்டது. கென்யா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவில் வீழ்ச்சி காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதி செய்த ஏனைய பிரதான நாடுகளுடன் ஒப்பிடுகையில் இதன் வளர்ச்சி முறையே 11.19% மற்றும் 5.16% ஆகும். மூன்று பாரிய ஏற்றுமதியாளர்களான கென்யா, சீனா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பூகோள தேயிலை ஏற்றுமதியில் 61% ஐ விட அதிகமாக ஏற்றுமதி செய்தன.

முன்னணி தேயிலை ஏற்றுமதி நாடுகள் 2014 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட ஏற்றுமதி வருமானங்கள் தொடர்பான விபரங்கள் கீழுள்ள பட்டியலில் தரப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக வருமானத்தை இலங்கை பெற்றுள்ளதாகப் பதியப்பட்டுள்ளது. இதன்படி இரண்டாவது அதிகூடிய வருமானம் பெற்ற நாடாக கென்யா காணப்படுகிறது. தூய இலங்கைத் தேயிலை ஏற்றுமதிகள் மூலம் இலங்கை தேயிலைத் தொழிற்துறையானது தொடர்ச்சியாக 1.6 பில்லியன் ஐ.அமெ.டொலர்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

அட்டவணை 2.17: அதிகூடிய ஏற்றுமதி வருமானம் (2014)

| நாடு | ஏற்றுமதி வருமானம் |
|---|---|
| | **(US$ Million)** |
| இலங்கை | 1,558.71 |
| கென்யா | 1,150.09 |
| சீனா | 1,273.5 |
| இந்தியா | 642.3 |
| வியட்னாம் | 228.0 |
| இந்தோனேஷியா | 134.6 |

வரைபு 2.6: பிரதான தேயிலை ஏற்றுமதியாளர்கள்




மூலம்: Supplement of Annual ITC Bulletin ofStatistics 2015

குறிப்பு: இலங்கை தொடர்பான விபரங்களில் மீள் ஏற்றுமதிகள் உள்ளடக்கப்படவில்லை.

## 2.6. இலங்கைத் தேயிலைக்கான ஏற்றுமதிச் சந்தை தொடர்பான மீளாய்வுகள

### 2.6.1. ரஷ்யா மற்றும் CIS பிராந்தியம

ரஷ்யா பெடரேஷன் மற்றும் CIS மாநிலக் குடியரசுகள் ஆகியன வருடாந்தம் சகல வகையான தேயிலைகளிலிருந்தும் சுமார் 260 285 மில்லியன் கிலோ வரை கொள்வனவு செய்கின்றன. 2015 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இப்பிராந்தியமானது 18,892 மெ.தொன் தேயிலையை இறக்குமதி செய்தது. இது அளவில் 7 வீத வீழ்ச்சியாகும்.


ITC லண்டன் புள்ளிவிபரங்களின் பிரகாரம் கடந்த ஐந்து வருடங்களாக ரஷ்யக் குடியரசு மற்றும் CIS பிராந்தியங்கள் ஆகியன இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 252,000 MT முதல் 284,000 MT (வருடாந்தம்) மாறுபட்டதாகக் காணப்பட்டது. இருப்பினும் 2013 முதல் 2014 வரையான காலப்பகுதியில் இப்பிராந்தியத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலையின் அளவு 11,913 MT ஆல் வீழ்ச்சிகண்டது. இதற்குரிய முக்கிய காரணம் 2013 இல் 160,300 MT தேயிலையைக் கொள்வனவு செய்த உஸ்பகிஸ்தான் 2014 இல் 158,400 MTதேயிலையைக் கொள்வனவு செய்தது. இது23% ஆகும் (5,200 MT).

2013 ஆம் ஆண்டில் உக்ரேன் இறக்குமதி செய்த தேயிலையின் அளவு22,050 MT ஆகும். ஆனால் 2014 இல் இறக்குமதி செய்த அளவு18,600 MT ஆகும். இது வீழ்ச்சியைக் காட்டியது. அதேபோல் 2013 ஆம் ஆண்டில் ரஷ்யா இறக்குமதி செய்த அளவு 160,300 MT ஆகவுள்ள அதேவேளை, 2014 இல் 158,400 MT ஆகும். இத்தகைய சம்பவங்கள் CIS பிராந்திய மொத்த தேயிலை இறக்குமதி குறைவுக்கான காரணிகளாயின.

அட்டவணை 2.18: ரஷ்யா மற்றும் CIS பிராந்தியம் ஆகியவற்றினால் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த தேயிலையின் அளவு

| நாடு | 2015 (Kg) | 2014 (Kg) | அளவு மாற்றம் (Kg) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| ரஷ்யா | 36,099,034 | 43,554,833 | (7,455,799) | (17.12) |
| உக்ரேன் | 3,966,958 | 6,358,351 | (2,391,393) | (37.61) |
| அஸர்பெய்ஜான் | 11,156,134 | 11,152,851 | 3,283 | 0.03 |
| கசகஸ்தான் | 729,845 | 820,040 | (90,195) | (11.00) |
| உஸ்பகிஸ்தான் | 487,359 | 793,994 | (306,635) | (38.62) |
| கிர்கிஸ்தான் | 835,130 | 1,015,667 | (180,537) | (17.78) |
| பெலாரஸ் | 330,388 | 546,245 | (215,857) | (39.52) |
| மோல்டோவா | 195,737 | 322,054 | (126,317) | (39.22) |
| ஜோர்ஜியா | 241,537 | 634,568 | (393,031) | (61.94) |
| தஜிகிஸ்தான் | 30,392 | 44,799 | (14,407) | (32.16) |
| டேக்மெனிஸ்தான் | 37,827 | 49,402 | (11,575) | (23.43) |
| ஆர்மெனியா | 53,366 | 36,029 | 17,337 | 48.12 |

#### 2.6.1.1. ரஷ்யா



உலகில் தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் முன்னணியில் ரஷ்ய பெடரேஷன் திகழ்கிறது. 2015 ஆம் ஆண்டில் ரஷ்ய பெடரேஷன் இறக்குமதி செய்த மொத்த தேயிலையின் அளவு 173 மில்லியன் கி.கி. ஆகும். உலகில் தேயிலையை இறக்குமதி செய்யும் அளவில் இது 9 சதவீதமாகும். தனி நபருக்கான தேயிலை நுகர்வு 1.16 கி.கி. ஆகும். கடந்த வருடங்களை விட இது குறைவானது என்பதைக் கருத்திற்கொள்க.

ரஷ்ய சுங்கத் தகவல்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் ரஷ்யா மொத்தமாக 173, 065 MT தேயிலையை இறக்குமதி செய்தது. 2014 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிட்டு நோக்குகையில் இதனளவு 172, 335 MT ஆகும். தேயிலைக்கான கேள்வி அதிகரித்து வருகின்ற போக்கினை இங்கு அவதானிக்க முடியும். 2015 ஆம் ஆண்டுக்கான மொத்த தேயிலை இறக்குமதியானது பெரும்பாலும் 2013 ஆம் ஆண்டை ஒத்ததாகக் காணப்படுகிறது.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம் ரஷ்யாவுக்கான இலங்கைத் தேயிலை ஏற்றுமதியானது பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

2014 ஆம் ஆண்டு 43,554 MT ஆகக் காணப்பட்ட இது, 2015 ஆம் ஆண்டில் 36,099 MT எனக் காணப்பட்டது. இது 17.12 வீத வீழ்ச்சியாகும் (அளவின் படி 7,456 MT). அதேபோல் பொதியில் அடைக்கப்பட்ட தேயிலையும் பாரியளவில் வீழ்ச்சிகண்டது. இது சுமார் 20 வீத வீழ்ச்சியாகும் (1,758 MT). 2013 ஆம் ஆண்டில் 7,267 MT, 2015 ஆம் ஆண்டில் 5,826 MT. பொதிசெய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியானது அரைவாசியாக வீழ்ச்சிகண்டது. பெறுமதியின் அடிப்படையில் மொத்த தேயிலை ஏற்றுமதி வருமானமானது 30 வீத வீழ்ச்சி கண்டது. 20104 ஆம் ஆண்டில் ரூபா. 29,045 மில்லியன், ஆனால் 2015 ஆம் ஆண்டில் ரூபா. 20,652 மில்லியன் ஆகும்.

கடந்த 7 வருடங்களாக சிலோன் தேயிலை தொடர்பிலான செயலாற்றுகைகளை நோக்குகையில் தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. ரஷ்யாவுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியானது 2008 ஆம் ஆண்டில் 32.2 வீதமாகக் காணப்பட்ட அதேவேளை, 2015 ஆம் ஆண்டில் 22 வீதமாக மாறியது.

### 2.6.1.2. உக்ரேன்



2015 ஆம் ஆண்டில் 3,967 MT தேயிலை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. இவற்றுள் திரள் வடிவில் 72.3% தேயிலையும் தேயிலை பக்கட்களாக 14.8% உம், தேயிலைப் பொதிகளாக 4.4% உம் உக்ரேனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 2015 ஆம்ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பச்சைத் தேயிலையின் அளவு 8.5 வீதமாகம்.

2014 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக 6 358 MT தேயிலை சகல வடிவங்களையும் உள்ளடக்கியதாக ஏற்றுமதி செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் குறிகாட்டிகளின் பிரகாரம் இலங்கையிலிருந்து மொத்த ஏற்றுமதி 2 391 MT

2014 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக 6 358 MT தேயிலை சகல வடிவங்களையும் உள்ளடக்கியதாக ஏற்றுமதி செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் குறிகாட்டிகளின் பிரகாரம் இலங்கையிலிருந்து மொத்த ஏற்றுமதி 2 391 MT ஆகும். இது 37.6 வீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. வருடாந்தம் உக்ரேன் நாட்டின் பிரஜை ஒருவர் சுமார் 500 கிராம் முதல் 600 கிராம் வரையான தேயிலையை கொள்வனவு செய்கின்றார்.

வருடாந்த சந்தையின் அளவு 22 முதல் 24 ஆயிரம் தொன்கள் ஆகும். தொடர்ச்சியாக நீண்ட காலமாக இத்தகைய நுகர்வுநிலை காணப்பட்டது. இருப்பினும் அண்மைக்காலமாக இவை வீழ்ச்சிகண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### 2.6.1.3. அஸர்பெய்ஜான்



இங்கு தேயிலையே மிகவும் விரும்பி அருந்தப்படும் பானமாகும். உலகில் தனியாள் தேயிலை நுகர்வில் முன்னணியில் திகழும் நாடு இதுவாகும். எனவேதான் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகள் இதன் மீது மிகுந்த அக்கறை காட்டுகின்றன. இலங்கையிலிருந்து திரள் நிலையிலான தேயிலையே அதிகமாக அஸர்பெய்ஜானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன (96.5 வீதம்). அங்கு அவை பொதியிடப்பட்டு உள்ளூர் சந்தையில் அவை விற்பனை செய்யப்படுகிறது. பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியானது இவ்வருடம் மென்மெதுவாக அதிகரித்தது. இது 3.5 வீதமாகும். திரள் நிலையில் தேயிலை இந்தியாவிலிருந்து அஸர்பெய்ஜானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அளவு வீழ்ச்சிகண்டது. மலிவான உற்பத்திகளுக்கு இது வழிவகுத்தன.

### 2.6.1.4. கஸகஸ்தான்



கஸகஸ்தான் நாடானது மரபு ரீதியாக தேயிலை நுகர்வு நாடாகும். மத்திய ஆசியாவின் TNS மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின் படி, கஸகஸ்தானிலுள்ள 11 மிகப் பெரிய நகரங்களில் 99 வீதமான பதிலளிப்பாளர்கள் தாம் தேயிலை அருந்துவதாகக் குறிப்பிட்டனர். இவர்களுள் 91 வீதமானவர்கள் தினந்தோறும் தேனீர் அருந்துகின்றனர். கஸகஸ்தானில் தேயிலை விற்பனையானது போட்டிமிகுந்த வியாபாரமாகும். இங்குள்ள கடைகளில் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற சகலவிதமான தேயிலைகளும் கிடைக்கின்றன. வருமானம் மிகுந்த நுகர்வோர்கள் தமக்கு விருப்பமான உற்பத்திகளை இங்கு பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை உள்ளூர் நுகர்வுத் தேயிலையும் சந்தையில் ஆக்கிரமிப்புச் செலுத்துகிறது.

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கஸகஸ்தான் தூதுவராலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் 28 320 MT ஆகக் காணப்பட்ட மொத்த தேயிலை ஏற்றுமதியானது 2015 ஆம் ஆண்டில் 26265 MT ஆக வீழ்ச்சி கண்டது. இது 7.2 வீத வீழ்ச்சியாகும். திரள் நிலையிலான பச்சைத் தேயிலை உள்ளடங்கலாக சகல நிலையிலும் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் 15.1 வீத அதிகரிப்பு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### 2.6.1.5 உஸ்பகிஸ்தான்



இதன் உள்நாட்டுத் தேயிலைச் சந்தையானது வருடாந்தம் சுமார் 26,000 MTஎன மதிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதியிலேயே முழுமையாகத் தங்கியுள்ளது. உஸ்பகிஸ்தானுக்கு அவசியமான தேயிலை தொடர்பான தேவைகள் வெளிநாடுகள் மூலமாக சில்லறை விலையில் அடைக்கப்பட்ட பொதிகள் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றன. உஸ்பெகிஸ்தானில் அடைக்கப்பட்ட தேயிலைப் பொதி வியாபாரங்களில் பல கம்பனிகள் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
இதன் காரணமாக, வரி ரீதியான சலுகைகள் இதற்குக் கிடைக்கின்றது. மேலும் விரும்பத்தகுந்த நுகர்வோர் கையாளுகை மற்றும் அதிகூடிய தீர்வையைத் தவிர்த்தல் ஆகிய நன்மைகளும் கிடைக்கின்றன.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் 2014 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து உஸ்பெகிஸ்தானுக்கான தேயிலை சந்தை வாய்ப்புகள் 794 மெ..தொன்னிலிருந்து 2015 ஆம் ஆண்டில் 487 மெ.தொன்களாக வீழ்ச்சி கண்டன. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 38.6 வீத வீழ்ச்சியாகும்.

### 2.6.1.6. கிறிகிஸ்தான்



கிறிகிஸ்தானில் பெரும்பாலானவர்க்ள கறுப்புத் தேயிலையையே அருந்துகின்றனர். போசலீனால் தயாரிக்கப்பட்ட பிடிகள் இல்லாத கோப்பைகளான "பியாலா கப்ஸ்" எனவழைக்கப்படும் கோப்பைகள் மூலம் 24 மணித்தியாலமும் தேனீர் நுகர்வு செய்பவர்களாக இவர்கள் திகழ்கின்றனர். இவர்கள் மஞ்சல் இளம் நிறத்திலான கறுப்புத் தேயிலையை எதனையும் கலக்காத நிலையில் அருந்துவதற்கு விரும்புகின்றனர். இருப்பினும் இந்த கறுப்புத் தேயிலையுடன் சீனி, தேன், தேசிக்காய், ஜேம் மற்றும் பழ வகைகள் ஆகியவற்றைக் கலந்து அருந்துகின்றனர்.இங்கு வருடாந்தம் உண்மையான தேயிலை நுகர்வின் அளவு 4000ஆவு என சந்தை தொடர்பான மூலங்கள் மதிப்பிட்டுள்ளன. இதன் சனத்தொகை 5.7 மில்லியன் ஆகும். தனிநபர் ஒருவருக்கான தேயிலை நுகர்வு வருடாந்தம் 700 கிராம் ஆகும். கறுப்புத் தேயிலைக்கு இங்கு நல்ல கிராக்கி காணப்படுகிறது. மொத்த சந்தை அளவில் இது 90மூ ஆகும். இந்நாட்டின் மேல் பகுதியில் பச்சை தேயிலைக்கு சிறந்த பிரபல்யம் உண்டு. கோடைக் காலத்தில் அருந்துவதற்கு சிறப்பான தேயிலை என பச்சை தேயிலையை இவர்கள் கருதுகின்றனர். அதேவேளை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கறுப்புத் தேயிலையை அருந்துகின்றனர்.

இலங்கைச் சுங்கத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் கஸகஸ்தானுக்கு 2015 ஆம் ஆண்டில் 836MTதேயிலையும் 2014 ஆம் ஆண்டில் 1020MT தேயிலையும் நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டில் 18 வீதம் அதிகமாக இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதாகப் பதியப்பட்டுள்ளது. தொகை நிலையில் சுமார் 90 வீதம் தேயிலை ஏற்றுமதிசெய்யப்பட்டதாக அறிய முடிகிறது. அதேவேளை 2015 ஆம் ஆண்டில் அதற்கு முந்திய ஆண்டை விட சிறிய தேயிலைப் பொதிகள் 56% அதிகளவில் அனுப்பப்பட்டுள்ளது.

### 2.6.1.7 பெலாரஸ்



இதன் சனத்தொகை 9.5 மில்லியன் ஆகும். வியாபாரத தரவுகளின் பிரகாரம் பிலாரஸின் வருடாந்த மொத்தத் தேயிலைச் சந்தையானது 5000 MT - 7000 MT என மதிப்பிடப்பட்டுள்ளது. 2015 ஆம் அண்டில் 70 வீதமான தேயிலை ரஷ்யா மூலமாகவே இங்கு கொண்டுவரப்பட்டது. பெலாரஸிலுள்ள தேசிய புள்ளிவிபரங்கள் குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்றதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் 6,032MTதேயிலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் 1,325MT (22%) அதிகரிப்பாகும். இருப்பினும் 2014 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் மொத்தப் பெறுமதி 47.4 மில்லியன் ஐ.அமெ.டொலர்களாகும். இருப்பினும் 2015 ஆம் ஆண்டில் இது 47.2 மில்லியன் ஐ.அமெ.டொலர்களாக குறைவடைந்தது.


பெலாரஸ் நாட்டிற்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முன்னணியை ரஷ்யா வகிக்கிறது. இதன் சந்தைப் பங்கு சுமார் 70 வீதமாகும். பிரதான கறுப்புத் தேயிலை விநியோகஸ்த்தராக இலங்கை காணப்படுகிறது. சந்தைத் தேவையில் சுமார் 8 வீதத்தை இலங்கை விநியோகின்கின்றது. ஏனைய விநியோகத்தர்களான ஐக்கிய அரபு இராச்சியம், போலாந்து மற்றும் வியட்னாம் ஆகிய நாடுகள் முறையே 1.7%, 2.6% மற்றும் 2.3% என வகிக்கின்றன. 2015 ஆம் ஆண்டில் ரஷ்யாவலிருந்து பெலாரசுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் அளவு 50 MT தொன்களாக அதிகரித்துள்ளன.

### 2.6.1.8 மோல்டோவா



மோல்டோவா நுகர்வோருக்கு மத்தியின் இன்று தேயிலை பிரபலயம் மிக்கதொரு பானமாகக் காணப்படுகிறது. மோல்டோவா TNS சந்தை ஆராய்ச்சிக் கம்பனியின் பிரகாரம் மோல்டோவா மக்களில் ஆகக்குறைந்தது 68.7 வீதமானவர்கள் தேனீர் அருந்துகின்றனர் (இவர்கள் காத்திரமான நுகர்வோர்கள்). மோல்டோவா நாட்டின் சந்தையில் மரபு ரீதியான தேயிலைகளும் அத்தோடு நல்ல பெயர் நாமமுடைய தேயிலைகளும் விற்பனை செய்யப்படுகின்றன. இருப்பினும் கடந்த காலங்களில் அறியப்படாத புதிய உற்பத்திப் பொருட்களும் சந்தையில் அறிமுகமாயின. சந்தைக்குப் புதிதாக பொருள் ஒன்று அறிமுகப்படுத்தப்படுகின்ற போது விளம்பரம் ரீதியான பிரச்சாரத்திலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது. வருடாந்தம் 200 முதல் 250 மெ.தொ. தேயிலை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. பெறுமதி சேர்க்கப்பட்ட வடிவத்தில் மோல்டோவாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இலங்கைத் தேயிலையானது பக்கட்களில் 58 வீதமும் சிறிய பொதிகளாக 32 வீதமும் அனுப்பிவைக்கப்படுகின்றன. எஞ்சி வீதம் பச்சைத் தேயிலையின் ஏற்றுமதியாகும்.

### 2.6.1.9 தஜிகிஸ்தான்



தஜிகிஸ்தானின் சனத்தொகை 8.6 மில்லியன் ஆகம். தஜிகிஸ்தானின் தேயிலைச் சந்தையானது சுமார் 5,000MT முதல் 6,000MT வரையிலென மதிப்பிடப்பட்டுள்ளது. CIS நாடுகளுக்கு மத்தியல் மிகக் குறைவான மொத்த உள்நாட்டு உற்பத்தி தனிநபர் வருமானமுடைய நாடாக தஜிகிஸ்தான் காணப்படுகிறது. இங்கு மக்களிடம் கொள்வனவு செய்யும் ஆற்றல் குறைவாகக் காணப்படுவதன் காரணமாக மலிவு விலைத் தேயிலைக்கு அதிக கிராக்கி காணப்படுகிறது.

### 2.6.2. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க சந்தைகள்

இலங்கைத் தேயிலையைப் பொறுத்தவரையில், 2015 ஆம் ஆண்டு சவால் மிக்க ஆண்டாகக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் உற்பத்தியின் அளவு, ஏற்றுமதி அளவு, ஏலவிற்பனையில் தேயிலையின் விலை, வருமான ஈட்டல்கள் ஆகியன சரிவடைந்த நிலையில் காணப்பட்டன. சிலோன் தேயிலை பல்வேறு விதமான கடின சூழலை எதிர்கொண்ட போதிலும்கூட மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் மத்திய கிழக்கு நாடுகள் வளைகுடா, தென்னாபிரிக்கப் பிராந்தியம் ஆகியன இலங்கைத் தேயிலைக்குச் சாதகமாகச் செயற்பட்டன. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையில் 55 வீதமான தேயிலையை இவை கொள்வனவு செய்தன. சகலவிதமான தடைகள் மற்றும் எதிர்மறையான காரணிகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் கூட இலங்கைத் தேயிலையின் முதுகெலும்பாக தொடர்ச்சியாக MENA பிராந்தியம் காணப்பட்டது. MENA பிராந்தியத்தைச் சேராத 3 தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகள் இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்யும் பத்து முக்கிய மூன்று நாடுகளாக ரஷ்யா, அஸர்பைஜான் மற்றும் ஜப்பான் ஆகியன காணப்பட்டன. MENA நாடுகளில் காணப்பட்ட ஸ்த்திரத்த்னமையற்ற நிலைமையின் காரணமாக வேறு மூலங்களைக் கண்டறியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 2015 ஆம் ஆண்டின் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறிவதற்கான முக்கியத்துவம் உணரப்பட்டது.

இலங்கை தேயிலைச் சபை மூலங்களின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டு ஆகியவற்றுடன் ஒப்புநோக்கி நாடுகளின் அடிப்படையில் இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகள்/வட அமெரிக்கப் பிராந்தியம் (MENA) ஆகியவற்றுக்கான தேயிலை ஏற்றுமதி தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.19: MENA பிராந்தியத்திற்கு நாட்டின் அடிப்படையில் இலங்கைத் தேயிலை ஏற்றுமதிகள் (2014/2015)

| நாடுகள் | 2014 (MT) | பெறுமதி (ரூ.பில்லியன்) | 2015 (MT) | பெறுமதி (ரூ.பில்லியன்) |
|---|---|---|---|---|
| துருக்கி | 44,731 | 27.3 | 33685 | 18.7 |
| ஈரான் | 29,260 | 20.4 | 29564 | 17.7 |
| ஈராக் | 24,442 | 11.6 | 31038 | 13.3 |
| UAE | 19,217 | 11.1 | 22925 | 12.8 |
| சிரியா | 12,850 | 7.8 | 10942 | 6.4 |
| லிபியா | 12,425 | 5.8 | 9903 | 4.5 |
| குவைத் | 12,146 | 5.5 | 8677 | 4.1 |
| ஜோர்தான் | 6,650 | 4.7 | 5573 | 4 |
| சவூதி அராபியா | 4,690 | 3.2 | 4357 | 3.1 |
| லெபனான் | 3,435 | 2.7 | 2450 | 1.8 |
| எகிப்து | 2,813 | 1.6 | 4175 | 2 |
| உப மொத்தம் | **172,659** | **101.7** | **163289** | **88.4** |
| மொத்த இலங்கை ஏற்றுமதிகள்/ பெறுமதி அடிப்படையில் | **317,885** | **203.5** | **298900** | **174.3** |
| மொத்த இலங்கை ஏற்றுமதியிலிருந்துMENA பிராந்தியங்களுக்கான இலங்கைத் தேயிலைப் பங்கு | **54.30%** | **50.00%** | **54.60%** | **50.70%** |

மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை தொடர்பான விபரங்களை மேற்படி அட்டவணை உள்ளடக்கவில்லை. மேலும் துனீசியா, கட்டார், ஓமான், பஷ்ரேன் மற்றும் எமன் ஆகிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தேயிலை கருத்திற்கொள்ளப்படவில்லை. ஏனெனில், அவற்றின் அளவு மிகவும் சிறிதாகும்.

2015 ஆம் ஆண்டில்MENAபிராந்தியங்கள் தொடர்பில் காணப்பட்ட பல்வேறுவிதமான நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் இலங்கையிலிருந்து 55 விதமான தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கு இந்நாடுகளின் பங்களிப்பு முக்கியமானது. பெறுமதி தொடர்பிலும் இந்நாடுகள் 51 சதவீத பங்களிப்பினைப் பதிவுசெய்தன. இவற்றின் பங்களிப்புகள் சிறப்பானதாகக் காணப்பட்டன. மீள் ஏற்றுமதி தொடர்பான தரவுகள் இங்கு கருத்திற்கொள்ளப்படவில்லை. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட 298,900 MT தேயிலையில் 2015 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஈரான், துருக்கி,ஈராக், ஐக்கிய அரபு இராச்சியம், சிரியா, லிபியா, குவைத், ஜோர்தான், சவூதி அரேபியா, எகிப்து மற்றும் லெபனான் ஆகிய நாடுகளுக்கு மொத்தமாக 163,289 மெ.தொன் இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. அளவின் அடிப்படையில் இது 54.6 வீதமும் பெறுமதியின் அடிப்படையில் 50.7 வீதமும் ஆகும். இலங்கை தேயிலையின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான நாடுகளாக MENA பிராந்திய நாடுகள் திகழ்கின்றன என்பது மீண்டும் நிருபணமாயின.

இலங்கைத் தேயிலையை மீள் ஏற்றுமதி செய்யும் பிரதான நிகழ்வுகளின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டில் 23.1 மில்லியன் கிலோ, 2013 ஆம் ஆண்டில் 32.2 மில்லியன் கிலோ மற்றும் 2014 ஆம் ஆண்டில் 44.7 மில்லியன் கிலோ ஏற்றுமதி செய்யப்பட்டது. இருப்பினும் 2015 ஆம

ஆண்டில் 33.7 மில்லியன் கிலோவாக இது மாறியது. மேசிங் பகுதியில் இடைமாறல் வியாபாரம் பாரியளவில் வீழ்ச்சியகண்டது. நாடுகளுக்கிடையிலான எல்லைப் பரிமாற்றம் மூடப்பட்டதே இதற்கான பிரதான காரணமாகும். ரஷ்யாவுக்கு அடுத்த படியாக ஈரான் அதிகளவு தேயிலையைக் கொள்வனவு செய்துள்ள போதிலும் 2015 ஆம் ஆண்டில் துருக்கி மற்றும் ஈராக் ஆகிய நாடுகளுக்கு 30.1 மில்லியன் கிலோ ஏற்றுமதி செய்யப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் 29.3 மில்லியன் கிலோ பதிவாகியது. 2013 ஆம் ஆண்டில் 38.4 மில்லியன் கிலோ, 2012 இல் 38.1 மில்லியன் கிலோ என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையிலிருந்து ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை தட்டுப்பாட்டின் ஒரு பகுதியை துருக்கி பூரணப்படுத்தியது. ஈரானில் காணப்படுகின்ற பின்விளைவுகளுக்கு மத்தியல் 2012 ஆம் ஆண்டில் 23.5 மில்லியன் கிலோ இலங்கைத் தேயிலையும் 2013 ஆம் ஆண்டில் 23.5 மில்லியன் கிலோ இலங்கைத் தேயிலையும் 2013 ஆம் ஆண்டில் 22.3 மில்லியன் கிலோவையும் 2014 ஆம் ஆண்டில் 24.5 மில்லியன் கிலோவையும் இவை இறக்குமதி செய்தன. அதேவேளை, 2015 ஆம் ஆண்டில் 31.4 மில்லியன் கிலோவை இறக்குமதி செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இவற்றிடம் காணப்படுகின்ற கொள்வனவு செய்யும் ஆற்றல் தொடர்பான பிரச்சினைகளின் காரணமாக ஈராக்கிடமிருந்தான கேள்விகள் வீழ்ச்சிகண்டன. 2014 ஆம் ஆண்டு ஏல விற்பனையின் பொழுது FOBவிலையானது ஒரு கிலோவிற்கு ரூபா. 475/- ஆகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் ஒரு கிலோவிற்கான விலை ரூபா. 427/- ஆக மேலும் வீழ்ச்சியடைந்தது.


ஈரானிய வங்கிகளுக்கெதிரான தடைகள் தொடர்ச்சியாக் காணப்பட்டபோதிலும் கூட ஐக்கிய அரபு இராச்சியம் மெதுவாக அதேவேளை, உறுதியாக தனது அந்தஸ்த்தை மீள் வலுப்படுத்தியது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை 2012 ஆம் ஆண்டில் 11.6 மில்லியன் கிலோவானது 2013 ஆம் ஆண்டில் 17.5 மில்லியன் கிலோவாக வளர்ச்சிகண்டது. மேலும் 2014 ஆம் ஆண்டில் 19.2 மில்லியன் கிலோவாக மேலும் அதிகரித்தது. 2015 ஆம் ஆண்டில் 23.4 மில்லியன் கிலோவாக மேலும் இவை அதிகரித்தன. அயலிலுள்ள தேயிலை சந்தைப்படுத்தும் நாடுகளின் பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணம் காணப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக ஐக்கிய அரபு இராச்சியம் காத்திரமாகச் செயற்படுமென நாம் எதிர்பார்க்கிறோம். சிரியாவில் யுத்தம் அதிகரித்துக் காணப்படுவதன் காரணமாக பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இதன் காரணமாக இவ் வியாபாரம் மோசமாகப் பாதிக்கப்படலாம். துருக்கி மூலமாகவே இவர்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இவ்வித காரணிகளின் காரணமாக இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையானது சிரியாவுக்கான தேயிலை ஏற்றுமதி குறைவடைந்தது. 2012 ஆம் ஆண்டில் 24.7 மில்லியன் கிலோ, 2013 ஆம் ஆண்டில் 21 மில்லியன் கிலோ, 2014 ஆம் ஆண்டில் 12.8 மில்லியன் கிலோ, 2015 ஆம் ஆண்டில் 11.1 மில்லியன் கிலோ ஆகம்.

சிரியாவின் 23 மில்லியன் சனத்தொகையில் 5.5 மில்லியன் மக்கள் துருக்கி, லெபனான்,ஜோர்தான் ஆகிய நாடுகளில் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் 8 மில்லியன் மக்கள் எகிப்தில் வீடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். 13.5 மில்லியன் சிரிய மக்கள் (சனத்தொகையில் 60 சதவீதமானவர்கள்) இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். உலகின் மனித வரலாற்றின் மிக மோசமான நெருக்கடி நிலையை இது உருவாக்கியுள்ளது. அதிகரித்து வரும் யுத்தம் மென் மெதுவாகக் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் 10 மில்லியன் கிலோ இலங்கைத் தேயிலையை லிபியா இறக்குமதி செய்தது. அத்தோடு 2014, 2013 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் முறையே 12.5 மில். கிலோ, 6.5 மில். கிலோ மற்றும் 16.3 மில். கிலோ தேயிலையை இறக்குமதி செய்தது.

ஜோர்தானில் வருடாந்தம் 5.5 மில்லியன் கிலோ தேயிலையும் குவைத்தில் வருடாந்தம் சுமார் 4.5 மில்லியன் கிலோ தேயிலையும் நுகரப்படுகின்றன. இருப்பினும் இந்த இரண்டு நாடுகளும் பிரதானமாக ஈராக்கிற்கு தேயிலையை மீள் ஏற்றுமதி செய்யும் இடைத்தங்கல் பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. கடந்த சில வருடங்களாக குவைத் உறுதியாகச் செயற்பட்டுள்ள அதேவேளை, ஜோர்தானுக்கான தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் குவைத்திற்கு முறையே 7.3 மில். கிலோ, 16.0 மில். கிலோ மற்றும் 12.2 மில்.கிலோ இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதே காலப்பகுதியில் ஜோர்தானுக்கு 9.4 மில்.கிலோ, 8.8 மில்.கிலோ, 6.7 மில்.கிலோ மற்றும் 5.7 மில்.கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.சவூதி அரேபியா தொடர்பான செயலாற்றுகைகள் நிலையற்ற தன்மையுடையதாகக் காணப்பட்டது. சவூதி அராபியாவுக்கான இலங்கைத் தேயிலை ஏற்றுமதியானத ஏற்ற இறக்கமுடையதாகக் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் 4.5 மில்.கிலோ, 2013 ஆம் ஆண்டில் 3.5 மில்.கிலோ, 2014 ஆம் ஆண்டில் 4.7 மில்.கிலோ மற்றும் 2015 ஆம் ஆண்டில் 4.9 மில்.கிலோ என ஏற்றுமதி செய்யப்பட்டது. லெபனான் நாட்டிற்கு 2012 ஆம் ஆண்டில் 2.1 மில்.கிலோ, 2013 இல் 2.8 மில்.கிலோ இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் இது 3.4 மில்.கிலோ ஆக அதிகரித்தது. இருப்பினும், 2015 ஆம் ஆண்டில் 2.5 மில்.கிலோவாக வீழ்ச்சிகண்டது. பொதுவான எல்லைகள் மூலம் சிரியாவுக்கு குறிப்பிடக் கூடியளவு தேயிலை போக்குவரத்துச் செய்யப்பட்டது. நல்ல தேயிலை விலையுடைய எகிப்திய சந்தையில் ஆபிரிக்க நாடுகள் (கென்யா) ஆதிக்கம் செலுத்தியது. CTC ஆனது 2012 ஆம் ஆண்டில் 3.6 மில்லியன் இலங்கைத் தேயிலையை கொள்வனவு செய்தது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 2 மில்.கிலோ மற்றும் 2.8 மில்.கிலோ இலங்கைத் தேயிலையை இது கொள்வனவு செய்தது. 2015 ஆம் ஆண்டில் 4.2 மில்.கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. மும்பாசா ஏலவிற்பனை விலை உறுதியாகக் காணப்பட்டது. எகிப்து நாடாது தேயிலைத் தட்டுப்பாடுகளை இலங்கை, இந்திய தேயிலையை வைத்து சீர்செய்து கொள்கிறது.

## 2.6.3. கிழக்கு ஓசியானியா

### 2.6.3.1. ஜப்பான்



உலகின் மிகச் சிறந்த நவீன தேயிலை சந்தைகளுள் ஒன்றாக ஜப்பான் பரிசீலிக்கப்படுகிறது. இன்று உற்பத்தியின் தன்மையாகவிருந்தாலென்ன, அல்லது உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தூய்மை மற்றும் பாதுகாப்பாகவிருந்தாலென்ன, புத்தாக்க ரீதியான பொதியிடல்கள், தொழில்நுட்ப முன்னேற்றம் விநியோகிப்பதன் வெளிப்படைத் தன்மை, இயற்கை, சுற்றாடல் நேயம், சமூகப் பொறுப்பு, இத்துறையின் ஸ்த்திரத்தன்மை மிக்க அபிவிருத்தி ஆகியவற்றில் ஜப்பான் முன்னணியில் திகழ்கிறது. ஜப்பான் சந்தைக்குள் பிரவேசிப்பது கடினமான விடயம் என்ற பொழுதிலும் தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கும் விநியோத்தர்களுக்கும் அது ஓர் சிறந்த இடமாகத் திகழ்கின்றது. பொதியிடல், தூய்மை உணவுப் பாதுகாப்புத் தராதரங்கள் மற்றும் உற்பத்தி ரீதியான புத்தாக்கதிறன்கள் ஆகியன தொடர்பில் ஜப்பானில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு பலர் விரும்புகின்றார்கள்.

ஜப்பானின் வருடாந்த தேயிலை நுகர்வு 103,000 MT ஆகும். கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இது குறைவாகவே காணப்படுகிறது. இருப்பினும் உலக சந்தையில் இது முன்னணியில் திகழ்கிறது. இருப்பினும் ஜப்பானில் பச்சைத் தேயிலை நுகர்வானது முன்னணியில் காணப்படுகிறது. அதேவேளை, கறுப்புத் தேயிலைக்கான கேள்வி உறுதியாகக் காணப்படுகிறது. அதேவேளை, கருநிற பதப்படுத்தப்பட்ட தேயிலைக்கான கேள்வி வீழ்ச்சிகண்டுள்ளது.

இலங்கைத் தேயிலைக்கான சந்தையில் முதல் பத்து இடங்களில் ஜப்பானும் ஒரு நாடாகத் திகழ்கிறது. ஜப்பானுக்கு மரபு ரீதயான கறுப்புத்

தேயிலை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. இங்குள்ள சந்தையில் 30 வீதத்தை இலங்கைக் கறுப்புத் தேயிலை ஆக்கிரமித்துள்ளது. 2013 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கறுப்புத் தேயிலையின் மொத்த அளவு 9512MT ஆகும். 2013 ஆம் ஆண்டில் இது 9322MT ஆம். 2014 ஆம் ஆண்டில் இதன் மொத்தப் பெறுமதி USD 56.5 மில்லியன் ஆகம்.

### 2.6.3.2. அவுஸ்திரேலியா

இங்கு பிரதானமாக கறுப்புத் தேயிலையே நுகரப்படுகின்ற போதிலும் சிறியளவில் காணப்படுகின்ற (3%) பச்சைத் தேயிலையானது வளர்வதற்கான சாதகத் தன்மையைக் காட்டியுள்ளது. 2013 இல் 11,800MT ஏற்றுமதி செய்யப்பட்டது. 2014 இல் 11,300MT தேயிலை அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது 4.2% வீழ்ச்சி கண்டுள்ளது. இந்தியாவலிருந்து அதிகளவான தேயிலை அவுஸ்திரேலியாவுக்கு விநியோகிக்கப்படுகிறது. இது 26.5% ஆகும். அதற்கு அடுத்த படியாக இலங்கையிலிருந்து 22 வீதமும், இந்தோனேசியாவிலிருந்து 17.6 வீதமும் சீனாவிலிருந்து 13.2 வீதமும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்டன. இங்கு சந்தையில் கறுப்புத் தேயிலை 81 வீதமாகவும் பலம் மற்றும் மூலிகை சார்ந்தன முறையே 7% மற்றும் 6% ஆகக் காணப்படுகிறது

.

தராதரமிக்க கறுப்புத் தேயிலைக்கு பல்வேறு விதமான கழிவுகள் வழங்கப்பட்ட பொழுதிலும் 2013 ஆம் ஆண்டில் சராசரி அலகிற்கான விலை 3% ஆல் அதிகரித்துள்ளது. குறிப்பாக தேயிலை மற்றும் பிரமிட் பொதிகள் ஆகிய அலகுகளுக்கான விலை அதிகமாகக் கிடைத்துள்ளது. இதன் காரணமாக சராசரி அலகிற்கான விலை அதிகரிப்பதற்கு இது பங்களிப்புச் செய்துள்ளது. உயர்வான தரமான தேயிலைக்கு அதிக விலை வழங்குவதற்கு அவுஸ்திரேலியர்கள் தயாராகவிருக்கின்றனர். அதன் காரணமாக தேயிலைக் கொள்வனவுக்கான விலை 3% ஆல் அதிகரித்துள்ளது.

பெறுமதி அடிப்படையில் நோக்குகையில் யுனிலீவர் கம்பனி விநியோகிக்கும் லிப்டன் மற்றும் புஷ்ஹெல்ஸ் ஆகியன சந்தையில் 30% ஐக் கைப்பற்றியுள்ளன.அதற்கு அடுத்தபடியாக ருவிங்க்ஸ் 23%, டில்மா 12%, டட்லி 11%ஆகும். கறுப்பு விசேட தேயிலை, பச்சைத் தேயிலை, பழம் மூலிகைத் தேயிலை ஆகியவற்றுக்கான கேள்விகள் அதிகரித்துள்ளன.

2014 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு 2,877 MT தேயிலையும் 2013 ஆம் ஆண்டில் 2,648 MT தேயிலையும் ஏற்றுமதி செய்யப்பட்டது. 2013 இல் 2,648 MTஆகக் காணப்பட்ட இது 2014 இல் 2,877 MTஆக அதிகரித்துள்ளது. இது 8.4 வீத அதிகரிப்பாகும். அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மொத்த தேயிலையில் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையானது 86% ஆகும். (தேயிலைப் பொதிகள் 69% தேயிலைப் பக்கட்கள் 17%).

## 2.6.4. வடக்கு மற்றும் தென் அமெரிக்க பிராந்தியங்கள்

அட்டவணை 2.20: வடக்கு மற்றும் தென் அமெரிக்கப் பிராந்திய நாடுகளுக்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி தொடர்பான ஒப்பீட்டு அட்டவணை (2014/2015)

| நாடுகள் | 2015 அளவு (Kg) | 2014 அளவு (Kg) | மாற்றத்தின் அளவு Qty (Kg) | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| சிலி | 6,864,828 | 6,948,952 | (84,124) | (1.21) |
| ஐக்கிய அமெரிக்கா | 3,781,497 | 4,509,210 | (727,713) | (16.14) |
| கனடா | 579,153 | 677,048 | (97,895) | (14.46) |
| வெலிசுலா | 36,150 | 59,450 | (23,300) | (39.19) |
| பிரேசில் | 1,960 | 3,473 | (1,513) | (43.56) |
| மெக்சிகோ | 22,075 | 22,251 | (176) | (0.79) |
| பனாமா | 5,858 | 3,448 | 2,410 | 69.90 |
| ஆஜன்தீனா | 39,200 | 43,840 | (4,640) | (10.58) |
| கொலம்பியா | 235 | 1,544 | (1,309) | (84.78) |
| மொத்தம் | 11,330,956 | 12,269,216 | (938,260) | (7.65) |

### 2.6.4.1. ஐக்கிய அமெரிக்கா



சில்லறைப் பெறுமதியின் அடிப்படையில் உலகின் நான்காவது பெரிய தேயிலைச் சந்தையாக ஐக்கிய அமெரிக்கா திகழ்கின்றது. சில்லறைக் கொள்வனவு அடிப்படையில் தேயிலை நுகர்வுசெய்யும் நாடுகளில் முதல் பத்து இடங்களில் ஐக்கிய அமெரிக்கா காணப்படாத போதிலும் கூட 2014 ஆம் ஆண்டில் சில்லறை விலைப் பெறுமதியின் அடிப்படையில் இது நான்காவது இடத்தில் ஐக்கிய அமெரிக்கா

காணப்படாத போதிலும் கூட 2014 ஆம் ஆண்டில் சில்லறை விலைப் பெறுமதியின் அடிப்படையில் இது நான்காவது இடத்தில் திகழ்கின்ற அதேவேளை,மொத்தப் பெறுமதி 2.4 பில்லியன் ஐ.அமெ. டொலர்களாகும்.

உலகின் இரண்டாவது மிகப் பெரிய தேயிலை இறக்குமதி நாடாக ஐக்கிய அமெரிக்கா காணப்படுகிறது. முதலாவது இடம் ரஷ்யா என்பது குறிப்பிடத்தக்கது. 2014 ஆம் ஆண்டில் இங்கு 285 மில்லியன் பவுன் பெறுமதியான தேயிலை இறக்குமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பிடப்பட்ட சில்லறை விலைப் பெறுமதியானது 10.8 பில்லியன் ஐ.அமொ. டொலர்களாகும். ஐக்கிய அமெரிக்காவுக்கு தேயிலை விநியோகம் செய்யும் பிரதான நாடாக ஆஜன்தீனா காணப்படுகிறது. 39 வீதமான தேயிலை இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்கு அடுத்த படியாக, சீனா 20 வீதம், இந்தி 9.6 வீதம், வியட்னாம் 5.7 வீதம், இந்தோனேசியா 3.5 வீதம், இலங்கை 3.3 வீதமாக காணப்படுகின்றன. பச்சைத் தேயிலை விநியோகிக்கும் பிரதான நாடுகளாக சீனாவும் ஜப்பானும் காணப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் பெறுமதியின் அடிப்படையில் நோக்குகையில் சீனாவிடமிருந்தே அதிகளவிலான தேயிலை இறக்குமதி செய்யப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக ஆஜன்தீனா மற்றும் இந்தியா ஆகியன காணப்படுகின்றன.

இலங்கையிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கு கடந்த ஆறு வருடங்களாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையை நோக்குகையில் இது நெகிழ்ச்சித் தன்மையுடையதாக காணப்படுகின்றது. சுமார் 2.6 முதல் 3.6 மில்லியன் கிலோ வரையிலான தேயிலை வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் மொத்த இறக்குமதியில் 3 வீதத்தை இது பிரதிநிதித்துவம் செய்கிறது.
2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 4,509 MT ஆகும். இதன் பெறுமதி 26 மில்லியன் ஐ.அமெ.டொலர்களாகும். 2015 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து 3781MT தேயிலை ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் பெறுமதி 22 மில்லியன் ஐ.அமெ.டொலர்களாகும்.

**2.6.4.2. கனடா**



கனடா நாட்டு மக்கள் வருடாந்தம் பத்து பில்லியன் கோப்பை தேனீரை நுகர்கின்றனர். 2020 ஆம் ஆண்டில் இந்த சந்தை 40 வீதமாக அதிகரிக்கும். ஒவ்வொரு கனடா மகனும் வருடாந்தம் சுமார் 78 லீட்டர் தேனீர் அருந்துகின்றனர். ஒரு கனடா பிரஜை வாராந்தம் சுமார் 8.3 கோப்பை தேனீர் அருந்துகின்றார். கடந்த பத்து வருடங்களாக கனடாவில் தேயிலை நுகர்வானது மூன்றில் ஒன்றை விட அதிகமாக அல்லது அதனை விட அதிகமாக அதிகரித்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

சூடான தேயிலை அருந்தும் நிலை கனடாவில் தொடர்ச்சியாக வளர்ந்து வந்துள்ளது. ஆனால் ஐக்கிய அமெரிக்காவைப் பொறுத்தவரை RTD மற்றும் ஐஸ் தேனீர் அருந்தி வருகின்றனர். 2014 ஆம் ஆண்டில் கறுப்புத் தேயிலை, பழச்சாறு மற்றும் மூலிகை வகைகளை உள்ளடக்கிய தேயிலைக்கான சில்லறை விற்பனைப் பெறுமதி இங்கு வளர்ச்சி கண்டுள்ளது. சுகாதார ரீதியான நலன்களைக் கருத்திற்கொண்டு மூலிகை தேனீருக்கான கிராக்கி அதிகரித்துள்ளது. இதனை உற்பத்தி செய்வதற்கு பல்வேறு வகையான மூலிகைகளும் ஏனைய வாசனைத் திரவியங்களும் பயன்படுத்தப்படுவதனால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. அதேபோல் பச்சைத் தேயிலைக்கான சில்லறைச் சந்தை வாய்ப்புகளும் 6 வீதமாக வளர்ச்சி கண்டுள்ளன. அளவின் அடிப்படையில் நான்கு வீத வளர்ச்சி கண்டுள்ளது.

## 2.6.5. ஐரோப்பியப் பிராந்தியம்

அட்டவணை 2.21: இலங்கைத் தேயிலை ஏற்றுமதிகள் - ஐரோப்பிய பிராந்திய நாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டாய்வு (2014/2015)

| COUNTRY | 2015 - (Kg) | 2014 - (Kg) | Varia nce (Kg) | Growth % |
|---|---|---|---|---|
| ஜேர்மனி | 6,852,378 | 6,245,911 | 606,467 | 9.71 |
| போலாந்து | 2,373,281 | 2,599,218 | (225,937) | (8.69) |
| பெல்ஜியம் | 2,356,975 | 2,489,250 | (132,275) | (5.31) |
| நெதர்லாந்து (ஒல்லாந்து) | 1,536,999 | 3,002,559 | (1,465,560) | (48.81) |
| அயர்லாந்து | 1,987,202 | 2,058,458 | (71,256) | (3.46) |
| இஸ்ரேல் | 1,417,706 | 1,965,222 | (547,516) | (27.86) |
| இத்தாலி | 1,513,441 | 1,511,738 | 1,703 | 0.11 |
| பின்லாந்து | 1,141,530 | 2,221,022 | (1,079,492) | (48.60) |
| பிரான்ஸ் | 764,086 | 1,076,611 | (312,525) | (29.03) |
| ஐக்கிய இராச்சியம் | 1,154,346 | 1,059,783 | 94,563 | 8.92 |

### 2.6.5.1. ஐக்கிய இராச்சியம்




இதன் சனத்தொகை 62.6 மில்லியன் ஆகும். உலகின் இரண்டாவது அதிகப்படியான தேயிலையை நுகர்வு செய்யும் நாடு ஐக்கிய இராச்சியமாகும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அதிகளவான தேயிலையை ஐக்கிய இராச்சியமே இறக்குமதி செய்கிது. 2013 இல் மொத்த தேறிய தேயிலை இறக்குமதியில் 54 வீதமான சந்தைப் பங்குகள் இங்கே காணப்பட்டன. கிடைக்கப்பெற்றுள்ள ITC புள்ளிவிபரங்களின் பிரகாரம், 2013 இல் 115,342 MT தேயிலையை ஐக்கிய இராச்சியம் இறக்குமதி செய்தது. அதற்கு முந்திய வருடங்களில் 6.5 வீதம் குறைவான தேயிலையே இறக்குமதி செய்யப்பட்டது. இக்கால கட்டங்களில் மொத்தமா 144,575 MT இறக்குமதி செய்யப்பட்டன. ஐக்கிய இராச்சிய மக்களில் அதிகமானவர்கள் கறுப்புத் தேயிலையை விரும்பி அருந்துகின்றனர். இங்கு கறுப்புத் தேயிலை 98 வீதமும் பச்சைத் தேயிலை 2 வீதமும் இறக்குமதி செய்யப்படுகின்றன. தேயிலை வளர்க்கப்படுகின்ற நாடுகளிலிருந்து அதிகளவான தேயிலை இங்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கென்யாவே முன்னணியில் திகழ்கிறது. இங்கிவிருந்து 2013 ஆம் ஆண்டில் 66,133 MT (48%) தேயிலையும் அதற்கடுத்தபடியாக இந்தியாவிலிருந்து 18,970 MT (14%) தேயிலையும், இந்தோனேசியா 7,720 MT(6%) தேயிலையும், மல்லாவி 7,782 MT(5.6%) தேயிலையும் இறக்குமதி செய்யப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றி நாடுகளில் ஐக்கிய இராச்சியமே அதிகளவான தேயிலையை இறக்குமதி செய்கிறது. ஐரோப்பிய ஒன்றி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையில் 40 வீதம் ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 22,299 MT ஆகும். பிரதான ஏற்றுமதி நாடுகளாக கனடா, ஐக்கிய அமெரிக்கா, அயர்லாந்து, பெல்ஜியம்,ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, மற்றும் பிரான்ஸ் ஆகியன.

கடந்த 7 வருடங்களாக இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையானது ஏற்றத் தாழ்வுடையதாகக் காணப்பட்டது. இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம், இலங்கையிலிருந்து 2014 இல் நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு **1,059 MT** ஆகும். இதன் பெறுமதி சுமார் **1,168** மில்லியன் ரூபாவாகும். 2014 இல் **1,154 MT**இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் பெறுமதி **1,228**மில்லியன் ரூபாவாகும். இவற்றில் 70 வீதம் தொகையாகவும் 14 வீதம் பக்கட்களாகவும் 16 வீதம் தேயிலைப் பைகளாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

### 2.6.5.2. போலாந்து



போலாந்தின் சனத்தொகை 38 மில்லியனாகும். ஐரோப்பாவின் மூன்றாவது அதிகப்படியான தேயிலையை நுகர்வுசெய்யும் நாடு இதுவாகும். இதன் வருடாந்த தேயிலைக் கொள்வனவு சுமார் 35,646 MT என மதிப்பிடப்பட்டுள்ளது. தனிநபர் ஒருவருக்கான தேயிலைக் கொள்வனவு 0.85Kg ஆகும் (ITC 2014). ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் குறிப்பிடத்தக்களவு தேயிலையை போலாந்து இறக்குமதி செய்கிறது. 2014 இல் மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையில் 11% சந்தை ஐரோப்பியாவில் காணப்பட்டது. கிடைக்கப்பெறுகின்ற ITC புள்ளிவிபரங்களின் பிரகாரம், 2014 இல் 35,646 MTதேயிலையை போலாந்து இறக்குமதி செய்தது. அதற்கு முந்திய வருடங்களை விட 16% வீழ்ச்சி உணரப்பட்டது. இது29,890 MT ஆகும். போலாந்து நாட்டு மக்கள் கறுப்புத் தேயிலையை விரும்பி அருந்துகின்றனர். இங்கு இறக்குமதி செய்யப்படும் தேயிலையில் 87% கறுப்புத் தேயிலையாகும். பச்சைத் தேயிலை 13% ஆகும். கென்யா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து CTC வகையான தேயிலைக்கு இங்கு சிறப்பான சந்தை உண்டு. அதேவேளை, மரபு ரீதியான தேயிலைகள்,OPA, FBOP மற்றும் BOP வகைத் தேயிலைகளுக்கும் சந்தை காணப்படுகிறது. அதேவேளை,பழங்கள், மூலிகைகள் போன்றவையும் விரும்பி அருந்தப்படுகின்றன.

தேயிலை வளர்க்கப்படும் நாடுகளிலிருந்து அதிகளவான தேயிலை இங்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் கென்யாவே முன்னணியில் திகழ்கிறது.

இங்கிருந்து சுமார் 6,064 MT (17%) தேயிலை ஏற்றுமதி செய்யப்படுவதுடன், அடுத்த படியாக வியட்னாம் 2,479 MT (7%), இந்தியா 4,216 MT (12%), இந்தோனேசியா 3,044 MT (8.5%), ஜேர்மனி 7,770 MT(22%), சீனா 1,866 MT (5%), மற்றும் இலங்கை 1,835 MT (5%)ஆகிய நாடுகள்.இவை 2014 ஆம் ஆண்டுக்கானவை.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 2,373 MT ஆகும். இதன் பெறுமதி 1,915 மில்லியன் ரூபா ஆகும். 2014 ஆம் ஆண்டில 2,100 மில்லியன் ரூபா பெறுமதியுடைய 2,599 MT இலங்கைத் தேயிலை இந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் 57 வீதம் தொகை தேயிலையாகவும் 9.75 வீதம் பக்கட்களில் அடைக்கப்பட்ட தேயிலையாகவும் 32 வீதம் ரீ பேக்காகவும் காணப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் அளவின் அடிப்படையில் 8 வீத வீழ்ச்சியும் பெறுமதி அடிப்படையில் 8.8 வீத அதிகரிப்பு காணப்பட்டது. ரஷ்யா மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக இலங்கைத் தேயிலைப் பைகளுக்கான மூன்றாவது அதிகப்படியான சந்தை வாய்ப்புகள் போலாந்தில் கிடைப்பதாக கருதப்படுகின்றது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கு இந்நாட்டில் நல்ல கிராக்கி உண்டு.

### 2.6.5.3. ஜேர்மன்



ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இரண்டாவது அதிகப்படியாக தேயிலை இறக்குமதி செய்யும் நாடு ஜேர்மனி ஆகும். இருப்பினும் நுகர்வின் அடிப்படையில் நோக்குகையில் ஐக்கிய இராச்சியம், போலாந்து ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாகவே இது காணப்படுகிறது. 2014 ஆம் ஆண்டில் 58,302 MT தேயிலையை ஜேர்மனி இறக்குமதி செய்தது. ஐரோப்பாவில் ஐக்கிய இராச்சியத்திற்கு அடுத்தபடியாக அதிகளவில் தேயிலையை மீள் ஏற்றுமதி செய்யும் நாடு ஜேர்மனி ஆகும். 2014 ஆம் ஆண்டில் மொத்தமாக 46% (27,019 MT) தேயிலை மீள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

அதேவேளை, உள்நாட்டு நுகர்விற்காக 31,283 MT தேயிலை இறக்குமதி செய்யப்பட்டது.


2010 இல் 50,847 MT தேயிலையை மொத்தமாக ஜேர்மனி இறக்குமதி செய்தது. 2014 இல் இது 55,215 MT ஆகக் காணப்பட்டது. இது 14,021 MT அல்லது 32% அதிகரிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் காணப்படுகிறது. ஜேர்மனியின் தேயிலை இறக்குமதியில் 24% (**13,954MT**) சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக இந்தியா 14%, இலங்கை 14% இந்தோனேசியா 7% ஆகம்.

2010 இல் **25,935MT** ஆகக் காணப்பட்ட ஜேர்மனியின் தேயிலை மீள் ஏற்றுமதியானது 2014 இல் **27,019MT** ஆக அதிகரிததன. அதாவது **1,084MT** அல்லது 4% அதிகரிப்பாகும். ஜேர்மனியிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்கே அதிகளவு தேயிலை மீள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது 14 வீதமாகும். அதற்கடுத்தபடியாக ஐக்கிய அமெரிக்கா 11.5%, போலாந்து 11%, நெதர்லாந்து 10%, ஐக்கிய இராச்சியம் 7% ஆகம்.

ஜேர்மனிக்கு மரபு ரீதியான கறுப்புத் தேயிலையை விநியோகிக்கும் பிரதான நாடு இலங்கையாகும். இலங்கையிலிருந்து தொகை அடிப்படையிலேயே அதிகமான தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அத்தோடு, பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இது 31 வீதமாகும். 2015 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து 6,852MT தேயிலை ஜேர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் 6825 மெ.தொ. தேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்தது. 2014 ஆம் ஆண்டை விட இது 9.7 வீத வளர்ச்சியாகும். இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் 13 வது இடத்தில் ஜேர்மன் காணபபடுகிறது. 2015 ஆம் ஆண்டில் மொத்த பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதியில் 31 வீதத்தை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஜேர்மனில் சிம்பாத் இலங்கைத் தேயிலை 2 வீதம் பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஜேர்மன் தேயிலைச் சந்தையைப் பொறுத்தவரையில், ஏனையவை பரிசீலிக்கக்கூடிய மட்டத்தை அடையவில்லை ரீக்கனே (15 வீதம்), மெஸ்னா (12 வீதம்), வெஸ்ட்மினிஸ்டர் (11 வீதம்), மில்போட் (3 வீதம்) ஆகியன ஜேர்மனியின் சிறந்த பெயர் நாமங்களாகும்.

### 2.6.5.4. பிரான்ஸ்



ஐரோப்பிய ஒன்றி நாடுகளில் ஐக்கிய இராச்சியம், போலாந்து மற்றும் ஜேர்மனி ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக அதிகளவில் தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளில் 4வது இடத்தில் பிரான்ஸ் காணப்படுகிறது. இதன் சந்தைப் பங்கு 9.7% ஆகும். 2011 முதல் 2013 வரையிலான காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதி 200 மெ.தொன்களினால் அதிகரித்துள்ளது. ஆனால், 2014 இல் 2112 ஆக குறைவடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் 13,012 MTதேயிலை இறக்குமதி செய்யப்பட்டது. அதேவேளை, 2013 இல்15,124MTஇறக்குமதி செய்யப்பட்டது. அளவின் அடிப்படையில் இது 14 வீத அதிகரிப்பாகும். தேயிலை விநியோகிக்கும் நாடுகளில் சீனா முதல் இடத்தில் திகழ்கிறது. 34% ஆன தேயிலை இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதற்கு அடுத்தபடியாக பெல்ஜியம் 10%, ஜேர்மனி 12%, இலங்கை 7.4% ஆகும். பிரான்ஸ் இறக்குமதி செய்கின்ற தேயிலையில் 23% ஐ மீள் ஏற்றுமதி செய்கின்றது. எஞ்சிய தேயிலை உள்நாட்டில் நுகரப்படுகிறது.

கறுப்புத் தேயிலை காணப்படும் சந்தை அளவு **8,846 MT** ஆகும். இது மொத்தமாக இறக்குமதி செய்யப்படும் தேயிலையின் 52% ஆகும். அதேவேளை, பச்சைத் தேயிலை 8,108 MT ஆகும், இது 48% ஆகும். பிரான்சுக்கு இறக்குமதி செய்யப்படும் தேயிலையில் 70%ஆன தேயிலை ஏற்கனவே பொதியில் அடைக்கப்பட்டவையாகும்.அதேவேளை உதிரியாக 30% தேயிலை இறக்குமதி செய்யப்படுகிறது. சீனாவிலிருந்து அதிகளவான கறுப்புத் தேயிலை இறக்குமதி செய்யப்படுகிறது.இது34% ஆகும். அதற்கடுத்தபடியாக பெல்ஜியம் 10%, இலங்கை 7.4%, ஜேர்மனி 13%,ஏனைய நாடுகள் 14% ஆகம். அதேபோல் பச்சைத் தேயிலை விநியோகத்திலும் சீனாவின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. இது 51% ஆகும். அதற்கடுத்தபடியாக ஜேர்மனி 6%, பெல்ஜியம் 6% ஆகும்.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையிலிருந்து 764 MT தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. 2014 இல் இது 988MT ஆகும். பெல்ஜியம், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து கணிசமானளவு இலங்கைத் தேயிலை இந்நாட்டிற்குக் கொண்டு வரப்படுகின்ற அதேவேளை, பிரான்ஸ் சந்தையில் இலங்கையின் பங்கு அதிகமாகவே காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 2.6.5.5. நெதர்லாந்து



இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் 2015 இல் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையானது 1,537 MTஆகும். இதன் பெறுமதி சுமார் 1,531 மில்லியன் ரூபா ஆகும். 2014 ஆம் ஆண்டில் 3,002 MTஇலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் பெறுமதி 2,319மில்லியன் ரூபா ஆகும். இதில் 7**%** தொகைத் தேயிலையாகவும் 63**%** பக்கட்களாகவும் 30**%** தேயிலைப் பைகளாகவும் அனுப்பிவைக்கப்பட்டன.

## 2.6.6. தென் ஆசியப் பிராந்தியம்

அட்டவணை 2.2: தென்னாசிய பிராந்தியத்திற்கு இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்தல், நாடுகளின் அடிப்படையிலான விபரம் (2014/2015)

| நாடுகள் | அளவு (kgs) | | மாற்றம் | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | | |
| இந்தியா | 1,882,963 | 3,446,787 | 1,563,824 | 83 |
| பாகிஸ்தான் | 86,275 | 3,281,954 | 3,195,679 | 3704 |
| பங்களாதேஸ் | 415 | 516 | 101 | 24 |
| மாலைதீவு | 188,083 | 175,279 | -12,804 | -7 |
| ஆப்கானிஸ்தான் | 0 | 1,656 | 1,656 | |
| நேபாளம் | 1,647 | 3,297 | 1,650 | 100 |
| மொத்தம் | 2,159,383 | 6,909,489 | 4,750,106 | 220 |

தென்னாசிய பிராந்தியமானது எட்டு நாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இதன் சனத்தொகை 1.7 பில்லியன் ஆகும். இந்த ஐந்து நாடுகளுள் 2015 ஆம் ஆண்டில் 6.9 மில்லியன் கி.கிராம் இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. 2014 இன் 2.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது சிறப்பான வளர்ச்சியாகும். இப்பிராந்தியத்தில் இந்தியாவே முதன்மை நிலை வகிக்கிறது. இங்கிருந்து 3.45 மில்லியன் கி.கிராம்தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

உலகின் இரண்டாவது மிகப் பெரிய தேயிலை உற்பத்தி நாடான இந்தியா சீ.ரீ.சீ. ரக தேயிலையை பிரதானமாக எகிப்து, பாகிஸ்தான், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. மரபு ரீதியான வழக்கமான தேயிலையை ஈரான்,ஈராக், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. 2015, 2016 (ஏப்ரல் - நவம்பர்) காலப்பகுதியினுள் இந்திய தேயிலைச் சபையின் தரவுகளின் பிரகாரம் அளவின் அடிப்படையில் இந்திய தேயிலை ஏற்றுமதியானது 8.67 வீதத்தையும் பெறுமதியின் அடிப்படையில் 6.02 வீதத்தையும் பதிவுசெய்துள்ளது. இது அதற்கு முந்திய வருடத்துடனான ஒப்புநோக்காகும். இந்திய தேயிலை ஏற்றுமதி ஏற்பாடுகளினால் வெளியிடப்பட்ட தரவுகளின் பிரகாரம் 2015 2016 (ஏப்ரல் - நவம்பர்) காலப்பகுதியினுள் 141.07 மில்லியன் கி.கி. தேயிலையை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது, இதன் பெறுமதி ரூபா. 2746.04 கோடி ஆகும்.இதனோடு தொடர்புடைய கடந்த காலங்களில் 129.82 மில்லியன் கி.கி. ஏற்றுமதி செய்தது. இதன் பெறுமதி ரூபா. 2590.08 கோடி ஆகம்.

2014 இல் பாகிஸ்தான் தேயிலை இறக்குமதியானது **136,657.65** MT ஆகும். 2015 இல் இது **150,880.76** MT ஆகும். இது 10.4% வளர்ச்சியாகும்.

பாகிஸ்தானுக்கு இறக்குமதி செய்யப்பட்ட கறுப்புத் தேயிலையின் சராசரி விலையானது அது இறக்குமதி செய்த நாடு, தேயிலையின் தன்மை ஆகியவற்றுக்கேற்ப மாறுபட்டதாகக் காணப்பட்டது. ஆகக்குறைந்த விலையாக சீனாவிடமிருந்து பெறப்பட்ட கறுப்புத் தேயிலையின் விலை ஒரு கிலோவிற்கு 0.89 ஐ.அ.டொலராகும். ஆகக் கூடிய விலை இலங்கைத் தேயிலைக்கு கிடைத்தது. 2015 இல் இது கிலோ ஒன்றுக்கு 3.55 ஐ.அ.டொலர்களாகும். பாகிஸ்தான் தேயிலைச் சந்தையில் கென்யா ஆதிக்கம் செலுத்திவருகின்றது. கென்ய தேயிலை ஏற்றுமதியானது 30 வீதத்தினால் அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் 3.14 ஐ.அமெ. டொலர்களை ஒரு கிலோ பெற்றுக்கொண்டது. 2014 இல் ஒரு கிலோவிற்கான விலை 2.41 ஐ.அமெ.டொலர்களாகும். கென்ய தேயிலைச் சுவைக்குப் பழக்கப்பட்டவர்களாக பாகிஸ்தான் நுகர்வோர் காணப்படுகின்றனர்.

2015 ஆம் ஆணடில் இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் அளவு குறிப்பிடக்கூடியளவு வளர்ச்சிகண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் 25.08 மெ.தொன் ஆகவும், 2015 ஆம் ஆண்டில் 3150.17 மெ.தொன் ஆகவும் இது காணப்பட்டது. கென்ய தேயிலையின் சராசரி விலை அதிகரித்தமை இதற்கொரு காரணமாகும். ஏனைய தேயிலை விநியோக மூலங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கைத் தேயிலையின் சராசரி விலை அதிகமானதாகும்.. இருப்பினும் தேயிலைச் சந்தையில் இலங்கையின் இடத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு துரிதமான ஊக்குவிப்பு மற்றும் பிரச்சாரச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வது அவசியமாகும். அத்தோடு, இலங்கைத் தேயிலையின் விலை தொடர்பிலும் காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்வது சிறப்பாகும்.

பங்களாதேஸ், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகியன குறிப்பிடக்கூடியளவு இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்தன. இருப்பினும் மாலைதீவானது இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்வதைக் குறிப்பிடக்கூடியளவு குறைத்துக்கொண்டது.

# 03 தேயிலைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள

## 3.1 தேயிலை ஆணையாளர் பிரிவு

1976 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் தேயிலை ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட தேயிலை கைத்தொழில் அபிவிருத்தி உற்பத்தி, விநியோகம், மேற்பார்வை தொடர்பில் உரிய 1975 இல்க்கம் 14 கொண்ட இலங்கை தேயிலை சபை பிரமானக் குறிப்பு மற்றும் 1957 இலக்கம் 51 தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு அமைய தேயிலை ஆணையாளர் பிரிவினால் மேற்பார்வைப் பணிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சகல செயற்பாடுகளும் நிறுவகிக்கப்படுகின்றன.

தேயிலை ஆணையாளர் பிரிவின் பணிகள், காலி, மாத்தறை,இரத்தினபுரி, கம்பொல, ஹட்டன், பட்டாரவளை மற்றும் பதுரெலிய ஆகிய பிரதேசங்களில்7 பிராந்திய அலுவலகங்களுக்குபன்முகப்படுத்தப்பட்டுள்ளன.இலங்கை தேயிலை சபையின் ஆணையாளர் பிரிவினால்தேயிலைக்கைத்தொழில் முன்னேற்றதிற்காக கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள்மேற்கொள்ளப்பட்டன.

- தேயிலை உற்பத்திக்கான உரியதான புள்ளிவிபரங்களைச் சேகரித்தல்.
- தேயிலை உற்பத்தி மற்றும் கைத்தொழிற்சாலைகளைப் பதிவு செய்தலும் பதிவினைப் புதுப்பித்தலும்.
- பச்சைத் தேயிலைக் கொழுந்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள்.
- கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் மீள்பயிர் செய்கைகளுக்கான மானிய உதவிகளை வழங்குதல். (மாற்றுச் செய்கைள் மற்றும் புதிய செய்கைகள் உட்பட) கைத்தொழிற்சாலைகள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான நியாய விலைகள்.
- சிறந்த உற்பத்திகள் தொடர்பான விசேட ஆய்வு (GMP) பச்சைத் தேயிலை விநியோகஸ்தர்களை பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும்.
- கழிவுத் தேயிரல சுத்திகரிப்பு மத்திய நிலையம் மற்றும் விநியோகஸ்தர்களைப் பதிவு செய்தலும், மேற்பார்வையும்.
- இலங்கை தேயிலை சபை /இலங்கை தர நிறுவகங்களைப் பதிவு செய்யப்பட்டள்ள பண்புசார் தரத்தினைஉறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.

1975 இலக்கம் 14 கொண்ட இலங்கை தேயிலைசபைச் சட்டத்தின் 25ஆவது பிரிவின் கீழ்தயாரிக்கப்பட்டமற்றும் தேயிலை ஆணையாளருக்கு அதிகாரம்வழங்கப்பட்ட

(அ) இலங்கை தேயிலை சபை (முடிவுத் தேயிலைக்கானதயாரிப்புக்கள் மற்றும் சுத்திகரிப்பு தரம் (கோவை - 1986)

(ஆ) இலங்கை தேயிலை சபை (மீள் செய்கை மற்றும் கைத்தொழிற்சாலைநவீனமயப்படுத்தும் மானிய உதவி வேலைத்திட்டங்கள்).

### 3.1.1 பிரதான அடைவுகள்

கடந்த ஆண்டு எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 2015ஆம்ஆண்டுக்குள் இப்பிரிவினால் பல்வேறு வெற்றிகள் பெறப்பட்டன.

தொழிற்சாலை மட்டத்தில் விலைகளை அறிந்துகொள்ளும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட குறுஞ்சேவை முறையானது (SMS முறை) குறிப்பிடக்கூடியளவு நன்மைகளை சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு வழங்கியது. மேலும் 2015 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உள்ளூர் சந்தைக்கென புதிய தன்மை தராதர முறையொன்று விருத்தி செய்யப்பட்டது.

### 3.1.2 உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகளை பதிவுசெய்தல்

1957 இலக்கம் 51 கொண்ட தேயிலை நிருவாகச் சட்டத்தின் கீழ்,தேயிலை உற்பத்தியாளர்கள் தொடர்பிலான உற்பத்தியாளர்களின்ஆவணம், தேயிலை ஆணையாளர் பிரிவினால் பேணப்படுவதுடன்,அவ்வாறான உற்பத்தியாளர்கள் பதிவு செய்ய வேண்டிய தேயிலைகைத்தொழிற்சாலைகளுக்குரியதான விடயங்கள் பரிந்துறைசெய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் நோக்கத்திற்காக எவரேனும் ஒருநபர், உற்பத்தியாளராக பதிவு செய்ய வேண்டுமா இல்லையா என்பதுதொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இப்பிரிவுக்கு உரியதாகும்.ஏலவிற்பனை மத்திய நிலையங்களின் ஊடாக தேயிலை விற்பனைமற்றும் தேயிலை உற்பத்திக்காக சகல தேயிலை உற்பத்தியாளர்களும்தேயிலை சபையில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

கட்டிடம், உபகரணம் மற்றும் சிறந்த தரமிக்க தேயிலை உற்பத்திக்குகைத்தொழிற்சாலையின் செயற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படக்கூடிய முறைகள் காரணியாக, கைத்தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படும் தேயிலை வகைகளின் பண்புசார் தரத்தை மேற்பார்வைசெய்வதற்காக உதவுவதற்கு, கழிவுத் தேயிலை வெளியேற்றத்தைநிருவகிப்பதற்கு இயலுமையை வழங்குதல் மற்றும் நியாயவிலை உள்ளீட்டினை அமுல்படுத்த உறுதிப்படுத்தும் வகையில்முடிவுத்தேயிலை உற்பத்தி செய்யப்படும் சகல கைத்தொழிற்சாலைகளும்தேயிலை சபையில் பதிவு செய்வது அத்தியவசியமாகும்.

வகைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுப் பணிகளைவகைப்படுத்தலும், தேயிலை உற்பத்தியின் விலைகள் 3.1 அட்டவணையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 3.1: செயற்பாடுகளுக்கமைய தேயிலைத் தொழிற்சாலைகளை வகைப்படுத்தல

| தரம் | உயர் | மத்திய | தாழ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. சொந்த தேயிலைக் கொழுந்துகளுக்கு வரையறுக்கப்பட்டவை | 90 | 14 | 10 | **114** |
| 2. சொந்த தேயிலைக் கொழுந்து :<br>a) மொத்த உற்பத்தியில் 50% ஐ விடக் குறைந்த சொந்த தேயிலைக் கொழுந்து | 08 | 27 | 68 | **103** |
| b) மொத்த உற்பத்தியில் 50% ஐ விட மேற்பட்ட சொந்த தேயிலைக் கொழுந்து | 48 | 28 | 22 | **98** |
| 3. கொள்வனவு செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்து | 21 | 54 | 321 | **396** |
| 4. பதிவு செய்யப்பட்ட போதிலும், செயற்பாடுகளை மேற்கொள்ளாத தேயிலை கைத்தொழிற்சாலைகள். | 30 | 73 | 89 | **192** |
| 5. பதிவு செய்யப்பட்ட மொத்த கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 197 | 196 | 510 | **903** |
| 6. செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பதிவு செய்யப்பட்ட கைத்தொழிற்சாகைலளின் எண்ணிக்கை | 167 | 123 | 421 | **711** |

## 3.1.3 தேயிலைக் கொழுந்தினை கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய நியாய விலைகள

தேயிலை நிருவாக சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ்கொள்வனவு செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்து உற்பத்தியில்ஈடுபடும் கைத்தொழிற்சாலைகள், அக்கைத்தொழிற்சாலைகளில்உற்பத்தி செய்யப்படும் முடிவுத் தேயிலையின் மூலம் உழைக்கக்கூடிய வருமானம் மற்றும் விலைகள் தொடர்பாக கவனம்செலுத்தி தேயிலை ஆணையாளரின் பரிந்துறை செய்யப்பட்டவிலைகளை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டதேயிலைக்காக நியாய விலைகளைச் செலுத்துவது அவசியமாகும்.பச்சைத் தேயிலை கொழுந்துவிநியோகஸ்தர்களுக்குகைத்தொழிற்சாலைகளில் இருந்து செலுத்த வேண்டிய நியாய விலைகளைத் தீர்மானிக்கப்பட்டிருப்பது அவ்வாறானகைத் தொழிற்சாலைகளின் மாதாந்த தேயிலை விற்பனைசாதாரண விலையின் அடிப்படையிலாகும். முடிவுத் தேயிலைவிற்பனைகள் மூலம் பெறப்படும் நிதி, தேயிலை கொழுந்துவிநியோகஸ்தர்கள் மற்றும் கைத்தொழிலாளர்களுக்குஇடையே 68:32 விகிதாசாரத்திற்கு பகிரப்பட வேண்டும்.

கைத்தொழிற்சாலைகளில் விற்பனை சாதாரண மாதாந்தம்அதிகரித்துச் செல்வதாயின் வருமானம் 50:50 விகிதாசாரத்திற்குபங்குகளாகப் பிரிக்கப்படுகின்றன. பச்சைத் தேயிலையில்இருந்து முடிவுத் தேயிலை வரை உற்பத்தி செய்யப்பட்ட அளவுவிகிதாசாரம் 21.5%சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

### 3.1.3.1 செலுத்தப்படாத கொடுப்பனவுகள

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பச்சை தேயிலைவிநியோகஸ்தர்களுக்கு செலுத்தப்படாத மொத்தக் கொடுப்பனவுஅளவு 2015 டிசெம்பர் 31ஆம் திகதி அன்று 212 மில்லியன் ரூபாவாகக்குறிப்பிடப்பட்டள்ளது. அத்துடன் 2015 ஆம் ஆண்டில் ரூபா 8.417 மில்லியன் ரூபா எம்மால் அறவிடப்பட்டது. மேலும் செலுத்தாதுள்ள பச்சைதேயிலைக் கொடுப்பனவுகளின் மொத்தம் அவர்களது பதிவுகளைஇடைநிறுத்தப்பட்டமையினால் தடைகள் ஏற்பட்டன. அவ்வாறானகைத்தொழில்சாலைகளை மீளப்பதிவு செய்தல் தொடர்பாகக்கருத்திற் கொள்ளப்படுவது அக்கைத்தொழிற்சாலைகளினால்செலுத்தாதுள்ள நிதியினை மீள தீர்க்கப்பட்டதன் பின்னராகும்.

அட்டவணை 3.2: செலுத்தாதுள்ள கொடுப்பனவுகள்

| வலயம் | 2015.01.01 ஆம் திகதிக்கு | 2015 இல் சேர்க்கப்பட்ட தொகை | அறவிடப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகை | 31.12.2015 இலுள்ளவாறு சிறு தேயிலைத் தோட்ட உரிமையார்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை | மூடப்பட்டிருந்த கைத்தொழிற்சாலைகளினால் அறவிட வேண்டிய தொகை | செயற்பாட்டுப்பணிகளை மேற்கொண்டுள்ள கைத்தொழிற்சாலைகளினால் அறவிட வேண்டிய நிதி |
|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 118,546,859.14 | 21,011,663.17 | 1,637,000.00 | 137,921,522.31 | 103,441,141.73 | 34,480,380.58 |
| மாத்தறை | 2,653,773.55 | | | 2,653,773.55 | 1,769,182.37 | 884,591.18 |
| கம்பொல | 15,882,129.74 | 25,000.00 | | 15,907,129.74 | 11,930,347.31 | 3,976,782.44 |
| காலி | 16,694,733.00 | 6,197,941.44 | 491,340.00 | 2,401,334.44 | 16,801,000.83 | 5,600,333.61 |
| பதுரெலிய | 15,351,540.82 | 11,935,944.06 | 2,448,414.60 | 24,839,070.28 | 18,629,302.71 | 6,209,767.57 |
| ஹட்டன் | 11,381,630.92 | | 3,894,348.33 | 7,487,282.59 | 5,615,461.94 | 1,871,820.65 |
| பண்டாரவெல | 1,036,317.80 | 32,335.38 | | 1,068,653.18 | 801,489.89 | 267,163.30 |
| மொத்தம் | **181,546,984.97** | **39,202,884.05** | **8,471,102.93** | **212,278,766.09** | **158,987,926.77** | **53,290,839.32** |

### 3.1.4 பச்சைத் தேயிலைக் கொழுந்தின் பண்புசார் தரத்தைக் கட்டுப்படுத்தல்

முடிவுத் தேயிலை வகைகளின் பண்புசார் தரத்தை பேணுவதற்காக கட்டிடம்,உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் செயற்பாடுகளின் பொருத்தமானதன்மைகள் இருப்பது கட்டாயமானதாகும். எனவே பண்புசார் தரம் கொண்ட முடிவுத் தேயிலை உற்பத்திகளுக்காக மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் பயன்படாதிருப்பின்தேயிலை நிருவாகச் சட்டத்தின் கீழ், அவ்வாறான கைத்தொழிற்சாலைகளின்பதிவினை ரத்துச் செய்யும் அதிகாரம் தேயிலை ஆணையாளருக்கு உரியதாகும்.

கொள்வனவு செய்யப்பட்ட தேயிலை கொழுந்துகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திச் செயற்பாடுகளுக்காக பச்சை தேயிலைக் கொழுந்தின் தர நிருவாகம் மிக முக்கியமாகக்கருதப்படுகின்றது. பண்புசார் தரம் மிக்க அதியுயரிய பச்சைத்தேயிலைக் கொழுந்துஉற்பத்தி செயற்பாட்டின் போது பயன்படுத்தப்படுவதாயின், முடிவுத் தேயிலை வகைகளின்பண்புசார் தரம் இதன் மூலம் அதிகரிக்கின்றன. அத்துடன், இது பச்சை தேயிலைக்கொழுந்து வர்த்தகத்தைப் போன்று தேயிலை உற்பத்திச் செயற்பாட்டின் போதும்மிகுந்த பயன்கள் கிடைக்கின்றன. எதேனும் கைத்தொழிற்சாலைகளில் கொடுப்பனவுசெலுத்துவதில் இருந்து தவிர்ந்து கொள்வது பச்சைத் தேயிலை கைத்தொழில்சாலைகயாகஇனங்காணப்படும் பட்சத்தில் கைத்தொழிற்சாலையின் பதிவினை இடைநிறுத்தஅல்லது ரத்துச் செய்யக் காரணமாக அமையும் என எச்சரிக்கை விடுகக்கப்படும்.

பச்சை தேயிலைக் கொழுந்தின் தரத்திற்காக இலங்கை தேயிலை சபையினால் 2010டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.1.4.1 தரப்பண்பு சார் மேம்பாட்டு நடவடிக்கைகள்

தேயிலை நிருவாகச் சட்டத்தின் கீழ், தேயிலை உற்பத்தியின் பண்புசார் தரத்தை மேற்பார்வைசெய்வதற்கு விருத்தி செய்வதற்கு தேயிலை ஆணையாளர் பிரிவுக்கு அதிகாரங்கள்வழங்கப்பட்டுள்ளதுடன், தேயிலை உற்பத்தியின் பண்புசார் தரத்தை விருத்தி செய்வதற்காககீழ் குறிப்பிடப்பட்ட செயற்றிட்டங்கள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1. இலங்கை தர நிருவகம் /இலங்கை தேயிலை சபையின் தரச் சான்றிதழ்.

2. தேயிலைக் கொழுந்தின் தரத்தை மேம்படுத்துவதற்காக டீ டுநயக 60 வியூகமுறைகள்.

3. புண்டிகைக் காலத்தின் துரித அறுவடை முகாமைத்துவ வேலைத்திட்டங்கள்.

4. குறைந்த மட்டத்திலான ளேயு வியூக முறைகள்.

5. துர செயற்பாட்டு முறைமை, (பணியாளர் குழு செயற்பாடுகள்(Task Team Operation- TTO)

6. கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மானிய உதவிவேலைத்திட்டங்கள்.

7. தேயிலை மீள் செய்கை மானிய உதவி வேலைத்திட்டங்கள்

8.கைத்தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்ட தேயிலை அபிவிருத்திவேலைத்திட்டங்கள்.

9. தேயிலைக் கைத்தொழிற்சாலைகளில் சிறந்த உற்பத்திச் செயற்பாடுகளைத்தாபித்தல்.

10. பச்சை தேயிலை விநியோகஸ்தர்களுக்கு பயிற்சி அளிக்கும்வேலைத்திட்டங்கள். (NIPM)

#### அ) இலங்கை தர நிருவாகம்- இலங்கை தேயிலை சபையின் தரச்சான்றிதழ்

உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் இறுதி உற்பத்தி அதாவதுகருந்தேயிலை, உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தி சான்றிதழ்வேலைத்திட்டம் இலங்கை தர நிருவகத்தின் உதவியுடன்இலங்கை தேயிலைச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வேலைத்திட்டம் செயற்பாட்டு நிருவாகத்தில் மேலதிகதேவைகளுடன் இணைந்து தர முகாமைத்துவ முறைமையில்அத்தியவசிய அடிப்படை அம்சங்கள் தொடர்பில்கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், சட்ட ரீதியிலானதேவைகளுடன் உரிய தரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளஉற்பத்திப் பரிசோதனைகள் தொடர்பில் கவனம்செலுத்தப்பட்டுள்ளது. இலங்கை தர நிருவகம் - இலங்கைதேயிலை சபை தேயிலைச் சான்றிதழை உறுதிப்படுத்தும்வேலைத்திட்டம், இறுதி நுகர்வோருக்கு பண்புசார் தரமிக்கஉரிய கறுந்தேயிலை விநியோகத்திற்காக மூன்றாவதுதரப்பினரின் சான்றிதழை வழங்குவதற்கு பக்கசார்பற்றமாற்றங்கள் இடம்பெறாத வகையில் நெகிழ்வுத் தன்மையுடன்செயல்படுத்தப்படுகின்றன.

### ஆ) தேயிலைக் கொழுந்தின் தரத்தை மேம்படுத்துவதற்காக BLeaf 60 வியூகமுறைகள்

அறுவடைக்குப் பின்னர் வீணாக்கப்படுவதைகட்டுப்படுத்தல் மற்றும் தேயிலைக் கொழுந்தின் தரத்தைவிருத்தி செய்வதன் மூலம் தேயிலைக் கொழுந்துகளின்பண்புசார் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. தற்போதுகாணப்படும் தேயிலைக் கொழுந்து தரமாக அமைதல்: சிறந்த தேயிலைக் கொழுந்து 33%உம் சிறந்ததரத்திற்கு ஓரளவு அதிகமாகவுள்ளது 32%உம்குறைந்தபட்ச தரம் 35%உம் காணப்படுகின்றது. குறுகியகாலத்திற்குள் பச்சை தேயிலைக் கொழுந்தைகுறைந்தபட்சம் 60%உம் (சிறந்த தேயிலைக் கொழுந்தின்தரம்) பேணுவதனை இலக்காகக் கொண்டு இவ்“பீலிப் 60”வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இவ்விலக்கினை எட்டுவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவியூகங்கள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டன.

1.உரிய தரப்பினருக்கான அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள்.

2.தேயிலைக் கொழுந்து செயற்பாடுகள் தொடர்பிலானகோவைகளை விதித்தல்.

3.அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பத்தை விருத்திசெய்வதற்காகநிதி ஒத்துழைப்புக்களைவழங்குதல்.

### இ) பண்டிகைக் காலத்தில் துரிதகதியில் அறுவடை முகாமைத்துவ வேலைத்திட்டங்கள

பண்டிகைக் காலத்தில் தேயிலைக் கைத்தொழிற்சாலை நீண்ட காலம்மூடிவிடப்படுவதனால் அறுவடை நட்டத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இச்செயற்றிட்டம் 2005ஆம்ஆண்டு அமுல்படுத்தப்பட்டதுடன், அது தொடக்கம் பல்வேறுபட்டபணிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் முழுமையான அறுவடைநட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தேயிலை ஆணையாளர் பிரிவுக்கு இயலுமைகள்கிடைக்கப் பெற்றுள்ளன.

### ஈ) குறைந்த மட்டத்திலான NSAவியூகத் திட்டங்கள

NSAசெயற்பாட்டில் குறைந்த மட்டத்திலுள்ள தேயிலைக்கைத்தொழிற்சாலைகளுக்காக இச்செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.இச்செயற்றிட்டத்தின் நோக்கமாக அமைவது பச்சைத் தேயிலை வகைகளைப்போன்று தேயிலை உற்பத்தியும், தேயிலைத் தரத்தின் உற்பத்தித்தரத்தை மேம்படுத்துவதன் மூலம் இக்கைத்தொழிற்சாலைகளின் NSAதரத்தைஉயரிய மட்டத்திற்குப் பேணுவதாகும்.

### உ) தர செயற்பாட்டு முறைமை(செயற் குழுப் பணிகள்- TTO)

2015 ஆம் ஆண்டின் தேயிலை ஆணையாளர்பிரிவினால் 82 திடீர் பரிசோதனைகள் தேயிலை கைத்தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 3.3: செயற்பாட்டுக் குழுச் செயற்பாடுகள்

| பிராந்தியம் | மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை |
|---|---|
| பண்டாரவளை | 04 |
| கம்பளை/ ஹட்டன் | 05 |
| இரத்தினபுரி | 10 |
| மாத்தறை | 03 |
| காலி | 49 |
| மத்துகம | 18 |
| மொத்தம் | **89** |

### (ஊ) கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் மீள்பயிர்ச் செய்கை மானிய உதவி வேலைத்திட்டம்

இலங்கைத் தேயிலை சபையின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தேயிலைஅபிவிருத்திப் பணிகளுக்காக திறைசேரியினால் உள்நாட்டு நிதியத்தின் கீழ் நிதிஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியம், கைத்தொழிற்சாலைகளைநவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை செய்கைக்கான மானிய உதவிவேலைத்திட்டங்களுக்காக ஆண்டுக்குள் பயன்படுத்தப்படுகின்றன.

தேயிலை மீள் பயிர்ச் செய்கை மற்றும் கைத்தொழிற்சாலைகளைநவீனமயப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தைப் போன்று தனியார்பிரிவுக்காகவும் 2015ஆம் ஆண்டில் நிதி காணப்பட்டது.2015 ஆம் வருடத்தில் மீள் நடுகை மற்றும் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் ஆகியவற்றின் நிமித்தம் வழங்கப்பட்ட மாணியங்கள் தொடர்பான விபரங்களை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது.

அட்டவணை 3.4: விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் மானியங்களாகச செலுத்தப்பட்ட் தொகையும்

| பிராந்தியம் | மீள்பயிரிடுகை மானியத் திட்டம் | | | தொழிற்சாலை நவீனமய மானியத் திட்டம் | |
|---|---|---|---|---|---|
| , | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஹெக்டயர் அளவு | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை |
| பண்டாரவளை | 31 | 7,473,643.00 | 67.58 | 06 | 491,667.00 |
| ஹட்டன் | 160 | 33,782,411.00 | 253.22 | 14 | 2,136,000.00 |
| கம்பொல | 32 | 7,015,450.00 | 58.42 | 20 | 2,000,000.00 |
| இரத்தினபுரி | 09 | 3,368,800.00 | 18.39 | 20 | 926,667.00 |
| மாத்தறை | 14 | 4,235,200.00 | 23.45 | 12 | 2,420,129.00 |
| காலி | 10 | 1,626,333.00 | 9.5291 | 18 | 1,104,625.00 |
| மதுகம | 16 | 3,447,660.00 | 17.79 | 08 | 1,000,000.00 |
| மொத்தம் | 272 | 60,913,497.00 | 448.38 | 98 | 10,079,088.00 |

### (எ) கைத்தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டதேயிலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.(FBTDP)

கைத்தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு தேயிலைஅபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இலங்கை தேயிலை சபை,தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் சிறு தேயிலைத் தோட்டஅபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் சிறு தேயிலைத் தோட்டஉரிமையாளர்கள் மற்றும் தேயிலைக் கைத்தொழிற்சாலையின்உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்குடன் வகுக்கப்பட்டுள்ளது.

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின்உற்பத்தித் திறனை மேம்படுத்தல் மற்றும் பச்சைத்தேயிலைக் கொழுந்தினை நிருவகிக்கும் நோக்குடன்இவ்வேலைத்திட்டங்களின் மூலம் பரவலாக்கல்உத்தியோகத்தர் (துறைசார் இணைப்பாளர்)களை நியமிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டம் 2014 ஆம் ஆண்டுக்காகசகல தேயிலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும்பிரதேசங்களில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

### ஏ)தேயிலைக் கைத்தொழிற்சாலைகளின்சிறந்த உற்பத்தி உள்ளீடுகளைத் தாபித்தல்

இச்செயற்றிட்டத்தின் கீழ் 235கைத்தொழிற்சாலைகளினதும் மதிப்பீடுசெய்யப்படுவதுடன், உற்பத்திச் செயற்பாடுகளின்தரத்தை மேம்பாடு செய்வதற்காக நடவடிக்கைஎடுக்கப்படுகின்றன.

அட்டவணை 3.5: **GMP** பற்றிய பிராந்திய ரீதியான மதிப்பாய்வு

| பிராந்தியம் | GMPபற்றிய மதிப்பாய்வு |
|---|---|
| பண்டாரவளை | 79 |
| கம்பளை/ ஹட்டன் | 70 |
| இரத்தினபுரி | 03 |
| மாத்தறை | 05 |
| காலி | 77 |
| மத்துகம | 01 |
| மொத்தம் | **235** |

### (ஐ) பச்சை தேயிலை கொழுந்துவிநியோகஸ்தர்களுக்காகஅனுமதிப்பத் திரங்களை வழங்குதல்

தேயிலை நிருவாகச் சட்டத்திற்கு அமைய சகலபச்சைத் தேயிலை கொழுந்து விநியோகஸ்தர்கள்,தேயிலை ஆணையாளர் பிரிவினால் வருடாந்த அனுமதிப்பத் திரங்களைப் பெற்றுக்கொள்ளஅவசியப்படுகின்றது.

பிராந்திய ரீதியாக பச்சைத் தேயிலை விநியோகஸ்தர்கள் பற்றிய தரவினை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

அட்டவணை 3.6: 2015 ஆம் ஆண்டுக் காலத்தின் போது விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

| ATC பிராந்தியம் | 01.01.2015 இலுள்ளவாறு அனுமதிப் பத்திரம் பெற்றோா | அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல் | வழங்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரம | 31.12.2015 இலுள்ளவாறு பச்சைக் கொழுந்துகள் தொடர்பிலான அனுமதிப் பத்திரங்கள |
|---|---|---|---|---|
| பண்டாரவளை | 151 | 134 | 10 | 144 |
| கம்பளை/ ஹட்டன் | 305 | 254 | 36 | 290 |
| மாத்தறை | 343 | 331 | 18 | 349 |
| காலி | 366 | 334 | 21 | 355 |
| இரத்தினபுரி | 592 | 526 | 71 | 597 |
| மதுகம | 300 | 246 | 25 | 271 |
| மொத்தம் | **2057** | **1825** | **181** | **2006** |

### ஒ) கழிவுத் தேயிலை செயற்பாடுகள

தேயிலை வகைகளை பயன்பாட்டுக்கு உகந்ததாக கழிவுத் தேயிலையாகஒதுக்குவதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். கழிவுத்தேயிலைசுத்திகரிப்பு மத்திய நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும்வேலைத்திட்டம் 2009ஆம் அண்டு தொடக்கம் தாபிக்கப்பட்டுள்ளது. அட்டவணை 3.7 இல் குறிப்பிடப்பட்டிருப்பது 2015 ஆம் அண்டுக்குள் பிராந்தியரீதியில் வெளியிடப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையாகும்.

அட்டவணை: 3.7: 2015 இல் கழிவுத் தேயிலைச் செயற்பாட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திங்கள்

| பிராந்தியம | இவ் ஆண்டுக் காலத்தில் புதுப்பித்தவர்கள் | இவ் ஆண்டுக் காலத்தில் புதிதாக வழங்கப்பட்டவை | 2015.12.31 இலுள்ளவாறு செயற்பாட்டு நிலையங்களின் எண்ணிக்கை | 31.12.2015 இலுள்ளவாறு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பண்டாரவளை | 01 | - | 01 | 1122 |
| கம்பளை/ ஹட்டன் | 242 | 07 | 249 | 2547 |
| மாத்தறை | 01 | 13 | 14 | 748 |
| காலி | 01 | 35 | 36 | 726 |
| இரத்தினபுரி | 04 | 05 | 09 | 1598 |
| மதுகம | 01 | 02 | 03 | 562 |
| மொத்தம் | **250** | **62** | **312** | **7303** |

## 3.2. தேயிலை ஏற்றுமதிப் பிரிவு

1959 இலக்கம் 16 கொண்ட தேயிலை சட்டத்தின் (ஏற்றுமதி விலைவரி மற்றும் நிருவாகம்) அதிகாரங்கள் மற்றும் செயற்பாட்டுப் பணிகளைப்போன்று 1975 இலக்கம் 14 கொண்ட தேயிலை சபைச்சட்டத்தின் கீழ்வகுக்கப்பட்ட கோவை தேயிலை ஏற்றுமதிபபிரிவினால்செயற்படுத்தப்படுகின்றது.

தேயிலை ஏற்றுமதியாளர்கள் தேயிலைபொதியிடளார்கள், தேயிலைக் களஞ்சியப்படுத்தல், இறக்குமதியாளர்கள்மற்றும் பொதியிடும் வகைகளைப் பதிவு செய்தல், தேயிலை தொடர்பானதகவல்களைப் பெறல், தேயிலை வகைகளின் பண்புசார் தரத்தைமேற்பார்வை செய்தல், தேயிலை ஏற்றுமதிக்காக அதிகாரங்களைவழங்குதல், தேயிலை ஏற்றுமதி தொடர்பான புள்ளிவிபரங்களைச்சேகரித்தல் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்பார்வைசெய்தல் (இலங்கை இந்தியா/பாகிஸ்தான் - இலங்கை) இற்காகஉரியதான பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றும் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் (FTAs) மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு உடன்படிக்கையின் கீழ் தேயிலை ஏற்றுமதியை மேற்பார்வை செய்தல்.

### 3.2.1 பிரதான அடைவுகள்

#### 3.2.1.1 ஈரான் ஏற்றுமதிகளுக்கான GMP சான்றிதழ்

ஈரானுக்கு ஏற்றுமதி செய்வதற்காக களஞ்சிய சாலைகளில் தேயிலை தொடர்பில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை ஆராயும் முகமாக விசேட செயற்பாடுகள் மேற்கொளளப்படுகின்றன. இங்கு தேயிலையைப் பொதியிடல், களஞ்சியசாலையில் சேமித்து வைத்தல், கலப்பு ஆகியன சிறந்த உற்பத்தி சார் நடைமுறைகளுக்கு ஏற்ப பேணப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து அது தொடர்பிலான சான்றிதழ் வழங்கும் பணியை இலங்கைத் தேயிலைச் சபை ஆரம்பித்துள்ளது. தேசிய மற்றும் சர்வதேச தேயிலை உற்பத்தி முறைகளினால் வழிப்படுத்தப்பட்டமைக்கு ஏற்ப விஞ்ஞான ரீதியிலான பகுப்பாய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு இறுதி உற்பத்தி தொடர்பிலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 3.2.1.2. இலங்கை தேயிலை ஏற்றுமதிப் பிரிவு 24 மணித்தியாலமும் தொழிற்படல

24 மணித்தியாலங்களும் செயற்படும் விதத்தில் இலங்கைத் தேயிலைச் சபையானது ஏற்றுமதிப் பிரிவொன்றை ஆரம்பித்துள்ளது. இதன் முதற்கட்டமாக இதன் செயற்பாடுகள் பி.ப. 10.00 மணி வரை இடம் பெறும். தேயிலை ஏற்றுமதியாளர்களதமது ஆவணங்களைச் சமர்ப்பித்து அவற்றுக்கான பதிலைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

#### 3.2.1.3.தேயிலை ஏற்றுமதியின் உயர் தன்மையைப் பேணும் முகமாக இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் இலங்கைச் சுங்கத் திணைக்களம் ஆகியன கூட்டாக இணைந்து மேற்கொண்ட புலனாய்வுகள்.

உயர் தராதரம் மிக்க தேயிலை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்பதை உறுதிசெய்து கொள்ளும் முகமாகவும் இலங்கைத் தேயிலைக்குக் காணப்படுகின்ற நற்பெயரினை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பாதுகாத்து வலுப்படுத்தும் முகமாக புலனாய்வுகள் மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை சுங்க சட்ட திட்டங்களுக்கு ஏற்பவே ஏற்றுமதி செய்யப்படுகின்றன மற்றும் தேயிலையின் தரத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை தொடர்பிலான விடயங்கள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிசெய்துகொள்ளும் முகமாக இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை தொடர்பில் சுங்கத் திணைக்களத்துடன் கூட்டாக இணைந்து சோதனைகளை மேற்கொள்ளும் முகமாக கொழும்பு 13, இல. 478/3C, கே.சிறில் சீ பெரேரா மாவத்தையில் விசேட புலனாய்வு மற்றும் வியாபார இலகுபடுத்தல் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 3.2.2 பதிவுகள்

இப்பிரிவின் பிரதான பணிகளில் ஒரு பணியாக அமைவது ஏற்றுமதியாளர்கள்,பொதியிடுனர்கள், களஞ்சியம் மற்றும ஏற்றுமதியாளர்களைப் பதிவுசெய்தலும், பதிவுகளைப் புதுப்பித்தலும் அடங்குகின்றன. நிறுவனத்தின் (சட்டரீதியிலான நிலைப்பாடுகள்) ஊக்குவிப்பு, களஞ்சிசாலைவசதி (தேயிலைக் களஞ்சியாலை, கலக்கும் மற்றும் பொதியிடுவதற்காக)சபையினால் மிக நெருக்கமான முறையில் மேற்கொள்ளப்படும் தேயிலைபரிசோதனைகளின் போது வினைத்திறன் மிக்க ஏற்றுமதியாளர்கள்தேயிலை ஏற்றுமதியாளர்களாக பதிவு செய்ய தகைமை பெறுகின்றனர்.

1986 ஜனவரி 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 386/13 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1986 (தேயிலைப்பொதியிடுநர்களைப் பதிவு செய்தல்) இலங்கை தேயிலை சபையின்கோவைகளுக்கு அமைய உள்நாட்டு நுகர்வோருக்காக தேயிலைஇலைகள் பொலித்தீன் உறைகளில் இட்டு வர்த்தககத்தில் ஈடுபடும்எந்தவொரு நபருக்கும் இயலுமைகள் காணப்படுவதில்லை என்பதுடன்,இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்வதற்கு வேறு வகையிலானபொதியிடல் வகைகள் அவசியமாகும். பதிவுகள் ஒரு வருடத்திற்குசெல்லுபடியாவதுடன், வருடாந்தம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

1959 இலக்கம் 16 கொண்ட தேயிலைச் சட்டம் (இறக்குமதிவரி மற்றும் நிருவாகம்) இற்கு தேயிலை ஏற்றுமதியாளராகப்பதிவு செய்துள்ள எந்தவொரு நபர் /நிறுவனம் தேயிலைஇறக்குமதியாளர்களாகப் பதிவு செய்வதற்கு தகைமை பெறுகின்றனர்.

அட்டவணை 3.8: ஏற்றுமதியாளர்கள், பொதியிடுநர்கள், களஞ்சியசாலை, உற்பத்தித் தரகர்கள் மற்றும் இறக்குமதியாளர்களைப் பதிவுசெய்தல் (2015)

| பதிவுகள் | 01.01.2015 திகதியில் உள்ளவாறு | 2015 ஆம் ஆண்டுக் காலத்தில் (புதிய பதிவுகள்) | 31.12.2015 இலுள்ளவாறு மொத்தஎண்ணிக்கை |
|---|---|---|---|
| ஏற்றுமதியாளர்கள் | 460 | 35 | 495 |
| பொதியிடுநர்கள் | 583 | 134 | 717 |
| களஞ்சியசாலைகள் | 543 | 32 | 575 |
| இறக்குமதியாளர்கள் | 205 | 10 | 215 |
| உற்பத்தி தரகர்கள் | 8 | - | 8 |

1984 டிசெம்பர் ஆம் திகதி இலக்கம் 326/17 அதிவிசேட வர்த்தமானிஅறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1984 இலங்கை தேயிலை சபைச் சட்டக்கோவை (தேயிலை தொகை களஞ்சியப்படுத்தல்) 1986 செம்படம்பர் 10ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 410/11 மறுசீரமைக்கக்கூடியவாறு மற்றும் 2003 மார்ச் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1280/8கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பகிரங்கப்படுத்தப்பட்டகோவைகளினால் தொடர்ந்தும் மறுசீரமைக்கப்பட்டுள்ளவாறு ஏதேனும்ஒரு சந்தர்பத்தில் 1,000 கிலோ கிராமைவிட மேற்பட்ட ஏதேனும்அளவு தேயிலையைக் களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும்மற்றும் இலங்கை தேயிலை சபையினால் தேயிலை தொகையினைகளஞ்சியப்படுத்துவதற்காக கருத்திற் கொள்ளும் போது திருப்தியடையக்கூடிய தொகை களஞ்சியசாலையில் அக்கோவைக்கு அமைய இலங்கைதேயிலை சபையில் பதிவு செய்ய வேண்டும் (3.2.1 அட்டவணை).

இலங்கை தேயிலையுடன் வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையைக்கலந்து சில்லறைக் கொள்கலன்கள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டியது1981 இலங்கை தேயிலை சபைச் சட்டத்தில் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதி)இற்கு அமைவாகும். அவ்வாறான கொள்கலன்கள் - பக்கட்டுக்களில் குறிப்பிடவேண்டிய பிரதானமாக அமைவது "இலங்கை தேயிலை மற்றும் வேறுஇடங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை கலக்கப்பட்டது. "அல்லது "வேறுஇடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கையில் பொதியிடப்பட்ட தேயிலை"என்பதாகும்.

கப்பலில் ஏற்றுகின்ற சரக்கை கொழும்புத் துறைமுகத்திற்குக் கொண்டு வருவதற்கு முன்னர் ஏற்றுமதி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் முகமாக சகல பதிவுசெய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களும் CUSDECs பத்திரங்களை அதனோடு தொடர்புபட்ட ஆவணங்களுடன் அஸிகுடா முறைமையூடாக தேயிலை ஏற்றுமதிப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கும் படி கோரப்பட்டுள்ளனர். ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையானது குறிப்பிட்ட தராதரத்தினைக் கொண்டுள்ளதா என்பதை உறுதிசெய்யும் முகமாக இலங்கைத் தேயிலைச் சபையைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று கப்பலில் ஏற்றப்படும் சரக்குகளைச் சோதித்துப் பார்ப்பர்.

### 3.2.3. தேயிலை ஏற்றுமதி செய்தல்

4,646,607.90 kgs தேயிலையை இறக்குமதி செய்யும் முகமாக 419 இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை இலங்கைத் தேயிலைச் சபை விநியோகித்தது. இருப்பினும் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் உண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 4,893,662.00ஆகும்.

அட்டவணை 3.9: இலங்கையின் உண்மையான தேயிலை இறக்குமதியாளர்கள் (2015 ஜனவரி டிசமபர்)

| நாடு | வகை | ஏற்றுமதியின் அளவு (kgs) | CIF பெறுமானம் (Rs.) | பெறுமதிரூபா. |
|---|---|---|---|---|
| சீனா | பச்சை தேயிலை | 1,818,178 | 386.70 | 703,082,673 |
| | விசேட தேயிலை | 120,892 | | 89,465,170 |
| | வெள்ளை தேயிலை | 11,558 | 659.65 | 7,624,227 |
| | CTC | 6,992 | 404.29 | 2,826,784 |
| | **உபமொத்தம்** | **1,957,620** | **410.19** | **802,998,853** |
| இந்தியா | CTC | 1,510,409 | 220.69 | 333,332,956 |
| | விசேட தேயிலை (கறுப்பு) | 662,979 | 540.76 | 358,510,544 |
| | பச்சை தேயிலை | 4,132 | 903.39 | 3,732,813 |
| | கெபேன் நீக்கப்பட்ட | 18,925 | 798.88 | 15,118,727 |
| | **உபமொத்தம்** | **2,196,445** | **323.57** | **710,695,040** |
| கென்யா | CTC | 587,213 | 349.85 | 205,436,176 |
| | உபமொத்தம் | **587,213** | **349.85** | **205,436,176** |
| தாய்வான் | பச்சை தேயிலை | 40 | 11,214.19 | 448,568 |
| | **உபமொத்தம்** | **40** | **11,214.19** | **448,568** |
| மியன்மார் | CTC | 1,051 | - | - |
| | பச்சை தேயிலை | 3,690 | - | - |
| | விசேட தேயிலை | 15,966 | 631.83 | 10,087,862 |
| | **உபமொத்தம்** | **20,707** | **487.17** | **10,087,862** |
| நெதர்லாந்து | கெபேன் நீக்கப்பட்ட | 1,000 | 1,060.40 | 1,060,400 |
| | **உபமொத்தம்** | **1,000** | **1,060.40** | **1,060,400** |
| ஜேர்மன் | கெபேன் நீக்கப்பட்ட | 287 | 1,318.75 | 378,480 |
| | பச்சை தேயிலை | 20 | 2,398.00 | 47,960 |
| | வெள்ளை தேயிலை | 15 | 3,604.60 | 54,069 |
| | **உபமொத்தம்** | **322** | **1,492.26** | **480,509** |
| மலாவி | CTC | 23,200 | 270.68 | 6,279,776 |
| | **உபமொத்தம்** | **23,200** | **270.68** | **6,279,776** |
| வியட்னாம் | பச்சை தேயிலை | 71,080 | 299.75 | 21,306,534 |
| | **உபமொத்தம்** | **71,080** | **299.75** | **21,306,534** |
| உகண்டா | விசேட தேயிலை | 14,080 | 264.86 | 3,729,229 |
| | **உபமொத்தம்** | **14,080** | **264.86** | **3,729,229** |
| மொஸாம்பிக் | CTC | 20,000 | 281.00 | 5,620,000 |
| | **உபமொத்தம்** | **20,000** | **281.00** | **5,620,000** |
| ஜப்பான் | பச்சை தேயிலை | 1,210 | 400.08 | 484,100 |
| | **உபமொத்தம்** | **1,210** | **400.08** | **484,100** |
| நேபாளம் | பச்சை தேயிலை | 745 | 1,704.00 | 1,269,480 |
| | **உபமொத்தம்** | **745** | **1,704.00** | **1,269,480** |
| மொத்தம் | | **4,893,662** | **361.67** | **1,769,896,527** |

### 3.2.4. குறைந்தபட்ச தரச் சான்றிதழ் ISO 3720 பேணல்

சகல தேயிலை (ISO 3720) அங்கீகரிக்கப்பட்ட பிரிவுகளுக்குரியதா என்பதுதொடர்பில் உறுதிப்படுத்தும் வகையில் சகல வழங்கப்பட்ட தேயிலைமாதிரிகள் மற்றும் தேயிலைக் கைத்தொழிற்சாலைகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதரி, இறக்குமதியின் பின்னர் பெற்றுக் கொண்ட தேயிலைவகை மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னரான மாதிரி, திடீரென ஏற்றுமதியின்போது பரிசோதனைக்கு உட்படுத்தல், கலக்கப்பட்டதன் பின்னர் ஏற்றுமதிமற்றும் இறக்குமதிச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமானதா என்பது குறித்துக் கண்டறிவது தொடர்பில் எதுவித பாதிப்புக்களும் இல்லை என்பதைஉறுதிப்படுத்தும் வகையிலும் இலங்கை தேயிலை சபையினால் நியமிக்கப்பட்டசுவை பார்ப்போரின் நிபுணத்துவ சபையினால் இது முன்னெடுக்கப்படுகிறது.

அட்டவணை 3.10 : ஒவ்வொரு மாதிரிகளிலும் வெளிவந்த குறைபாட்டுச் சந்தர்ப்பங்கள் (2015)

| மாதிரி வை | வாபஸ் பெற்ற மாதிரிகளின் எண்ணிக்கை | ISOமட்டத்தை விட கீழ் மட்டத்திலுள்ள சந்தர்ப்பங்கள் |
|---|---|---|
| ஏலவிற்பனைக்கு முன்னர் | 1337 | 260 |
| ஏலவிற்பனைக்குப் பின்னர் | 9906 | 58 |

### 3.2.5. பாவனைக்குப் பொருத்தமற்ற தேயிலையை அழித்தல்

ஏலவிற்பனைக்கு முன்னரும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னரும் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றவையென அடையாளம் காணப்பட்ட தேயிலைகள் தொடர்பில் ஏற்றுமதிப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் இதன் பொழுது இனங்காணப்பட்ட 131,735 கி.கி. தேயிலை அழிக்கப்பட்டது.

### 3.2.6 FTAs இன் கீழ் ஏற்றுமதிகள் தொடர்பான செயலாற்றுகைகள

இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழும் தேயிலைக்கென விசேட வரி விகிதம் தொடர்பான கோட்டாக்களை இலங்கை பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. இருப்பினும் 2014 ஆம் ஆண்டில் வரி வீதக் கோட்டா தொடர்பில் மேலதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது.

அட்டவணை 3.11: சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வரி வீதக் கோட்டா தொடர்பான பயன்பாடுகள் (2015)

| FTA | வருடாந்த கோட்டா கி.கி. | மொத்த ஏற்றுமதி கி.கி. |
|---|---|---|
| இந்தியா - இலங்கை | 15,000,000 | 3,139,463.90 |
| பாகிஸ்தான் - இலங்கை | 10,000,000 | 541,653.70 |

### 3.2.7. தேயிலையை திரும்பப்பெறுதல்

வெளிநாட்டுக் கொள்வனவாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட தேயிலைத் தொகுதியொன்று ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் இலங்கைத் தேயிலைச் சபையின் அனுமதியுடனேயே அத்தேயிலையை உள்ளூரிலிருந்து ஏற்றுமதி செய்தவர் மீளப்பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்தேயிலையை மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு அல்லது பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் அது இலங்கைத் தேயிலைச் சபையினால் மீண்டும் பரிசோதனைக்குட்படுத்தப்படும்.

## 3.3. தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

### 3.3.1. பிரிவின் பிரதான நோக்கம் / செயற்பாடுகள்

கீழே கூறப்பட்டுள்ள விரிவான பிரிவின் கீழ் இலங்கைதேயிலை சபையினால் உள்நாட்டைப் போன்றுவெளிநாட்டுசந்தையில் இலங்கை தேயிலை ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் தேயிலைஊக்குவிப்புப் பிரிவுக்குப் பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

I. வகைப்படுத்தப்பட்ட தேயிலை ஊக்குவிப்புப் பணி களை மேற்கொள்ளல்
II. சர்வதேச உணவு மற்றும் பான வகைகள் தொடர்பான வர்த்தக விற்பனை கூடங்கள் மற்றும் கண்காட்சியில் பங்கேற்றல்.
III. இலங்கை தேயிலை தொடர்பாக உள்நாட்டு ஊக்குவிப்புப் பணிகளை மேற்கொள்ளல்.
IV. தேயிலை நுகரும் சகல நாடுகள் தொடர்பிலும் வியூக சந்தைகளில் பக்கத்தோற்றங்களை வகுத்தலும், அவற்றை விரிவுபடுத்தலும்.
V. தேயிலை ஊக்குவிப்புப் பிரிவுக்காக கொள்கைகளை வகுப்பது தொடர்பில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு உதவுதல்.
VI. தேயிலை சந்தைக்காக ஏனைய போட்டியாளர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல்.

VII. சுங்க இலச்சிணையைப் பதிவு செய்தல் மற்றும் அதனை மேற்பார்வை செய்தல்.
VIII. இலங்கை தேயிலை மற்றும் ஏனைய தேயிலை செய்கைகளின் வலய, பெயர் இலச்சிணை கோளமய அறிமுகமாகக் கருதி பாதுகாத்தல்.
Ix. ஓசொன் படலத்திற்குப் பொருத்தமானவாறு சுத்தமான இலங்கைத் தேயிலைப் பதிவு செய்தல் மற்றும் தனியார் பிரிவின் பொதியிடலாளர்களுக்கு அதனைப் பயன்படுத்துவதற்காக அதிகாரத்தை வழங்குதல்.
x. உள்நாட்டு தேயிலை ஊக்குவிப்பு

**3.3.2.** **வெளிநாட்டு தேயிலை ஊக்குவிப்பு அலுவலகம் மற்றும் சந்தை தழுவல்கள்**

ஐக்கிய அரபுஇராச்சியம், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலுள்ள இலங்கை இராஜதந்திரதூதுக் குழு சபையுடன் இணைந்த வெளிநாட்டு தேயிலை ஊக்குவிப்புதொடர்பான வலயத்தின் மூன்று பிரிவுகள் இலங்கை தேயிலை சபையினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்தில்தாபிக்கப்பட்டுள்ள அலுவலகம் மத்திய கிழக்கு/ வளைகுடா/வட ஆபிரிக்காவலயத்தில் தேயிலை ஊக்குவிப்புப் பணிகள் தொடர்பாக பொறுப்புக்கள்காணப்படுவதுடன், ரஷ்யாவில் அமைந்துள்ள அலுவலகம் ரஷ்ய கூட்டரசுசுதந்திர இராச்சியங்களின் அமைப்புடன் இணைந்து தேயிலை ஊக்குவிப்புப்பணிகள் தொடர்பாக பொறுப்புக்கள் காணப்படுகின்றன. மேலும், உரிய வர்த்தகஉத்தியோகத்தர்கள், இலங்கை இராஜதந்திர தூதுக் குழுவின் ஒத்துழைப்புடன்ஏனைய சந்தைகளில் தேயிலை ஊக்குவிப்புப் பணிகளை மேற்கொள்வது தொடர்பிலும் கொழும்புதேயிலை ஊக்குவிப்புப் பிரிவு பொறுப்பாகவுள்ளது.

**3.3.3.** **வர்த்தகக் கண்காட்சி பங்கேற்பு**

தூய இலங்கைத் தேயிலை வர்த்தக நாமத்தினைஊக்குவிப்பதற்காகதேர்ந்தெடுக்கப் பட்ட பிரதான தேயிலை இறக்குமதி செய்யும்நாடுகளில் நடாத்தப்படும்சர்வதேச உணவு மற்றும் பான வகைகள் தொடர்பிலான கண்காட்சிகளில்பங்கேற்பதற்காக தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் கம்பனிகளுக்கு இலங்கைதேயிலை சபையினால் உதவிகள் வழங்கப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் கீழேகுறிப்பிடப்பட்டுள்ள கண்காட்சிகளில இலங்கை தேயிலை சபை பங்கேற்றதன்மூலம் சுத்தமான இலங்கை தேயிலை வகைகளை ஏற்றுமதி செகவய்யும்அளவு மற்றும் பெறமதியினை அதிகரிக்க தேயிலை கம்பனிகளுக்கு முடிந்தன.

1. Prodexpo 2015 ரஷ்யா பெப்ரவரி
2. இந்தியா சர்வதேச தேயிலை மற்றும் கோப்பி ஏற்றுமதி 2015 (2015 பெப்ரவரி 26 2015 மார்ச் 01)
3. Foodex ஜப்பான் - 2015 மார்ச்
4. சர்வதேச உணவு மற்றும் பானம் தொடர்பான கண்காட்சி 2015 லண்டன் - மார்ச்
5. உலக உணவு WARSAW 2015.Warsaw, போலாந்து 2015 ஏப்ரல் 14 - 16
6. SIAL கனடா ஏப்ரல் 2015
7. SIAL சீன 2015 - மே
8. உலக தேயிலை ஏற்றுமதி USA மே 2015
9. சியோல் உணவு, கொரியா மே
10. தாய்பிக்ஸ், பேங்கொக், தாய்லாந்து மே
11. மலேசிய சர்வதேச உணவு மற்றும் பானம் பற்றிய வர்த்தகச் சந்தை ஜூன்
12. SAItex, தென்னாபிரிக்கா ஜூன்
13. Food Taipei தாய்வான் வர்த்தக கண்காட்சி 2015 ஜூன்
14. "இலங்கைத் தேயிலை வாரம்" - வேல்ட் எக்ஸ்போ 2015, மிலான் - ஆகஸ்ட்
15. உலக உணவு, இஸ்தான்புல், துருக்கி 2015 செப்டம்பர்
16. 2015 செப்டம்பரில் உலக உணவு செயலமர்வு மொஸ்கோவில் இலங்கை தேயிலைச் சபையின் பங்குபற்றுதல்
17. சிறப்பான உணவு, சிட்னி, அவுஸ்திரேலியா 2015 செப்டம்பர்
18. பொலகிரான் சந்தை பொசான், போலாந்து 2015 செப்டம்பர்
19. ஹொகாங்க் சர்வதேச தேயிலைச் சந்தை 2015
20. அனுகா ஜேர்மனி ஒக்டோபர் 2015 கொலோன், ஜேர்மனி
21. XIAMENதேயிலை ஏற்றுமதி 2015 ஒக்டோபர், சங்காய், புதிய சர்வதேச ஏற்றுமதி நிலையம், சங்காய், சீனா
22. உலக உணவு உக்ரேன் 2015 ஒக்டோபர்
23. கொரியா தேயிலை ஏற்றுமதி மற்றும் மாநாடு 2015 ஒக்டோபர் 29 நவம்பர் 01, சோல், தென் கொரியா.
24. FHC ஷங்காய் - 2015 நவம்பர்
25. சீனா தேயிலை ஏற்றுமதி, பீஜிங்க் - சீனா தேசிய மாநாட்டு மையம், பீஜிங்க், சீனா நவம்பர்.

படம்3.1 :**Prodexpo 2015 -** ரஷ்யா பெப்ரவரி




படம் **3.2 : Foodex** ஜப்பான் - 2015 கண்காட்சி 2015 மார்ச் 03 06




படம் 3.3 : இந்திய சர்வதேச தேயிலை மற்றும் கோப்பி ஏற்றுமதி 2015



படம் 3.4 : சர்வதேச உணவு மற்றும் பானம் கண்காட்சி 2015 லண்டன், மார்ச




### 3.3.4 சர்வதேச ஊக்குவிப்புப் பிரச்சாரம்

இலங்கை தேயிலை தொடர்பில் சர்வதே ரீதியில் பிரச்சார மற்றும் ஊக்குவிப்புப் பணிகளை மேற்கொள்ளும் முகமாக 2011 ஆம் ஆண்டு இலங்கை தேயிலைச் சபையானது அமைச்சரவைக்குப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தது. சர்வதேச ரீதியாக விலைமனுக்கள் கோரப்பட்டன. இதன் பிரகாரம் CANC மற்றும் TEC பிரேரணைகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அத்தோடு, விலைமனுக் கோரல்களுக்கான அமைச்சரவை ஒப்புதல் 2015.03.04 இல் கிடைக்கப் பெற்றது.

இதன் பிரகாரம்,Phoenix O&M (PVT) Ltd கம்பனியானது மேற்படி விடயம் தொடர்பிலான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேலும், ரஷ்யா,CIS பிராந்தியம், மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்க பிராந்தியம்,ஓஸியானிக் பிராந்தியம், ஐரோப்பிய பிராந்தியம், அமெரிக்க பிராந்தியம், தென்னாசியப் பிராந்தியம் ஆகியவற்றில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொள்ளும். முதல் 12 மாதங்களுக்கான மொத்தச் செலவு USD 2.26 மில்லியன் ஆகும். Phoenix O&M (PVT) Ltd நிறுவனத்துடனான ஆக்கபூர்வமான பிரச்சாரப் பணிகளை வழங்குவதற்கான உடன்படிக்கையை 2015 நவம்பர் 06 இல் பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சின் செயலாளர் கையொப்பமிட்டார்.

### 3.3.5. இலங்கை தேயிலையை ஓரேயொரு உள்நாட்டுதேயிலை வகையாக உலகெங்கும் ஊக்குவித்தல்

இலங்கைத் தேயிலையை ஒரேயொரு உள்நாட்டு தேயிலை வகையாக உலகெங்கும்ஊக்குவிக்கும் வகையில் ஏனைய வகைகளைக் கொண்ட தேயிலைக்கு இணைவாகஇலங்கை தேயிலையை உலகெங்கும் பிரச்சாரம் செய்யக்கூடிய வர்த்தகமாகும்.வெளிநாட்டு தேயிலை ஊக்குவிப்புப் பிரிவின் மூலம் வெளிநாடுகளில் இலங்கைதூது சபைகளில் வர்த்தகப் பிரிவுகளின் ஊடாக இலங்கை தேயிலை சபையினால்அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தேயிலையினை உலகெங்கும் ஊக்குவிக்கும்வர்த்தகம் வெளிநாட்டுச் சந்தையில் பிரதானமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள், வெளி வர்த்தகப் பிரசாரம்,தேநீர் சேவைகள், தேயிலை செயலமர்வு, கருத்தரங்கு மற்றும் ஏனைய பொதுஇணைப்புப் பணிகள் இலங்கை தேயிலையினை ஒரேயொரு உள்நாட்டு தேயிலைவகையாக உலகெங்கும் ஊக்குவிப்பது தொடர்பில் இலங்கை தேயிலை சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் இதன் முக்கியத்துவம் வாய்ந்தஅம்சமாகும்.

### 3.3.6. ஏனைய பான வகைகளுக்கு இணைவாக தேயிலை ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளல்.

ஏனைய பான வகைகளுக்கு இணைவாக "இலங்கை தேயிலை" உலகெங்கும் ஊக்குவிக்கும் நோக்குடன்இலங்கை தேயிலை சபையினால் பல்வேறுபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கைதேயிலை சபை எப்.ஏ.ஓ அமைப்பின் தேயிலை தொடர்பான சர்வதேசகுழு, ஐக்கிய இராச்சியத்தின் தேயிலை கவுன்சில், ஐக்கிய அரபு எமீர்இராச்சியத்தின் தேயிலை சங்கம், ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேசதேயிலை குழு மற்றும் ஜப்பான் தேயிலை சங்கமும் அங்கத்துவம்பெற்றுள்ளது. இவ்வமைப்பினால் ஏனைய பான வகைகளுக்கு இணைவாகதேயிலை ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. நுகர்வோருக்குதேயிலை தொடர்பிலான அறிவினை வழங்கும் நோக்குடன் பொதுமக்கள்இணைப்பு பணிகள் மூலமும் தேயிலை சுகாதாரத்திற்கு பொருத்தமானதுஎன்பது தொடர்பில் பிரதானமாக விளக்கமூட்டுவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டன.

### 3.3.7. இலங்கைத் தேயிலையை புவியியல் குறிகாட்டியின் கீழ் பதிவு செய்தல், பிராந்திய பெயரிடல் மற்றும் இலச்சிணை இடல்(GIs)

உலக வரத்தக அமைப்பின் “ரிப்ஸ்”உடன்படிக்கைஅமைப்புகளுக்கு அமைய “இலங்கை தேயிலை”மற்றும்ஏனைய விவசாய 7 கால நிலைய வலயங்களில் தேயிலை(நுவரெலியா, ஊவா, தம்புள்ள, உடபுஸ்சலாவ, கண்டி,ருஹுூனு மற்றும் சப்ரகமுவ) கோளமய அறிமுகத்தைப்பாதுகாப்பதற்காக தேவையான சட்டங்கள் மற்றும் கோவைகள்இலங்கை தேயிலை சபையினால் வகுக்கப்பட்டன. பிரதானமாகவெளிநாட்டு ஒப்பந்தம் பெற்ற பொதியிடலாளர்களினால் “இலங்கை தேயிலை“மற்றும் ஏனைய வலயங்களில் தேயிலைசெய்கை நாமங்களை போலி அடிப்படையில் பயன்படுத்துவதுதடுக்கவும் இது உதவியாக அமைகின்றது. “இலங்கை தேயிலை”வலய பிராந்திய நாமத்தைப் போன்று இலச்சிணையினைஉறுதிப்படுத்தும் அடையாளமாகவும் உள்நாட்டு ரீதியில்பதிவு செய்யும் பணிகள் இவ்வாண்டு பூரணப்படுத்தப்பட்டது.

கோளமய அறிமுகத்தைப் போன்று உறுதிப்படுத்தும் அடையாளமாக“இலங்கை தேயிலை”மற்றும் ஏனைய விவசாய7 காலநிலை வலயங்களில் சர்வதேச ரீதியில் பதிவுசெய்வதற்காக விண்ணப்பிக்கும் பணிகள் 2012ஆம் ஆண்டில்குறிப்பிடப்பட்ட நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தேயிலையை பதிவுசெய்துகொள்ளும் முகமாக விண்ணப்பங்கள் இருபது நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவையாவன, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம்,ஈரான், துருக்கி, ஜோர்தான்,ஈராக், லிபியா, குவைத், சவூதி அராபியா,சிரியா, எகிப்து, லெபனான், தூனிசியா, ரஷ்யா, உக்ரேன், அஸர்பெய்ஜான். அதேவேளை, சிரியா, லெபனான், துனீசியா மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளில் பதிவுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.3.8. சந்தை நாமத்தைப் பாதுகாத்தல்.




சிங்க இலச்சிணை வர்த்தக நாமத்தைப் பதிவு செய்தல் (712)

இலங்கை தேயிலை சிங்க இலச்சிணையின் உரிமை இலங்கைதேயிலை சபைக்குரியது. தேயிலை ஊக்குவிப்புப் பிரிவினால்இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் இலங்கை தேயிலைசிங்க இலச்சிணையைப் பதிவு செய்தல் /புதுப்பிப்பதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2015 ஆம் அண்டுஇறுதியில் இலங்கை தேயிலை சிங்க இலச்சிணை 98 நாடுகளில்பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, மேலும் இரண்டு நாடுகளில் அதற்கான செயன்முறை இடம்பெற்றுவருகிறது. 100%இலங்கை தேயிலையில்அடங்குவதாக உயரிய மட்டத் தரத்திலான இலங்கையில்பொதியிடப்பட்ட ஐஎஸ்ஓ 3720 தரத்திற்கு அமைவான வர்த்தக நாமம் இடப்பட்டுள்ளதைப் போன்று பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைஉற்பத்தி (தேயிலைப் பொதி மற்றும் தேயிலை பக்கட்) இற்காகமாத்திரம் சிங்க இலச்சிணையைப் பயன்படுத்துவதற்கு அதிகாரம்வழங்கப்பட்டுள்ளது.

### 3.3.9. ஓசோனுக்குப் பொருத்தமான சுத்தமானஇலங்கை தேயிலையினை பதிவு செய்தல்.

இலங்கையில் ஓசோனுக்குப் பொருத்தமான தேயிலைனை ஊக்குவிக்கும்நோக்குடன் உறுதிப்படுத்தும் அடையாளமாக சுத்தமான ஓசோனுக்குப்பொருத்தமான இலங்கை தேயிலை இலச்சிணை இலங்கை தேயிலைசபையினால் பதிவு செய்யப்படுகின்றது. மென்றில் சாசனத்தின் கீழ் ஏற்றுமதிசெயற்பாடுகளின் போது மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னர் மிதைன்புரோமைட் இடப்படுவதை தடுப்பதற்காக இரு செயற்றிட்டங்கள்இலங்கையில்அமுல்படுத்தப்பட்டுள்ளன. மிதைல் புரொமைட் பயன்பாடுகளின்றி சூழலுக்குஉகந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கைதேயிலை செய்கையினை மேற்கொள்வதற்காக தேயிலை

கைத்தொழில்பிரிவின் செயற்றிட்டங்கள் 2002ஆம் ஆண்டில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டதுடன், மொன்றியல் சாசனம் அமுல்படுத்தப்படுவது விருதினைவெற்றெடுப்பதற்கு 2007ஆம் ஆண்டு இலங்கைக்கு முடிந்தது. இதற்கமைய,உலக தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஓசோனுக்குப் பொருத்தமானதேயிலை உற்பத்தி செய்யும் முதலாவது தேசம் இலங்கையாக மாற்றம்பெற்றுள்ளதோடு,இந்த நன்மதிப்பைப் பெற்ற தேயிலையை உற்பத்தி செய்யும் நாடு இதுவாகும்.

ஜப்பான், ஐரொப்பிய ஒன்றியம், மலேசியா, குவைத், சிரியா, ஐக்கிய அரபு இராச்சியம், லெபனான், ரஷ்யா, சிலி, ஜோர்தான் ஆகிய நாடுகளுடன் ஓசோன் இலட்சனை பதிவுப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டன.

### 3.3.10. “சிலோன் தேயிலை” மற்றும் ஏறு பிராந்தியத் தேயிலை தொடர்பிலான பதிவுகள.

இலங்கைத் தேயிலையைப் பதிவுசெய்து கொள்ளல் மற்றும் விவசாயக் காலநிலைப் பிராந்தியப் பெயர்களை GIs ஆக அல்லது சான்றிதழ்களாக பதிவுசெய்துகொள்வதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கைத் தேயிலைக்குக் காணப்படும் நற்பெயர்களைப் பாதுகாக்க முடியும் அத்தோடு, வெளிநாடுகளில் இலங்கைத் தேயிலை கலப்படம் செய்யப்பட்டு தவறாகப் பயன்படுத்துவதையும்தடுக்கக்கூடியதாகவிருக்கும் இவ்வித நடவடிக்கைகளின் காரணமாக இலங்கைத் தேயிலையின் நற்பெயரை சர்வதேச ரீதியில் பேணமுடியும். இத்தகைய பதிவுகளின் காரணமாக சர்வதேச ரீதியில் இலங்கைத் தேயிலைக்கு சிறந்த பெறுமதி கிடைப்பதுடன் ஏழை விவசாயிக்கு சிறந்த விலை கிடைப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. உற்பத்திப் பொருட்களைத் தரம் பிரித்தறிவதற்கான வாய்ப்புகளை வழங்குவதோடு, வாடிக்கையாளர்களுக்கு தூய இலங்கைத் தேயிலை கிடைப்பதற்கான வாய்ப்புகளையும் இது ஏற்படுத்துகிறது.

ஜோர்தான், சிரியா, துனியா, லெபனான் ஆகிய நாடுகளில் வெற்றிகரமாக இலங்கைத் தேயிலையை சபை பதிவுசெய்துள்ளது. ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய ஏழு பிராந்தியங்களில் ஏற்கனவே இலங்கைத் தேயிலை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### 3.3.11. ஊக்குவிப்புத்/ தகவல்களை வழங்குவதற்கான வெளிப்பாடுகள்

கீழ் குறிப்பிடப்பட்ட ஊக்குவிப்பு தகவல்களைவழங்குவதற்கான வெளிப்பாடுகள் ஆண்டுக்குள்வழங்கப்படுகின்றன.

I. இரு மாத தகவல் ஆவணம் (06).
II. காலாண்டுக்காக வழங்கப்படும் தேயிலை சந்தை மீளாய்வு - 2015 (04).

### 3.3.12. உள்நாட்டில் தேயிலை ஊக்குவிப்புச் செயற்பாடுகள்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் இலங்கைத் தேயிலைச் சபையானது பின்வரும் உள்நாட்டு வியாபாரக் கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றியது. அத்தோடு, ஊடக பிரச்சாரங்கள், வெளிக்கள விளம்பரங்கள், திரவ தேயிலைச் சேவைகள், விற்பனைகள், தேயிலைச் சபையின் பல்வேறு வகையான தேயிலைப் பொதிகளை விற்பனை செய்தல், ஊக்குவிப்பு தொடர்பான பொருட்களை விநியோகித்தல் போன்ற பல்வேறு விதமான நடவடிக்கைகளை இது மேற்கொண்டது.

#### 3.3.12.1. கோல்டன் பூட் பிரின்ட் உல்லாசப் பயணத்துறை 2015 களனி பல்கலைக்கழகம.

“பல்கலாசார பல்வகைமையுடன் உல்லாசப் பயணத்துறையை அனுபவிப்போம்” என்ற தொனிப் பொருளின் கீழ் “கோல்டன் பூட் பிரின்ட் உல்லாசப் பயணத்துறை 2015” என்ற கல்விக் கண்காட்சியை இரண்டாவது முறையாக களனி பல்கலைக்கழக உல்லாசப் பயணத்துறைக் களகம் நடத்தியது.

“இலங்கைத் தேயிலையின் விசேட தன்மை” என்ற தொனிப்பொருளில் கருமபீடமொன்றை இலங்கைத் தேயிலைச் சபை நடத்தியது. இங்கு வருகை தருபவர்களுக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் தேயிலை தொடர்பிலான சேவைகளை 2015 நவம்பர் 18 இல் வழங்கியது. இது கோல்டன் பூட் பிரின்ட் உல்லாசப் பயணத்துறை 2015, களனி பல்கலைக்கழகம்.






**3.3.12.2.** காலி சிறப்பு - 2015

2015 டிசம்பர் 27 முதல் 31 வரையில் காலி சிறப்பு 2015 என்ற நிகழ்வொன்று ஐந்து நாட்களாக தொடர்ந்து இடம்பெற்றது. இதில் பல்வேறு விதமான சுவாரஸ்யமான நிகழ்வுகள், பொழுதுபோக்கு அம்சங்கள், ஆக்கபூர்வமான நிகழ்வுகள் ஆகியன இடம்பெற்றன. இவை இரவு பத்து மணி வரை காலியில் இடம்பெற்றது. இங்கு தேயிலை தொடர்பான கருமபீடம் மற்றும் தேயிலை விற்பனை நிலையம் ஆகியவற்றினை இலங்கைத் தேயிலைச் சபை நடத்தியது.







**3.3.12.3.** 2015 இல் கண்டியில் நடைபெற்ற எசல பெரகர மூலம் இலங்கைத் தேயிலை ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

2015 ஆகஸ்ட் 20 முதல் 30 வரை இடம்பெற்ற எசல பெரகரவுக்குரூ. 500,000.00 ஐ இலங்கைத் தேயிலைச் சபை வழங்கியது. இதன் பொழுது தேயிலை தொடர்பிலான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக பதாதைகள் மூலமும் ஏனைய ஊக்குவிப்புச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைத் தேயிலையை மேம்படுத்தும் நடவடிக்கைகளுள் ஒன்றாக 50 தொங்கு நிலையிலான பதாதைகளை காட்சிப்படுத்துவதற்கான பொறுப்பினை இலங்கைத் தேயிலைச் சபை வெளியாருக்க வழங்கியிருந்தது.





**3.3.12.4.** சுற்றுலாவிழா 2015

கொழும்பு 7, சுதந்திர சதுக்கத்தில் 2015 டிசம்பர் 19 முதல் 23 வரையில் சுற்றுலா விழா-2015 மற்றும் கண்காட்சி ஆகியன இடம்பெற்றன. கண்காட்சிக் காலத்தின் பொழுது இலங்கைத் தேயிலைச் சபையானது தனித்தனியாக கடைகளை அமைத்ததுடன் (10x10) தேனீர் சேவைகளையும் நடத்தியது. இலங்கைத் தேயிலைச் சபையானது தேயிலை தொடர்பான தகவல்களை வழங்கியதுடன் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. அத்தோடு, தேயிலை தராதரம் பற்றிய விடயங்களைக் காட்சிப்படுத்தியதுடன், 7 பிராந்திய தேயிலை தொடர்பிலும் தகவல்களை வழங்கியது. மேலும் சிறப்பானதொரு கோப்பைத் தேனீரை எவ்வாறு தயாரிப்பது, சந்தையிலிருந்து ஒரு தரமான தேயிலையை எவ்வாறு தெரிவுசெய்வது என்பது பற்றியும் அறிவூட்டப்பட்டது. இவ்விழாவின் பிரதம அதிதியாக மேதகு ஜனாதிபதி மைத்திரிப்பால சிறிசேன அவர்களும் கலந்துகொண்டதுடன், இங்கு வருகை தந்த அமைச்சர்கள் இந்தக் கடைகளுக்கு விஜயம் செய்தனர்.



### 3.3.12.5. ரண்தலு மஹிம 2015

“ரண்தலு மஹிம கண்காட்சி மற்றும் செயலமர்வு 2015” ஆனது 2015 ஜுன் 29 மற்றும் 30 ஆகிய தினங்களில் காலி மண்டபம், காலியில் இடம்பெற்றது. இவ் இரண்டு நாட்களிலும் காலி மண்டபத்தில் இலங்கைத் தேயிலைச் சபை கடைகளை நிறுவியிருந்தது. தேயிலை தொடர்பான தகவல்கள் மற்றும் ஊக்குவிப்புச் செயன்முறைகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையை ஊக்குவித்தல், ஏறு பிராந்திய தேயிலை பற்றிய அறிவித்தல்கள் மற்றும் தேயிலை மாதிரிகள் ஆகியன இந்நிகழ்வின் போது விநியோகிக்கப்பட்டன. பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையின் முக்கியத்துவம், எவ்வாறு தரமான தேயிலையை உற்பத்திசெய்யும் செயன்முறைகளை மேற்கொள்வது ஆகியன பற்றி தென் பிராந்தியத்தைச் சேர்ந்த பார்வையாளர்களுக்கும் பங்கீடுபாட்டாளர்களுக்கும் இலங்கைத் தேயிலைச்சபை அறிவூட்டியது.




### 3.3.13. வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள

சீனா, ஜப்பான், ஆஜன்தீனா, பிரேசில், சிலி மற்றும் கொரியா ஆகிய நாடுகளிலிருந்து விஜயம் செய்த தூதுக் குழுவை மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் போது இலங்கைத் தேயிலைச் சபையானது வரவேற்றதுடன் வர்த்தக ரீதியான உறவுகளைக் கட்டியெழுப்பும் நோக்குடனும் இரு நாடுகளும் பரஸ்பரம் நன்மையடையக்கூடிய விதத்திலும் கருத்துக்களையும் அனுபவப் பரிமாற்றங்களையும் மேற்கொள்ளல் போன்றவற்றை நோக்காக்க கொண்டு பங்கீடுபாட்டாளர்களுடன் வியாபார ரீதியான கூட்டங்களை இலங்கைத் தேயிலைச் சபை ஏற்பாடு செய்தது.

### 3.3.14. தேயிலை விற்பனை நிலையங்கள்

தேயிலைச் சபையின் முக்கிய ரக தேயிலையை உள்ளடக்கிய பொதிகளையும் 28 தனியார் கம்பனிகளிடமிருந்து தெரிவுசெய்யப்பட்ட தேயிலை உற்பத்திகளையும் இலங்கைத் தேயிலைச் சபை வழாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தேயிலை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. இத்தகைய நிலையங்களில் தேயிலை விற்பனை செய்யப்பட்டதன் மூலம் 2015 ஆம் ஆண்டில் ரூபா. 82.1 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்விற்பனை அதிகரிப்பானது 25 வீதமாகும். இலங்கைத் தேயிலைச் சபையின் தேயிலைப் பக்கட்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ. 25 மில்லியன் வருமானமாக்க கிடைக்கப் பெற்றதுடன், தனியார்த்துறை தேயிலை மூலம் ரூ. 57 மில்லியன் கிடைக்கப் பெற்றது.

### 3.3.15. இலங்கை கிறிக்கெட் அனுசரணை

**3.3.15.1** 2015 இன் **ICC** கிறிக்கெட் உலகக் கோப்பையின் போது அவுஸ்திரேலியா, சிட்னி நகரில் காட்சிப்படுத்தப்பட்ட பஸ்





இலங்கை கிறிக்கெட்டிற்கு உத்தியோகபூர்வமான வெளிநாட்டு அனுசரணையாளர்களாக இலங்கைத் கிறிக்கெட் திகழ்கின்ற அதேவேளை, இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் ஆகியன கூட்டாக இணைந்து 2015 **ICC** கிறிக்கட் உலகக் கோப்பை போட்டியானது அவுஸ்திரேலியா, சிட்னி நகரில் இடம்பெற்ற போது இலங்கைத் தேயிலை தொடர்பில் விசேட பிரச்சார பணிகளை மேற்கொண்டது.

அவுஸ்திரேலியா, சிட்னி நகரிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் விதப்புரையின் பிரகாரம் அவுஸ்திரேலியாவிலுள்ள 30 பஸ்களில் இலங்கைத் தேயிலை தொடர்பான பிரச்சாரங்களை மேற்கொண்டது. இதன் போது வாகனத்தில் செல்வோரும் பாதசாரிகளும் இலங்கைத் தேயிலை தொடர்பில் அறிந்துகொள்ள முடிந்தது. 2015 மார்ச் 02 முதல் 29 ஆம் திகதி வரை இந்தப் பிரச்சாரப் பணிகள் இடம்பெற்றன. இருப்பினும், இலங்கைக் கிறிக்கெட் மட்டுப்பாடுகளுக்கு ஏற்ப கிறிக்கெட் விளையாட்டு வீரர்கள் அணிந்திருந்த உடையில் மட்டுபபாடுகள் கொண்டுவரப்பட்டன.

**3.3.15.2.**சர்வதேச கிறிக்கெட் வர்ணனையாளர்களுக்கு இலங்கை தேயிலை பற்ற வர்ணனையாளர் எடுத்துரைத்தல்




வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் இலங்கைத் தேயிலை பற்றி எடுத்துரைக்கும் முகமாக வர்ணனையாளர் மற்றும் தென் விளையாட்டு ஊடகத்தைச் சேர்ந்த படப்பிடிப்பாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகியோர் மத்தியில் 2015 ஜூன் 30 ஆம் திகதி கொழும்பு 07, றீட் எவனியு, றேஸ்கோஸில் வைத்து இலங்கை தேயிலை தொடர்பாக எடுத்துரைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைக் கிறிக்கெட்டின் உதவியுடன் 3 முக்கிய கிறிக்கெட் வர்ணனையாளர்கள் மத்தியில் இத்தகைய விளக்கமளிக்கும் நிகழ்வொன்றினை இலங்கைத் தேயிலைச் சபை ஏற்பாடு செய்திருந்தது. இவற்றில் ரென்ஸ்போட்டைச் சேர்ந்த படப்பிடிப்பாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் பங்குபற்றினர்.

ரென்ஸ்போட்ஸ் ஊடக நிறுவனத்தின் நாட்டுத்தலைவர், சிரேஸ்ட உதவித் தலைவர், தயாரிப்பு, ரென்ஸ்போட்ஸ் ஊடகம், தயாரிப்பாளர் மற்றும் படப்பிடிப்பாளர் குழு அத்தோடு திரு. டீன்ஸ் ஜோன்ஸ், திரு. ரஸல்ட் ஆனோல்ட், திரு. சிறிகந்த பகத் ஆகிய சர்வதேச புகழ் பெற்ற கிறிக்கெட் வர்ணனையாளர்கள் இதில் பங்குபற்றினர். இவர்களுடன் இலங்கைக் கிறிக்கெட்டின் அதிகாரிகளும் பங்குபற்றினர்.

**3.3.15.3.**சர்வதேச கிறிக்கெட்

வர்ணனையாளர்களுக்கான விசேட "சிலோன் தேயிலை" தொடர்பான சுற்றுலா




ரென்ஸ்போட்ஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட உதவித் தலைவர், பிரதான புகைப்படப் பிடிப்பாளர் மற்றும் ரென்ஸ்போட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஊடக அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய விசேட "இலங்கைத் தேயிலை" என்ற தொனிப்பொருளில் சுற்றுலா ஒன்றை இலங்கைத் தேயிலைச் சபையின் ஊக்குவிப்புப் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது. இவர்கள் பண்டாரவளை எல்லையிலுள்ள 98 ஏக்கருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இங்கு நேரடியாக தேயிலைத் தோட்டம் தொடர்பிலான அனுபவங்களைப் பெற்றுக்கொண்டதுடன், உற்பத்திச் செயன்முறை பற்றியும் அறிந்துகொண்டனர். ஊவா ஹெல்பேவத்தை தேயிலைத் தோட்டத்தின் நவீன தொழிற்சாலையை அவர்கள் ஆராய்ந்து பார்த்தனர். இதன் நிமிர்த்தம் தேயிலைச் சபைக்கு எவ்வித செலவுகளும் ஏற்படவில்லை.

**3.3.15.4.** ரென் ஸ்போட்ஸ் ஊடகவியலாளர்களால் தயாரிக்கப்பட்ட "இலங்கைத் தேயிலை தொடாட்பான விசேட ஆவணப்படம்"



இலங்கைக் கிறிக்கெட்டின் உதவியுடன் இலங்கைத் தேயிலை தொடர்பில் 1.5 நிமிடத்திற்கான ஆவணப்படமொன்றினை இலங்கைத் தேயிலைச் சபையினால் தயாரிக்க முடிந்தது. இதற்கு தேயிலைச் சபைக்கு எவ்வித செலவுகளும் ஏற்படவில்லை. முதலாவது T-20 கிறிக்கெட் போட்டியின் போது ரென் கிறிகெட் நிறுவனத்தினால் இது ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இதற்கென தேயிலைச் சபைக்கு எவ்வித செலவுகளும் ஏற்படவில்லை. இலங்கைத் தேயிலையை சர்வதேச ரீதியில் பிரச்சாரப்படுத்துவதற்கு இதுவொரு சிறந்த வாய்ப்பாகும். மேலும் இலங்கைத் தேயிலைச்சபைக்கு இதன் பிரதியொன்று வழங்கப்பட்டது. இலங்கைத் தேயிலைச் சபையானது எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள பிரச்சாரப் பணிகளின்பொழுது இதனைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

**3.3.15.5. இலங்கை மற்றும் இந்தியா, 2015 ஆகஸ்ட்**



திரு. குமார் சங்கக்காரவுக்கான பிரியாவிடை விளையாட்டுப் போட்டியின் பொழுது அவருக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்குவதற்கான வாய்ப்பு இலங்கைத் தேயிலைச் சபைக்கு வழங்கப்பட்டது. இந்த நினைவுச் சின்னத்தை எமது ஊக்குவிப்புப் பணிப்பாளர் திருமதி. பிரேமலா சிறிகாந்த அவர்கள் திரு. குமார் சங்கக்காரவுக்கு பரிசளிப்பு வைபவத்தின் பொழுது வழங்கினார். மேலும் இந்நிகழ்வானது மெக்ஸ் ரீவீ. ஊடாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இதன் காரணமாக இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் இலங்கைத் தேயிலை ஆகியவற்றுக்கு சிறந்த அங்கீகாரம் கிடைத்தது.

**3.3.15.6. தூதுவராலய கிண்ண கிறிக்கெட் போட்டி, மொஸ்கோ 2015**

கடந்த வருடம் மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகமானது தூதுவராலய கிறிக்கெட் சுற்றுப் போட்டியை 8 வது வருடமாகவும் தொடர்ச்சியாக நடத்தியது. 2015 ஜூன் 27 ஆம் திகதி மொஸ்கோவிலுள்ள லுலும்பா பல்கலைக்கழக மைதானத்தில் இந்த கிறிக்கெட் சுற்றுப்போட்டி இடம்பெற்றது. நான்கு கிறிக்கெட் அணிகள் (11 பேர்களைக் கொண்டது) இந்த தூதுவராலய கிறிக்கெட் போட்டியில் பங்குபற்றின. இதில் பங்குபற்றிய சகல கிறிக்கெட் வீரர்களும் மொஸ்கோ மற்றும் சென்ற் பீட்டர்ஸ்பேர்க் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களாகும். இலங்கைத் தேயிலைச் சபையானது 60 ரீ-சேட்களை அன்பளிப்பாக வழங்கியது. ஒவ்வொரு குழுவிற்கும் 15 ரீ-சேட்கள் வழங்கப்பட்டன.



**3.3.15.7. கிறிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்ட சிலோன் ரீ என்ற ரீ-சேட்கள**



உள்ளூர் பாடசாலைக் கிறிக்கெட் அணிகளுக்கு சிலோன் ரீ-சேட் (வடிவம் 1) இலவசமாக வழங்குவதற்கு இலங்கை தேயிலைச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டது. திறமை மிக்க பாடசாலை கிறிக்கெட் விளையாட்டு வீரார்களை உட்சாகப்படுத்தும முகமாக இலங்கைப் பாடசாலை கிறிக்கெட் சங்கத்துடன் கூட்டிணைந்து இலங்கைத் தேயிலைச் சபை இந்த ஊக்குவிப்பு ரீதியான பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டது. மத்திய மாகாணத்திலுள்ள கிராமப் புறங்களைச் சேர்ந்த 51 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு இந்த விளையாட்டு வீரர்களுக்கு 1020 ரீ-சேட்கள் இலவசமாக வழங்கப்பட்டது. 2015 ஒக்டோபர் 13 ஆம் திகதி அஸ்கிரிய கிறிக்கெட் மைதானம் - கண்டியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

**3.3.15.8. ICC வருடாந்த தேசிய கிறிக்கெட் நடுவர், முகாமையாளர் கூட்டங்களின் போது தேயிலை சேவை மற்றும் தேயிலை சோதனையிடல் தொடர்பான அமர்வுகள்**




2015 ஜூன் 15 ஆம் திகதி அஹுங்கலை ஹெரிட்டன்ஸ் ஹோட்டலில் வைத்து ICC வருடாந்த தேசிய நடுவர்கள், முகாமையாளர்கள் கூட்டத்தின் பொழுது தேயிலைச் சேவை மற்றும் தேயிலை சோதனையிடல் தொடர்பான அமர்வொன்றை இலங்கைத் தேயிலைச் சபை ஏற்பாடு செய்தது. இந்நிகழ்வின் பொழுது சிலோன் தேயிலை உற்பத்திகள் மற்றும் விசேட தேயிலை ஆகியன காட்சிப்படுத்தப்பட்டதன் காரணமாக சிறந்த பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. புகழ்பெற்ற சர்வதேச கிறிக்கெட் நடுவர்கள் 7 பிராந்திய சிலோன் தேயிலையை சுவையறிந்து பார்த்ததுடன் தமது கருத்துக்களையும் தெரிவித்தனர்.

6.3 சிலோன் தேயிலையை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கைத் தேயிலைச் சபையானது 4.8 மில்லியன் பெறுமதியான தேயிலையை பின்வருமாறு இலவசமாக "அன்பளிப்பாக வழங்கியது"

I. வெளிநாடுகளிலுள் ள58 இலங்கைத் தூதுவராலயங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட தேயிலை

II. சர்வதேச வியாபாரச் சந்தைகளின் பொழுது தேனீர் சேவை மற்றும் தேயிலை விநியோகம்

III. விசேட முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள்/ அதிகாரிகள் ஆகியோருக்கு ஊக்குவிப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டமை. Complimentary teas to 58 Sri Lankan Missions overseas.

## 3.4. தேயிலை சுவை பரிசிலிப்பு அலகு

### 3.4.1. பிரதான பணிகள்/நோக்கம்

ஐஎஸ்ஓ 3720 மற்றும் ஐஎஸ்ஓ 11287 குறைந்தபட்ச தேயிலை தரம்கொண்ட தேயிலை விற்பனை செய்யும் ஏதேனும் இடத்தில் அல்லதுநடாத்தும் இடத்தை மேற்பார்வை செய்தல், வர்த்தக நாமத்தையிட்டுவாடிக்கையாளர்களுக்கு பொதியிடுவதற்காக சிங்க இலச்சிணையினைவழங்க தனியார் மற்றும் நேரடி விற்பனைப் பணிகளின் மேற்பார்வைஉட்பட அவற்றை செல்லுபடியான நிலைமைக்கு மாற்றுதல்.

### 3.4.2.தேயிலை சுவைபரிசிப்பாளர்களின் நிபுணத்துவ சபை

இச்சுயாதீன சபையில் கீழுள்ள இரு அங்கத்தவர்கள் அடங்குகின்றனர்,

திரு.சி.என்.பீ. த சில்வா
(40 வருடங்களுக்கு மேற்பட்ட தேயிலை சுவைபரீட்சிப்பு அனுபவம் )

திரு.டி.ஏ.ஏ.பெரேரா
(30 வருடங்களுக்கு மேற்பட்ட தேயிலை சுவைபரீட்சிப்பு அனுபவம் )

உரிய தரப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தி கீழ் குறிப்பிடப்பட்டசங்கங்களினால் ஒரு பிரதிநிதிகள் வீதம் சபையில் அங்கத்துவத்தைவகிக்கின்றன:

கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கம்
கொழும்பு தரகர் சங்கம்
இலங்கை தேயிலைக் கொழுந்து நடுகையாளர் சங்கம்
இலங்கை சிறு தேயிலை உரிமையாளர் அபிவிருத்திச் சங்கம்
தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம்
தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் உரிமையாளர் சங்கம்

### 3.4.3 உரிய பிரிவின் மூலம் பின்பற்றப்படும்தேயிலை சுவை பரிசீப்பு முறைகள்.

ஊடல் உணர்வு ரீதியிலான பரிசோதனைகளின் போதுபயன்படுத்தப்படும் பதார்த்தங்கள் தேயிலை வகைகளைத்தயாரிப்பதற்காக ஐஎஸ்ஓ3102 முறை இலங்கைதேயிலை சபையினால் பின்பற்றப்படுகின்றது.கறுந்தேயிலைக்காக பயன்படுத்தப்படும் சொற்றொடர்களுக்காகஐஎஸ்ஓ6078 சுவை பரீட்சிப்பு விபரக்கொத்து /இலங்கையின் தேயிலை உற்பத்தி தொடர்பானமொனோகிரப் - இலக்கம் 4 - இலங்கை தேயிலை உற்பத்தி.

### 3.4.4. தேயிலை சுவை பரீட்சிப்பு நிபுணத்துவ அமர்வினைநடாத்துதல்.

ஏலவிற்பனைக்கு முன்னர் தேயிலை

விசேட பகுப்பாய்வுகள் மேற்கொள்ள

வேண்டிய தேயிலை

இறக்குமதிக்கு முன்னர் மாதிரி

நேரடி விற்பனை

புதிய ஏற்றுமதிக் கம்பனிக்காக சுவை

பரிட்சிப்பு மதிப்பீடுகளை

மேற்கொள்ளல்.

நிபுணத்துவ சபையின்

தீர்மானங்களுக்குரியதான உரிய

பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

(தேயிலை ஆணையாளர் பிரிவு மற்றும் பிரதி

தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி) பிரிவு

### 3.4.5 சிங்க இலச்சினை பொதியிடப்பட்டபதிவுகள்

தமது வர்த்தக நாமத்தையிட்ட நுகர்வோர் பொதிகளுக்கு அமைய பண்புசார் தரத்தினைகுறித்துக் காட்டும் வகையில் இலங்கை தேயிலை சபைக்கு முழுமையான உரிமை கொண்டுள்ளதேயிலை இலச்சினையினைப் பயன்படுத்துவதற்குஎதிர்பார்க்கும் ஏற்றுமதியாளர்கள்ஏற்றுமதி செய்யும் நாடு மற்றும் சந்தைக்கமைய அவற்றை மதிப்பீடு செய்வதற்காக தமதுவிண்ணப்பபடிவங்களுடன் வர்த்தக நாமம் இடப்பட்ட உற்பத்திகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சிங்க இலச்சிணை பயன்படுத்தும் உரிமையினை வழங்குவதற்காக ஒரு வகைக்காக ரூபா 5000/- (VAT + NBT) மற்றும் பதிவுக் கட்டணத்தை அறவிட்டு ஒருவருடத்திற்காக செல்லுபடியாகும் சான்றிதழ் இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்படுகின்றது.

சில்லறைப் பொதிகளில் சிங்க இலச்சிணைகளைப் பயன்படுத்தும் உரிமையினை வழங்குவதற்காக2014 ஆம் ஆண்டுக்காக புதிய வர்த்தகப் பொருள் - புதுப்பித்தல் மற்றும் மேலதிக பொதியிடல்கள் தொடர்பில் 772 விண்ணப்பபடிவங்கள் குறித்து கருத்திற் கொள்ளப்பட்டன.

### 3.4.6. சிங்க இலச்சிணை இடப்பட்ட பொதிகள் (உள்நாடு/வெளிநாடு/தேயிலைச் சபையின் பொதி) தொடர்பானபண்புசார் தரத்தினை மேற்பார்வை செய்தல்.

#### 3.4.6.1 உள்நாட்டு மேற்பார்வை முறை

கொழும்பு சொகுசு வரத்த்தக நிலையங்கள் மற்றும் சில்லறை வர்த்தக நிலையங்களில் இருந்துதிடீரென பெற்றுக் கொள்ளும் மாதிரிகள் விசேடமாக சிங்க இலச்சிணை பயன்படுத்தப்படும் பொருள் வகைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன. சிறந்த கீர்த்தியினைக் கொண்ட இலங்கைதேயிலை சபையுடன் நீண்ட காலமாகப் பதிவு செய்து கொண்டுள்ள குறிப்பிடத்தக்களவு வர்த்தகப்பங்குகளைக் கொண்டபொதியிடலாளர்களுக்கு சிங்க இலச்சிணையைப் பயன்படுத்த அனுமதிவழங்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் இதற்கமைய மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றன.

#### 3.4.6.2 வெளிநாட்டு மேற்பார்வை முறை

வெளிநாட:டு மேற்பார்வை முறையின் கீழ் சிங்க இலச்சிணை கொண்ட கப்பலேற்றப்படும்தேயிலை கூடுதலான அளவு (80%) கப்பலேற்றவதற்கு முன்னர் மேற்பார்வை செய்யும்வேலைத்திட்டத்தின் கீழ் பிரதிதேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி) மூலம் மாதிரியாகக்கொள்ளப்படுவதுடன் கப்பலேற்றுவதற்கு முன்னர்மேற்கொள்ளப்படும் மேற்பார்வைப்பணிகளுக்காக இம்மாதிரித் தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவுக்குச்சமர்ப்பிக்கப்படுகின்றது.

அத்துடன், தேயிலை சபையின் வெளிநாட்டு அலுவலகங்களின் மூலம் மற்றும் இலங்கைதூதரக அலுவலகங்களில் சிரேஷ்ட வர்த்தக உத்தியோகத்தர்களினால் மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைப்படுத்தல்களுக்காக வெளிநாட்டு சந்தையில் சிங்க இலச்சினையைப்பயன்படுத்தி விற்பனை செய்யப்படும் பொதிகள் நாளாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 3.4.6.3 இலங்கைத் தேயிலைச் சபையின் பொதிகளின் விஸ்தரிப்பு

சிங்க இலச்சினை கொண்ட இலங்கை தேயிலை சபையின்பொதியிடல் பிரதானமாக எமது சந்தையில் விற்பனைசெய்யப்படுவதுடன், வெளிநாட்டு தூதரக அலுவலகங்கள்,தேயிலை சபையின் வெளிநாட்டு அலுவலகங்கள் மற்றும்வர்த்தகக் கண்காட்சிகளுக்கு அவை அனுப்பப்படுகின்றன. தேயிலை உத்தியோகபூர்வ பொதியிடலாளர்களினால் தேயிலைசுவை பரிசீப்புப் பிரிவின் அங்கீகாரத்துடன் ஏலவிற்பனை மூலம்தனியார் விற்பனை முறையின் ஊடாக இலங்கை தேயிலைசபைக்காக தேயிலை தேர்ந்தெடுப்பு மற்றும் கொள்வனவுகள்மேற்கொள்ளப்படுகின்றன. தேயிலை சுவை பரீசிப்புப் பிரிவினால்இறுதியாகப் பொதியிடுவதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டதேயிலை மாதிரி, கலப்பு மேற்கொள்ளப்பட்ட தேயிலை உற்பத்திகளின்சுபை பரீசிப்பு மற்றும் அங்கீகாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

F.F.C.T. (500g),
Planters Punch (100g&250g),
Misty hills(200g),
Royal Ceylon (Metal Can 200g)
Family Pack(500g&250g),
Poly pack(250g),
Green Tea(100g),
Tea Plucker (250g&100g)
Luxury Blend Wooden (125g)
Luxury Blend Carton (125g)
Connoisseur(250g,200g,125g&100g)

### 3.4.7. விற்பனையின் முன்னர்தேயிலை தரக்கட்டுப்பாடு குறித்தான தேயிலை சுவை பரிசீப்பு

விற்பனைகளுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் மதிப்பீட்டுச்செயற்பாடுகளுக்காக எட்டு தரகர்களினால் தமது முன்னையஏலவிற்பனை தேயிலை மாதிரிகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒருஅலகினால் முதலில் தரத்திற்குப் புறம்பாக, துகல் மேலதிகமாகமற்றும் BOP1Aமாதிரிகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றன.அதனைத் தொடர்ந்து காபன் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதனைத்தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகள் சபைக்குச் சமர்ப்பிப்பதன்மூலம் கூட்டுத் தீர்மானங்களை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பித்துஅவ்வாறு அமையாத பட்சத்தில் எதிர்காலத்தில் நடைபெறும்ஏலவிற்பனைக்காக பிரதி தேயிலை ஆணையாளர் (DTC) (ஏற்றுமதி)இற்கு தீர்மானம் வழங்கப்படமாட்டாது.

பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை
158,680
Organoleptic- 16,570

குழு/ சபையினால் நிராகரிக்கப்பட்ட ஏலவிற்பனையின் முன்னரான

தேயிலை மாதரிகளின் எண்ணிக்கை - 484

சிலுசியஸ் அளவின் உள்ளடக்கம் - 165

கழிவு நார் - 466

திடீரென (BSL/ESL) தொடர்பாகDTC(செயற்றிட்டம்) மூலம் ஏலவிற்பனையின் முன்னர்அனுப்பப்பட்ட தேயிலைமாதிரி பரிசோதனைகள்மேற்கொள்ளப்பட்ட வகைகளின்எண்ணிக்கை 6,095

சந்தேகத்திற்கு இடமான எண்ணிக்கை - 111

**3.4.8.** கப்பலேற்றும் முன்னர தேயிலைக்தரக்கட்டுப்பாடு

குறித்தானதேயிலை சுவை பரிசீப்பு
மேற்கூறுப்பட்ட செயற்பாட்டு முறையின் மாதிரி பிரதி தேயிலை ஆணையாளர ˙(ஏற்றுமதி) இனால் சிங்க இலச்சிணை பயன்பாடு தொடர்பான மதிப்பீட்டுக்காகISO 3720 அளவு அல்லது கப்பலேற்றலுக்கு முன்னர் ஏனைய பதார்த்தங்கள்உள்ளதா என்பது தொடர்பான மதிப்பீடுகளுக்காகச் சமர்ப்பிக்கப்படும்.

ஆரம்ப-கப்பலேற்றும் செயற்பாடுகளுக்கான யோசனைத் திட்டத்தின் கீழ்பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை மொத்தம் - 26,624

**3.4.9.** இறக்குமதியின் முன்னர்தேயிலை தரக்கட்டுப்பாடு குறித்தான தேயிலை சுவை பரிசீப்பு

பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி) உடன் இறக்குமதிக்காகப்பொருத்தமான மதிப்பீட்டு மாதிரிப் படிவம் இறக்குமதிக்கு முன்னரானமாதிரிக்காகச் சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பபடிவங்களுடனும் பிறப்பு, தரம்,போன்றவை தொடர்பான மாதிரி விபரங்கள் அடையாளம் இடப்பட்டுள்ளன.

சுவை பரிசீப்பாளர்களினால் இலங்கை தேயிலை சபையின் சுற்றறிக்கைஇலக்கம் : OR/1/65மற்றும் மறுசீரமைக்கப்பட்ட ஆலோசனைத் தொடர்களுக்குஅமைய தேயிலை வகைகள் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரீட்சிக்கப்பட்ட மொத்த மாதிரிகள் - 1,312

**3.4.10** ஏற்றுமதியின் பின்னர்தேயிலை தரக்கட்டுப்பாடு குறித்தான தேயிலை சுவை பரிசீப்பு

இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை பொறுப்பேற்கப்பட்ட மாதிரிகளைப் பெற்றுதேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் இப்பிரிவுக்கு அங்கீகாரத்திற்காக பெறப்பட்டதொகைகள் சகலதும் மாதிரிப் பிரிவுக்கு அனுப்பப்படும்.

வழங்கப்பட்டமாதிரிகளுக்கு இணைவாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், மாதிரிகள்வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் அவை தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் (தொழில்நுட்பம்) இனால் அவை தேயிலை சுவைப் பரீட்சிப்புப்பிரிவுக்கு அனுப்படும் வேளையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

பரீட்சிக்கப்பட்ட மாதிரிகள் - 723

**3.4.11** விசேட புலனாய்வின் கீழான தேயிலை சுவை பரீட்சிப்பு

தரத்திற்குரியதான ISOஅல்லது ஏனைய விசேட தர மதிப்பீட்டிற்காகஅங்கீகரிக்கப்பட்ட உப ஆவணம் தொடர்பாக வியாழக்கிழமை குழு ஊடாக ஆணையாளர்அல்லது பிரதி ஆணையாளர் (ஏற்றுமதியாளரினால்) மாதிரிகள் சமர்ப்பிக்கப்படும்.

**3.4.12** தனியார் விற்பனை குழுவின் மதிப்பீடு,தரச் சான்றிதழைஉறுதிப்படுத்தல்.

சுயாதீனத் தரகர்களின் அங்கீகாரத்துடன் விற்பனைகள் மேற்கொள்ளப்படும்தரகர்களினால் இப்பிரிவுக்கு குழுவுடன் தொடர்புபட்ட மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டவேளையில் தனியார் விற்பனை சான்றிதழ்கள் உறுதிபத்தப்படுகின்றன. மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளுக்காக ரூபா 500/- (VAT+NBT)தேசிய தரகர் வரிமற்றும் உறுதிப்படுத்தும்கட்டணம் அறவிடப்படும்.தற்போது மேற்கூறப்பட்ட யோசனைத் திட்டங்கள், பச்சைத் தேயிலை, விசேடதேயிலை வகைகள் மற்றும் கொழும்பு தேயிலை ஏலவிற்பனை ஊடாக விற்பனைசெய்யப்படாத துண்டுத் தேயிலைகளுக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவினால் ப ரி சோ த னை மேற் கொ ண் டு உறுதிப்படுத்தப்பட்டதனியார் விற்பனை பொருட்களின் எண்ணிக்கை மொத்தம 8,059

### 3.4.13 செயல் முனைப்பான ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளல்

கொள்வனவாளரின் தேவைக்கேற்ப குறிப்பிட்ட காலப்பகுதிக்கான தெரிவுசெய்யப்பட்ட சில மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. வியாபாரி, கொள்வனவாளர், தரகர், தேயிலைச் சபை ஆகியன விற்பனை செய்வதற்கான ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்டன. மேற்படி சேவைக்கென ஏற்றுக்கொள்ளல் கட்டணமாக 500 ரூபாவுடன் VAT மற்றும் NBT ஆகியன அறவிடப்பட்டன.

மொத்த செயல்முனைப்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் 482 ஆகம்.

### 3.4.14 நேரடி விற்பனைகளை ஏற்றுக்கொள்ளல்

உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் தமது உற்பத்திப் பொருட்களை நேரடியாக வெளிநாட்டுக் கொள்வனவாளருக்கு விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளை மேற்படி திட்டம் வழங்குகிறது. பச்சை தேயிலையைத் தவிர ஏனைய தேயிலையான சேதன தேயிலை மற்றும் விசேட வகைத் தேயிலை ஆகியன உள்நாட்டுக் கொள்வனவாளர்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன. நேரடி விற்பனைகள் வியாழக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த நேரடி விற்பனைகளின் எண்ணிக்கை 2,166 ஆகும்.

## 3.5. பகுப்பாய்வு இரசாயணக்கூடம்

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டான 2015 ஆம் ஆண்டில் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தினால்இரசாயன நுண்ணுயிரியல் விஞ்ஞான மற்றும் கிருமிநாசினிதாக்கத்திற்கு உட்பட்ட தேயிலை மாதிரிகள்காணப்படுகின்றதாஎன்பதனை பரிசீலனை செய்யும்வகையில் 8949 மாதிரிகள் பரிசோதனைக்குஉட்படுத்தப்பட்டன. பரிசோதனைக்காகச்சமர்ப்பிக்கப்பட்ட தேயிலை மாதிரி இரு பிரிவுகளின்ஊடாக கிடைக்கப் பெற்றன. உள்ளகசெயற்பாட்டுச் சேவை (IMS) மற்றும் வெளிஉறுதிப்படுத்தும் சேவை (ECS) தாபிக்கும் ஒப்பளவுகளுக்கு அமைய ஏலவிற்பனைக்குமுன்னர் மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னர்தேயிலை சபையினால் பரிசோதனை குழுவிற்குவிரிவாகவுள்ள தேயிலை மாதிரிகளில் திடீரெனப்பெறப்படுவதைப் போன்று தேயிலை சபைக்கும்அனுப்பப்படுகின்றது. IMSயோசனைத் திட்டத்தினால்தேயிலையினை அகற்றும் சகல இடங்களும்தழுவப்படுகின்றன. தேயிலை உற்பத்தியாளர்கள்,தேயிலைத் தரகர்களின் களஞ்சியம்,குதம்,தேயிலைக் கலப்பு மற்றும் பொதியிடல் உட்படதேயிலை ஏற்றுமதியாளர்களின் களஞ்சியம், குதம்என்பன அடங்குகின்றன. அத்துடன் ECSதேயிலைஏற்றுமதியாளர்களை உறுதிப்படுத்தும் தேவைஅவர்களது கொள்வனவாளர்களின் தேவைகளுக்குஅமைய தழுவப்படுகின்றன. 2015ஆம் ஆண்டில்முழுமையாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குஇடையே IMSஇன் கீழ் பெறப்பட்ட மாதிரிகளின்அடிப்படையாகக் கொண்டு 4034

பரிசோதனைகள(சுமார் 45.1%) மேற்கொள்ளப்பட்டதுடன்,ECSகீழ்மேற்கொள்ள ப்பட்ட மொத்த பரிசோதனைகளின்எண்ணிக்கை 4915 (சுமார் 54.9%) ஆகும். இவற்றில் 2659 பரிசோதனைகள் இரசாயனப் பகுப்பாய்வுப்பிரிவினாலும் (சுமார் 29.7%) 2539 பரிசோதனைகள்(சுமார் 28.41%). 3759 பரிசோதனைகள் (41.9%) கிருமிநாசினிபகுப்பாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

தேயிலை வகைகளின் அதிஉயரிய தரத்துடன் தேயிலை மாதிரிகளை இனங்காண்பதைத் தவிரபரிசோதனை சேவைகளை வழங்குவதற்காகபகுப்பாய்வு இரசாயன கூடத்தினால்கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. 2015 ஆம்ஆண்டில் இரசாயன கூடத்தினால் ஈட்டப்பட்டமொத்த வருமானம் ரூபா. 14,656,800.00 ஆகும்.

ஏற்றுமதியாளர்களின் பங்களிப்பு ரூபா10,445,900.00 (71.27%)என்பதுடன் உள்ளகப் பிரிவின் வருமானப்பங்களிப்பு ரூபா 4,210,900 .00 (28.73%)ஆகும்.

அட்டவணை 3.12: 2014/ 2015 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் சுருக்கம

| பரிசோதனையின் பெயர் | பரிசோதனையின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | **2014** | **2015** |
| இரசாயன கூடப் பகுப்பாய்வுப் பிரிவு | | |
| 1. தேயிலையிலுள்ள ஈரலிப்பினைத் தீர்மானித்தல் | 507 | 356 |
| 2. தேயிலையிலுள்ள முழுமையான சாம்பல் அளவைத் தீர்மானித்தல் | 523 | 342 |
| 3. தேயிலையிலுள்ள நீரில் கரையும் சாம்பல் அளவைத் தீர்மானித்தல் | 523 | 335 |
| 4. தேயிலையிலுள்ள நீரில்லாத அமிச சாம்பல் அளவைத் தீர்மானித்தல் | 523 | 336 |
| 5. தேயிலையிலுள்ள நீரின் பங்கினை தீர்மானித்தல் | 524 | 340 |
| 6. தேயிலையிலுள்ள நீரில் கரையும் சாம்பல் அளவில் ஆவியாகுவதனைத் தீர்மானித்தல் | 536 | 374 |
| 7. தேயிலையிலுள்ள கழிவுநார் அளவைத் தீர்மானித்தல் | 539 | 401 |
| 8. தேயிலையிலுள்ள பீ.எச். பெறுமானத்தைத் தீமானித்தல் | - | - |
| 9. தேயிலையிலுள்ள சயனேட் தொடர்பான தரப்பகுப்பாய்வு | - | - |
| 10. தேயிலையிலுள்ள ஆயனிக் தொடர்பான பகுப்பாய்வு | - | - |
| 11. அடிப்படைக் கதிர்வீசசினைத் தீர்மானிக்கும் பரிசோதனை | 98 | 61 |
| 12. ஏனைய பரிசோதனைகள் (நிறம், சீனி, ஜெல், கோதை, சுவையூட்டல் போன்றவற்றைச் சேர்ப்பது தொடர்பான இரசாயன ஆய்வு, பைக்காபனேட்டு, ஏனைய சேர்வைகள்) | 200 | 46 |
| 13. தரத்தை இனங்கானும் பரிசோதனை/ பகுப்பாய்வு | - | 49 |
| 14. தேயிலையில் அடங்கும் பொரஸ்/ இரும்புச் சக்தி அளவினைத் தீர்மானித்தல் | - | 16 |
| நுண்ணுயிரியல் விஞ்ஞானப் பகுப்பாய்வுப் பிரிவு | | |
| 01. முழமையான பதார்த்த அளவினைத் தீர்மானித்தல் | 322 | 472 |
| 02. ஈஸ்ட் மற்றும் திரவ அளவினைத் தீரமானித்தல் | 346 | 477 |
| 03. இறந்த அல்லது கிருமி மற்றும் ஏனைய வகையான வெளித்தாக்கங்களுக்கு உட்பட்டமை தொடர்பிலான பரிசோதனைகள் | 05 | 49 |
| 04. தேயிலையிலுள்ள GMO ஐத் தீர்மானித்தல் | 178 | 587 |
| 05. பிக்கல் கொலிபோம் மற்றும் எஸ்கரிகியா கோலை பருமனை இனங்காணல் மற்றும் கணிப்பீடு செய்தல். (E.coli) | 325 | 472 |
| 06. மொத்த கொலிபோம் அளவினை இனங்காணல் மற்றும் கணிப்பீடு செய்தல் | 322 | 482 |
| எஞ்சும் கிருமிநாசினி பகுப்பாய்வுப் பிரிவு | | |
| 01. எதியோன் | 644 | 610 |
| 02. மலத்தியோன் | 644 | 610 |
| 03. சைபர்மெத்ரின் | 644 | 610 |
| 04. அல்பா என்டோசல்பான் | 85 | - |
| 05. பீட்டா என்டோசல்பான் | 85 | 352 |
| 06. பிபெந்திரின் | 85 | - |
| 07. 2,4 - D | - | - |
| 08. MCPA | - | - |
| 09. புருமோபுரபைலேட் | 559 | 610 |
| 10. ரெட்ராடிபோன் | 559 | 610 |
| 11. என்டோ சல்பன் சல்பேட் | - | 352 |
| மொத்தம் | **8776** | **8949** |

### 3.5.1. பரிசோதனைச் சான்றிதழ்கள்

2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தச் சான்றிதழின் எண்ணிக்கை 1512 ஆகம்.

**வழங்கப்பட்ட சான்றிதழின் வகைகள் :**

1. தேயிலையிலுள்ள ஈரலிப்பு தொடர்பான பரிசோதனை அறிக்கை
2. ISO 3720 குறைந்தபட்ச தரம் கொண்ட தேயிலை வகைகளின் தரத்தினை உறுதிப்படுத்தல்.
3. இரசாயனப் பொருள் தொடர்பிலான அளவீடுகள், (இரசாயன கலப்புக்களை மேற்கொள்ளல்) இற்காக தேயிலை உறுதிப்படுத்தல்.
4. தேயிலையில் காணப்படும் சிலிசியஸ் (சிலிக்கன்) பங்கு, தேயிலையிலுள்ள துகல்களின் பகுப்பாய்வு மற்றும் தேயிலை உலையில் வடித்தெடுப்பது தொடர்பான பகுப்பாய்வுகள் குறித்து சான்றிதழ்கள்.
5. தேயிலை வகைகளின் மேலதிகப் பொருட்கள்/ இறந்த/ கிருமித் தாக்கம், தேவையற்ற பொருட்கள் மற்றும் கழிவுப் பொருட்களுடன் தொடர்புபட்ட நுண்ணுயிரியல் ஆய்வுப் பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பிலான சான்றிதழ்கள்.
6. பக்றீரியா மற்றும் தேயிலையினைத் தாக்கக் கூடிய நோய்,ஈகோலை, கொலிபோம் மற்றும் சல்மெனல்லா ஆகிய நுண்ணுயிரியல் பதார்த்தங்கள் விசேடமாகத் தேயிலையில் உள்ளடங்கியுள்ளதாக என்பது குறித்து உறுதிப்படுத்தல்.
7. மரபு மாற்றங்கள் தொடர்பான விசேட (GMO) தேயிலையில் அடங்குவதனை உறுதிப்படுத்தல்.
8. தேயிலையிலுள்ள பல் எச்சம் தொடர்பான பீடைநாசினியை சான்றுப்படுத்தல் (எதியோன், மலதியன், சைபமெத்ரின், அல்பா, எண்டோசல்பான், பீடா என்டோசல்பான், பைபண்திரின், 2, 4, டீ. எம்.சீ.பி.ஏ)

### 3.5.2. பகுப்பாய்வு இரசாயன கூடத்தின் பரிசோதனைசேவைகள் ஊடாக வருமானத்தைச் சேகரித்தல்.

சேவை பெறுநர்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்குஅமைய மேற்கொள்ளப்படும் பரிசோதனை சேவைகளுக்காக பகுப்பாய்வுஇரசாயனகூட கட்டணம் 2010.08.06 ஆம் திகதிய இலக்கம். OR/1/87தேயிலை சபையின் சுற்றறிக்கைக்கு அமைய அறிவிடப்படுகின்றது.இரசாயனகூடத்தின் மொத்த வருமானத்திற்கு ஏற்றுமதியாளர்களிடம்இருந்து நேரடியாக பெறப்பட்ட பரிசோதனைக் கட்டணம் (71.27%) மற்றும்பகுப்பாய்வு இரசாயன கூடத்தினால்உறுதிப்படுத்தப்பட்டவாறானதரத்தை விடக் குறைந்த தேயிலை வகைகளில் அடங்கும் தேயிலைஆணையாளர் பிரிவு மற்றும் தேயிலை ஏற்றமதிப் பிரிவினால் உழைத்தநிதி (அதாவது 28.73%) ஐ சேர்ப்பதன் மூலம் பெறப்படுகிறது.

அட்டவணை 3.13: மொத்த வருமானத்தின் பங்கு : உள்ளக செயற்பாடுகளுக்கு இணைவாக செளிச் சான்றிதழ்

| | 2014 (Rs.) | % | 2015 (Rs.) | % |
|---|---|---|---|---|
| உள்ளக செயற்பாட்டுச் சேவைகள் **(IMS)** | 3,579,700 | 25.04 | 4,324,400 | 29.28 |
| வெளியக உறுதிப்படுத்தல் சேவைகள்**(ECS)** | 10,712,600 | 74.96 | 10,445,900 | 70.72 |
| மொத்த வருமானம் | **14,292,300** | | 14,770,300 | |

இரசாயனகூட பகுப்பாய்வு சேவையில் இனங்காணல்களை அடிப்படையாகக் கொண்டு,பல்வேறுபட்ட இரசாயனப் பொருட்கள் தொடர்பிலான தரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் தேயிலை தொகைகளுக்கு எதிராக தேயிலை ஆணையாளர்மற்றும் பிரதி ஆணையாளர் (ஏற்றுமதி) இனால் சட்ட ரீதியான நடவடிக்கைகள்எடுக்கப்பட்டன. இதற்கமைய 435 தொகைத் தேயிலை உரிய தரத்தைவிடக்குறைவானது என கருத்திற் கொள்ளப்பட்டு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டஆண்டான 2015ஆம் ஆண்டில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**3.5.3 பகுப்பாய்வு இரசாயன கூடத்தின் அவ்வவப்பிரிவுகளின் செயற்சாதனைகள்**

**3.5.3.1. தரப் பரிசோதனை மற்றும் மாதிரிகள் பிரிவு :**

சர்வதேச தரச் சான்றிதழ்களுக்காக செயற்பாடுகளை மேற்கொள்ளும் எந்தவொரு பரிசோதனை இரசாயன கூடத்திற்கான ஆவன நிருவாக கோவைகளை முன்னெடுப்பதுகட்டாயமானதாகும். எனவே, தரப்பரிசோதனைப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாகISO 17025 தரங்களுக்கு அமைய இரசாயன கூடத்தின் உறுதிப்படுத்தல்களுக்காகசர்வதேச தரங்களுக்கு அமைய இரசாயன கூடத்தின் ஆவணக் கோவைகள்பேணப்பட்டுள்ளன. இதற்கமைய, மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டான2013 ஆம் ஆண்டில் இரசாயன, நுண்ணுயிரியல் விஞ்ஞானம் மற்றும் கிருமிநாசினிப்பகுப்பாய்வுப் பிரிவுகளில் உள்ளக ஆவன நிருவாகக் கோவைகள் தாபிக்கப்பட்டு,பேணப்பட்டன. மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக இப்பங்களிப்பின் மூலம்இரசாயனகூடத்தின் மாதிரி பகுதிகளைப் பெறல் மற்றும் வெளியிடும் பகுதிகளைஅறிக்கைப்படுத்தப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் பகுப்பாய்வு ஆய்வுகூடமானது, கல்வி ரீதியாக தகைமை பெற்ற புதிய தர முகாமைத்துவ அதிகாரி (QMO) ஒருவரை ஆட்சேர்த்து வேலைக்கமர்த்தியதன் மூலம் தரச் சோதனை மற்றும் மாதிரிப் பிரிவின் பிரதான அடைவாக இதனைக் கருதமுடியும். மனிதப் பாவனைக்கு உதவாத தேயிலையென இனங்காணப்பட்ட தேயிலையை களஞ்சியசாலைகளிலிருந்து ஏற்றுமதிக்கு முன்னர் அகற்றுவதற்கான தேவைப்பாடுகளுக்கு ஏற்ப இவை தொடர்பிலான விஞ்ஞான ரீதியான மாதிரிகளைப் பெற்று ஆய்வுகளில் ஈடுபடும் பணியை பணிப்பாளர் (பகுப்பாய்வு சேவைகள்) மற்றும் தர முகாமைத்துவ அதிகாரி ஆகியோர் மேற்கொண்டனர். 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் பணிப்புரையின் கீழ் விசேட தேவைகளாகக் கருதி நான்கு இடங்களில் மாதிரிகளைப் பெற்று ஆய்வுகளை பணிப்பாளர் (பகுப்பாய்வுகள் சேவை) மேற்கொண்டார்.

3.5.3.2. **இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவு**

இரசாயனப் பகுப்பாய்வுகள் பிரிவுக்கென தொழில்நுட்ப அறிவுபெற்ற பகுப்பாய்வாளர் ஒருவரை ஆட்சேர்த்ததன் மூலம் 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொண்ட சிறந்த அடைவாக இதனைக் கருத முடியும். பணிப்பாளர் (பகுப்பாய்வு சேவைகள்)மேற்பார்வையின்கீழ், பகுப்பாய்வுகள் (இரசாயனகூடம்) பிரிவானது தொழில்நுட்ப பணியாட்தொகுதிக் குழுவுடன் பணியாற்றி பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டது.

1. ஏலவிற்பனை மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னர் தரக் குறைவாக உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை தொடர்பாக இரசாயன மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
2. தாபிக்கப்பட்டுள்ள ISO3720 தரச் சான்றிதழ்களுக்கு இணைவாக இரசாயன மதிப்பீடுகளை மேற்கொள்ளல் (அதற்குரிய ஒப்பளவகா அமைவது) முழுமையான சாம்பல், நீரில் கரையும் சாம்பல்,ஆவியாதல், அமிலத்தில் கரையாத சாம்பல், நீரின் ஒரு பகுதி,ஈரலிப்பு மற்றும் கழிவுப் பொருள் நார்பகுதிகள்)
3. உழையின் பகுப்பாய்வு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேயிலை மற்றும் மா உள்ளடக்கங்கள் தொடர்பான மதிப்பீடுகள்.
4. தேயிலை வகைகளின் உள்ளடக்கம் (சிலிசியஸ்) பொருள் பகுதிகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

ஏனைய முக்கிய நிகழ்வுகளாக ஆய்வுகூடங்களுக்கு இடையிலான தேர்ச்சிச் சோதனை நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பங்குபற்றுதல் குறிப்பிடப்பட்டுள்ளது. இரசாயனப் பகுப்பாய்வுகள் பிரிவின் பணியாளர் தொகுதியினது தேர்ச்சியை மேம்படுத்துவதற்கு உதவிசெய்யும் முகமாக இந் நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பணிப்பாளர் (பகுப்பாய்வுகள் சேவை) மேற்பார்வையின் கீழ் பொறுப்பாக ஒரு பகுப்பாய்வாளரும் (இரசாயனம்), இரண்டு தொழில்நுட்ப உதவியாளர்கள் (ஒப்பந்த அடிப்படையில்) ஆய்வுகூட உதவியாளர் ஒருவர் ஆகியோர் இரசாயனப் பகுப்பாய்வுகள் பிரிவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

### 3.5.3.3. நுண்ணுயிர் பகுப்பாய்வுப் பிரிவு

மீளர்யவுக்குட்பட்ட 2015 ஆண்டுக் காலப்பகுதியில், கழிவு சார் நுண்கிருமிகளின் எண்ணிக்கையைக் கண்டறிந்து நுண்ணுயிர்களின் மொத்த எண்ணிக்கையை இனங்காண முடிந்தமையானது ஏனைய வளமையான சோதனைகளுடன் ஒப்பிடுகையில் ஓர் முக்கிய நிகழ்வாகும். இதன் பொழுது மொத்த பக்டீரியாக்களின் எண்ணிக்கை மற்றும் பூஞ்சனம் அகியன தொடர்பிலான கண்டறிதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பணிப்பாளர் (பகுப்பாய்வுகள் சேவைகள்) மேற்பார்வையின் கீழ் நுண்ணுயிர் பகுப்பாய்வுகள் பிரிவானது பகுப்பாய்வாளர் (நுண்ணுயிரியில்) ஒருவரைப் பொறுப்பாகவும் ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரையும் ஆய்வுகூட உதவியாளர் ஒருவரையும் கொண்டிருந்தது.

### 3.5.3.4. பூச்சுக்கொல்லி எச்சங்கள் பகுப்பாய்வுகள் பிரிவு

இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுக்கு இடையில் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், பணிபாளரின் மேற்பார்வையின் கீழ் (தேயிலை ஆராய்ச்சி நிலையம்) இருந்து விஜயம் செய்த இரண்டு தொழில்நுட்ப நிபுணர்களன் மேற்பார்வையின் கீழ் பூச்சுக்கொல்லி தொடர்பான நவீன நுட்பஙகளும் அறிவும் பரிமாறப்பட்டன.

இதன் பிரகாரம் ஐந்து பூச்சுக் கொல்லிகள் தொடர்பான இறக்குமதி பற்றிய சான்றிதழ் தேவைப்பாடுகளை உறுதிசெய்துகொள்ளும் முகமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவையாவன, அல்பா அன்டசல்பன், பீட்டா அன்டசல்பன், பைபென்திரின்,2,4-D, MCPA ஆகும். இத்தகைய சோதனைகளின் பொழுது தற்போது காணப்படுகின்ற முறையானது ஜேர்மன் முறைக்கு ஏற்ப தரமுயர்த்தப்பட்ட. 'QuEChERS' எனவழைக்கப்படும் புதிய எளிய ISO முறையை நடைமுறைப்படுத்துவதற்கான சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பூச்சுக்கொல்லி பகுப்பாய்வுப் பிரிவில் பொறுப்பாக ஒரு பகுப்பாய்வாளர் (இரசாயனம்/ பூச்சுக்கொல்லி), இரண்டு தொழில்நுட்ப உதவியாளர்கள் (ஒப்பந்த அடிப்படையில்), மற்றும் ஆய்வுகூட உதவியாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். 2012 டிசம்பரில் பகுப்பாய்வாளர் (இரசாயனம்/ பூச்சுக்கொல்லி) தனது பதவியை இராஜினாமம் செய்ததைத் தொடர்ந்து அப்பதவிக்குப் பதில் கடமையாற்றும் வகையில் தர முகாமைத்துவ அதிகாரி நியமிக்கப்பட்டார். இவர் உதவிப் பணிப்பாளர் (ஆய்வுகூடம்) மேற்பார்வையின் கீழ் பூச்சுக்கொல்லிகள் எச்சங்கள் பகுப்பாய்வுப் பிரிவில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்.

# 3.6. நிர்வாகப் பிரிவு

சகல விதமான மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்களை உருவாக்குதல், அதனை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பச் சேவைகளை நடைமுறைப்படுத்தல் அவற்றைப் பேணுதல், திட்டமிடல்களை ஒருங்கிணைத்தல் அதனை இலகுபடுத்தல், சபையின் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல், புள்ளிவிபரம் சார்ந்த தகவல்களை வெளியிடல், தேயிலைச் சபையின் நூலகத்தை முகாமைத்துவம் செய்து பேணுதல், கொள்வனவு சார்ந்த செயற்பாடுகள், சபையின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துச் சார்ந்த செயற்பாடுகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இலங்கைத் தேயிலைச் சபையின் நிர்வாகப் பிரிவு காணப்படுகிறது.

### 3.6.1. 2015 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இலங்கைத் தேயிலைச் சபையின் பணியாளர்கள் பற்றிய விபரம்

அட்டவணை 3.14: 2015 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இலங்கைத் தேயிலைச் சபையின் பணியாளர்கள் பற்றிய விபரம்

| தரம் | பணியாளர்களின் ஆண்பெண் | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட தரம் | 05 | 02 | 07 ( 2.5%) |
| மூன்றாம்நிலைத் தரம் | 43 | 27 | 70 (25%) |
| இரண்டாம் நிலைத் தரம் | 37 | 93 | 130(46.5%) |
| ஆரம்பநிலைத் தரம் | 68 | 05 | 73 (26%) |
| **மொத்தம்** | **153(54.6%)** | **127(45.4%)** | **280(100%)** |

### 3.6.2. 2015 நிதியாண்டுக் காலத்தில் இப்பிரிவின் செயலாற்றுகையும் முக்கிய அம்சங்களும் (2015 டிசம்பர் 31 இலுள்ளவாறு)

அட்டவணை 3.15 : 2014 நிதியாண்டின் போது இப்பிரிவின் செயலாற்றுகையும் முக்கிய அம்சங்களும்

| மனித வள முகாமைத்துவம்/ மனித வள அபிவிருத்தி | செயற்பாடுகள | அலகு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| மனித வள முகாமைத்துவம் - புரள்வு | பதவி இராஜினாமா | | 07 |
| | பதவி இராஜினாமா | பணியாட்தொகுதி | 09 |
| | பதவி வெற்றிடமாதல் | | - |
| | இரத்துச்செய்கை | | - |
| | முடிவுறுத்துகை | | - |
| ஒழுக்காற்று முகாமைத்துவம | ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளல் | எண்ணிக்கை | 16 |

### 3.6.3. மனித வள அபிவிருத்தி

அட்டவணை 3.16 : உள்நாட்டுப் பயிற்சியளிப்பு

| | No of Employees Trained | |
|---|---|---|
| | Local | Forigen |
| சிரேஷ்ட தரம் | 00 | 00 |
| மூன்றாம்நிலைத் தரம் | 15 | 10 |
| இரண்டாம் நிலைத் தரம் | 62 | 02 |
| ஆரம்பநிலைத் தரம் | 06 | 00 |
| **மொத்தம்** | **83** | **12** |

**3.6.4. இலங்கைத் தேயிலைச் சபையின் முகாமைத்துவ மட்டப பணியாட்தொகுதியினருக்கான உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 2015**

இலங்கைத் தேயிலைச் சபையின் கூட்டுறவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களைப் புரிந்துகொள்ளும் முகமாகவும் 2016 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் புரிதல்களை மேம்படுத்தும் முகமாகவும் இந்த உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இலக்குக் குழு: 75 முகாமைத்துவ மட்ட அதிகாரிகள் (சிரேஷ்ட முகாமையாளர்கள், மத்திய முகாமையாளர்கள், கனிஷ்ட முகாமையாளர்கள்)

நாட்கள் : 1 நாள்

திகதி : 2015 டிசம்பர் 11



**3.6.5. உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2015**

முகாமைத்துவ உதவியாளர்களுக்கான (தொழில்நுட்பம் சாராதவர்களுக்கான) உந்துதல் மற்றும் திறன் அபிவிருத்திப் பயிற்சி

பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை: 95 முகாமைத்துவ உதவி பணியாட்தொகுதி உறுப்பினர்கள் (தொழில்நுட்பம் சாராதவர்கள்)

திகதி: 2015 ஜுன் 29 -30 வரை

இடம் இலங்கைத் தேயிலைச் சபை கேட்போர் கூடம்

**3.6.6.** வெளிநாட்டுப் பயிற்சி

**3.6.7. தேயிலைச் சபை தினம் - 2015 குழு மனப்பாண்மையைக் கட்டியெழுப்பும் நிகழ்வு**

**பங்குபற்றுனர்கள் : இலங்கைத் தேயிலைச் சபையின் சகல பணியாளர்கள்**

**திகதி: இடம்: டம்பே கிராமம் - பிலியன்தல**



## 3.7. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு என்பது இலங்கை தேயிலை சபையில்அமைந்துள்ள சுயாதீன மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்ளும் பிரிவாகும். முகாமைத்துவத்தின் போது சகல மட்டங்களிலும்சேவைகள் தொடர்பிலான மீளாய்வுகளை மேற்கொள்வது இப்பிரிவாகும். இது கட்டுப்பாட்டு முறையாகும். உள்ளக கட்டுப்பாடு,நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத கட்டுப்பாடுகள் ஆகியவற்றை வினைத்திறன் பற்றி மதிப்பீடு செய்து அறிக்கையிடுகிறது. இதன் காரணமாக முகாதைத்துவத்தின் வளங்களை வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது

2015 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு இலங்கை தேயிலை சபையின் (SLTB) கணக்காய்வுக் குழு ஒப்புதல் அளித்ததுடன்,உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு மற்றும் வளங்களில் போதியளவு தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்ததுடன், அவற்றின் சுயாதீன தன்மை, நேர்ககம் மற்றும் செயலாற்றுகை பற்றியும் ஆராய்ந்தது. உள்ளக மற்றும் வெளிநிலைக் கணக்காய்வுஅறிக்கைகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன. மற்றும் அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு தொடர்பான கண்டறிதல்கள் அவற்றின் இடர் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டன.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள் மூன்று கணக்காய்வுக் கூட்டங்கள் இடம்பெற்றன. சரியான நடவடிக்கைகள் அல்லது பரிகாரச் செயற்பாடுகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் முகமாக கூட்ட அறிக்கையுடன் விதப்புரைகளை பணிப்பாளர் சபைக்கு வழங்கியது.

## 3.8. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

2015 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பப் பிரிவானது சில முக்கியகருத்திட்டங்களை பூரணப்படுத்தியதுடன், குறிப்பிட்ட ஆண்டின் பொழுது சகல அலுவலகங்களும் எதிர்கொள்கின்ற சவால்களைத் தீர்க்கும் முகமாக அவர்களுக்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குகின்ற வகையிலான முக்கிய வகிபாகத்தை மேற்கொண்டது. தேயிலைப் பரிசோதகர் மாதிரி முறையொன்றை கடந்த வருடம் ஆரம்பித்தமை ஒரு முக்கிய நிகழ்வாகும். இதன்போது தேயிலைப் பரிசோதகர்கள் தகவல்களை மிகவும் துல்லியமாக ரெப் ஒன்றின் மூலமாக பதிவுசெய்துகொள்ள முடியும். இதுவொரு வினைத்திறன் மிக்க முறையாகும். சகல பிராந்திய அலுவலகங்களும் இணையதளம் ஒன்றின் மூலம் இணைக்கப்பட்டதன் காரணமாக தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மானியத் திட்டம் (FMSS), தேயிலை மீள்நடுகை மானியத் திட்டம் (TRSS) ஆகியன தொடர்பான விண்ணப்பங்களை இணையத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் இலங்கைத் தேயிலைச் சபையின் வினைத்திறனை மேம்படுத்த முடியும். கடந்த வருடத்தின் பொழுது பூரணப்படுத்தப்பட்ட மற்றுமொரு பிரதான கருத்திட்டம் இதுவாகும்.

தேயிலை பறிக்கை தொடர்பான ஆரம்ப கட்ட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இப்பொழுது இலங்கைத் தேயிலைச் சபையானது சந்தை தொடர்பான அறிக்கைகளை விநியோகிக்கின்றது.

# நிதி நிலைமை பற்றிய கூற்று
2015 டிசம்பர் 31 இலுள்ளவாறு

| | குறிப்புகள் | 31.12.2015 இலுள்ளவாறு ரூ. | 31.12.2014 இலுள்ளவாறு ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | D | 696,486,417 | 694,587,526 |
| காணிக்கான முற்கொடுப்பனவு உரிமைகள் | E | 26,079,904 | 29,046,023 |
| கட்புலனாகாச் சொத்துக்கள் | F | 11,228,182 | 12,485,605 |
| | | 733,794,502 | 736,119,154 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருள் இருப்பு | G | 34,570,459 | 36,873,056 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைப்பனவு நிதி | H | 30,509,384 | 35,195,129 |
| வைப்பு மற்றும் முற்கொடுப்பனவுகள் | I | 120,928,205 | 108,543,296 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | J | 5,250,628,454 | 5,070,148,106 |
| கையிலுள்ள பணம் மற்றும் வங்கியிலுள்ள பணம் | K | 143,260,038 | 42,876,516 |
| RPC'Sஇற்கான கடன் | K.(1) | 492,096,500 | - |
| | | 6,071,993,040 | 5,293,636,102 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **6,805,787,542** | **6,029,755,256** |
| **சமவுரிமை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| பங்காளர் மூலதனம் | | 672,012,202 | 652,067,602 |
| தேக்கிவைக்கப்பட்ட உழைப்பு | | (272,557,746) | (350,567,922) |
| ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி | L | 5,512,850,782 | 4,904,992,818 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 481,933,543 | 481,933,543 |
| **மொத்தச் சமவுரிமை** | | 6,394,238,780 | 5,688,426,040 |
| நடைமுறையல்லாப் பொறுப்புகள் | | | |
| ஊழியர் நலன் கடப்பாடுகள் | M | 55,562,838 | 43,952,223 |
| | | 55,562,838 | 43,952,223 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | N | 355,985,924 | 297,376,993 |
| | | 355,985,924 | 297,376,993 |
| மொத்தச் சமவுரிமை மற்றும் பொறுப்புகள் | | **6,805,787,542** | **6,029,755,256** |

பக்க இலக்கம் 80 தொடக்கம் 87 வரை குறிப்பிடப்பட்டுள்ள கணக்குக் கொள்கைகள் மற்'றும் பக்கம் 88 முதல் 96 வரையான குறிப்புக்கள் இந் நிதிக் கூற்றின் எஞ்சிய விடயங்களை வழங்குகிறது

| உதவிப் பணிப்பாளர் நாயகம்(நிதி) | பணிப்பாளர் நாயகம் | தவிசாளர் | பணிப்பாளர் |
|---|---|---|---|

## வருமானம் மற்றும் செலவினம் பற்றிய கூற்று

2015 டிசம்பர் 31 முடிவடைந்த
ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 2015<br>ரூ. | 2014<br>ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | A | 7,256,493,650 | 350,766,495 |
| செலவினம் | | | |
| தேயிலைத் துறையின் அபிவிருத்திக்கான செலவினம | B | (6,817,116,865) | (35,850,400) |
| நிர்வாகச் செலவினம் | C | (357,855,534) | (290,068,975) |
| தொழிற்பாட்டு மிகை/ (பற்றாக்குறை) | | 81,521,251 | 24,847,120 |
| நிதிச் செலவீனம் | | (251,537) | (210,171) |
| நிதி வருமானம் | | 9,262,257 | 9,146,698 |
| குறித்த காலப் பகுதியில் மிகை / (பற்றாக்குறை) | | 90,531,971 | 33,783,647 |
| வட்டி வருமானம் மீதான வரி | | (4,274,997) | (2,561,075) |
| | | **86,256,974** | **31,222,572** |

பக்க இலக்கம்80தொடக்கம் 87 வரை குறிப்பிடப்பட்ட கணக்குக் கொள்கைகள் மற்றும்
பக்கம் 88 முதல் 96 வரையான குறிப்பு ஆகியன நிதிக் கூற்றுக்கான மேலதிக விடயங்களை வழங்குகிறது.

## ஏனைய திரண்ட வருமானத்திற்கான கூற்று

2015 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2015<br>Rs. | 2014<br>Rs. |
|---|---|---|
| குறித்த காலப் பகுதியில் மிகை / (பற்றாக்குறை) | 90,531,971 | 33,783,647 |
| ஏனைய திரண்ட வருமானங்கள் | (4,274,997) | (2,561,075) |
| குறித்த காலத்திற்கான மொத்த திரண்ட வருமானங்கள், நிகர வரி | **86,256,974** | **31,222,572** |

பக்க இலக்கம்80 தொடக்கம் 87 வரை குறிப்பிடப்பட்ட கணக்குக் கொள்கைகள் மற்றும்
பக்கம் 88 முதல் 96 வரையான குறிப்பு ஆகியன நிதிக் கூற்றுக்கான மேலதிக விடயங்களை வழங்குகிறது

# உரிமை மாற்றங்கள் பற்றிய கூற்று

2015 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பங்களிப்பு மூலதனம் ரூ. | ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி ரூ. | மீள் மதிப்பீடு ஒதுக்கம் ரூ. | திரண்ட இலாபம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 2014 ஜனவரி 01 இலுள்ளவாறு மீதி | 652,067,602 | 3,898,124,562 | 481,933,543 | (374,108,286) | 4,658,017,423 |
| ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி | - | 1,006,868,254 | - | - | 1,006,868,254 |
| பேணப்பட்ட உழைப்பு - | - | - | - | (10,243,284) | (10,243,284) |
| 2014 ஆம் ஆண்டுக்கான மிகை - | - | - | - | 33,783,647 | 33,783,647 |
| 2014 டிசம்பர் 31 இலுள்ளவாறு மீதி | 652,067,602 | 4,904,992,816 | 481,933,543 | (350,567,922) | 5,688,426,039 |
| 2015ஜனவரி 01 இலுள்ளவாறு மீத | 652,067,602 | 4,904,992,816 | 481,933,543 | (350,567,922) | 5,688,426,039 |
| ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி (குறிப்பு-L) | - | 607,857,966 | - | - | 607,857,966 |
| மூலதன விடயங்கத்திற்கான அரச அளிப்பு | 19,944,600 | - | - | - | 19,944,600 |
| பேணப்பட்ட உழைப்பு | - | - | - | (8,246,798) | (8,246,798) |
| 2015 ஆம் ஆண்டுக்கான மிகை | - | - | - | 86,256,974 | 86,256,974 |
| **2015 டிசம்பர் 31 இலுள்ளவாறு மீதி** | 672,012,202 | 5,512,850,782 | 481,933,543 | (272,557,746) | 6,394,238,780 |

பக்க இலக்கம் 80 தொடக்கம் 87 வரை குறிப்பிடப்பட்ட கணக்குக் கொள்கைகள் மற்றும்
பக்கம் 88 முதல் 96 வரையான குறிப்பு ஆகியன நிதிக் கூற்றுக்கான மேலதிக விடயங்களை வழங்குகிறது.

# காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

2015 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2015 | 2014 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்கள் | ரூ. | ரூ. |
| செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற தேறிய இலாபம் | **86,256,974** | **31,222,572** |
| சீர்செய்தல்கள் | | |
| சொத்துக்கள் ஆதனங்கள், உபகரணங்கள் தொடர்பான தேய்மானங்கள் | 25,880,398 | 26,294,267 |
| சொத்துக்கள், ஆதனங்கள், உபகரணங்கள் விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபம் அல்லது நட்டம் | (531,525) | 4,676,147 |
| குத்தகைக் காணிகள் பற்றிய இலதாக்கல் | 76,386 | 3,010,975 |
| கட்புலனாகா சொத்துக்கள் பற்றிய இலதாக்கல் | 879,169 | 837,591 |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 18,144,513 | 9,213,376 |
| கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் | (9,262,257) | (9,146,698) |
| | 35,186,684 | 34,885,658 |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம்** | **121,443,657** | **66,108,230** |
| இருப்பு பற்றிய குறைவு/ (அதிகரிப்பு) | 2,302,597 | 26,778,730 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப் பெறக்கூடியவைகள பற்றிய குறைவு/ (அதிகரிப்பு) | 4,685,745 | 14,768,853 |
| வைப்பு மற்றும் முன்கூட்டிய கொடுப்பனவு பற்றிய குறைவு/ (அதிகரிப்பு) | (12,384,909) | (82,142,435) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவைகள் பற்றிய குறைவு/ (அதிகரிப்பு) | 58,608,931 | 63,280,271 |
| RPC'S இற்கான கடன | (492,096,500) | - |
| | (438,884,136) | 22,685,419 |
| **செயற்பாடுகள் மூலம் ஈட்டப்பட்ட நிதி** | **(317,440,479)** | **88,793,649** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (6,533,899) | (8,344,727) |
| ஊக்குவிப்புச் செயற்பாடுகளுக்கான நிகர செலவு | (554,081,796) | (488,686,586) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கென பயன்படுத்தப்பட்ட நிதிப் பாய்ச்சல் | **(560,615,695)** | **(497,031,313)** |
| செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய பணப்பாய்ச்சல் | (878,056,174) | (408,237,664) |
| | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய பணப்பாய்ச்சல்** | | |
| PM வரி மூலம் கிடைக்கப்பெற்ற வட்டி | 40,245,473 | 341,220,396 |
| கிடைக்கப் பெற்ற நிதி வருமானம் | 9,262,257 | 9,146,698 |
| கட்புலனாகாச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் | (288,025) | (2,231,999) |
| குத்தகைச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் | - | (17,606,120) |
| சொத்து பொறித்தொகுதி உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல் | (33,467,103) | (50,415,944) |
| சொத்து மற்றும் வரி உள்ளடங்கலா முதலீடுகள் | (180,480,349) | (1,037,366,868) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய பணப்பாய்ச்சல்** | **(164,727,747)** | **(757,253,837)** |
| **நிதி ரீதியான செயற்பாடுகளில் பயன்படுத்திய பணப் பாயச்சல்** | | |
| சொத்து, பொறித்தொகுதி உபகரணங்கள் விற்பனைசெய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற பணம் | 1,528,555 | 181,835 |
| மூலதன கொள்வனவிற்காக அரசாங்க நன்கொடை | 19,944,600 | - |
| ஏற்றுமதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட விதிப்பனவு | 1,121,694,289 | 1,154,334,445 |
| நிதிச் செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்பட்ட தேறிய பணப் பாய்ச்சல் | **1,143,167,444** | **1,154,516,280** |
| பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவற்றிலிருந்தான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | 100,383,522 | (10,975,221) |
| வருட ஆரம்பத்தின் போதான பணம் அல்லது பணத்திற்குச் சமமானவை | 42,876,516 | 51,290,662 |
| வருட இறுதியின் போதான பணம் அல்லது பணத்திற்குச் சமமானவை | | |
| நிதிச் செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்பட்ட தேறிய பணப் பாய்ச்சல் | 143,260,038 | 42,876,516 |

பக்கம் 80 முதல் 87 வரை குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்கம் 88 முதல் 96 வரை குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகள் ஆகியன இந்த நிதிக்கூற்றுகளின் பிரிக்க முடியாத முக்கிய அங்கமாகும்.

**1.** நிலையியற்சபை தகவல்கள்

பொதுவான விடயங்கள்

1985 இலக்கம் 17,1990 இலக்கம் 44, 2003 இலக்கம் 29 மற்றும் 2006 இலக்கம் 44 கொண்டசட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1975 இலக்கம்14 கொண்ட இலங்கை தேயிலை சபை பிரமானக்குறிப்பிற்கமைய இலங்கை தேயிலை சபை 1966ஜனவரி 1ம் திகதி தாபிக்கப்பட்டதுடன் இதன் பிரதானஅலுவலகம் இல 574, காலி வீதி, கொழும்பு03. என்ற இடத்தில் அமைந்துள்ளது.

இலங்கைதெயிலை சபை டிசம்பர் 31 முடிவடைந்த 12 மாத கால எல்லைக்காக நிதி அறிக்கைகளைத்தயாரிப்பதுடன் இந் நிதி வெளிப்பாடுகள் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களின் அங்கீகாரத்தின் கீழ்மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதான செயற்பாடுகள்

இலங்கை தேயிலையை உலகெங்கிலும்ஊக்குவித்தலும் தேயிலை கைத்தொழில் அபிவிருத்திமற்றும் மேற்பார்வைகளை மேற்கொள்வது இலங்கைதேயிலை சபையின் நோக்கமாகும். தேயிலைகைத்தொழிலின் செயற்பாடுகளான உற்பத்தி, புதியபிரதேச தேயிலைச் செய்கை மற்றும் மீள் செய்கை,பழைய தேயிலை தோட்டங்களின புனருத்தாணம்தேயிலை கைத்தொழில் சாலைகளை தாபித்தல்மற்றும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதுஇலங்கை தேயிலை சபையின் பொறுப்பாகும்.மேலும் இலங்கை தேயிலை சபை தேயிலை ஏலவிற்பனையினை நடாத்துவதனை பரிசோதனைசெய்து விற்பனை மற்றும் ஏல விற்பனைக் கம்பனிமேற்பார்வை, களஞ்சியப்படுத்தல் மற்றும் தேயிலைகப்பலேற்றம் மேற்பார்வை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் தேயிலைத் தோட்டமுகாமைத்துவம், உற்பத்தி மற்றும் விற்பனையில்ஈடுபடும் சகல நிறுவனங்களையும் மேற்பார்வைசெய்யும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**2.** தயாரிப்பு அடிப்படை

**2.1** 2012 ஜனவரி 01 ஆம் திகதிய அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நிதிக்கால எல்லைக்காக இலங்கை கணக்கீட்டுத் தரத்திற்கு அமைய நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் அடிப்படை

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால்வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டுக்கொள்கைகள், இலங்கை கணக்கீட்டுத் தரங்கள்கொண்ட இலங்கை கணக்கீட்டுத் தரத்திற்கு அமைவாகநிதி வெளிப்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2011 டிசம்பர் 31 வரை செல்லபடியாகும்இலங்கை கணக்கீட்டுத் தரத்திற்கு அமைவாகஇலங்கை தேயிலை சபையினால் இதன் நிதிவெளிப்பாடுகள் 2012டிசம்பர் 31 வரையான சகலகால எல்லைக்காகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.2012 ஜனவரி 1 அல்லது அதற்கு பின்னர்அமுலில் உள்ள இலங்கை கணக்கீட்டுத் தரத்திற்கமைய2012 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்காகதயாரிக்கப்பட்ட நிதி வெளிப்பாடுகள் இலங்கைதேயிலை சபையினால் அதன் தரத்திற்கமைய முதல்டவையில் தயாரிக்கப்பட்டகணக்கு வெளிப்பாடாகும்.

**2.2** கணக்கீடுகளுக்கான அடிப்படை

நிதிவெளிப்பாடுகள் வரலாற்று செலவினத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
நிதிவெளிப்பாடுகள் இலங்கை நாணய அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3.** விசேட கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பான சுருக்கம்

**3.1** விசேட கணக்குக் கொள்கைகள்

இவ் அறிக்கைகளைத் தயாரிக்கும் போது இலங்கைதேயிலை சபை கீழ் குறிப்பிடப்பட்ட விசேடகணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தப்படுகின்றது.

### *3.2* ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

செலவினம், தேறிய திரண்ட குறைவு மற்றும் திரண்ட இழப்பீடுஉட்பட நட்டங்கள் இருப்பின் அதற்கமைய சொத்துக்கள்ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. இச்செலவினத்தில் உள்ளடங்குவது சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பதிலீட்டுக்கான செலவினம் மற்றும்இனங்காணும் ஒப்பழவுகள் திருப்தி அடைவதாயின் நீண்டகால நிர்மான செயற்றிட்டத்திற்கான கடனுக்கமைவான செலவினம் போன்றனவாகும். சொத்துக்கள் ஆதனங்கள்மற்றும் உபகரணங்களை ஏதேனும் குறிப்பிடத்தக்களவுபாகங்களை கொண்ட உரிய நேரத்திற்கு மீள் கட்டமைக்கஅவசியப்படும் பட்சத்தில் இலங்கை தேயிலை சபையினால்பழைய, மாற்றப்பட்ட பாகங்களினை கருத்தில் கொள்வதில்லைஎன்பதுடன் புதிய பாகங்கள் அதன் ஆயுட் காலமும் தேய்மானத்துடனும்இனங்காணப்படுகின்றது. அத்துடன் பிரதானபரிசோதனைகள் மேற்கொள்ளும் வேளையில் இனங்காணும்ஒப்பளவுகள் திருப்தி அடைவது அதன் செலவினங்கள்ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் செலவினம் பதிலீடாகஇனங்காணப்படுகின்றது. ஏனைய இணங்காணப்பட்ட சகலபராமரிப்பு மற்றும் புணரமைப்பிற்கான செலவினம் வருமானவெளிப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.3 தேய்மானம்

தேய்மானம் அளவு ரீதியல் கணிப்பீடு செய்யப்படுவதுடன்வெளிப்படுத்தப்படும் ஆண்டுக்குள் எதுவித தேய்மானமும் அறவிடப்படமாட்டாது. சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும்உபகரணங்களின் மதிப்பீடுகளின் ஆய்வுக் காலம் கீழேகுறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| உரித்தான கட்டிடம் | 50 வருடங்கள் |
| அலுவலக உபகரணம் | 02 - 20 வருடங்கள் |
| தளபாடம் மற்றும் பொருத்துதல்கள் | 01 -20 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 10 வருடங்கள் |
| கணினி உதிரிப்பாகங்கள் | 05 வருடங்கள் |
| நூலகப் புத்தகங்கள் | 05 வருடங்கள் |
| இரசாயனகூட உபகரணங்கள் | 03 - 10 வருடங்கள் |

### 3.4 அமுலிலுள்ள மூலதனப் பணிகள்

ஐந்தொகை தினத்திற்கு மூலதன வழங்கல்கள் மேற்கொள்ளப்படாத ஆண்டுக்குள் உருவாக்கப்பட்ட மூலதனசெலவினம் முடிவுறா மூலதன பணிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.அத்துடன் ஆண்டுக்குள் மூலதன மயமாக்கப்பட்ட மற்றும்பயன்படுத்தப்பட்ட மூலதன சொத்துக்கள் சொத்து, ஆதனம்மற்றும் உபகரணத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

### 3.5 குத்தகைக் காணி

ஆரம்பத் திகதி முதல் குத்தகை தொடர்பான ஏற்பாடுகள் அங்கு காணப்படுகின்ற பொருட்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானித்தல்,குறிப்பிட்ட சொத்தினைப் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இவ்வித ஏற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதைத் தீர்மானித்தல் அல்லது சொத்துக்கள் அல்லது அதனோடு தொடர்புடைய ஏற்பாடுகள், அச்சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளனவா, இவ்வித ஏற்பாடுகளின் பொழுது தெட்டத்தெளிவாக அவ்வித உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதை அறிந்து கொள்ளுதல், மதிப்பிடப்பட்ட குத்தகைச் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| குத்தகைக் காணி | 50 வருடங்கள் |

### 3.6 கட்புலனாகா சொத்துக்கள்

தனித்தனியாக பொறுப்பேற்கப்பட்ட கற்புலனாகாதசொத்துக்களை அடிப்படை செலவினத்திற்கமையகணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அடிப்படைஇனங்காணலை தொடர்ந்து திரண்ட தேய்மானம் மற்றும்இழப்பீடுகள் மூலம்ஏற்பட்ட நட்டங்களை குறைத்துசெலிவமாக கற்புலனாகாத சொத்துக்கள் பேணப்படுவதுஏதேனும் மூலதன செலவினங்களுக்கு வெளியேஉள்ளக கற்புலனாகாத சொத்துக்களுக்காக மூலதனமயமாக்கப்படாத செலவினங்கள் மூலம் உருவானஆண்டுக்காக வருமான வெளிப்பாடுகளின் செலவினங்கள்குறிப்பிடப்பட்டிருந்தன கற்புலனாகாதசொத்துக்களின்மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த ஆயுட்காலம் கீழ்குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| | |
|---|---|
| கணினி மென்பொருள் | 15 வரடங்கள் |

### 3.7 நிதி அல்லாத சொத்துக்களின் இழப்பீடுகள்

சொத்துக்களுக்கு இழப்பீடுகள் மேற்கொள்ள முடியும் ஏதேனும்குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக சகலஅறிக்கை தினத்திலும் இலங்கை தேயிலை சபையினால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான ஏதேனும்விடயம் குறிப்பிடப்பட்டிருப்பின் அல்லது ஏதேனும்சொத்து தொடர்பில் வருடாந்த இழப்பீட்டினை பரிசீலனைசெய்வதற்கு அவசியமாயின் சொத்தில் அறவிடக்கூடியமூலதன அளவு யாது என்பது குறித்து இலங்கை தேயிலைசபை மதிப்பீடு செய்கின்றது. ஏனைய சொத்துக்கள் அல்லதுகூட்டு சொத்துக்கள் மூலம் கணிசமாக சுயாதீனமாக நிதிப்பிரவேசங்கள் உருவாக்கப்படாத சொத்தாக இருக்காதுஇருப்பின் சொத்து அறவிடக்கூடிய அளவு, சொத்து அல்லதுநிதி உருவாக்கல் பிரிவு நியாயமான பெறுமதியினை குறைத்துவிற்பனை செலவினத்தில் மற்றும் இதன் பயன்பாட்டு பெறுமதியில்அதி கூடுதலான பெறுமதி அறவிடப்படுவதுடன் அது சொத்துக்களுக்காக நிர்னயிக்கப்படுகின்றது. சொத்து அல்லதுநிதி உருவாக்கல் பிரிவின் பெறுமதி அறவிடக்கூடிய அளவினைதாண்டும் வேளையில் அச்சொத்து இழந்த சொத்தாககருதப்படுவதுடன் இதில் அறிவிடக்கூடிய அளவை விடபெறுமதி குறிப்பிடப்படாதிருக்கும் பயன்படுத்தப்பட்ட காலத்தைமதிப்பீடு செய்யும் போது சொத்துக்குரியதான கவனம் மற்றும்நிதியின் கால பெறுமதி அமுலில் உள்ள சந்தைப் பெறுமதியினைசித்தரித்து காட்டும் குத்தகை மட்டத்திற்கமையபயன்படுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால நிதிப்பாய்ச்சல் அதன் தற்போது பெறுமதிக்கு கழிவாக காண்பிக்கப்படுகின்றது.சாதாரண பெறுமதியினை குறைத்த விற்பனை செலவினத்தைநிர்னயிக்கும் போது சமீபகால சந்தைக் கொடுக்கல் வாங்கல்இருப்பின் அவை கருத்தில் கொள்ளப்படுவதுடன் அவ்வாறானகொடுக்கல் வாங்கல்களை இனங்காண முடியாத பட்சத்தில்பொருத்தமான முறைகள் பயன்படுத்தப்படும்.

### 3.8 வரி விதித்தல்

முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்ட வட்டிக்கு இலங்கைத் தேயிலைச் சபை வரி செலுத்துதல் வேண்டும். வரி கொடுப்பனவுகளுக்கான ஏற்பாடுகளின் பிரகாரம் 28% செலுத்துதல் வேண்டும்.

மீளாய்வுக்குட்பட்ட நிதியாண்டுக் காலத்தினுள் முதலீட்டு வருமானங்கள் மீதான வருமான வரியாக ரூ. 149,012,768 ஐ வருமான வரியாக இலங்கை தேயிலைச் சபை வழங்கியது.

### 3.9 பொருள் இருப்பு

பொருள் இருப்பு செலவினம் மற்றும் முதல் "உள்வரல் - முதல் வெளியிடல்"என்ற அடிப்படைக்கமையகணிப்பீடு செய்யப்படும் காலம் கடந்த மற்றும்மந்த கதியில் உள்ள பொருட்களுக்காக உரியகொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து,தொடர்ந்தும் கீழ் மட்டத்தில் காணப்படும் தேறிய திரண்டபெறுமதி இனங்காணப்படுகின்றது.

### 3.10 காசும் காசுக்குச் சமமானவையும்

நிதி மற்றும் நிதிக்கு சமமான பொருட்கள் கையிலுள்ளநிதி மற்றும் வங்கியிலுள்ள நிதி, திறைசேரி பற்றுச்சீட்டுக்கள், முதலீடு, அடிப்படை கலாவதியாகும்மூன்று மாதங்களுக்கு அல்லது அதனை விட குறைந்தகாலத்திற்குள் இடம்பெறும் ஏனைய குறுகிய கால உயரியபயன்மிக்க பயன்பாடுகளைக் கொண்டு அமைந்துள்ளது.

## 4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 4.1 ஓய்வூதிய பிரதிலாபக் கொடுப்பனவுகள்

#### 4.1.1 உரிய பிரதிலாபத் திட்டம் - ஓய்வூதியப் பணிக்கொடை

1983 இலக்கம் 12 கொண்ட பணிக்கொடை கொடுப்பணவுசட்டத்திற்கமைய பணிக்கொடை கொடுப்பணவுக்காகஇலங்கை தேயிலை சபை கட்டுப்பட்டுள்ளது. ஊழியர்ஒருவருக்கான பணிக்கொடை கொடுப்பணவு தொடர்பிலானபொறுப்புக்கள் உருவாகுவதாயின் அவ் ஊழியர் இலங்கைதேயிலை சபையில் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த வேளையில் மாத்திரமாகும்.அப் பொறுப்புக்களைநிறைவேற்றும் வகையில் அதற்கான ஒதுக்கீடுகள்ஐந்தொகையில் முன்கொண்டு செல்லப்படும் ஆண்டுஆரம்பத்தில் முன் கொண்டு செல்லப்பட்ட ஒதுக்கீடுமற்றும் அவ் ஆண்டு இறுதியில் முன்கொண்டு சென்றஒதுக்கீடுகளுக்கிடையில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பில்உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணிப்பீடுகளின போது பயன்படுத்தப்படும் அடிப்படையோசனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த சராசரி சம்பள அதிகரிப்பு வீதம் - 1.01% - 1.03%

கழிவு வீதம்/ வட்டி வீதம் - 12.16%

பணியாட்தொகுதியினர் புரள்வுக் காரணி - 6%

இப்பொறுப்புக்களுக்கு வெளியே நிதி விநியோகம்மேற்கொள்ளப்படுவதில்லை. இவ் விடய ஐந்தொகையில்நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் குறிப்பிடப்படுகின்றது.

### 4.1.2 உரிய பங்காளர் திட்டம் - ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியம்

இலங்கை தேயிலை சபையினால் ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் பொறுப்பு நிதிக்கு பங்காளர்கொடுப்பனவுகள் மேற்கொளப்படுவதுடன் உரியகோவைகளுக்கமைய உரிய பங்காளர் நிதியினால்தழுவல்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.ஊழியர்கள் தழுவப்படும் திட்டங்களுக்கான பங்காளர்நிதி தொடர்பிலான பொறுப்புக்கள் வருமானவெளிப்பாட்டில் செலவினமாக இனங்காணப்படுகின்றது.

**ஊழியர் சேமலாப நிதியம்**

இலங்கைத் தேயிலை சபை மற்றும் ஊழியர்களினால்ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மொத்ததேறிய சம்பளத்தில் தொடராக 15%மற்றும்10%பங்காளர் நிதி செலுத்தப்படுகின்றது.

**ஊழியர் பொறுப்பு நிதியம்**

இலங்கை தேயிலை சபையினால் ஊழியர் பொறுப்புநிதியத்திற்காக சம்பளத்திலிருந்து 3 மூ நிதி பங்காளர்நிதியாக செலுத்தப்படுகின்றது.

## 5. வருமானக் கூற்று

வருமான வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதற்காகசெலவின முறைகள் செயற்பாட்டு உள்ளீடுகள்செயற்சாதனையின் அடிப்படை அம்சங்கள்நியாயமான முறையில் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவாறு பயன்படுத்தப்படுகின்றது.

**அரசாங்க நன்கொடைகள்**

மூலதனச் செலவுத் தலைப்பின் கீழ் அரசாங்க நன்கொடைகளாக வழங்கப்பட்ட மொத்தப் பணமும் அபிவிருத்தி மானியக் கொடுப்பனவுகளுக்காக பயன்படுத்தப்பட்டது. மீண்டுவரும் செலவினத் தலைப்பின் கீழான அரசாங்க நன்கொடைகள் ஊழியர்களுக்கான சம்பளத்தைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

### 5.1 வருமானத்தை இனங்காணல்

வருமானம் இலங்கை தேயிலை சபைக்கு பொருளாதாரபயன்களை பெற்றுத் தரக்கூடிய இயலுமைமற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்வேளையில் வருமானம் நம்பகத் தன்மையுடன்கணிப்பீடு செய்யக்கூடிய இயலுமைகாணப்படும் அளவிற்கு இனங்காணப்படுகின்றது.உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட உரியகொடுப்பனவு உத்தரவுகளை கருத்தில் கொண்டுகிடைக்கப் பெற்ற கொடுப்பனவுகள் மற்றும்கிடைக்கப் பெற்றவைகள் நியாயமான பெறுமதிக்குவருமான கணிப்பீடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

வருமானத்தை இனங்காண்பதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட இனங்காணல் ஒப்பளவுகளும்பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**பொருள் விற்பனை**

பொதுவாக பொருட்களை கையளிக்கும் சந்தர்ப்பத்தில்கொள்வனவாளருக்கு அப்பொருட்களின் உரிமையில்விசேட கவனம் மற்றும் பிரதிலாபங்கள்பொறுப்பளிக்கப்பட்டுள்ள வேளையில் பொருள் விற்பனைமூலம் பெற்ற வருமானம் இனங்காணப்படுகின்றது.

**சேவை வழங்குநர்**

சேவை வழங்குனர் அல்லது அது சார்ந்த செயற்பாடுகள்மேற் கொள்ளப்பட்ட கணக்கு காலத்திற்குள் சேவைவழங்கல்கள் பெறப்பட்ட வருமானத்தை இனங்காணுதல்.

**ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம் திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**வட்டி வருமானம்**

தேய்மானம் செலவினத்தின் அடிப்படையில்கணிப்பீடு செய்யப்பட்ட சகல நிதி உபகரணங்கள்விற்பனைகளுக்காக வகைப்படுத்தப்பட்ட வட்டியுடன்கூடிய வட்டி வருமானம் அல்லது செலவினம் பயன் மிக்கவட்டி விகிதாசாரத்தை பயன்படுத்தி குறிப்பிடப்படுகின்றது.இவ்விகிதாசாரம் உரிய வாறு நிதிஉபகரணத்தின் எதிர்பார்த்த ஆயுட்காலம் அல்லது அதன் விட குறைந்தகால எல்லையை குறைந்த மதிப்பீடு செய்யப்பட்டஎதிர் கொடுப்பனவு அல்லது கிடைப்பனவு நிதிசொத்து அல்லது பொறுப்புக்கள் தேறிய பெறுமதிக்குஉண்மையாகவே கழிவு மேற் கொள்ளப்படும் விகிதாசாரமாகும்.வட்டி வருமான வெளிப்பாடுகள் நிதிவருமானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 5.2 செலவீனம்

வர்த்தகத்தை முன்னெடுக்கும் போது மேற்கொள்ளப்பட்டசகல செலவினங்களும் ஆண்டில் பெற்ற வருமானமாககணிப்பீடு செய்யப் படுவதுடன் புணரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல்கள் இதன் செலவினமாக குறிப்பிடப்பட்டஆண்டில் இலாப நட்டங்களுக்கு அறவிடப்படுகின்றது.

## 6. நிதி உபகரணம் - அடிப்படை அறிமுகம் மற்றும் பிற்கால கணிப்பீடு

## 6.1 நிதிச் சொத்துக்கள

### 6.1.1 அடிப்படை அறிமுகம் மற்றும் பிற்கால கணிப்பீடு

இலங்கை கணக்கீட்டுத் தரம் 39 ற்கு அமைய நிதிச்சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டங்கள் மூலம் எழக்கூடியநியாயமான பெறுமதிக்கமைவான நிதி சொத்தாகும். கடன்மற்றும் கிடைப்பனவு, காலாவதியாகும் முதலீட்டுக்காக தடுத்துவைத்தல் மற்றும் நிதி சொத்து விற்பனைக்கு வைத்திருத்தல்போன்ற பொருத்தமான வாறு வகைப்படுத்தப் படுவதுடன் அடிப்படை அறிமுகத்தில் போது இதன் நிதி சொத்துக்களின்வகை தீர்மானிக்கப்படுகின்றன.

சகல நிதி சொத்துக்களினதும் முதலில் நியாயமான பெறுமதியுடன்சேகரிப்பதாக இனங்காணப்படுவதுடன் சொத்துக்கள்இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் எழக்கூடிய நியாயமானபெறுமதி அல்லாத சந்தர்ப்பங்களில் நேரடியாக பங்களிப்புசெய்யக் கூடிய கொடுக்கல் வாங்கல்கள் செலவினத்திற்கமையஇனங்காணப்படுகின்றது.

இலங்கை தேயிலை சபையின் நிதி சொத்துக்களின் நிதி, குறுகியகால முதலீடு, வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள்,பணியாளர் சபை கடன் மற்றும் ஏனைய கிடைப்பனவுகளில்அடங்குகின்றன.

### 6.1.2 பிற்காலக் கணிப்பீடு

நிதிச் சொத்துக்களில் பிற்கால கணிப்பீடுகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அவற்றின் வகைப்படுத்தலுக்கமைய காணப்படுகின்றன.

#### 6.1.2.1 இலாபம் அல்லது நட்டங்கள் மூலம் எழும் நியாயமான பெறுமதிக்கு அமைவான நிதி சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டம் மூலம் எழும் நியாயமானபெறுமதிக்கு அமைவான நிதி சொதத்துக்கள் எனப்படுவதுவர்த்தக சொத்துக்களுக்காக பேணப்படும் நிதி சொத்துஅல்லது அடிப்படை அறிமுகப் படுத்தலில் இலாபம் அல்லதுநட்டத்தின் மூலம் எழும் நியாயமான பெறுமதிக்கமைவாகநிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்ட நிதி சொத்தில்உள்ளடங்குகின்றது. எதிர்வரும் காலங்களில் விற்பனை அல்லதுமீள கொள்வனவு பொறுப்பேற்கப்படுவது சொத்தாக இருப்பின்அவை வர்த்தக செயற்பாடுகளுக்காக தோக்கி வைக்க கூடியநிதி சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. 2012 மற்றும் 2011டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை தேயிலைசபையினால் எதுவித காலங் கடந்த முதலீடும் தோக்கிவைக்கப்பட்டிருக்கவில்லை.

**6.1.2.2 கடன் மற்றும் கிடைப்பனவுகள்**

கடன் மற்றும் கிடைப்பனவு செயற்பாட்டுச் சந்தையில்வெளிப்படுத்தப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக் கூடிய கொடுப்பனவுகளை கொண்ட விரிவானது அல்லாத நிதிசொத்தாகும்.

இலங்கைத் தேயிலைச் சபையானது 2015 நவம்பர் 09 ஆம் திகதிய 15/1693/726/010 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப 10 தவணைகளில் அறவிடும் படியாக ரூ. 492,096,500 ஆன தொகையினை பிராந்திய தோட்டக் கம்பனிகளுக்கு கடனாக வழங்கியுள்ளது.

**6.1.2.3 காலாவதியான முதலீட்டுக்காக தேக்கி வைக்கப்பட்டவைகள்**

நிலையான அல்லது தீர்மானிக்கக் கூடியகொடுப்பனவுகளின் மற்றும் நிலையான காலாவதியானநிதிச் சொத்துக்கள், இலங்கை தேயிலை சபைக்குகாலாவதியாவதற்காக அவற்றை தோக்கி வைப்பதற்குநேர் மனப்பாங்கு மிக்க நோக்கம் மற்றும் இயலுமைகள்கொண்ட காலாவதியான முதலீடுகளுக்காகதேக்கி வைக்கப்பட்டதாக வகைப்படுத்தப்படுகின்றது.அடிப்படை கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர்காலாவதியாகும் முதலீட்டுக்காக தோக்கி வைக்கும்இழப்பீடுகளை குறைத்து பயன்மிக்க வட்டி விகிதாசாரமுறையை பயன்படுத்த தேய்மான செலவினத்திற்கமையகணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுவீகரிப்பின்அடிப்படையில் ஏதேனும் ஒரு கழிவு அல்லதுதவணை உட்பட பயன்மிக்க வட்டி விகிதாசார முறைகள்முதலீட்டுப் பெறுமதியான கட்டணம் அல்லதுசெலிவத்தை கருத்தில் கொண்டு தேய்மான செலவினம்கணிப்பீடு செய்யப்படுகின்றது. பயன்மிக்க வட்டிவிகிதாசாரம் தேய்மான நிதி வெளிப்பாட்டில் நிதிவருமானத்தில உள்ளடக்கப்படுகின்றது.

**6.1.2.4 விற்பனைக்காக உள்ள நிதி முதலீடுகள்**

விற்பனைக்காக வைக்க கூடிய நிதி முதலீடு என்பதுஉரிமை பங்கு மற்றும் கடனுக்கான பாதுகாப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. விற்பனைக்காகபெறககூடியவைகளாக வகைப்படுத்தப்பட்ட பங்குமூலதனத்திற்கு விற்பனைக்காக தோக்கி வைக்கப்பட்டவைகளாக அல்லது இலாபம் அல்லதுநட்டத்தின் ஊடாக எழும் நியாயமான பெறுமதியாகவகைப்படுத்தப் படாதவைகளும் அடங்குகின்றன.

இப்பிரிவின் கீழ் கடன் பாதுகாப்பு என்பது உரியதல்லாதகாலத்திற்காக தோக்கி வைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டவையாக இருந்த போதிலும் தேவைகளுக்குஅல்லது சந்தையின் நிலைமைகளின் மாற்றங்களுக்குவரவேற்பளிக்கும் வகையில் விற்பனை செய்யக் கூடியதானவகைகளில் அடங்குகின்றன.

**6.1.2.5 இனங்காண முடியாமை**

நிதிச் சொத்துக்கள் (உரியவாறு நிதி சொத்து பங்குகள்அல்லது சமமான நிதி சொத்துக் கூட்டப் பங்குகள்) கீழ்குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் இனங்காணப்படவில்லை.

i) சொத்து நிதிப் பாய்ச்சலில் பெறுவதற்குள் உரிமையின் கால எல்லையை தாண்டியிருத்தல்.

ii) இலங்கை தேயிலை சபை சொத்தில் நிதிப் பாய்ச்சலுக்கு பெறுவதற்குள்ள உரிமைகளை சுவிகரித்திருத்தல் அல்லது பெற்ற நிதிப் பாய்ச்சல் முழுமையாக குறிப்பிடத்தக்களவு தாமதமின்றி உடன்படிக்கையின் கீழ் 3ம் தரப்பினருக்கு செலுத்த வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் தொடர்பில் ஊகிக்கப்பட்டிருத்தல் (அ) இலங்கை தேயிலை சபை சொத்தின் சகல கவனங்கள் மற்றும் கிடைப்பனவுக் குறிப்பிடத்தக்களவு பொறுப்பேற்றிருத்தல் (அ) அல்லது (ஆ) இலங்கை தேயிலை சபையின் சொத்தின் சகல பாதிப்புக்கள் மற்றும் கிடைப்பனவுகளை கருத்தில் கொள்ளக் கூடியவாறு சுவிகரிக்கப்படாது உள்ள அல்லது தேக்கி வைக்கப்படாது இருந்த போதிலும் சொத்தின் நிர்வாகம் பொறுப்பேறகப்பட்டிருத்தல்.

### 6.1.2.6 நிதிச் சொத்துக்களின் இழப்பீடு

நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களுக்கான கூட்டுஇழப்பீடுகள் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஏதேனும்சாட்சிகள் இருக்கின்றதா என்பது குறித்து இலங்கை தேயிலைசபையினால் சகல அறிக்கைத் தினங்களிலும் கருத்தில்கொள்ளப்படும். நிதி சொத்து அல்லது நிதி சொத்து கூட்டுஇழப்பீடுகள் ஏற்பட்டிருப்பதாக கருத்தில் கொள்ளப்படுவதுஅவ் இழப்பீடு சொத்தின் அடிப்படை இனங்காணல்களுக்குபின்னர் இடம் பெற்ற நிகழ்வு அல்லது ஒரு சில சம்பவங்களின் பெறுபேறாக இடம் பெற்றிருப்பதாக சாட்சிகள் இருப்பின் மற்றும்அந்நட்டத்திற்கு நம்பகத் தன்மை கொண்டதாக மதிப்பீடுசெய்யக் கூடிய நிதிச் சொத்து அல்லது கூட்டு நிதி சொத்துமதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால நிதி பாய்ச்சலுக்கமைய அழுத்தங்கள் ஏற்பட்டிருப்பின் மாத்திரம் இழப்பீடுகள் தொடர்பில்சாட்சிகள் தொடர்பில் பாரிய நிதி நெருக்கடிகளை அனுபவித்துகொடுப்பனவுகளைத் தவற விட்டு வங்குரோத்து நிலைமைஅல்லது வேறு ஏதேனும் நிதி மீள் கட்டமைப்புகளுக்கபிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் உள்ள கடன்படுனர் மற்றும் நிலுவைமாற்றங்கள் அல்லது கொடுப்பனவிளை தவற விடல் மற்றும் அதுசார்ந்த பெருளாதார நிலைமைகள் போன்ற மதிப்பீடு செய்யப்பட்டஎதிர்கால நிதிப் பாய்ச்சலுக்கு அளவீடு செய்யக்கூடியவீழ்ச்சிகள் இருப்பதாக மேற்பார்வை செய்ய முடியும் எனபுள்ளி விபரங்கள் ஊடாக குறிப்புக்கள்உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 6.1.2.7 தேய்மானச் செலவினத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யும் நிதிச் சொத்துக்கள்

தேய்மானம் செலவினத்திற்கமைய கணிப்பீடு செய்யும் நிதிச்சொத்துக்களுக்காக இலங்கை தேயிலை சபை முதலில்தனிப்பட்ட பெறுமதிகள் கொண்ட நிதிச் சொத்துக்கள்தொடர்பில் இழப்பீடுகள் குறித்து அறிக்கை ரீதியிலானசாட்சிகள் தனித்தனியாக அல்லது அவ்வாறு தனித்தனியானமுக்கியத்துவம் அற்ற நிதி சொத்துக்கள் தொடர்பில் இக்கூற்றுசாட்சிகளாக இருக்கின்றதா என்பது தொடர்பில் மதிப்பீடுகள்மேற்கொள்ளப்படுகின்றன.

தனிப்பட ரீதியில் மதிப்பீடுசெய்யப்பட்ட நிதி சொத்துக்களுக்காக இழப்பீடுகள்தொடர்பான அறிக்கை ரீதியிலான சாட்சிகள் இல்லைஎன இலங்கை தேயிலை சபையினால் தீர்மானிக்கப்படும்பட்சத்தில் அவ்வாறு முக்கித்துவம் வாய்ந்தாகஇருந்த போதிலும் அவ்வாறு இன்றி இருந்தாலும்அது சமமான கடனைக் கொண்ட நிதிச் சொத்துகூட்டில் உள்ளடங்குவதுடன் இழப்பீடுகளுக்காகஅது கூட்டு அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

இழப்பீடுகள் தொடர்பில் இனங் காண்பதற்காக தனித்தனியாகமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களில் இழப்பீடுகள்ஏற்பட்ட நட்டம் அல்லது தொடர்ச்சியாக காணப்படுவதாகஇனங்காணப்படும் பட்சத்தில் அவை இழப்பீடுகள்தொடர்பான கூட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.

இழப்பீடுகள் ஏற்பட்டுள்ளதாக சாட்சிகள் இருப்பின்அந்நட்டத்தின் அளவு சொத்தின் பெறுமதி மற்றும் மதிப்பீடுசெய்யப்பட்ட எதிர்கால நிதி பாய்ச்சலின் (இது வரையில்இடம் பெறாத எதிர்காலத்தில் எதிர்பார்த்த கடன்நட்டத்தைத் தவிர) தற்போதைய பெறுமதிக்கிடையேவித்தியாசமாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. மதிப்பீடுசெய்யப்பட்ட எதிர்கால நிதிச் சொத்தில் தற்போதையபெறுமதி நிதிச் சொத்தின் உண்மையான பயன்மிக்கவட்டி விகிதாசாரத்திற்கு அமைவாக கழிவாக கருதப்படும்.

### 6.2 நிதிப் பொறுப்புக்கள்

**அடிப்படை இனங்காணல் மற்றும் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன**

இலங்கை கணக்கீட்டுத் தரம் 39 விடயப்பரப்பிற்கமையநிதி சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின்மூலம் எழும் நியாயமான பெறுமதிக்கு அமைவானநிதி சொத்து, தேய்மான செலவினம் அகியவற்றின் நிதிச் சொத்துக்கள் போன்றன பொருத்தமானவாறுவகைப்படுத்தப் படுகின்றன. இலங்கை தேயிலைசபை இதன் நிதி பொறுப்புக்களின் அடிப்படைஇனங்காணல் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகல நிதி பொறுப்புக்களும் ஆரம்பத்தில் நியாயமானபெறுமதிக்கு அமைய இனங்காணப்படுவதுடன் கடன்மற்றும் கடன்பெறல் தொடர்பில் அவை தேய்மானசெலவினத்திற்கமைய கணிப்பீடு செய்யப்படுகின்றது.இதற்கு நேரடியான கொடுக்கல் வாங்கல் செலவினங்கள்உள்ளடங்குகின்றன. இலங்கை தேயிலை சபையின்நிதி பொறுப்புக்கள் வர்த்தகம் மற்றும் ஏனையகொடுப்பணவுகள் உள்ளடங்குகின்றன.

### பிற்கால கணிப்பீடுகளை மேற்கொள்ளல்

நிதிச் சொத்துக்களில் பிற்கால கணிப்பீடுகள் தேய்மானத் திற்கமைய மேற்கொள்ளப்படுகின்றன.

### இனங்காண முடியாமை

பொறுப்புக்களின் கீழான கடப்பாடுகள் ரத்துசெய்யப்படும் அல்லது அவற்றின் காலாவதியாகும்போது நிதி சொத்துக்கள் இனங்காணப்படுவதில்லை.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2015 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

| A வருமானம் | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| திறைசேரியிடமிருந்தான நன்கொடைகள சம்பளக் கொடுப்பனவுகள் | | 143,000,000 | 132,000,000 |
| - முதலீடு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் | | 71,000,000 | 50,000,000 |
| - கொழுந்து மானியம் | | 6,738,000,000 | - |
| ஆய்வுகூட வருமானம் | குறிப்பு 1 | 13,529,400 | 13,087,279 |
| P & M விதிப்பனவிலிருந்து மாற்றப்பட்ட வட்டி | | 132,909,000 | - |
| பதிவு மற்றும் புதுப்பித்தல் வருமானம் | குறிப்பு 2 | 140,986,243 | 146,724,177 |
| வர்த்தகச் செயற்பாடுகள் மூலம் பெறப்பட்ட தேறிய இலாபம் | குறிப்பு A.1 | 17,069,008 | 8,955,039 |
| | | 7,256,493,650 | 350,766,495 |

| A.1 வர்த்தகச் செயற்பாடுகள் மூலம் பெறப்பட்ட தேறிய இலாபம் | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தேயிலை விற்பனைகள் | 25,209,911 | 21,548,960 |
| ஏற்றுமதியாளர் பொதி விற்பனைத் தரகு | 9,689,137 | 5,945,205 |
| குத்தகை | 1,962,499 | 1,450,000 |
| தேயிலைப் பைகள் விற்பனை | 68,970 | 42,334 |
| தேயிலை விற்பனை மற்றும் ஆரோக்கியம் விற்பனை பற்றிய புத்தக | 8,100 | 10,250 |
| | 36,938,616 | 28,996,748 |
| கழிவு: விற்பசைன் செலவு | (19,219,724) | (19,562,226) |
| கடன் அட்டை தொடர்பிலான தரகு | (659,251) | (481,972) |
| அந்நியச்செலாவணி விற்பனை தொடர்பான வருமானம் | 9,366 | 2,487 |
| வர்த்தகச் செயற்பாடுகள் மூலமான தேறிய இலாபம் | 17,069,008 | 8,955,039 |

| B தேயிலைத் துறை அபிவிருத்திக்கான செலவுகள் | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கொழுந்து மானியம் | 6,738,000,000 | - |
| உற்பத்தித் தரச்சான்றிதழ் விநியோகம் | 137,358 | 312,574 |
| தேயிலைத் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மானியத் திட்டம் | 10,079,088 | 10,960,085 |
| தேயிலை மீன்நடுகை மானியத் திட்டம் | 60,920,912 | 19,039,915 |
| அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைத்தல் | 4,870,142 | 4,501,322 |
| GMP மேம்பாடுகள் | 3,109,365 | 1,036,505 |
| | **6,817,116,865** | **35,850,400** |

**C** நிருவாகச் செலவுகள்

| | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| தனிப்பட்ட ஊதியம் | குறிப்பு3.1 | 216,571,164 | 142,673,856 |
| ஏனைய நிருவாகச் செலவினம் | குறிப்பு3.2 | 37,527,026 | 34,587,624 |
| பிரயாணச் செலவினம் | குறிப்பு 4 | 7,432,960 | 7,677,842 |
| விநியோகம் மற்றும் தேவைகள் | குறிப்பு 5 | 12,151,455 | 11,352,214 |
| புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு | குறிப்பு 6 | 20,698,182 | 17,373,384 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் தேய்மானம் | | 25,880,398 | 26,294,267 |
| கட்புலனாகா சொத்துக்கள் இலதாக்கல் | | 879,169 | 837,591 |
| குத்தகை ஆதனங்கள் இலதாக்கல் | | 76,386 | 3,010,975 |
| பயன்பாடுகள் மற்றும் ஏனைய செலவினங்கள் | குறிப்பு 7 | 36,638,795 | 46,261,222 |
| | | **357,855,534** | **290,068,975** |

**D** ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| | 1-1-2015 இலுள்ளவாறான செலவு அல்லது பெறுமதி | மேலதிகமானவை | விற்பனை/ மாற்றப்பட்டவை | சீராக்கல்கள் | 31-12-2015 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி |
|---|---|---|---|---|---|
| தீர்வை விலக்கப்பட்ட நிலம் | **350,017,000** | - | - | - | **350,017,000** |
| கட்டிடங்கள் | **264,509,623** | 1,057,590 | - | (523,652) | **265,043,561** |
| அலுவலக உபகரணங்கள் | **59,600,998** | 17,396,408 | (2,023,459) | - | **74,973,946** |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | **35,620,766** | 2,038,048 | (49,593) | - | **37,609,222** |
| மோட்டார் வாகனங்கள், ஏனைய வாகனங்கள் | **50,983,454** | 5,795,000 | (2,407,562) | - | **54,370,892** |
| நூல்நிலையப் புத்தகங்கள் | **383,044** | - | - | - | **383,044** |
| கணினி வன்பொருட்கள் | **33,287,489** | 9,510,186 | (2,773,680) | (581,025) | **40,023,995** |
| ஆய்வுகூட உபகரணங்கள் | **92,331,716** | 6,631,863 | - | - | **98,963,579** |
| | **886,734,091** | **42,429,095** | **(7,254,294)** | **(1,104,676)** | **921,385,239** |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை | | | | | |
| கட்டிடங்கள், ஏனையவை | **15,115,090** | 6,631,749 | 15,647,242 | - | **6,099,596.90** |
| கணினி வன்பொருட்கள் | - | - | - | | - |
| | **15,115,090** | **6,631,749** | **15,647,242** | **-** | **6,099,597** |
| | **901,849,181** | **49,060,844** | **8,392,948** | **(1,104,676)** | **927,484,836** |

| தேய்மானம் தொடர்பான ஏற்பாடுகள் | 1-1-2015 இலுள்ளவாறு திரண்ட தேய்மானம் | ஆண்டுக்கான கட்டணம் | தீர்த்தவைகள் | சீராக்கல்கள் | 31-12-2015 இலுள்ளவாறு திரண்ட தேய்மானம் |
|---|---|---|---|---|---|
| கட்டிடங்கள் | **32,843,534** | 5,347,854 | - | - | **38,191,388** |
| அலுவலக உபகரணங்கள் | **41,726,462** | 5,880,660 | (2,023,459) | - | **45,583,663** |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்களை | **15,618,059** | 3,555,647 | (49,593) | - | **19,124,113** |
| மோட்டார் வாகனங்கள், ஏனைய வாகனங்கள் | **18,627,800** | 5,558,493 | (1,450,732) | - | **22,735,560** |
| நூல்நிலையப் புத்தகங்கள் | **382,632** | 412 | - | - | **383,044** |
| கணினி வன்பொருட்கள் | **25,293,385** | 3,800,756 | (2,773,680) | - | **26,320,461** |
| ஆய்வுகூட உபகரணங்கள் | **72,769,782** | 5,890,408 | - | - | **78,660,190** |
| | **207,261,655** | **30,034,229** | **(6,297,464)** | **-** | **230,998,420** |
| தேறிய புத்தகப் பெறுமானம் | **694,587,526** | | | | **696,486,417** |

## கட்புலனாகா சொத்துக்கள்

| | 2015.01.01 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி | மேலதிகம் | தீர்த்தவை அல்லது மாற்றியவை | சீராக்கல்கள | 2015.12.31 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி |
|---|---|---|---|---|---|
| கணினிமென்பொருள் - தலைமை அலுவலகம் | **11,520,433** | 1,841,475 | 301,500 | (670,484) | 12,389,924 |
| கணினி மென்பொருள் - தேயிலை இல்லம் | **-** | - | - | 670,484 | 670,484 |
| கணினி மென்பொருள் - இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் | **2,529,500** | 255,000 | 2,384,500 | - | 400,000 |
| | **14,049,933** | **2,096,475** | **2,686,000** | **-** | **13,460,408** |

| | 2015.01.01 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி | மேலதிகம் | தீர்த்தவை அல்லது மாற்றியவை | சீராக்கல்கள | 2015.12.31 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி |
|---|---|---|---|---|---|
| கணினி மென்பொருள் - தலைமை அலுவலகம் | **1,564,327** | 879,169 | (261,300) | (45,861) | **2,136,335** |
| கணினி மென்பொருள் - தேயிலை இல்லம் | **-** | 50,030 | - | 45,861 | **95,891** |
| | **1,564,327** | **929,199** | **(261,300)** | **-** | **2,232,226** |
| நிகர பெறுமதி | **12,485,605** | | | | **11,228,181.65** |

தீர்வை விலக்களிக்கப்பட்ட ஆதனம்

| | 2015.01.01 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி | மேலதிகம் | தீர்த்தவை அல்லது மாற்றியவை | சீராக்கல்கள | 2015.12.31 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி |
|---|---|---|---|---|---|
| தீர்வை விலக்களிக்கப்பட்ட ஆதனம் - த.அலுவலகம் | **3,819,280** | **-** | **-** | **-** | **3,819,280** |
| தீர்வை விலக்களிக்கப்பட்ட ஆதனம் - தேயிலை இல்லம் | **28,897,335** | - | - | - | **28,897,335** |
| | **32,716,615** | **-** | **-** | **-** | **32,716,615** |

| இலதாக்கல் ஏற்பாடு | 2015.01.01 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி | மேலதிகம் | தீர்த்தவை அல்லது மாற்றியவை | சீராக்கல்கள | 2015.12.31 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி |
|---|---|---|---|---|---|
| தீர்வை விலக்களிக்கப்பட்ட ஆதனம் - த.அ | **780,859** | 76,386 | **-** | **-** | **857,244** |
| தீர்வை விலக்களிக்கப்பட்ட ஆதனம் - தேயிலை இல்லம் | **2,889,733** | 2,889,733 | **-** | **-** | **5,779,467** |
| | **3,670,592** | **2,966,119** | **-** | **-** | **6,636,711** |
| நிகர ஏட்டுப் பெறுமதி | **29,046,023** | | | | **26,079,904** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2015 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

**E காணிகளுக்கான முன்செலுத்திய குத்தகை உரிமைகள**

| | 31.12.2015 இலுள்ளவாறு ரூ. | 31.12.2014 இலுள்ளவாறு ரூ. |
|---|---|---|
| ஆரம்ப மீதி | 29,046,023 | 2,935,383 |
| மேலதிக குத்தகைச் சொத்துகள் | - | 29,121,615 |
| இலதாக்கல் | (2,966,119) | (3,010,975) |
| **முடிவு மிகுதி** | **26,079,904** | **29,046,023** |

**F கட்புலனாகா சொத்துக்கள்**

| | 31.12.2015 இலுள்ளவாறு ரூ. | 31.12.2014 இலுள்ளவாறு ரூ. |
|---|---|---|
| ஆரம்ப மீதி | 12,485,605 | 10,034,678 |
| சேர்த்தல் - கணினி மென்பொருள் | 1,841,475 | 9,636,099 |
| கழித்தல்: சீராக்கல் தீர்த்தல் | (301,500) | (8,877,081) |
| இலதாக்ல் | (667,899) | (837,591) |
| கணினி மென்பொருள் தொடர்பான வேலைகள் நடைபெற்று வருகின்றவை | (2,129,500) | 2,529,500 |
| | **11,228,181** | **12,485,605** |

**G இருப்புகள்**

| | | 31.12.2015 இலுள்ளவாறு ரூ. | 31.12.2014 இலுள்ளவாறு ரூ. |
|---|---|---|---|
| ஆய்வுகூட நுகர்வுகள் | குறிப்பு8.1 | 5,940,928 | 5,365,391 |
| ஊக்குவிப்புப் பொருட்கள் மற்றும் ஏனையவைகள் | குறிப்பு8.2 | 7,039,392 | 7,992,540 |
| தேயிலை இருப்பு | குறிப்பு8.3 | 7,629,361 | 8,995,285 |
| ஏனையவைகள் | குறிப்பு8.4 | 13,960,779 | 14,519,841 |
| | | **34,570,459** | **36,873,056** |

**H வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள்**

| | | 31.12.2015 இலுள்ளவாறு ரூ. | 31.12.2014 இலுள்ளவாறு ரூ. |
|---|---|---|---|
| வியாபார பெறுகைகள் | குறிப்பு 9 | 2,780,125 | 6,465,504 |
| பணியாட்தொகுதி பெறுகைகள் மற்றும் ஏனைய முற்கொடுப்பனவுகள் | குறிப்பு 10 | 27,729,259 | 28,729,625 |
| பெறுகைகள் - GEDB | | 25,000,000 | 25,000,000 |
| முன்செலுத்தப்பட்ட பணியாளர் செலவினங்கள் | | - | - |
| குறைவு: மோசமான அல்லது சந்தேகக் கடன்கள் தொடர்பான ஏற்பாடுகள் | | (25,000,000) | (25,000,000) |
| | | **30,509,384** | **35,195,129** |

**I வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுகள்**

| | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| | | இலுள்ளவாறு | இலுள்ளவாறு |
| | | ரூ. | ரூ. |
| வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுள் | குறிப்பு11 | 120,928,205 | 108,543,296 |
| | | **120,928,205** | **108,543,296** |

**J ஏனைய நிதி ரீதியான சொத்துக்கள்**

| | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| | | இலுள்ளவாறு | இலுள்ளவாறு |
| | | ரூ. | ரூ. |
| முதலீடுகள் | குறிப்பு12 | 5,250,628,454 | 5,070,148,106 |
| | | **5,250,628,454** | **5,070,148,106** |

**K கையிருப்பிலுள்ள பணம் மற்றும் வங்கியிலுள்ள பணம்**

| | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| | | இலுள்ளவாறு | இலுள்ளவாறு |
| | | ரூ. | ரூ. |
| கையிருப்பிலுள்ள பணம் மற்றும் வங்கியிலுள்ள பணம் | குறிப்பு 13 | 143,260,038 | 42,876,516 |
| | | **143,260,038** | **42,876,516** |

**K. (1) RPC'S**இற்கான கடன்

| | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| | | இலுள்ளவாறு | இலுள்ளவாறு |
| | | ரூ. | ரூ. |
| RPC'Sஇற்கான கடன் | குறிப்பு 13.A | 492,096,500 | - |
| | | **492,096,500** | **-** |

**L ஊக்குவிப்பு மற்றும் சந்தை விதிப்பனவு**

இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் தேயிலை ஏற்றுமதிக்காக அனுமதி வழங்கும் வகையில் CUSDEC இற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வேளையில் தேயிலை ஏற்றுமதிக்காக பதிவு செய்யப்பட்டள்ளசகல ஏற்றுமதியாளர்களைப் போன்று ஏற்றுமதி செய்ப்படும் சகல தேயிலை கிலோ கிராமிற்காகவும் ரூபா 3.50நிதி அறவிடப்பட வேண்டும். கோவைகளின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட சகல நிதிஇலங்கை தேயிலை சபையினால் தீர்மானிக்கக் கூடியவாறு பெயரிடப்பட்ட கணக்குகளில் வைப்பிலிட வேண்டும்.

இக்கோவை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கைதேயிலை சபையினால் பெயரிடப்பட்ட கணக்குகளில்வைப்பில் இடப்பட்டுள்ள நிதிச் சபையினால் இலங்கையில் அல்7லது அதற்கு வெளியே தேயிலை ஊக்குவிப்புமற்றும் விற்பனை வியூக செயற்பாடுகளுக்கு உரியதான பணிகளுக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

| | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| ஆரம்ப மீதி | | 4,904,992,816 | 3,898,124,564 |
| முன்னைய ஆண்டு வட்டி வருமானம் மீது | | | |
| செலுத்திய வரி | | (109,895,192) | (32,195,048) |
| ஏற்றுமதியாளர்களிடமிருந்து கிடைத்த தொகை | | 1,121,694,289 | 1,154,334,445 |
| முதலீடு மீதான வட்டி | 317,892,244 | | 341,220,396 |
| குறைவு: வட்டி வருமானம் மீது செலுத்திய வரி | 144,737,771 | | (97,243,945) |
| HOஇற்கு மாற்றிய வட்டி | 132,909,000 | 40,245,473 | |
| கிறிக்கெட் ரீ-சேட் விற்பனை | | 2,192,359 | 3,388,842 |
| G I பதிவு | | 4,877 | - |
| தேயிலை இல்லம் மூலமான வருமானம் குறிப்பு L.1 | | 34,969,125 | 18,497,762 |
| | | 5,994,203,747 | 5,383,370,961 |
| தூதுவர் பணியகத்திற்கான அன்பளிப்பு மற்றும் | | | |
| ஏனைய அன்பளிப்பு | | 5,237,437 | 5,713,158 |
| உள்நாட்டு மற்றும் வர்த்தக கண்காட்சி பங்களிப்பு | | 6,199,999 | 35,841,597 |
| தொடர்பாடல் ஊடக உற்பத்திச் செலவு(ATL/BTL) | | 218,534 | 134,566 |
| சர்வதேச வர்த்தக கண்காட்சியிலான பங்களிப்பு | | 62,371,757 | 17,965,079 |
| நிகழ்வுகள் | | 7,989,601 | 3,006,292 |
| புலமைசத் சொத்துரிமை, சபை உறுப்புரிமை, | | | |
| அனுசரணை | | 2,611,744 | 3,577,281 |
| சந்தை ஆய்வு மற்றும் ஆராய்ச்சி | | 729,937 | 8,986,174 |
| வங்கி கட்டணங்கள் | | 77,213 | 150,037 |
| இல்கைக் கிறிக்கெட்டுக்கான அனுசரணை | | 207,793,725 | 212,928,896 |
| தேயிலை இல்லத்தின் இயக்கச் செலவு குறிப்பு L.1 | | 54,655,379 | 32,006,962 |
| G.I. பதிவு | | - | 426,265 |
| தேயிலை நூதனசாலைக்கான அளிப்பு | | 1,500,000 | 1,500,000 |
| செலவினம் -TB மொஸ்கோ | | 7,470,314 | 2,975,380 |
| செலவினம் -TB UAE | | 11,827,788 | 7,957,328 |
| செலவினம் -TB சீனா | | 259,533 | - |
| புதிய வெளிநாட்டு அலுவலகம் தாபிப்பு | | 41,204 | - |
| வருடாந்த ஆண்டுக்கான தோட்டத் தேயிலை | | 2,842,041 | - |
| பயணச் செலவுகள் - வெளிநாடு | | 5,862,378 | 7,097,993 |
| ஏனைய தேசிய நிறுவனங்களுடனான ஊக்குவிப்புப் பணிகள | | 1,036,219 | - |
| தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டம் | | - | 625,934 |
| தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை விளம்பரம் | | 69,460,706 | 2,174,308 |
| வெளிக்கள விளம்பரம் | | 29,438,884 | 30,983,650 |
| பொதுமக்கள் உறவுப் பிரச்சாரம் | | 2,520,823 | 4,531,902 |
| தூதுவராலயங்களுடனான நிகழ்ச்சித்திட்டம் | | 933,319 | 2,173,410 |
| நாணயமாற்றிலான வித்தியாசம் | | (125,569) | 377,987 |
| | | **481,352,966** | **381,134,199** |
| P & M விதிப்பனவு நிதி மீதி, 2015.12.31 இலுள்ளவாறு | | **5,512,850,782** | **4,904,992,816** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2015 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

**L.1 இலங்கைத் தேயிலை இல்லம்**

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| <u>வருமானம்</u> | | |
| உணவு, குடிபான விற்பனை | 32,859,715 | 14,905,892 |
| தேயிலை ஏற்றுமதியாளர் பொதி விற்பனை தரகு (நிகர தொகை) | 1,245,611 | 1,183,051 |
| SLTB தேயிலை விற்பனை (நிகர தொகை) | 83,799 | (931,179) |
| வாடகை வருமானம் | 780,000 | 3,340,000 |
| மொத்த இயக்க வருமானம் | **34,969,125** | **18,497,764** |
| <u>செலவு</u> | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 6,997,871 | 7,612,273 |
| UDA வாடகை | 4,403,419 | 4,443,206 |
| மின்சாரம், நீர், தொலைபேசி, எரிவாயு | 4,187,878 | 4,452,820 |
| முகாமைத்துவ கட்டணம் | 3,600,000 | 3,000,000 |
| விளம்பரம் | 368,603 | 5,083,420 |
| போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனையவை | 35,097,607 | 7,415,243 |
| **மொத்த இயக்கப்பாட்டு செலவுகள்** | **54,655,379** | **32,006,962** |
| **வருமானத்திற்கு எதிரான இயக்கச் செலவுகள்** | **(19,686,253)** | **(13,509,198)** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2015 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

**M ஊழியல் நலன் தொடர்பான கடப்பாடுகள்**

| | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| | இலுள்ளவாறு | இலுள்ளவாறு |
| | ரூ. | ரூ. |
| பணிக்கொடை ஆரம்ப மீதி | 43,952,223 | 43,083,574 |
| ஆண்டுக்கான பணிக்கொடை கட்டணங்கள் | 18,144,513 | 9,213,376 |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட/ செலுத்தக்கூடிய நன்மை | (6,533,899) | (8,344,727) |
| | **55,562,838** | **43,952,223** |

| **N** வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | | As at 31.12.2015 | As at 31.12.2014 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| வியாபாரக் கொடுப்பனவுகள் | குறிப்பு14.1 | 89,326,429 | 35,676,662 |
| ஏனைய கொடுப்பனவுகள் | குறிப்பு14.2 | 231,153,426 | 217,858,639 |
| அட்டுறுச் செலவுகள் | குறிப்பு14.3 | 35,506,070 | 43,841,692 |
| | | 355,985,924 | 297,376,993 |

**மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள்**

2015 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த வருட காலப்பகுதியினுள் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் தொடர்பில் எவ்வித மாற்றங்களும் இல்லை

**ஒதுக்கீடுகள் மீள் பெறுமதியிடல்**

கொழும்பு தலைமை அலுவலகத்திலுள்ள காணி, கட்டிடம், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றை மீள் மதிப்பீடு செய்ததன் பின்னர் ரூபா. 481,933,543/-பெறுமதியான மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தை சபை உருவாக்கியது

**பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம்**

2015 டிசம்பர் 31 வரையில் அரசாங்க மானியங்களான ரூ. 672,012,201.85 /- பங்களிப்பு மூலதனமாகக் காணப்பட்டது.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2015 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

**O பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

பிணக்குகளைத் தீர்க்கும் சபையினால் வழங்கப்பட்ட வழக்குத் தீரப்பு இலங்கை தேயிலை சபைக்கு எதிராக வழங்கப்பட்டமையினால் ஆண்டுக்குள் ரூபா 15,556,355 நிதி செலுத்த வேண்டியிருந்தது. இலங்கை தேயிலை சபை இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ததுடன் அது தொடர்பிலான பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன

**P சம்பந்தப்பட்ட தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்**

**P.1**

இலங்கை தேயிலை சபை பொதுவாக செயற்பாடுகளுக்கு உரியதான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றது. உரிய தரப்பினர் எனப்படுவது இலங்கை அரசாகும். இலங்கை அரசின் பல்வேறுபட்ட திணைக்களங்கள் மற்றும் அரசினால் நிறுவகிக்கப்படக் கூடிய நிறுவனங்களுடன் அடங்குகின்றன. கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான விபரங்கள், தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் மிக்க மற்றும் ஒரு சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கூட்டு அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான இலங்கை தேயிலை சபை அரசு மற்றும் அரசினால் நிறுவகிக்கப்படும் நிறுவனங்களுடன் எட்டப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **கொடுக்கல் வாங்கல்கள்::** | | |
| வருமானம் | 143,000,000 | 132,000,000 |
| பயன்பாட்டுச் செலவுகள் | 20,494,586 | 21,060,410 |
| **நிலுவை மீதி:** | | |
| **பெறத்தக்கவைகள்** | | |
| JEDB (பெருந்தோட்ட அமைச்சு) | 25,000,000 | 25,000,000 |

**P.2 பிரதான முகாமைத்துவ இழப்பீடு**

SLTB'sஇன் பிரதான முகாமைத்துவ ஆளணியில் பணிப்பாளர் சபையும் உள்ளடங்குகிறது.

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| குறுங்கால ஊழிய நலன்கள் | 953,900 | 754,500 |

## Q ஐந்தொகைத் தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் இடம்பெற்ற சகல முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் தொடர்பில் கவனம்செலுத்தப்பட்டுள்ளதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் பொறுத்தமான ஒப்பீடுகள் மற்றும்வெளிப்பாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுகளுக்கான விரிவான அட்டவணைகள்
2015 டிசம்பர் 31 உடன் முடிவடையயும் வருடத்திற்கானது

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **1 ஆய்வுகூட வருமானம்** | | |
| ISO 3720 தராதரச் சோதனை | 1,125,600 | 1,271,900 |
| இரசாயன பகுப்பாய்வுச் சோதனை | 10,500 | 85,000 |
| நச்சுப் பதார்த்தம், பாரமான உலோக பகுப்பாய்வுச் சோதனை | 1,800 | |
| பௌதீக பரிசோதனை | 743,000 | 352,000 |
| நுண்ணுயிர் பகுப்பாய்வுகள் சோதனை | 2,339,500 | 1,587,679 |
| ஏனைய தேயிலை மாதிரிச் சோதனை | 9,309,000 | 9,790,700 |
| | **13,529,400** | **13,087,279** |
| **2 பதிவு மற்றும் புதுப்பிக்கத்தக்க வருமானம்** | | |
| முகவர்கள் அனுமதிப் பத்திரக் கட்டணம் | 11,955,525 | 11,914,970 |
| தண்டப்பணம் | 3,696,484 | 3,103,911 |
| பணியாளர் கடன்கள் மீதான வட்டி | 1,099,597 | 1,140,516 |
| இதர வருமானம் | 1,196,041 | 545,169 |
| புள்ளிவிபரவியல் சுருக்க விற்பனை | 145,003 | 126,250 |
| வருடாந்த அறிக்கை விற்பனை | 8,000 | 4,500 |
| உற்பத்தி தரகர்களுக்கான அனுமதிக் கட்டணம் | 1,625,000 | 1,625,000 |
| விநியோகத்தர்களை பதிவுசெய்தல் | 280,500 | 236,000 |
| தெயிலை ஏற்றுமதியாளர் தொலைபேசி புத்தக விளம்பரப் பதிவு | - | 25,000 |
| சிங்க இலட்சனைப் பதிவு | 2,336,859 | 1,447,898 |
| செய்திப் பத்திரிகை | 334,375 | 380,000 |
| சுவரொட்டிகள், தொலைபேசிப் புத்தகங்கள் மற்றும் ஏனைய விற்பனைகள் | 178,270 | 194,455 |
| கழிவுத் தேயிலைப் பதிவுக் கட்டணம் | 2,961,953 | 3,218,750 |
| தெயிலை ஏற்றுமதியாளர்களை பதிவுசெய்தல் | 1,200,000 | 1,125,000 |
| தேயிலைப் பொதியிடுபவர்களை பதிவுசெய்தல் | 1,059,000 | 1,497,000 |
| தேயிலை ஏற்றுமதியாளர்கள் நீடிப்புக் கட்டணம் | 25,860,000 | 25,095,320 |
| தெயிலை பொதியிடுபவர் நீடிப்புக் கட்டணம் | 3,510,432 | 4,017,876 |
| தனியார் விற்பனை மதிப்பீடு | 4,386,500 | 4,098,500 |
| நேரடி விற்பனை சீர்திருத்தக் கட்டணம் | 1,079,500 | 1,106,500 |
| தரம் மற்றும் ஏனைய சான்றிதழ்களை விநியோகித்தல் | 102,500 | 158,400 |
| தேயிலை இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் | 23,123,684 | 32,238,909 |
| இறக்குமதி விண்ணப்பப் படிவங்களின் விற்பனை | 11,960 | 15,360 |
| பகுப்பாய்வுச் செலவு | 37,520 | 42,575 |
| தொழிற்சாலைப் பதிவுகள் | 4,000,000 | 1,000,000 |
| களஞ்சியசாலை பதிவு | 845,000 | 1,425,000 |
| உள்ளூர் பொதியிடல் புதுப்பித்தல் | 446,500 | |

| | | |
|---|---|---|
| களஞ்சியசாலை புதுப்பித்தல் | 2,664,800 | 2,440,000 |
| வருடாந்த தோட்ட நுழைவுக் கட்டணம் | - | 1,102,500 |
| கழிவுத் தேயிலை கொள்மதிக்கான அனுமதி | 37,171,638 | 40,273,604 |
| தேயிலை இறக்குமதியாளர்கள் பதிவு | 150,000 | 110,000 |
| வங்கி உத்தரவாதங்களை விடுவிப்பதற்கான அனுமதி | 247,000 | 314,000 |
| தேயிலை மாதிரிகளை சுவையறிதல் வருமானம் | 728,300 | 619,215 |
| ஓசோன் நேய சின்னம் பதிவு | 185,578 | 85,000 |
| தேயிலைப் பொதிகள் மற்றும் ஏனைய தேயிலைப் பதிவுகள் | 264,000 | 273,000 |
| தேயிலைத் தொழிற்சாலை பதிவு நீடித்தல் | 4,945,638 | 4,965,000 |
| நிரந்தரச் சொத்து விற்பனை - இலாபம் | 531,525 | - |
| தெயிலை இறக்குமதியாளர்களைப் புதுப்பித்தல் | 425,000 | 385,000 |
| உள்ளூர் பொதியிடல் பதிவுசெய்தல் | 665,561 | 365,000 |
| GMPசான்றிதழ் கட்டணம் -WH/BED & PAK | 1,527,000 | |
| இலங்கைத் தேயிலை எக்ஸ்போ 15 பற்றிய பிரேரணைகளைக் கோருதல் | - | 9,000 |
| | **140,986,243** | **146,724,177** |

**3 <u>நிர்வாகச் செலவுகள்</u>**

**3.1 தனி நபர் வேதனம்**

| | | |
|---|---|---|
| சம்பளங்கள் | 77,191,539 | 65,606,650 |
| வதிவிட வசதிகள் - வெளிநாடு | 8,357,518 | 2,403,940 |
| ஏனைய கொடுப்பனவுகள் (இடைக்காலம்/ ஏனையவை) | 42,944,247 | 15,414,983 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைதினக் கொடுப்பனவு | 3,692,215 | 3,399,726 |
| விடுமுறைகால சீட்டு மற்றும் பருவகாலச் சீட்டுகள் | - | 4,440 |
| நாளாந்தம் செலுத்திய ஊதியம் | 1,161,005 | 322,485 |
| ஏனைய கொடுப்பனவு - - UAE | 6,361,869 | 2,142,861 |
| ஏனைய கொடுப்பனவு மொஸ்கோ | 3,577,972 | 840,316 |
| ஏனைய கொடுப்பனவு சீனா | 1,459,433 | - |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 25,911,059 | 24,728,283 |
| அலுவலக செலவின் பின்னர் - ஏற்றுமதிகள் | 2,056,844 | |
| EPF பங்களிப்பு | 21,421,496 | 15,394,468 |
| ETF பங்களிப்பு | 4,284,996 | 3,091,239 |
| ஓய்வூதியப் பங்களிப்பு | 6,458 | 111,089 |
| ஊழியர் பணிக்கொடை | 18,144,513 | 9,213,376 |
| | **216,571,164** | **142,673,856** |

**3.2 ஏனைய நிர்வாகச் செலவுகள்**

| | | |
|---|---|---|
| அங்கத்துவ பங்களிப்பு (தொழில்வாண்மை) | 40,472 | 42,963 |
| பணியாளர் போனஸ் | 4,000,000 | 4,000,000 |
| மருத்துவ நன்மைகள் - கோரிக்கை | 15,810,247 | 15,503,615 |
| பணியாளர்களுக்கான தேனீர் | 1,697,137 | 1,899,172 |
| பணியாளருக்கான பொதியிடப்பட்ட தேயிலை விநியோகம் | 2,296,855 | 1,947,845 |
| பணியாளர் நலன்புரி | 593,056 | 1,314,955 |
| நலன்புரி நூலக புத்தகங்கள் | - | 100,000 |
| மரண நன்கொடைகள் | 250,000 | 250,000 |
| விளையாட்டுகள்/ பொழுதுபோக்கு வசதிகள் | 100,000 | 260,135 |
| பணியாளர் ஆதனக் கடன் குறித்தான வட்டி | 1,073,645 | 1,234,265 |
| விற்பனைப் பணியளருக்கான ஊக்குவிப்பு | 1,235,656 | 1,188,739 |
| பணியாளர் பயிற்சி/ கருத்தரங்கு/ செயலமர்வு | 3,849,580 | 1,751,781 |
| சபை/ குழு உறுப்பினருக்கான கட்டணங்கள் | 953,900 | 754,500 |
| சபைக் கூட்டத்திற்கான செலவுகள் | 49,996 | 91,047 |
| பகுப்பாய்வு சார் ஆய்வுகூடம் - நுகர்வுக்குரியது | 5,507,363 | 4,059,499 |
| சந்தை ஆராய்ச்சி/ ஆலோசனைக் கட்டணம் | - | - |
| பரீட்சைக் கட்டணம் | 68,120 | 186,468 |
| நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கான கட்டணம் | 1,000 | 2,641 |
| | **37,527,026** | **34,587,624** |

| | | |
|---|---|---|
| **4 பயணச் செலவுகள்** | | |
| பயணச் செலவுகள் (உள்ளூர்) | 7,417,960 | 6,481,401 |
| நிலைய மாற்றம் | - | 1,190,916 |
| போக்குவரத்து மற்றும் வாடகைக் கட்டணங்கள் | 15,000 | 5,525 |
| | **7,432,960** | **7,677,842** |
| **5 விநியோகம் மற்றும் அவசியத் தேவைகள்** | | |
| அச்சுப் பதிப்பு, எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 5,129,613 | 4,564,932 |
| எரிபொருள் மற்றும் எண்ணெய்கள் | 4,011,807 | 5,490,046 |
| பொறிமுறை, மின்சார மற்றும் பொதுப் பயன்பாட்டுப் பொருட்கள் | 290,608 | 179,400 |
| நூல்கள், வெளியீடுகள், செய்திப் பத்திரிகை | 1,769,709 | 582,634 |
| கணினி உபகரணங்ள் | - | 34,099 |
| சீருடை | 890,033 | 464,443 |
| தேயிலை பரீட்சிப்பு அறைத் தேவைப்பாடுகள் | 23,545 | 9,890 |
| தேயிலை ஏற்றுமதி அலகுத் தேவைப்பாடுகள் | 36,140 | 26,770 |
| | **12,151,455** | **11,352,214** |
| **6 மூலதனச் சொத்துக்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு** | | |
| வானம் திருத்தம், பராமரிப்பு | 4,307,995 | 3,662,893 |
| பொறித்தொகுதி/ இயந்திரம் திருத்தம், பராமரிப்பு | 1,768,265 | 1,163,618 |
| கட்டடம் திருத்தம், பராமரிப்பு | 3,059,359 | 1,218,497 |
| அலுவலக உபகரணம் திருத்தம், பராமரிப்பு | 6,730,520 | 6,549,937 |
| தளபாடம் மற்றும் பொருத்துகைகளின் திருத்தம், பராமரிப்பு | 43,050 | 19,145 |
| ஏனைய பயன்பாட்டுச் சேவைகள் | 183,555 | 276,713 |
| துப்பரவுச் சேவைகள் | 3,739,065 | 3,878,149 |
| ஆய்வுகூட கருவிகள் பராமரிப்பு | 866,373 | 567,264 |
| நூலக உபகரணங்கள் | - | 37,168 |
| | **20,698,182** | **17,373,384** |
| **7 பயன்பாட்டு மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| ஊடக அறிவித்தல் | 2,300,791 | 3,615,466 |
| தொலைபேசி, பெக்ஸ், இணையம் | 6,038,968 | 5,628,565 |
| மின்சாரம் | 11,033,179 | 12,115,618 |
| விதிப்பனவும் வரிகளும் | 1,176,020 | 1,261,146 |
| வாடகை | 1,228,000 | 1,391,143 |
| காப்புறுதி கட்டடங்கள், வாகனங்கள் | 1,834,169 | 1,808,384 |
| பாதுகாப்புச் சேவைகள் | 7,561,535 | 7,145,166 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 350,000 | 200,000 |
| சட்டச் சேவைக்கான கட்டணங்கள் | 324,600 | 77,795 |
| ஏனைய கட்டணங்கள் | 942,232 | 1,203,361 |
| தேயிலை மாதிரி சோதனைக் கட்டணம் | 395,211 | 463,841 |
| அஞ்சல் கட்டணம் | 1,293,718 | 1,209,131 |
| நீர் வழங்கல் மற்றும் நீர் சூடாக்கல் | 952,702 | 845,950 |
| இழப்புகள் - நிலையான சொத்துக்களின் நீக்கம்/ தள்ளுபடி | - | 4,676,148 |
| தேயிலை பரீட்சிப்புக் குழுவிற்கான கட்டணம் | 1,157,745 | 837,500 |
| சில்லறைச் செலவுகள் | 49,926 | 94,700 |
| மதுகம திறந்துவைப்பு வைபவச் செலவுகள் | - | 1,126,233 |
| | **36,638,795** | **46,261,222** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2015 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **8 இருப்புகள்** | | |
| **8.1** ஆய்வுகூடம் | | |
| ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் | 5,940,928 | 5,365,391 |
| | 5,940,928 | 5,365,391 |
| **8.2** பாவனைப் பொருட்கள் | | |
| அலுவலக உபகரணங்கள் | 2,586,635 | 1,517,726 |
| ஊக்குவிப்புப் பொருட்கள் | 4,452,757 | 6,474,814 |
| | 7,039,392 | 7,992,540 |
| **8.3** தேயிலை மற்றும் ஏனைய இருப்புகள் | | |
| தேயிலை பிரதான களஞ்சியம் | 2,045,503 | 3,528,275 |
| தேயிலை விற்பனைக் கருமபீடம் | 68,435 | 154,521 |
| தேயிலை தேயிலை இல்லம் | 12,147 | 30,044 |
| பணியாளர் தேயிலை | 70,413 | 182,580 |
| வெற்றுப் பெட்டிகள் | 5,153,317 | 4,941,631 |
| தேயிலை இருப்பு தேயிலைச் சேவை | 81,450 | - |
| சுமத்தல் பொதிகள் | 68,996 | 92,789 |
| நெளிவான பெட்டிகள் | 79,200 | 15,445 |
| கழுத்துப் பட்டிகள் | 49,900 | 50,000 |
| | 7,629,361 | 8,995,285 |
| **8.4** இடைத்தங்கல் பொருட்கள் | 13,960,779 | 14,519,841 |
| | **34,570,459** | **36,873,056** |
| **9 வியாபார வரவுகள்** | | |
| பல்வகைக் கடனாளிகள் | 567,541 | 850,294 |
| கடனாளிகள் - கிறிக்கெட் ரீ-சேட் | 875,800 | 4,496,650 |
| கடனாளிகள் கட்டுப்பாடு | 50,714 | (214,797) |
| கடனாளிகள் - வருமான வரவுகள் | 738,356 | 861,040 |
| பொதிசெய்யப்பட்ட தேயிலை விற்பனை | 475,402 | 350,580 |
| பற்றாக் குறைகள் | 72,311 | 121,736 |
| | **2,780,125** | **6,465,504** |
| **10 கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்** | | |
| திரட்டிய கடன்கள் - TCD | 9,123,511 | 10,577,186 |
| திரட்டிய கடன்கள் - TPB | 3,744,240 | 3,939,728 |
| திரட்டிய கடன்கள் - HO | 13,285,746 | 11,951,346 |
| முற்கொடுப்பனவு செலுத்துகைகள் - வெளிநாடு | 171,550 | 1,048,980 |
| முற்பணம் - விழா | 322,120 | 375,120 |
| முற்பணம் - விசேட சம்பளம் | 246,530 | 264,030 |
| பணியாளர் தேயிலை அறவீடுகள் | 204,582 | 242,547 |
| பணியாளர் கடனாளிகள் | 9,196 | 1,210 |
| முன்கூட்டிய கொடுப்பனவுகள் | 621,785 | 329,479 |
| | **27,729,259** | **28,729,625** |

## 11 வைப்புகள் மற்றும் முன்கொடுப்பனவுகள்

| | | |
|---|---|---|
| வைப்புகள் | 1,180,606 | 1,172,606 |
| முத்திரை வைப்புகள் | 160,000 | 160,000 |
| பொதி தபால் கட்டண வைப்புகள் | 15,600 | 68,000 |
| வைப்புகள் மற்றும் முன்கொடுப்பனவுகள் - UAE | 4,983,337 | 4,035,692 |
| வைப்புகள் மற்றும் முன்கொடுப்பனவு மொஸ்கோ | 2,920,126 | 15,777 |
| முன்கூட்டிய கொடுப்பனவுகள் | 106,877,390 | 98,300,074 |
| வாடகை வைப்பு போலாந்து | 207,360 | 207,360 |
| வாடகை வைப்பு - CBS BLDG. | 583,786 | 583,786 |
| அடிப்படைக் கட்டணம் - தேயிலை இல்லம் | 4,000,000 | 4,000,000 |
| | **120,928,205** | **108,543,296** |

## 12 முதலீடுகள்

| | | |
|---|---|---|
| நிரந்தர வைப்புகள் - இலங்கை வங்கி 2ஆம் கிளையில் தேயிலைச் சபை | 90,000,000 | 100,052,091 |
| நிரந்தர வைப்புகள் - பம்பலப்பிட்டி இலங்கை வங்கியில் P & M விதிப்பனவுக் கட்டணங்கள் | 4,773,467,811 | 4,541,085,293 |
| குறுகிய கால முதலீடுகள் - இலங்கை வங்கி, கூட்டுறவுக் கிளை | - | 53,009,272 |
| மத்திய வங்கி தற்காலிக மிகை நம்பிக்கை நிதியம் - இலங்கைத் தேயிலைச் சபை | 49,877,857 | 47,030,455 |
| மத்திய வங்கி தற்காலிக மிகை நம்பிக்கை நிதியம் - P & Mஅறவீடு | 333,060,466 | 323,362,723 |
| வீட்டுக் கடன் வைப்புகள் - SMIB | 4,222,320 | 5,608,271 |
| | **5,250,628,454** | **5,070,148,106** |

## 13 பணம் மற்றும் வங்கி மீதிகள்

| | | |
|---|---|---|
| கையிருப்புப் பணம் சில்லறைச் செலவுகள் - கருமபீடம் | 20,000 | 20,000 |
| கையிருப்புப் பணம் சில்லறைச் செலவுகள் - முத்திரை | 10,000 | - |
| உல்லாச வழிகாட்டிகளுக்கான சில்லறைச் செலவுப் பணம் - தேனீர் இல்லம் | 13,574 | - |
| கையிருப்பு விற்பனைச் சேகரிப்புகள் | 287,240 | 212,471 |
| இங்கை வங்கி கொள்ளுபிடிட் 2வது | 12,841,407 | 16,433,017 |
| இங்கை வங்கி - கூட்டுறவு (த.அ) | 26,852,574 | 107,186 |
| இங்கை வங்கி பம்பலப்பிட்டி | 19,277,737 | 7,798,702 |
| இங்கை வங்கி - கூட்டுறவுக்கிளை (TCD) | 16,772,880 | 6,042,107 |
| இங்கை வங்கி தேயிலை மானியம் | 65,071,352 | - |
| இங்கை வங்கி சுதந்திரச் சதுக்கம் | (1,960,305) | 7,394,044 |
| தூதுவராலயக் கணக்கு ஐக்கிய இராச்சியம் | 109,288 | 875,542 |
| தூதுவராலயக் கணக்கு ஜேர்மன் | 81,280 | 190,126 |
| தூதுவராலயக் கணக்கு ஜப்பான் | 11,473 | 18,571 |
| தூதுவராலயக் கணக்கு பிரான்ஸ் | 275,585 | 447,837 |
| தூதுவராலயக் கணக்கு போலாந்து | 50,111 | 78,560 |
| தூதுவராலயக் கணக்கு பேங்கொக் | 9,155 | 9,155 |
| தூதுவராலயக் கணக்கு சீனா | 84,764 | 84,764 |
| நடைமுறைக் கணக்கு - UAE | 2,178,780 | 1,622,578 |
| நடைமுறைக் கணக்கு மொஸ்கோ | 46,518 | 1,225,111 |
| நடைமுறைக் கணக்கு சீனா | 84,733 | - |
| பிராந்திய அலுவலகம் ந.கணக்கு - காலி | - | 38,217 |
| பிராந்திய அலுவலகம் ந.கணக்கு மாத்தறை | - | 27,006 |
| பிராந்திய அலுவலகம் ந.கணக்கு - இரத்தினபுரி | - | 27,276 |
| பிராந்திய அலுவலகம் ந.கணக்கு கம்பளை | - | 108,889 |
| பிராந்திய அலுவலகம் ந.கணக்கு பண்டாரவளை | - | 71,243 |
| பிராந்திய அலுவலகம் ந.கணக்கு மதுகம | - | 34,115 |
| இலங்கை வங்கி ந.கணக்கு காலி | 83,536 | - |
| இலங்கை வங்கி ந.கணக்கு மாத்தறை | 66,320 | - |
| இலங்கை வங்கி ந.கணக்கு இரத்தினபுரி | 28,316 | - |
| இலங்கை வங்கி ந.கணக் கம்பளை | 94,258 | - |
| இலங்கை வங்கி ந.கணக்கு பண்டாரவளை | 87,360 | - |
| இலங்கை வங்கி ந.கணக்கு மதுகம | 3,907 | - |
| இலங்கை வங்கி சகூல் கணக்கு காலி | 1,715 | - |
| இலங்கை வங்கி சகூல் கணக்கு மாத்தறை | 18,442 | - |
| இலங்கை வங்கி சகூல் கணக்கு இரத்தினபுரி | 206,437 | - |
| இலங்கை வங்கி சகூல் கணக்கு மதுகம | (94,352) | - |
| இலங்கை வங்கி சகூல் கணக்கு பண்டாரவளை | (226,151) | - |
| இலங்கை வங்கி சகூல் கணக்கு கம்பளை | 172,107 | - |
| | **143,260,038** | **42,866,516** |

நிதி நிலை தொடர்பான கூற்று
நிதிக் கூற்றுகள் தொடர்பிலான விரிவான அட்டவணைகள்
2015 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கானது

**13. (அ) RPC'S இற்கான கடன்கள்**

| | தோட்டத்தின் பெயர்கள் | வழங்கப்பட்ட கடன்கள் Rs. |
|---|---|---|
| 01 | அகலவத்தை பிளான்டேஷன் PLC | 19,876,500.00 |
| 02 | அகரபத்தான பிளான்டேஷன் PLC | 40,348,000.00 |
| 03 | பலாங்கொட பிளான்டேஷன் PLC | 26,400,500.00 |
| 04 | பொகவந்தலாவை தேயிலைத் தோட்டம் | 30,394,000.00 |
| 05 | எல்பிட்டிய பிளான்டேஷன் PLC | 18,221,000.00 |
| 06 | ஹபுகஸ்தென பிளான்டேஷன் PLC | 24,839,500.00 |
| 07 | ஹொரணை பிளான்டேஷன் PLC | 18,627,000.00 |
| 08 | கஹவத்தை பிளான்டேஷன் PLC | 16,786,000.00 |
| 09 | கேகாலை பிளான்டேஷன் PLC | 12,792,500.00 |
| 10 | களனி வெள்ளி பிளான்டேஷன் PLC | 29,718,500.00 |
| 11 | கொடகல பிளான்டேஷன் PLC | 27,832,000.00 |
| 12 | மதுல்சிம பிளான்டேஷன் PLC | 25,067,000.00 |
| 13 | மல்வத்தவெளி பிளான்டேஷன் PLC | 26,887,000.00 |
| 14 | மஸ்கெலிய பிளான்டேஷன் PLC | 37,968,000.00 |
| 15 | மதுரட்ட பிளான்டேஷன் PLC | 21,574,000.00 |
| 16 | நமுனுகொல பிளான்டேஷன் PLC | 17,381,000.00 |
| 17 | புசல்லாவ பிளான்டேஷன் PLC | 22,813,000.00 |
| 18 | தலவாக்கலை பிளான்டேஷன் PLC | 22,253,000.00 |
| 19 | உடப்புசல்லாவ பிளான்டேஷன் PLC | 21,661,500.00 |
| 20 | வட்டவளை பிளான்டேஷன் PLC | 30,656,500.00 |
| | **மொத்தம்** | **492,096,500.00** |

| | | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|---|
| **14** | **கடனாளிகள் மற்றும் ஏற்பாடுகள்** | | |
| **14.1** | வியாபார ரீதியாக கெடுக்க வேண்டியவைகள் | | |
| | கடனாளிகள் - உப குறிப்பு இல. xvi (1) | 24,736,603 | 35,441,890 |
| | கடனாளிகள் கட்டுப்பாடு | 13,563 | 13,563 |
| | கடனாளிகள் தேயிலை உத்தரவு | 8,827 | 8,767 |
| | கடனாளிகள் மற்றும் ஏற்பாடுகள் - ஐ.அ.இ | 109,280 | 114,395 |
| | கடனாளிகள் மற்றும் ஏற்பாடுக்ள சீனா | 46,557 | - |
| | கடனாளிகள் மற்றும் ஏற்பாடுகள் - மொஸ்கோ | 2,259 | 98,047 |
| | கொழுந்து மானியம் | 64,409,338 | - |
| | | **89,326,429** | **35,676,662** |

**14.2** ஏனைய செலுத்தத் தக்கவைகள்

| | | |
|---|---|---|
| செலுத்தத்தக்க வரமான வரி பீ.எம். விதிப்பனவு | 88,359,539 | 78,270,501 |
| செலத்தத்தக்க வருமான வரி - இலங்கைத் தேயிலைச் சபை | 2,557,004 | 1,667,692 |
| பொதுவான வைப்புகள் | 457,904 | 1,543,053 |
| மீள்செலுத்த வேண்டிய விலை மனுக்கோரல் வைப்புகள் | 367,994 | 332,994 |
| வைத்திருப்பு பண வைப்புகள் | 4,630,487 | 4,702,672 |
| கொழுந்து முகவர் வைப்புகள் | 14,570,743 | 14,678,243 |
| தேயிலைச் சபை உத்தியோகபூர் பொதியிடுபவர் | 8,670,252 | 12,485,773 |
| பணியாளர் கடனாளிகள் | 6,870,457 | 4,455,490 |
| கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் | 740,318 | 958,083 |
| ஏற்பாடுகள் - தரவு செயலாக்க கட்டணங்கள் | 2,000 | 2,000 |
| ஏற்பாடுகள் - வருடாந்த அறிக்கைகளை அச்சிடல் | 714,339 | 1,123,036 |
| பணியாளர்கள் பயண ஏற்பாடுகள் | 51,602 | 51,602 |
| நிலுவை கொழுந்து வைப்புகள் | 8,498,784 | 5,683,501 |
| சுய வாடகை வைப்புகள் - விற்பனை நிலையம் | 1,320,000 | 2,315,000 |
| சுய வாடகை வைப்புகள் - தேயிலை இல்லம் | 2,270,000 | 1,020,000 |
| சுங்கப் பிரகடன வைப்புகள் | 161,400 | 161,400 |
| வைத்திருப்பு ஊக்குவிப்பு விற்பனை நிலையம் | 77,865 | 75,999 |
| தேசக் கட்டுமான வரி | 910,542 | 774,901 |
| செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி | 2,876,508 | 5,175,922 |
| வருடத்திற்கான சிறந்த தேயிலைத் தோட்டம் | - | 10,000 |
| முன்கூட்டிய பெறுகை | 91,592 | 5,921 |
| முன்கூட்டிப் பெற்றுகை (வர்த்தக கண்காட்சி) | 12,650,000 | 14,379,685 |
| முன்கூட்டிப் பெற்றுகை - அனுமதிப்பத்திர கட்டணம் | 9,022,500 | 10,220,525 |
| முன்கூட்டிப் பெற்றுகை - கழிவுத் தேயிலை | 2,414,926 | 2,466,798 |
| முன்கூட்டிப் பெற்றுகை களஞ்சியசாலைகளை சீர்செய்தல் | 2,060,000 | 1,929,800 |
| முன்கூட்டிப் பெற்றுகை உற்பத்திசார் இடைத்தரகர்களுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,750,000 | 1,625,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை சிங்க சின்னம் பதிவு | 1,248,000 | 1,096,059 |
| முன்கூட்டிப் பெற்றுகை செய்தித்தாள் | - | 4,375 |
| முன்கூட்டிப் பெற்றுகை தேயிலை இறக்குமதியாளர் புதுப்பித்தல் | 310,000 | 220,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை தேயிலை ஏற்றுமதியாளரை பதிவுசெய்தல் | 150,000 | 325,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை தேயிலை பொதி செய்பவரை பதிவுசெய்தல் | 60,000 | 84,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை தேயிலை ஏற்றுமதியாளரை பதிவு செய்தல் | 19,672,500 | 15,837,500 |
| முன்கூட்டிப் பெற்றுகை தேயிலை பொதியடுபவரை பதிவு செய்தல் | 2,010,000 | 1,815,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை தேயிலை களஞ்சியசாலைகளைப் பதிவுசெய்தல் | 100,000 | 170,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை தேயிலை இறக்குமதியாளர்களைப் பதிவுசெய்தல் | 10,000 | 40,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை - உள்ளூர் பொதிசெய்பவர்களைப் புதுப்பித்தல் | 100,000 | 80,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை P& M விதிப்பனவு | 34,305,957 | 30,751,117 |
| முன்கூட்டிப் பெற்றுகை ஓசோன் சின்னம் பதிவுகள் | 134,862 | 170,000 |
| முன்கூட்டிப் பெற்றுகை ஜீ.ஐ. பதிவுகள் | 13,683 | - |
| முன்கூட்டிப் பெற்றுகை தனிக்குத்தகை வாடகை | 941,668 | 1,150,000 |
| | **231,153,426** | **217,858,639** |

**14.3 அட்டுறுச் செலவுகள்**

| | | |
|---|---|---|
| அட்டுறுச் செலவுள் | 22,102,327 | 20,288,011 |
| அட்டுறுச் செலவுள் - பீ. எம். விதிப்பனவு | 2,389,474 | 13,049,048 |
| அட்டுறுச் செலவுள் - தேயிலை இல்லம் | 11,014,269 | 10,504,632 |
| | **35,506,070** | **43,841,692** |

| | **2015** | **2014** |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **15 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்** | | |
| தீர்வை விலக்களிக்கப்பட்ட காணி | 350,017,000 | 350,017,000 |
| கட்டிடங்கள் | 265,043,561 | 264,509,623 |
| பொறித்தொ்குதி மற்றும் உபகரணம் | 39,981,752 | 25,901,564 |
| அலுவலக உபகரணம் | 23,281,482 | 22,959,659 |
| தளபாடங்கள் மற்றும் வீட்டு உபகரணம் | 25,251,187 | 24,091,768 |
| வானம் மற்றும் ஏனைய வாகனங்கள் | 50,332,473 | 46,945,035 |
| நீர், மின்சாரம், தொலைபேசி | 1,815,753 | 1,790,253 |
| அலங்காரம் மற்றும் கண்காட்சிப் பொருட்கள் | 2,369,884 | 2,369,884 |
| நூலக புத்தகங்கள் | 383,044 | 383,044 |
| கணினி வன்பொருள்/ மென்பொருள் | 39,442,970 | 33,287,489 |
| தீர்வை விலக்களிக்கப்பட்ட ஆதனங்கள் | 3,819,280 | 3,819,280.00 |
| ஆய்வுகூட உபகரணம் | 98,963,579 | 92,331,716 |
| கட்புலனாகா சொத்துக்கள் | 12,389,924 | 11,520,433 |
| அலுவலக உபகரணங்கள் - UAE | 1,159,889 | 765,729 |
| தளபாடம் மற்றும் பொருத்துதல் - UAE | 540,742 | 322,284 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் - UAE | 2,366,735 | 2,366,735 |
| அலுவலக உபகரணங்கள் - மொஸ்கோ | 717,366 | 585,743 |
| தளபாடம் மற்றும் பொருத்துதல்கள் - மொஸ்கோ | 177,868 | 177,868 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் - மொஸ்கோ | 1,671,684 | 1,671,684 |
| அலுவலக உபகரணங்கள் - சீனா | 104,527 | - |
| தளபாடம் மற்றும் பொருத்துதல் - சீனா | 51,129 | - |
| தீர்வை விலக்களிக்கப்பட்ட ஆதனங்கள் - தேயிலை இல்லம் | 28,897,335 | 28,897,334.82 |
| பொறித்தொகுதி, இயந்திரங்கள் - தேயிலை இல்லம் | 5,424,166 | 5,109,038 |
| அலுவலக உபகரணங்கள் - தேயிலை இல்லம் | 119,128 | 119,128 |
| தளபாடம், பொருத்துதல் மற்றும் வீட்டு உபகரணங்கள் - தேயிலை இல்லம் | 11,588,297 | 11,028,847 |
| கணினி மென்பொருள் - தேயிலை இல்லம் | 670,484 | - |
| கணினி வன்பொருள் - தேயிலை இல்லம் | 581,025 | - |
| | **967,162,262** | **930,971,138** |

**16 தேய்மானம் தொடர்பான ஏற்பாடுகள் (தே.தொ.ஏ)**

| | | |
|---|---|---|
| தே.தொ.ஏ. கட்டடங்கள் | 38,191,388 | 32,843,534 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - பொறித்தொகுதி, இயந்திரம் | 19,671,569 | 18,025,423 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - அலுவலக உபகரணங்கள் | 19,670,264 | 19,009,172 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - தளபாடம், பொருத்துதல்கள் | 15,116,339 | 13,423,025 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - வாகனங்கள் | 20,580,667 | 16,526,410 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - நீர், மின்சாரம், தெலைபேசி | 1,627,815 | 1,556,282 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - அலங்காரம், காட்சிப்படுத்தல் | 873,859 | 754,476 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - நூலக புத்தகங்கள் | 383,044 | 382,632 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - கணினி வன்பொருள், மென்பொருள் | 26,146,153 | 25,293,385 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - ஆய்வுகூட உபகரணங்கள் | 78,660,190 | 72,769,782 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - கட்புலனாகா சொத்துகள் | 2,136,335 | 1,564,327 |
| இலதாக்கல் ஏற்பாடுகள்- தீர்வை விலக்களிக்கப்பட்ட காணி | 857,244 | 780,859 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - அலுவக உபகரணம் - UAE | 801,987 | 754,361 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் - UAE | 298,818 | 287,111 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள்- வாகனங்கள் UAE | 483,208 | 429,705 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - அலுவலக உபகரணம் - மொஸ்கோ | 540,228 | 478,124 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - தளபாடம் மற்றும் பொருத்துதல் - மொஸ்கோ | 158,305 | 147,442 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - வானங்கள் - மொஸ்கோ | 1,671,684 | 1,671,684 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - தளபாடங்கள் மற்றும் பொருத்துதல் - சீனா | 2,556 | - |
| இலதாக்கல் ஏற்பாடுகள் கட்டடங்கள் - தீர்வை விலக்களிக்களிக்கப்பட்ட காணி தெயிலை இல்லம் | 5,779,467 | 2,889,733 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - பொறித்தொகுித மற்றும் இயந்திரம் - தேயிலை இல்லம் | 2,360,340 | 1,133,700 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - அலுவலக உபகரணங்கள் - தேயிலை இல்லம் | 37,602 | 14,926 |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - கணினி மென்பொருள் - தேயிலை இல்லம் | 95,891 | - |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - கணினி வன்பொருள் - தேயிலை இல்லம் | 174,307 | - |
| தே.தொ.ஏ. கட்டடங்கள் - தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் - தேயிலை இல்லம் | 3,548,096 | 1,760,481 |
| | **239,867,357** | **212,496,574** |
| | **727,294,905** | **718,474,564** |

**17 நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை**

| | | |
|---|---|---|
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை கட்டிடங்கள் மற்றும் ஏனையவை | 6,099,597 | 15,115,090 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை மென்பொருள் அபிவிருத்தி | 400,000 | 2,529,500 |
| | **6,499,597** | **17,644,590** |
| | **733,794,502** | **736,119,154** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2015 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 01-01-2015 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி | மேலதிகம் | அகற்றுகை | சீராக்கல் | 31-12-2015 இலுள்ளவாறு செலவு அல்லது பெறுமதி |
|---|---|---|---|---|---|
| தீர்வை விலக்களிக்கப்பட்ட காணி | **350,017,000** | - | - | - | **350,017,000** |
| கட்டடங்கள் | **264,509,623** | 1,057,590 | - | (523,652) | **265,043,561** |
| | | | | | |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 25,901,564 | 15,134,023 | (1,053,836) | | 39,981,752 |
| அலுவலக உபகரணங்கள் | 22,959,659 | 1,291,447 | (969,624) | - | 23,281,482 |
| அலுவலக உபகரணங்கள் - UAE | 765,729 | 394,161 | - | - | 1,159,889 |
| அலுவலக உபகரணங்கள் - மொஸ்கோ | 585,743 | 131,622 | - | - | 717,366 |
| அலுவலக உபகரணங்கள் - சீனா | - | 104,527 | - | - | 104,527 |
| நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி | 1,790,253 | 25,500 | - | - | 1,815,753 |
| அலங்கர மற்றும் காட்சிப்படுத்தல் பொருட்கள் | 2,369,884 | - | - | - | 2,369,884 |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரம் - தேயிலை இல்லம் | 5,109,038 | 315,128 | - | - | 5,424,166 |
| அலுவலக உபகரணங்கள் - தேயிலை இல்லம் | 119,128 | - | - | - | 119,128 |
| | **59,600,998** | **17,396,408** | **(2,023,459)** | **-** | **74,973,946** |
| | | | | | |
| தளபாடம், பொருத்துகை மற்றுமு் வீட்டு உபகரணங்கள் | 24,091,768 | 1,209,012 | (49,593) | - | 25,251,187 |
| தளபாடம் மற்றும் பொருத்துகை-UAE | 322,284 | 218,458 | - | - | 540,742 |
| தளபாடம் மற்றும் பொருத்துகை மொஸ்கோ | 177,868 | - | - | - | 177,868 |
| தளபாடம் மற்றும் பொருத்துகை சீனா | - | 51,129 | - | - | 51,129 |
| தளபாடம் மற்றும் பொருத்துகை தேயிலை இல்லம் | 11,028,847 | 559,450 | - | - | 11,588,297 |
| | **35,620,766** | **2,038,048** | **(49,593)** | **-** | **37,609,222** |
| | | | | | |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் - தலைமை அலுவலகம் | 46,945,035 | 5,795,000 | (2,407,562) | - | 50,332,473 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் - மொஸ்கோ | 1,671,684 | - | - | - | 1,671,684 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் - UAE | 2,366,735 | - | - | - | 2,366,735 |
| | **50,983,454** | **5,795,000** | **(2,407,562)** | **-** | **54,370,892** |
| | | | | | |
| நூலக புத்தகங்கள் | **383,044** | **-** | **-** | **-** | **383,044** |
| கணினி வன்பொருள் | **33,287,489** | **9,510,186** | **(2,773,680)** | **(581,025)** | **39,442,970** |
| கணினி வன்பொருள் - தேயிலை இல்லம் | **-** | **581,025** | **-** | **-** | **581,025** |
| ஆய்வுகூட உபகரணங்கள் | **92,331,716** | **6,631,863** | **-** | **-** | **98,963,579** |
| | | | | | |
| | | | | | |
| மொத்தம் | **886,734,091** | **43,010,120** | **(7,254,294)** | **(1,104,676)** | **921,385,239** |

| தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் | 01-01-2015 இலுள்ளவாறு திரண்ட தேய்மானம் | தேய்மானம் 2015 | அகற்றுகை 2015 | சீராக்கல்கள் | 31-12-2015 இலுள்ளவாறு திரண்ட தேய்மானம் |
|---|---|---|---|---|---|
| தேய்மான ஏற்பாடுகள் - கட்டடங்கள் | 32,843,534 | 5,347,854 | - | - | **38,191,388** |
| | | | | | |
| தேய்மான ஏற்பாடுகள் - பொறித்தொகுதி, இயந்திரம் | 18,025,423 | 2,699,981 | (1,053,836) | - | 19,671,569 |
| தேய்மான ஏற்பாடுகள் - அலுவலக உபகரணங்கள் | 19,009,172 | 1,630,716 | (969,624) | - | 19,670,264 |
| தேய்மான ஏற்பாடுகள் - நீர், மின்சாரம், தொலைபேசி | 1,556,282 | 71,534 | - | - | 1,627,815 |
| தேய்மான ஏற்பாடுகள் - அலங்கரிப்பு, காட்சிப்படுத்தல் | 754,476 | 119,383 | - | - | 873,859 |
| தேய்மான ஏற்பாடுகள் - அலுவலக உபகரணம் - UAE | 754,361 | 47,626 | - | - | 801,987 |
| தேய்மான ஏற்பாடுகள்- அலுவலக உபகரணம் - மொஸ்கோ | 478,124 | 62,104 | - | - | 540,228 |
| தேய்மான ஏற்பாடுகள் - பொறித்தொகுதி, உபகரணம் T/H | 1,133,700 | 1,226,641 | - | - | 2,360,340 |
| தேய்மான ஏற்பாடுகள் - அலுவலக உபகரணம் T/H | 14,926 | 22,676 | - | - | 37,602 |
| | **41,726,462** | **5,880,660** | **(2,023,459)** | **-** | **45,583,663** |
| | | | | | |
| தேய்மான ஏற்பாடுகள் - தளபாடம், பொருத்துகை - HO | 13,423,025 | 1,742,907 | (49,593) | - | 15,116,339 |
| தேய்மான ஏற்பாடுகள் - தளபாடம், பொருத்துகை - UAE | 287,111 | 11,706 | - | - | 298,818 |
| தேய்மான ஏற்பாடுகள் - தளபாடம், பொருத்துகை மொஸ்கோ | 147,442 | 10,862 | - | - | 158,305 |
| தேய்மான ஏற்பாடுகள் - தளபாடம், பொருத்துகை - சீனா | - | 2,556 | - | - | 2,556 |
| தேய்மான ஏற்பாடுகள் - தளபாடம், பொருத்துகை - T/H | 1,760,48 | 1 1,787,615 | - | - | 3,548,096 |
| | **15,618,059** | **3,555,647** | **(49,593)** | **-** | **19,124,113** |
| | | | | | |
| தேய்மான ஏற்பாடுகள் - வாகனங்கள் - HO | 16,526,410 | 5,321,819 | (1,267,562) | - | 20,580,667 |
| தேய்மான ஏற்பாடுகள் - வாகனனங்கள் - UAE | 429,705 | 236,674 | (183,170) | | 483,208 |
| தேய்மான ஏற்பாடுகள் - வாகனங்கள் - மொஸ்கோ | 1,671,684 | - | - | - | 1,671,684 |
| | **18,627,800** | **5,558,493** | **(1,450,732)** | **-** | **22,735,560** |
| | | | | | |
| தேய்மான ஏற்பாடுகள் - நூலக புத்தகங்கள் | 382,632 | 412 | - | - | **383,044** |
| தேய்மான ஏற்பாடுகள் - கணினி வன்பொருள், மென்பொள் | 25,293,385 | 3,684,551 | (2,773,680) | 58,102 | **26,262,358** |
| தேய்மான ஏற்பாடுகள் - கணினி வன்பொருள்- T/H | - | 116,205 | - | (58,102) | **58,102** |
| தேய்மான ஏற்பாடுகள் - ஆய்வுகூட உபகரணங்கள் | 72,769,782 | 5,890,408 | - | - | **78,660,190** |
| | | | | | |
| மொத்தம் | **207,261,655** | **29,918,024** | **6,297,464** | **58,102** | **230,998,420** |
| இடம்பெற்றுவரும் பணிகள் | 15,115,090 | | | | 6,099,597 |
| | **694,587,526** | | | | **696,486,417** |

# இலங்கைத் தேயிலைச் சபையின் அலுவலகங்கள்

## தலைமை அலுவலகம்

இலங்கை தேயிலைச் சபை
574,காலி வீதி,கொழும்பு 03,இலங்கை
த.பெ.இல 1750,கொழும்பு,இலங்கை
தொலைபேசி : 011 2582121
011 2583687
துரித அழைப்பு: 011 2587814
தொலைநகல் : 011 2582122
மின்னஞ்சல் : teaboard@pureceylonte.com
இணையம்: www.pureceylontea.com

தலைவர்
தொலைபேசி: 011 2587814/2590968
தொலைநகல்: 011 2585701
E-mail: chairman@pureceylontea.com

பணிப்பாளர் நாயகம்
தொலைபேசி: 011 2587814/2508991
தொலைநகல்: 011 2582122
மின்னஞ்சல்: dgsltb@pureceylontea.com

### தேயிலை ஆணையாளர் பிரிவு

தேயிலை ஆணையாளர்
தொலைபேசி: 011 2580182/2580152/2502485/2584845/2587814/2587773
தொலைநகல்: 011 2580161
மின்னஞ்சல்: tcd@pureceylontea.com

### தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

பணிப்பாளர் (தேயிலை ஊக்குவிப்பு)
தொலைபேசி: 011 2583343/2587814/2581418/2580169
தொலைநகல்: 011 2587341
மின்னஞ்சல்: promotion@pureceylontea.com

### தேயிலை ஏற்றுமதிகள் பிரிவு

பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதிகள்)
தொலைபேசி: 011 2502485/2584845/2587814/2504090/2587773
தொலைநகல்: 011 2584844
மின்னஞ்சல்: exports@pureceylontea.com

### பகுப்பாய்வு இரசாயனகூடம்

பணிப்பாளர் (ஆய்வுகூடம்)
தொலைபேசி: 011 2587814/2581576
தொலைநகல்: 011 2581576
மின்னஞ்சல்:lab@pureceylontea.com

## பிராந்திய அலுவலகங்கள்

கம்பளை
உதவி தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலைச் சபை
140, அம்பகமுவ வீதி, கம்பளை
தொலைபேசி/தொலைநகல் : 081-2352279
மின்னஞ்சல்: atcgampola@pureceylontea.com

மாத்தறை
உதவி தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலைச் சபை
46, வில்பிரட் குணசேகர மாவத்தை, கோட்டே, மாத்தறை
தொலைபேசி/தொலைநகல்: 041-2222636
மின்னஞ்சல்:atcmatara@pureceylontea.com

பதுரெலியஉதவி
தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலைச் சபை
281,வதுரண வீதி, பதுரெலிய
தொலைபேசி/தொலைநகல்: 034-2247444
மின்னஞ்சல்: atcmathugama@pureceylontea.com

இரத்தினபுரி
உதவி தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலைச் சபை
61/1, புதிய நகர், இரத்தினபுரி
தொலைபேசி/தொலைநகல்: 045-2222136
மின்னஞ்சல்: atcrathnapura@pureceylontea.com

பண்டாரவெல
உதவி தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலைச் சபை
விசாகா மாத்தை, புதிய பதுளை வீதி, பண்டாரவளை
தொலைபேசி/தொலைநகல்: 057-2222812
மின்னஞ்சல்: atcbandarawela@pureceylontea.com

காலி
உதவி தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலைச் சபை
20,லோவ டிக்சன் வீதி, காலி
தொலைபேசி/தொலைநகல்: 091-2232052
மின்னஞ்சல்: atcgalle@pureceylontea.com

# வெளிநாட்டுக் கிளைகள்

| | |
|---|---|
| தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br><br>ஐக்கிய அரபு இராச்சியம் | பணிப்பாளர் (தேயிலை ஊக்குவிப்பு) - M.E./Gulf/N.A<br>தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு துணைத்தூதரகம்<br>த.பெ.இல. 51528,<br>துபாய், ஐக்கிய அரபு இராச்சியம்<br><br>தொலைபேசி: 00971 4 3987871<br>தொலைபேசி (Direct) : 00971 4 3989349<br>தொலைநகல்: 00971 4 3987872<br>மின்னஞ்சல்: ctbureau@emirates.nrt.ae / ceylonte@eim.ae |
| தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br><br>ரஷ்யா/CIS | தேயிலை ஊக்குவிப்பு அதிகாரி<br>தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தூதரகம்<br>யுலிட்சா ஸ்கெப்டிகா 24<br>மெஸ்கோ 129090<br>ரஷ்யா<br>தொலைபேசி: 007 495-688-1620<br>495-68811651/495-688-1463<br>தொலைநகல்: 007-495-688-1757<br>மின்னஞ்சல்: tea@srilankaembassy.org |
| தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br>சீனா | தேயிலை ஊக்குவிப்பு அதிகாரி (3வது செயலாளர்) - சீனா<br>தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு<br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தூதரகம்<br>இல. 3, ஜிலான் ஹூஆ லூ,<br>பீஜிங்க் - 100600,<br>சீன மக்கள் குடியரசு<br>தெலைபேசி : 00-86-10-65322919<br>தொலைநகல் : 00-86-10-65325426<br>மின்னஞ்சல் : ceylontea@slemb.com |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. பிஎல்ஏ/பீ/எஸ்எல்ரீபீ/1/15/1

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2016 நவம்பர் 23

தலைவர்,

இலங்கை தேயிலைச் சபை

**இலங்கை தேயிலைச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை தேயிலைச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை அதிகாரச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2016 செப்தெம்பர் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை தேயிலை சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன நியாயமான முறையில் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்ாண்டிலும் முன்னைய ஆண்டிலும் உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றின் திரட்டிய இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்த ரூபா 8,246,798 தொகை மற்றும் ரூபா 10,243,284 தொகைகள் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களில் இடமளிக்கப்படும் சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றிக்கு ஒன்று ஈடு செய்யப்படக் கூடாத போதிலும், சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு வங்கிக் கணக்குகுளில் ரூபா 2,280,808 தொகையான மேலதிகப் பற்று மற்றும் ரூபா 145,540,846 தொகையான காசு மற்றும் வங்கி மீதிகளுடன் ஈடு செய்து தேறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) பொருண்மையான வருமானம் மற்றும் செலவின உருப்படிகள் தொடர்பாக அவற்றின் தன்மை மற்றும் பெறுமதி வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், வருமானச் செலவினக் கூற்றில் காண்பிக்கப்படும் ரூபா 9,262,257 தொகையான நிதி

வருமானம் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) மீள் மதிப்பீட்டு ஒதுக்கம், அரசின் மானியங்கள் மற்றும் நிதிச் செலவினம் கணக்கீடு செய்யப்பட்ட முறை தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

---

மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிதியத்தில் முதலீடுகளின் பேரில் வட்டி வருமானம் ரூபா 132,909,000 தொகை மீளாய்வாண்டில் தேயிலை சபையின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிலோன் ரீ உலகலாவிய மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊடக நடவடிக்கைகளுக்காக தனியார் கம்பனியொன்றுடன் ஐ.அ.டொ 2,260,000 பெறுமதியான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 65,684,615 முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், அப்பணத்தை முற்பணமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நிதியத்தின் மீதி அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் காணப்பட்ட கிரிக்கட் ரீ சேர்ட் இருப்பு ரூபா 310,250 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) விற்பனைக்காக பிராந்திய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 1,319,200 தொகையான ரீ சேர்ட் விற்பனை செய்யப்படாமல் மீள அனுப்பப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி இலங்கை கிரிக்கெட் அனுசரணை மற்றும் மேம்படுத்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் அச்செலவினம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது 1 கிலோ கிராம் பச்சைக் கொழுந்தின் ஆகக் குறைந்த விலையை ரூபா 80 வீதம் பேணிச் செல்வதற்காக அரசிடமிருந்து

கிடைத்திருந்த ரூபா 6,738,000,000 இலிருந்து ரூபா 6,673,590,662 மாத்திரம் செலவிடப்பட்டிருந்த போதிலும், முழுத்தொகையும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் மானியச் செலவினம் மற்றும் நடைமுறைப் பொறுப்பு என்பன ரூபா 64,409,338 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது,

(உ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய குத்தகை வாடகை ரூபா 50,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சபையின் ஐக்கிய அரபு இராச்சியத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் காசு மற்றும் வங்கி மீதி ரூபா 2,178,780 ஆக இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட போதும் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அது ரூபா 577,411 ஆக இருந்தமையால் ரூபா 1,601,369 தொகை வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2006 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 8,498,784 கூட்டுத்தொகையான பச்சை தேயிலை வழங்குநர்களின் வைப்புக்கள் மற்றும் 03 வருடங்களாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்படுகின்ற ரூபா 305,240 தொகையான மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 34,305,957 தொகையான மேம்படுத்தல் மற்றும் விளம்பர கட்டணங்களுக்காக முன்னராக கிடைத்த முற்பணம் தொடர்பான பட்டடோலைகள் மற்றும் ரூபா 323,353 தொகையான தேயிலை கொள்வனவு பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1957 இன் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 49 ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை அதிகாரச்சட்டத்தின் 25(3) ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமலும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமலும் வேலைத்தள பதிவுக் கட்டணங்கள், பதிவினைப் புதுப்பித்தல் கட்டணங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பதிவுசெய்தல் கட்டணங்கள் ஆகியன 2010 யூலை 29 திகதியில் இருந்து அமுலாகும் வகையில் சபையினால் அதிகரிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் | செஸ்வரி நிதியத்தின் தாபிப்பு மற்றும் செயற்படுத்தல் என்பவற்றிற்காக அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 15,515,659 தொகையான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக இல்லையென வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 கொள்வனவு வழிகாட்டலகள் கோவையின் 8.9.1 (ஆ) பிரிவு | வழிகாட்டல் நியதிகளுக்கு இணங்க ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருள் கொள்வனவிற்காக முறையான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 04 சந்தர்ப்பங்களில் ரூபா 4,935,595 ஆன கொள்வனவுகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வாகன விற்பனை வருமானம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் வாகனமொன்று விற்பனை செய்யப்பட்டமையால் கிடைத்த ரூபா |

1,421,750 தொடர்பாக அதன் பிரகாரம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

தேயிலை ஏற்றுமதி கிளையை கடமை நேரங்களுக்கு புறம்பாக திறந்துவைத்தல் விசேட கடமையொன்றாக கருதி அதில் சேவை புரியும் பதவியணியினருக்கு திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் மீளாய்வாண்டின் போது ரூபா 2,056,844 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான தேயிலைச் சபையின் நிதி விளைவுகள் ரூபா 86,256,974 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 31,222,572 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 55,034,402 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின்போது தேயிலை மீள் நடுகை மானியங்கள் மற்றும் நிர்வாகச் செலவினங்கள் என்பன முறையே ரூபா 41,880,997 ஆலும் ரூபா 67,786,559 ஆலும் அதிகரித்திருந்த போதிலும், திறைசேரி மானியங்கள் ரூபா 32,000,000 ஆல் அதிகரித்தமை மற்றும் சபையின் வருமான மேம்படுத்தல் மற்றும் பிரச்சார நிதியத்தின் வட்டி வருமானத்தில் ரூபா 132,909,000 சேர்க்கப்பட்டிருந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு தவிர ஏனைய ஆண்டுகளில் நிதி மிகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை மிகையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அது 167 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது சபையின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சாதகமான பெறுமதிகளை கொண்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டின் போது 2 சதவீதத்தினால் சிறியளவில் குறைவடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் மீண்டும் 45 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் நடைமுறை விகிதம் முறையே 17.1 மற்றும் 17.8 ஆக இருந்ததுடன், மிகவும் கூடிய தொழிற்படு மூலதனமொன்று இருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்த நடைமுறைச் சொத்துக்களில் 86 சதவீதம் குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### 3.3 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஆணையாளர் பிரிவினால் பயன்படுத்தப்பட்ட கட்டிடத்தின் உடமையாளரால் கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்காகவும் அதன் காரணமாக கட்டிடத்தை வேறு தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு இடத்தை உரிய நிலைமைக்கு கொண்டு வர முடியாமை காரணமாக ரூபா 4,900,000 தொகையினைக் கோரி 2008 ஒக்தோபர் மாதத்தின் போது சபைக்கு எதிராக நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2012 நவம்பர் 14 இல் ரூபா 13,828,600 தொகையைச் செலுத்த வேண்டுமென கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இத்தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 4 வெளி நிறுவனங்களினால் சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 4 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2003 இன் 29 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 4(1) மற்றும் (2) ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் நோக்கங்கள் வேறுபடுத்தப்பட்டு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

* புதிய பிரதேசங்களில் தேயிலை உற்பத்தி செய்தல் மற்றும் பயிரிடல், தற்போதுள்ள தோட்டங்கள் மற்றும் சிறு காணிகளில் அதிகளவு விளைச்சலைத் தரும் தேயிலை வகைகளை ஈடுபடுத்தி மீண்டும் பயிரிடல் தோட்டங்கள் சிறு காணிகளை சீரமைத்தல் புனரமைப்புச் செய்தல் கால்நடை வளர்ப்பு கைத்தொழில்களை பேணிச் செல்வதன் மூலம் தோட்டங்கள்

மற்றும் சிறு காணிகள் மேம்படுத்தல் மற்றும் அத்தோட்டங்களிலும் சிறு காணிகளிலும் தேயிலைக்குப் பதிலாக ஏனைய பயிர்களைப் பயரிடல்.

* தேயிலை தொழிற்சாலைகளை உருவாக்குதல், பராமரித்துச் செல்லல் மற்றும் தேயிலை ஏல விற்பனைகளை நடாத்துவதை முறைப்படுத்துதல்.

* இலங்கையிலோ அல்லது அதற்கு வெளியே தேயிலையை விற்பனை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், தேயிலை விற்பனை மற்றும் தேயிலை ஏற்றுமதி செய்தல், வெளிநாடுகளில் தேயிலை விற்பனை செய்வதற்காக தேயிலை கப்பலேற்றுதல், கப்பல் கட்டணங்கள், தரகுக் கட்டணங்கள் கொள்கலன் கட்டணங்கள் போன்றவற்றிற்கு ஏதேனும் கட்டணங்களுக்குரிய நடவடிக்கைகள் மற்றும் கொடுப்பனவுகளை முறைப்படுத்துதல்,

* தேயிலை தோட்ட முகாமைத்துவத்திலும் தேயிலை உற்பத்தியிலும் விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ள சகல நிறுவனங்களையும் அமைப்புக்களை முறைப்படுத்துதலும், கட்டுப்படுத்தல் மற்றும் வழிநடாத்துதல்.

* இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலின் வளர்ச்சிக்காக செயற்படுவதற்கு அச்செயற்பாடுகளை ஒன்றிணைக்கும் பொருட்டும் தேயிலை கைத்தொழில் மற்றும் அரசின் திணைக்களங்கள் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துதல்.

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்காக 2010 ஒக்தோபர் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து 2010 நவம்பர் 01 முதல் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 5,927 மில்லியன் சபையால் உழைக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு விதிக்கப்பட்ட வரித்தொகையிலிருந்து சேகரிக்கப்பட்ட மற்றும் எதிர்வரும் 3 ஆண்டுகளில் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரித் தொகையில் ரூபா 8 பில்லியனை பயன்படுத்தி சிலோன் ரீ உலகலாவிய மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2015 – 2018 காலப்பகுதியில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடந்த 5 வருட காலப்பகுதியில் இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியில் 1 சதவீதம் 91 சதவீதத்திலிருந்து 94 சதவீதம் வரையான வீச்சில் தேயிலை ஏற்றுமதி இடம்பெறுவதால் இவ்வாறான அதிகளவான தொகையொன்றினை ஈடுபடுத்தி தேயிலை மேம்படுத்தலுக்காக நிகழ்ச்சித்திட்டமொன்றினை வடிவமைத்தல் ஆக்கபூர்வமானது அல்ல எனவும்

(ii) தற்போது கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் ஒரு கிலோ கிராம் தேயிலை விற்பனை செய்யப்படும் விலையை விட ஒரு கிலோகிராம் தேயிலையை உற்பத்தி செய்வதற்கு அதிக கிரயமொன்று ஏற்படுவதால் விளம்பரத்தின் மூலம் கூடிய கேள்வியொன்றை ஏற்படுத்தி ஒரு கிலோ தேயிலையின் விற்பனை விலையை அதிகரிப்பதற்கு திட்டமிடுவதை விட தேயிலை உற்பத்திக் கிரயத்தை குறைப்பதற்கும் தேயிலையின் தரத்தை மேம்படுத்துவதற்கும் இந்நிதியத்தை ஈடுபடுத்துவது பொருளாதார ரீதியில் கூடுதலானது எனவும்

(iii) மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் சிங்க இலட்சிணையுடன் தேயிலை உற்பத்தி அளவை இரண்டு மடங்காக்குவது மற்றும் பெறுமதி சேர் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு 40 சதவீதத்திலிருந்து 55 சதவீதம் வரை அதிகரிப்பது நோக்கமாக இருந்த போதிலும், படிப்படியாக குறைந்து செல்லும் தேயிலை உற்பத்தியின் மேம்பாட்டிற்காக போதியளவு நடவடிக்கைகளை எடுத்தல் சபையினால் முன்னுரிமையாக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடாக இருந்தது.

மேற்குறித்த விடயங்களின் பிரகாரம் தற்போது தேயிலை கைத்தொழிலில் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கு தீர்வு காண்பதற்குரிய வேலைத்திட்டமொன்றுக்கு இப்பணத்தை பயன்படுத்துவதற்கு பொருத்தமான கொள்கைத் தீர்மானமொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் புத்திசாதுரியமானதும், சிக்கனமானதும் செயற்திறனானதெனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஒரு கிலோ கிராம் பச்சை தேயிலை கொழுந்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையான ரூபா 80 இனை செலுத்துவதற்காக அரசின் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டிற்காக ரூபா 6,738,000,000 சபைக்கு அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1985 ஒக்தோபர் 02 ஆந் திகதிய MF/BL/66 ஆம் இலக்க தேயிலை ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக்கு ஆகக்குறைந்தது சுற்றறிக்கையின் பிரகாரம் கணிப்பிடப்படும் நியாயமான விலையினை தொழிற்சாலை உரிமையாளர்களால் செலுத்த வேண்டும். உதவு தொகைகளை செலுத்தும் போது தொழிற்சாலை உரிமையாளர்களால் ஒரு கிலோ தேயிலைக் கொழுந்திற்கு செலுத்தப்பட்ட விலை மற்றும் தரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட விலையாக இருந்ததுடன், வேறுபாட்டை செலுத்துவதற்குப் பதிலாக நியாயமான விலை மற்றும் குணநல அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட விலையினை கொடுப்பனவு செய்த காரணத்தினால் ரூபா 28,837,190 ஆன சாதகமொன்று தொழிற்சாலை உரிமையாளர்களால் உழைக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) தேயிலை தொழிற்சாலைகளுக்கு செலுத்தப்பட்டிருந்த மானியங்கள் நிர்ணயிக்கப்பட்ட படி சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படாததன் அடிப்படையில் தேயிலை கொழுந்து உரிமையாளர்களால் பிராந்திய அலுவலகங்களுக்கு முறைப்பாடுகளை செய்யப்பட்டிருந்ததாகவும், 10 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணி உரித்தாளர்களுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) உற்பத்தி இயலளவை அதிகரிக்கும் நோக்கில் செயற்படுத்தப்படுகின்ற பின் அறுவடை நட்டத்தினை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 500 பிரதிநிதிகளை அறிவூட்டுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின்போது எவ்வித நிகழ்ச்சித்திட்டமொன்றும் செயற்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்து பெறவேண்டிய ரூபா 25,000,000 ஆன மீதியை பதிவழிப்பதற்கும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய ஹந்தானவில் அமைந்துள்ள "சிலோன் ரீ மியுசியம்" இன் உரித்தை கையேற்பதற்கும் 2012 யூன் 19 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையும் தேயிலை சபையும் தீர்மானத்திற்கு வந்திருந்தன. எவ்வாறாயினும், இச்செயற்பாடு கணக்காய்வு திகதியான 2016 யூன் 30 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் இலங்கை கிரிக்கட் சபையுடன் மேற்கொண்டிருந்த அனுசரணை உடன்படிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,354,750 பெறுமதியான 3,732 ரீ-சேர்ட்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விற்பனை செய்யப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன. இந்த ரீ-சேர்ட்க்களை சபைக்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் விற்பனை செய்வதற்கு சபை தவறியிருந்தது.

## 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவரிடையே தேயிலையை பிரசித்திப்படுத்தும் நோக்கில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 58,368,794 தொகை செலவு செய்து கொழும்பு துரங்ஹ தரஹபிட்டிய கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தேயிலை விற்பனை நிலையம், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 19,686,253 தொகை மற்றும் ரூபா 13,509,198 ஆன நட்டத்தை ஈட்டியிருந்தன. தேயிலையை மேம்படுத்தும் நடவடிக்கையொன்றாக ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இவ்வாறான பாரிய நட்டமொன்று அடைந்து நடாத்தப்பட்டு வரும் இந்நிலையத்தின் நட்டத்தைக் குறைப்பதற்காக சபையால் முறையான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கொள்வனவுச் செயற்பாடுகள்

மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களை கையேற்றல் உட்பட மூலதன செலவினத்திற்காக ரூபா 199,780,000 ஆன மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் நுவரெலியா மாவட்ட அலுவலகம் மற்றும் தேநீர் கடை நிர்மாணத்திற்காக ரூபா 70,500,000 தொகையும் கேட்போர்கூட திருத்த செயற்பாட்டிற்காக ரூபா 14,500,000 தொகையும் 05 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 56,000,000 தொகையும் செலவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், இக்கொள்வனவுகள் நிறைவேற்றப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.5. விளைவற்றதும் குறைப்பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

சபைக்குரிய 03 வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் ரூபா 93,919 ஆன மீதிகள் 01 முதல் 03 வருடங்கள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.6 முறைப்படி கையேற்க்கப்படாத காணி மற்றும் கட்டிடங்கள்

2007 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 7,122,915 கிரயத்திலான பண்டாரவெல பிராந்திய அலுவலக கட்டிடம் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அக்கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்தை அறிக்கைத் திகதி வரையிலும் சபைக்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் எண்ணிக்கை 308 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணியனர் எண்ணிக்கை 277 ஆக இருந்தது. சபையின் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலைகளில் 44 பதவிகளும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 08 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத 02 சிரேஷ்ட பதவிகளும் மூன்றாம் நிலை பதவியொன்றும் 04 இரண்டாம் நிலை பதவிகளுக்குமாக 11 உத்தியோகத்தர்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு புறம்பாக 2015 யூன் 15 ஆந் திகதி முதல் ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் ரூபா 34,000 மாதாந்த

படியொன்றுடன் 2 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 408,000 கூட்டுத்தொயையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான கணக்குகள் 102 நாட்கள் தாமதத்துடன் 2015 யூன் 10 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பிரிவிற்காக போதியளவு பதவியணியினர் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைக்கு இடையே 12 சதவீதம் முதல் 150 வரை குறிப்பிடத்தக்க விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்குகளை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் காணப்படல் |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனிக்கு உள்ளீர்க்கப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் |
| (இ) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் | நீண்டகாலமாக அறவிடுவதற்கும் தீர்வுசெய்யப்படாமலும் காணப்படும் மீதிகள் நிலவுகின்றமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கும் இடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டமை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி